ஓமலூரில் போக்குவரத்துக் கழகப் பணிமனை துவங்குதல்

வினா எண் *806*--**திரு. ஆர். ஆர். சேகரன்** : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சேலம் மாவட்டம், ஓமலூரில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை துவங்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஓமலூர் தாலுக்கா, கோட்ட மேட்டுப்பட்டி கிராமம் புல எண் *22/2* மற்றும் *25/3*-ல் தனியாருக்குச் சொந்தமான *8.29* ஏக்கர் நிலம் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை மற்றும் பயிற்சி மையம் அமைக்க நிலம் கையகப்படுத்தக்கோரி *1-2-84*-ல் மாவட்ட ஆட்சியர் சேலம் அவர்கட்கு விண்ணப்பிக்கப்பட்டது. இதுகுறித்து நில உரிமையாளர்களால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு தடை ஆணை பெற்றதால் தற்போது இவ்வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஆகவே ஓமலூரில் உடனடியாக தற்காலிக பணிமனை அமைக்கும் பொருட்டு புல எண் *34/1*-ல் உள்ள தனியாருக்குச் சொந்தமான சுமார் *1.50* ஏக்கர் நிலத்தை வாடகைக்குப் பெற்று தற்காலிகமாக பணிமனை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முடிவடைந்ததும் பணிமனை செயல்படத் துவங்கும்.

26--

நர்க்கந்தன்குடி வழியாக பேருந்து இயக்குதல்

வினா எண் *1308*--**திரு. அ.வ. அப்துல் நாசர்**: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் சிதம்பரம்--ராதாவிளாகம் பேருந்து நர்க்கந்தன்குடி வழியாக இயக்கப்படுமா?

[*1996 ஆகஸ்ட் 20*

விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர் :

சிதம்பரத்திலிருந்து நர்க்கந்தன்குடி வழியாக ராதாவிளாகம் வரை இயக்கப்பட்டு வந்த நகரப்பேருந்து மேற்படி தடத்தில் நர்க்கந்தன்குடியிலிருந்து கோழிப்பள்ளம் வரையிலான சாலை, பேருந்து இயக்கத்திற்கு முற்றும் ஒவ்வாத நிலையில் சேதமடைந்து இருந்ததினால் நர்க்கந்தன்குடி வழியாக இயக்கப்படாமல் மாற்றுப்பாதை வழியாக இயக்கப்பட்டு வந்தது. தற்பொழுது நர்க்கந்தன் குடியிலிருந்து கோழிப்பள்ளம் வரையிலான சாலை, பேருந்து இயக்கிடுவதற்கேற்ப செப்பனிடப்பட்டுள்ளமையால், 15–7–1996 முதல் சிதம்பரத்திலிருந்து ராதாவிளாகம் வரை இயக்கப்பட்டு வரும் பேருந்து நர்கந்தன்குடி வழியாக இயக்கப்பட்டு வருகிறது.

27-

பரங்கிப்பேட்டை அரியகோஷ்டி இடையே பேருந்து இயக்குதல்

வினா எண் *1309*--**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து அரியகோஷ்டி வழியாக கடலூருக்குப் பேருந்து இயக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து அரியகோஷ்டி வழியாக சிதம்பரம்-கடலூர் பிரதான சாலை 3.2 கி.மீ. தொலைவிலுள்ளது. மேற்படி சாலைப் பகுதி கருங்கல் கப்பிச் சாலை. தற்பொழுது கற்கள் பெயர்ந்து சாலையில் பரவிக் கிடப்பதுடன் சாலை ஆங்காங்கே குண்டும் குழியுமாய் உள்ளது. மேலும் சாலை சீரமைப்புப் பணிக்காக கருங்கற்களும் செம்மண்ணும் சாலையோரத்தில் கொட்டி வைக்கப்பட்டுள்ளதால், சாலை மிகவும் குறுகலாக பேருந்து இயக்க இயலாத நிலையிலுள்ளது. பாதுகாப்பான பேருந்து போக்குவரத்திற்கு ஏற்ற வகையில் சாலை சீரமைக்கப்பட்ட பின்னர், பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திலிருந்து அரியகோஷ்டி வழியாக கடலூருக்கு பேருந்து இயக்கிடக் கோரும் கோரிக்கை பரிசீலனை செய்யப்படும்.

ஸ்

1996 ஆகஸ்ட் 20]

28--

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தில் சொகுசுப் பேருந்து இயக்குதல்

வினா எண் *1311*--**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தந்தை பெரியார் போக்குவரத்துக்கழக தொலைதூரப் பேருந்துகள் சொகுசுப் பேருந்துகளாக மாற்றி இயக்கப்படுமா?

விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

250 கி. மீட்டருக்கு மிகாத தூரமுடைய வழித் தடங்களில்தான் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பெரும்பான்மையான புறநகர்ப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் நடை ஒன்றுக்கான பயண நேரம் *5* மணி முதல் *6* மணி வரை மட்டுமே. இந்த பயண நேரத்திற்கு தற்போதுள்ள சாதாரண புறநகர்ப் பேருந்து வசதிகளே போதுமானவை. சாதாரணப் பேருந்துகளை சொகுசுப் பேருந்துகளாக மாற்றினால் கட்டணத் தொகையும் மிகுவதுடன் பயணிகட்கும் இடர்ப்பாடாக இருக்கும் என்பதால், சாதாரண புறநகர்ப் பேருந்துகளை சொகுசுப் பேருந்துகளாக மாற்றிடும் திட்டம் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திடம் இல்லை.

29--

மண்டல போக்குவரத்து அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் *1835*--**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சென்னையில் உள்ள அனைத்து மண்டல போக்குவரத்து அலுவலகத்திற்கும் (Regional Transport Office) சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை--

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): சென்னையில் ஐந்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் சென்னை (மேற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சென்னை (வடக்கு) வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ. 56 இலட்சம் செலவிலும் சென்னை (மையம்) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ. 41 இலட்சம் செலவிலும் சென்னை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ. 36 இலட்சம் செலவிலும் சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. சென்னை (கிழக்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சமீபத்தில்தான் துவக்கப்பட்டது. தக்க தருணத்தில் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30--

ரிக்ஷாத் தொழிலாளர்களுக்கு ஆட்டோ வழங்கும் திட்டம்

வினா எண் 736--**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சென்னையில் ரிக்ஷா ஓட்டும் தொழிலாளர்களுக்கு ஆட்டோ வாங்கித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா?

விடை--

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:

சென்னையில் ரிக்ஷா ஓட்டும் தொழிலாளர்களுக்கு ஆட்டோ வாங்கித் தரும் திட்டம் ஏதும் தொழிலாளர் துறையின் பரிசீலனையில் இல்லை.

31--

சிங்காரவேலர் இல்லத்தில் படுக்கை வசதிகள்

வினா எண் 741--**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1996 ஆகஸ்ட் 20]

(அ) வால்பாறையில் உள்ள தொழிலாளர்கள் தங்கும் சிங்காரவேலர் இல்லத்தில் எத்தனை படுக்கை வசதிகள் உள்ளன?

(ஆ) அவற்றை கூடுதலாக்கும் திட்டம் அரசின் பார்வையில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): வால்பாறை தொழிலாளர்கள் தங்கும் இல்லமான சிங்காரவேலர் இல்லத்தில் முன்பு 25 படுக்கைகள் கொண்ட பொது அறை இருந்தது. தற்பொழுது இங்கு பொதுப்பணித்துறை மூலம் சிறப்பு பழுதுபார்க்கும் பணி ரூ. 6,38,828 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி தனி அறை நான்கில் 10 படுக்கை வசதிகளும், பொது அறை மூன்றில் 20 படுக்கை வசதிகளும் கொண்டதாக இருக்கும். பழுது பார்க்கும் பணி முடிந்தபின் மொத்தம் 30 படுக்கைகள் இருக்கும்.

32--

வீரப்பள்ளியில் பகுதி நேரக்கடை திறத்தல்

வினா எண் 531--**திரு. ஆர். மகேந்திரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதியில் உள்ள வீரப்பள்ளி கிராமத்திற்கு தனியாக பகுதிநேரக் கடை திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு திரு. வே. தங்கப் பாண்டியன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

வடாற்காடு-அம்பேத்கர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதியில் உள்ள வீரப்பள்ளி கிராமத்தில் தனியாக பகுதிநேரக் கடை திறப்பதற்கு அந்த கிராம மக்கள் இலவசமாக கட்டடம் கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் இசைவு வழங்கப்பட்டுள்ளது.

[1996 ஆகஸ்ட் 20

33--

சாயப்பட்டறைகள் விவரம்

வினா எண் 1116--**திரு. வீ. தமிழ்மணி** : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகளுக்கு சாயம் ஏற்றும் சாயப்பட்டறைகள் எத்தனை உள்ளன? அவை எங்கெங்கு உள்ளன?

(ஆ) இல்லையெனில், சாயப்பட்டறை ஆரம்பிக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகளுக்கு சாயம் ஏற்றும் சாயப்பட்டறைகள் 49 உள்ளன. அவற்றில் ஒன்று தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை அரசுத்துறையின் கீழ் ஈரோட்டில் செயல்படுகிறது. இதர 48 சாயப்பட்டறைகளில் ஏழு திருச்செங்கோட்டிலும், திண்டுக்கல்-அண்ணா மாவட்டத்தில் பதின்மூன்றும் மதுரை மாவட்டத்தில் இருபத்தெட்டும் செயல்படுகின்றன.

(ஆ) புதிதாக சாயப்பட்டறை ஆரம்பிக்கும் எண்ணம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

34--

நெசவாளர்களுக்கு கட்டப்பட்ட வீடுகள் விவரம்

வினா எண் 1616--**திரு. கே. சுந்தர்** : மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) 1990-லிருந்து 1995 வரை நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், உத்திரமேரூர் தொகுதியில் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன?

996 ஆகஸ்ட் 20]

விடை--

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) உத்திரமேரூர் தொகுதியில் இத்திட்டத்தின்கீழ் இதுவரை வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை.

35--

நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகள்

வினா எண் 1692--டாக்டர் **இ.எஸ்.எஸ்.** இராமன்: மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் நலிவுற்ற கூட்டுறவு நூற்பாலைகள் எத்தனை?

(ஆ) அவைகளுக்கு அரசு செய்ய இருக்கும் உதவிகள் யாவை?

விடை--

மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. இவை அனைத்தும் இடருதவி நிறுவனங்களாக (Relief Undertaking) அரசால் சான்றுரைக்கப்பட்டுள்ளன. இந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளும் நட்டத்தில் இயங்குகின்றன. இதில் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஏப்ரல் 1994-ஆம் ஆண்டிலிருந்து இயங்காமல் உள்ளது.

(ஆ) தமிழக அரசு 1996-97-ம் ஆண்டுக்கான தனது நிதி நிலை அறிக்கையில் நலிவுற்ற மற்றும் மூடிக்கிடக்கும் நூற்பாலைகளை புத்துயிர் ஊட்ட ஆவன செய்யப்படும் என அறிவித்துள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அளிக்கப்பட வேண்டியுள்ள உதவிகள் பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. சீரிய திட்டங்கள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தீட்டப்பட்டு, உதவிகள் வழங்கி நூற்பாலைகள் நல்லமுறையில் நடத்த ஆவன செய்யப்படும்.

36--

மாட்டுப்பண்ணை கோழிப்பண்ணைகளை குடிசைத் தொழிலில் சேர்த்தல்

வினா எண் *146*--**திரு. வீ. தமிழ்மணி**: மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

மாட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை போன்ற தொழில்களை குடிசைத் தொழில் முறையில் சேர்க்க அரசு ஆணையிடுமா?

விடை--

மாண்புமிகு பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:

மாட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை போன்ற தொழில்களை குடிசைத் தொழில் முறையில் சேர்க்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

37--

திருப்பூர் கால்நடை மருத்துவமனை செயல்பாடு

வினா எண் *663*--**திரு. கே. சுப்பராயன்**: மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்திற்கு எதிரில் உள்ள கால்நடை மருத்துவமனை செயல்படுகிறதா?

விடை--

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:

திருப்பூர் கால்நடை மருத்துவமனை *1921*-ல் தோற்றுவிக்கப்பட்டு திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்தின் முன்பு சர்வே

1996 ஆகஸ்ட் 20]

எண் *572/1*-ல் *2.60* ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கி வருகிறது. திருப்பூர் கால்நடை மருத்துவமனையில் இந்த நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளிலும் மற்றும் அருகிலுள்ள பகுதி மக்களும் தங்கள் கால்நடைகள், ஆடுகள், கோழிகள் ஆகியவற்றிற்கு சிகிச்சை நோய் தடுப்பூசி மற்றும் செயற்கை கருவூட்டல் பணிகளும் செய்யப்பட்டு வருகிறது. திருப்பூர் கால்நடை மருத்துவமனை மிகவும் பழமையானதும், பன்னெடுங்காலம் மிகச் சிறந்த முறையில் செயல்பட்டும் வருகிறது.

38--

தமிழகத்தின் வனப்பரப்பளவு விவரம்

வினா எண் *665*--**திரு. கே. சுப்பராயன்**: மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழகத்தில் வனப்பரப்பளவு எவ்வளவு?

(ஆ) அதை அதிகரிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை--

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:

(அ) தமிழகத்தின் வனப்பரப்பளவு – *22,699* சதுர கிலோ மீட்டர்

காப்புக் காட்டின் பரப்பளவு – *19,139* சதுர கிலோ மீட்டர்

காப்பு நிலங்கள் மற்றும் வகைப் படுத்தப்படாத காடுகளின் பரப்பளவு – *3,560* சதுர கிலோ மீட்டர்.

(ஆ) தமிழ்நாட்டில் காப்புக்காடுகளாக மாற்ற தகுதியான நிலம் மிகவும் குறைவாக உள்ளது. வனப்பரப்பினை அதிகரிக்க சமுதாய மற்றும் புறம்போக்கு தரிசு நிலங்களை சமூக நலக்காடுகள் திட்டம் மூலமாக வனங்களாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு *2.66* லட்சம் ஹெக்டேர் வனம் சாரா நிலங்கள் வனக்குடையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், வன நிலங்களாக மாற்ற தகுதியான நிலங்களை அடையாளம் கண்டு நிலத்தீர்வை முறையில்,

வருவாய்த் துறை அலுவலர்களால், வன நிலங்களாக மாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

39--

இலவச சீத்தாப் பழக்கன்றுகள் வழங்குதல்

வினா எண் 1339--**திரு. ஜி. கே. மணி**: மாண்புமிகு வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மக்களுக்கு வனத்துறை மூலம் இலவசமாக சீத்தாப்பழக் கன்றுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை--

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிச்சாமி, வனம் மற்றும் கால்நடைத் துறை அமைச்சர்:

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மக்களுக்கு வனத்துறை மூலம் இலவசமாக சீத்தாப்பழக்கன்றுகள் வழங்கும் திட்டம் எதுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

40--

சத்துணவுக்கூடத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 1534--**திரு. இ. கணேசன்**: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

எடப்பாடி நகராட்சி, 21-வது வார்டில் இயங்கி வரும் சத்துணவுக் கூடத்திற்கு புதியக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

1996 ஆகஸ்ட் 20]

விடை--

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் துறை மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

நிதிப் பற்றாக்குறையினால் எடப்பாடி நகராட்சியில் புதியதாக சத்துணவு மையக் கட்டிடங்கள் கட்டுவதற்கான கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

41--

பாரதி பிறந்த வீட்டைப் பழுது பார்த்தல்

*வினா எண் 772--***திரு. கே. சுப்பராயன்:** *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், எட்டையபுரம் பாரதி பிறந்த வீடு பழுதடைந்துள்ளதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

விடை--

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

இல்லை.

42--

திரு. சர்தார் வேதரத்னம் பிள்ளைக்கு தஞ்சாவூரில் சிலை

*வினா எண் 1360--***திரு. அ. லெ. சுப்பிரமணியன்:** *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--*

உப்பு சத்யாகிரகத் தியாகி, திரு. சர்தார் வேதரத்னம் பிள்ளைக்கு தஞ்சாவூர் நகரில் சிலை நிறுவ அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:

பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 20

43--

தனித்து இயங்கிவரும் திருக்கோயில்களை அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல்

வினா எண் 619--**திரு. துரை சந்திரசேகரன்** : மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் அறநிலைய ஆட்சித் துறைக்கு உட்படாமல் தனித்து இயங்கிவரும் திருக்கோவில்கள் மாவட்ட வாரியாக எத்தனை?

(ஆ) அக்கோவில்களை அறநிலையத்தின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளது?

விடை--

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களின் எண்ணிக்கை 36,253 ஆகும். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டிற்கு உட்படாமல் தனித்து இயங்கி வரும் திருக்கோயில்களின் விவரத்தை மாவட்ட வாரியாகவோ அல்லது மொத்தமாகவோ கொடுக்க இயலாது.

(ஆ) துறையின் கட்டுப்பாட்டிற்குள் வராத திருக்கோயில்களில் பிரச்சினை ஏதும் ஏற்பட்டால் மட்டுமே அல்லது நிர்வாகம் குறித்து புகார் ஏதும் வரப்பெற்றால் மட்டுமே அத்திருக்கோயில்கள் துறையின் கீழ் கொண்டுவரப்படும்.

44--

அருள்மிகு கோனேஸ்வரஸ்வாமி திருக்கோயில் சுவர்களை பழுதுபார்த்தல்

வினா எண் 633--**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

1996 ஆகஸ்ட் *20*]

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல், அருள்மிகு கோனேஸ்வரஸ்வாமி திருக்கோயில் கிழக்கு மற்றும் தெற்கு மதில் சுவர் இடிந்துள்ளதால் அதனைக் கட்ட அரசு முன்வருமா?

விடை--

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :

மேற்படி திருக்கோயிலின் இடிந்துள்ள கிழக்கு மற்றும் தெற்கு மதில் சுவரினை பழுதுபார்த்தலுக்கான செயற்குறிப்பு இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் பரிசீலனையில் உள்ளது.

45--

மேல்மலையனூர் கோவிலில் தங்கும் விடுதி கட்டுதல்

வினா எண் *886*--**டாக்டர் ஆ. ஞானசேகரன்**: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், மேல்மலையனூரில் உள்ள அம்மன் கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு தங்கும் விடுதி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை--

மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் :

இந்து திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு ஏற்கனவே *11* அறைகள் கொண்ட தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இவைகளில் மூன்று அறைகள் நவீன வசதிகள் கொண்டவையாக உள்ளன. இவைகள் தவிர திருக்கோயில் உள்பிரகாரத்தில் *10* அறைகள் உள்ளன. இந்த திருக்கோயில் சார்பாக நவீன வசதிகளுடன் மேலும் *60* அறைகள் கட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

46--

முதியோர் இல்லங்கள் விவரம்

வினா எண் 677--**திரு. கே. சுப்பராயன்** : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் எத்தனை முதியோர் இல்லங்கள் உள்ளன?

(ஆ) அரசு சார்பில் நடத்தப்படும் இல்லங்கள் எத்தனை?

(இ) அவற்றில் தங்கியுள்ள முதியோர்களின் எண்ணிக்கை என்ன?

விடை--

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) தமிழ்நாட்டில் மத்திய அரசு நிதியுதவி பெற்று 25 இல்லங்களும், மாநில அரசு நிதியுதவி பெற்று 7 இல்லங்களும் சொந்த முதலீட்டில் தங்குவோரிடமிருந்து பணம் பெற்று நடத்தப்பெறும் 53 நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) அரசு சார்பில் முதியோர் இல்லங்கள் ஏதும் செயல்படுவதில்லை.

(இ) மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படும் இல்லங்களில் தலா 25 நபர்களும் மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படும் இல்லங்களில் 40 நபர்களும் சேர்க்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

47--

கங்கை கொண்ட சோழபுரத்தை சுற்றுலாத் தலமாக்குதல்

வினா எண் 1303--**திரு கே.சி. கணேசன்** : மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

(அ) கங்கை கொண்ட சோழபுரத்தை சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

1996 ஆகஸ்ட் 20]

ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை --

மாண்புமிகு திரு என். சுரேஷ்ராஜன், சுற்றுலாத்துறை அமைச்சர் :

(அ) கங்கை கொண்ட சோழபுரம் ஏற்கெனவே மாவட்ட உலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கங்கை கொண்ட சோழபுரத்தை மாவட்ட உலாத்தல திட்டத்தில் சேர்த்து அங்கு ஓய்வில்லம், குடிநீர் வசதி செய்ய புல எண் 81/4-ல் சுமார் 30 சென்ட் கோவிலுக்குச் சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டது. மேற்கூறிய திட்டங்களை நிறைவேற்ற சென்னை பொதுப்பணித்துறை (கட்டிடம்) தலைமைப் பொறியாளரிடம் மாதிரி வரைப்படம் மற்றும் வடிவமைப்பு கோரப்பட்டுள்ளது. இப்பணியினை செயல்படுத்த சென்னை இந்து சமய அறநிலைய ஆணையாளரிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது.

48--

கோடிக்யகரையை சுற்றுலா மையமாக மேம்படுத்துதல்

வினா எண் 1304--**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வேதாரண்யம் தொகுதி, கோடியக்கரை, சுற்றுலா மையமாக மேம்பாடு செய்யப்படுமா?

விடை--

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

வேதாரண்யம் தொகுதி, கோடிக்கரையை சுற்றுலா மையமாக மேம்படுத்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

49--

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத்திட்டம்

வினா எண் 143--**திரு. வீ. தமிழ்மணி** : மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 20

கடந்த ஐந்து ஆண்டுகளில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திட்டத்தின் கீழ் பயன் பெற்றோர் எண்ணிக்கை எவ்வளவு?

விடை--

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் பயன்பெற்றோர் எண்ணிக்கை பின்வருமாறு:--

வருடம்.	பயனாளிகளின் எண்ணிக்கை.	செலவிடப்பட்ட தொகை. ரூ.
1990-91	*23,000*	*11,50,00,000*
1991-92	*10,100*	*5,05,00,000*
1992-93	*10,000*	*5,00,00,000*
1993-94	*13,129*	*6,56,45,000*
1994-95	*10,000*	*5,00,00,000*
1995-96	*10,000*	*5,00,00,000*

50--

மீனவர்களுக்கு வீடுகள் கட்டுதல்

வினா எண் 1430--**திரு. இரா. மதிவாணன்** : மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மீனவர்களுக்காக வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்பட உள்ளது?

விடை--

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

(அ) மற்றும் (ஆ): தமிழக அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு மீனவர் நலத்திட்டங்களில் மீனவர் இலவச வீட்டு வசதித் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் மீனவர்களுக்கு 4000 இலவச வீடுகள் மின்விளக்கு வசதியுடன் கட்டி வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

[குறிப்பு:--ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

1987-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி ஆய்வாளர்கள் சில்ரை சட்டம்-ஒழுங்குப் பிரிவுக்கு மாற்றுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. திரு. ஞானசேகரன் அவர்கள் முக்கிய நிகழ்வு ஒன்றினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர அனுமதி கோரியுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-ஆம் ஆண்டு 1050 உதவி ஆய்வாளர்கள், அன்றிருந்த அரசால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தங்களுடைய செல்வாக்கு காரணமாக 650 பேர் சட்டம்-ஒழுங்கு போன்ற பகுதிகளிலே அனுமதிக்கப்பட்டு, பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள. மீதம் இருப்பவர்கள் ஆர்ம்டு ரிசர்வ் போலீஸிலும் (ஏ.ஆர்.) அதே போல டி.எஸ்.பி.-யிலும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதே தகுதி, அதே படிப்பு போன்ற எல்லா தகுதிகளும் இருந்தாலும்கூட அவர்கள் டி.எஸ்.பி., ஏ.ஆர். போன்ற பகுதிகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற காரணத்தால் அவர்கள் மீண்டும் லா அண்ட் ஆர்டர் பிரிவிற்கு வரமுடியவில்லை என்றும், தங்களுடைய உரிமை பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் முறையீடுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள்*

ஏற்கெனவே ஏ.ஆர்.-லும் அதேபோல டி.எஸ்.பி.-யிலும் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களை சட்டம் ஒழுங்கு பிரிவுக்குக் கொண்டு வருவாரா? அதேபோல 1993-ஆம் ஆண்டு காவலர்கள் தேர்விலே 396 காவலர்கள் விடுபட்டுப் போயிருக்கிறார்கள். அவர்களையும் எடுத்துக்கொள்ள முதல்வர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒரு நீண்ட விளக்கத்தை அளித்து நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஏனென்றால் காவல் துறை மானியம் விரைவில் வரவிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படவிருக்கிறது. பயிற்சி முடித்தவர்களில் சட்டம்-ஒழுங்கு, குற்றப் பிரிவிற்கு மாற்றுவதற்கு பொருத்தமானவர்களை தேர்வு செய்யக்கூடிய பணியை மேற்கொள்ள ஒரு ஸ்கிரீனிங் கமிட்டி கடந்த கால அரசால் ஏற்படுத்தப்பட்டு இருந்தது. இப்போது அந்த ஸ்கிரீனிங் கமிட்டி தேவையில்லை என்று இந்த அரசு முடிவு செய்து பயிற்சி முடித்தவர்களும், முடிக்க இருப்பவர்களும்-எல் & ஓ அல்லது க்ரைம்-சட்டம்-ஒழுங்கு அல்லது குற்றவியல் பிரிவிற்கு மாற்றப்படுவார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இடையிலே அரை மணி நேரம் பிரேக் இருக்கிறது. ஆகையால் மற்ற விவரங்களை நாளை வைத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருப்பதையும் சேர்த்து நாளை எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. பி. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உட்காருங்கள். நீங்கள் என்னுடைய அறையில் வந்து சொன்னீர்கள். முதலமைச்சர் அவர்கள் வரட்டும். நான் கேட்டுச் சொல்கிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

20]

1996 ஆகஸ்ட் 20]

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, **

திரு. பி. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர்கள், இரண்டு பேரும் உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

முற்பகல் 9.35

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** குறித்து தற்போது நடைபெற்ற விவாதத்தை தமிழ்நாட்டினுடைய நன்மையைக் கருதி, அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது முக்கியமான 'சென்சிடிவ்' பிரச்சினை என்பதாலே இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. ஆர். சுந்தரம் குறிப்பிட்டதும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நாம் பேசுவது நமக்குப் பாதகமாக அமைந்துவிடக்கூடாது. (குறுக்கீடு). திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆசையே, இந்தப் பிரச்சனையே தமிழ்நாட்டுக்கு பாதகமாக அமைய வேண்டும் என்பதுதானே. அதனால்தான் இதனைக் கிளப்புகிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

3. மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 28-தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்.

(ஆ) கோரிக்கை எண் 21-மீனளம்

(அ) கோரிக்கை எண். 28-தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1996-97 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 28-தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 75,83,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 556, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள தோல் தொழிற்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் உள்ளதால் அவர்களுக்கு நிவாரண நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 75,83,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 654, திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 75,83,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 14, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், நல்ல முத்தாம்பாளையம் சத்தியம் ஸ்பின்னிங் மில்ஸ் வேலை நிறுத்தம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 75,83,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1234, திரு. ஜி. கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், மேட்டூரில் நீண்ட காலமாக மூடப்பட்டு கிடக்கும் மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில் உடனடியாக திறக்கப்பட்டு தொழிலாளர்களுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 75,83,83,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1057, திரு. ஜி. நிஜாமுதீன்.

***திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'நாகை தொகுதி, நாகூர் தொழிற்பேட்டையில் உள்ள அரசுக்குச் சொந்தமான இரும்புப் பெட்டித் தொழிற்சாலையில் உற்பத்தியான பொருட்களை அரசுத் துறைகளுக்கு விற்பனை செய்ததால் விற்பனைத் தொகை வசூல் செய்ய முடியாமல் தொழிற்சாலை நிதியை இழந்து தொடர்ந்து செயல்பட முடியாமல் உள்ளதை மீண்டும் இயங்கச் செய்வதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ. 75,83,83,000-ல் ரூ. 100* குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் *எண் 869, திரு. வை. சிவபுண்ணியம்.*

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'தமிழ்நாடு முழுவதும் மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளை மீண்டும் திறந்து தொழிலாளர் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டறிவதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் பற்றிய 28-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ. 75,83,83,000/-ல் ரூ. 100* குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 21-மீனளம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கை *எண் 21-மீனளம்,* மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் *ரூ. 32,93,09,000/-க்கு* மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

1996 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1064, திரு. அ.வ. அப்துல் நாசர்.

திரு. அ.வ. அப்துல் நாசர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'பரங்கிப்பேட்டையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க வேண்டியதின் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,93,09,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 528, திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'வேலூரில் கோட்டை அகழியில் விறால் போன்ற உயர் ரக மீனை வளர்த்து லாபம் ஈட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:.

"மீனளம் பற்றிய 21–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,93,09,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 47, திரு. கே. சுப்பராயன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மீனளம் பற்றிய 21–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,93,09,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1266, திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் உள்ள மீன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மீனளம் பற்றிய 21-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,93,09,000–ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1052, திரு. ஜி. நிஜாமுதீன்.

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'இயற்கையின் சீற்றத்தால் அடிக்கடி காணாமல் போகும் மீனவர்களை மீட்க நாகையில் மீட்பு மையம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மீனளம் பற்றிய 21–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,93,09,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 966, திரு. பா. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'சேரன்மாதேவி தொகுதி, சேரன்மாதேவி ஒன்றியம், கனியூரிலுள்ள மீன் பண்ணை சரிவரப் பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மீனளம் பற்றிய 21–ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 32,93,09,000–ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சடிக்கப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்த பிறகு, இந்த மானியக் கோரிக்கையில் என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீனளத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு ஆங்கிலத்திலும், தமிழிலும் அச்சடிக்கப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை @@நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களைத் தெரிவித்த பிறகு, இந்த மானியக்கோரிக்கையில் என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் தொடங்குகிறது, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறை மற்றும் தொழிலாளர் நலத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் பேசுவதற்கு வாய்ப்பினை நல்கியதற்கு நன்றியினைக் கூறி சில கருத்துக்களை உங்கள் முன்னாலே எடுத்துரைக்கலாம் என நினைக்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 1000 கிலோமீட்டர் நீளமுள்ள

@ 183முதல் 371 வரையிலான பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 373 முதல் 390 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

கடற்கரைப் பகுதியில் 442 மீனவ கிராமங்கள் உள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. அதிலே கிட்டத்தட்ட 2.52 இலட்சம் மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த நல்ல சந்தர்ப்பத்திலே ஒரு சில கருத்துக்களை உங்கள் முன்னால் வைக்க விரும்புகின்றேன்.

முற்பகல் 9-40

ஆண்டு ஒன்றக்கு கிட்டத்தட்ட 675 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி ஈட்டித் தருகின்ற இந்த மீனவ நண்பர்களுக்கு அரசு சார்பிலே எந்தவிதமான பெரிய சலுகைகளும் வழங்கப்படவில்லை என்பது என்னுடைய கருத்து. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை. அவர்கள் செய்கின்ற தொழில் மிகவும் ஆபத்தான தொழிலாக இருந்து வருகிறது. உயிரைப் பணயம் வைத்து வேலை செய்து அவர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றுகின்ற சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்தான் அந்த மீனவ நண்பர்கள். அவர்களுக்கு அரசு அதிகமான உதவிகளைச் செய்ய முன்வர வேண்டுமென்று நான் இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

நீங்கள் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரத்திலே கூட ஆண்டுக்காண்டு மீன்பிடி அளவு குறைந்து வருவதாகக் குறிப்பிட்டு இருக்கின்றீர்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், பொதுவாக உயிருக்கு ஆபத்தான இந்தத் தொழிலைச் செய்ய வேண்டாம் என்கிற ஒரு நோக்கு. அதுமட்டுமல்ல, இதற்கு முன்பிருந்த மத்திய அரசால், கடற்கரைப் பகுதியில் உள்ள மீன்களைப் பிடிப்பதற்கு எட்டு அந்நிய நாட்டுக் கப்பல்கள் குத்தகைக்கு விடப்பட்டு, அவைகள் மிகப்பெரிய மீன்களைப் பிடிப்பதோடு மட்டுமல்லாமல், கப்பலிலேயே மீன் பதனிடும் தொழிற்சாலையையும் அமைத்து, அத்தனை மீன்களையுமம ஸ்வீகாரம் செய்து கொள்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே, மீனவர்களுக்குத் தரமான மீன்கள் கிடைக்காத சூழ்நிலை இருந்து கொண்டு வருகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இதிலே தனிக் கவனம் செலுத்தி அந்நிய நாட்டுக் கப்பல்களுக்குக் கொடுத்து இருக்கின்ற குத்தகையை ரத்து செய்து நமது நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மீனவர்களைக் காப்பாற்றுவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மீனவ நண்பர்கள் மீன்பிடிக்கச் செல்லுகின்றபோது அவர்களுக்கு மண்ணெண்ணெய், டீசல் போன்றவைகளை கேரள மாநிலத்தில் வழங்குவதுபோல ரேஷன் விலையிலே, மலிவு விலையிலே வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமாத்திரமல்ல, மீனவ நண்பர்களுக்கென்று கல்வித் துறையில், சுகாதாரத் துறையில் முக்கியத்துவம் வழங்குகின்ற முகத்தான் அவர்களுக்குப் பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கடற்கரைப் பகுதிகளிலே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அதுபோல, அந்தப் பகுதியிலே உள்ள மீனவ நண்பர்களுக்கு, பெருவாரியாக கடற்கரைப் பகுதி கிராமங்களிலே உள்ளவர்களுக்கு குடிதண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக இருந்து வருகிறது. அந்தப் பிரச்சினையைப் போக்க வழிவகை காண வேண்டும் என்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோல, அவர்கள் ஆண்டுக்கு 6 மாதம்தான் தொழில் செய்ய முடிகிறது. 6 மாதம் தொழில் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. கடல் கொந்தளிப்பு, புயல் போன்ற பல்வேறு காரணங்களினால் 6 மாதம் தொழில் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, அவர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கும் சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தித்தர அரசு முன்வர வேண்டும் என்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல தமிழகத்தில், பல்வேறு பகுதிகளில், மீன்பிடிக்கச் செல்லுகின்ற மீன்பிடி நண்பர்களுக்கு தூண்டில் வளைவு அமைத்துத்தர வேண்டுமென்ற கோரிக்கையை வெகுகாலமாக நாங்கள் எழுப்பி வருகின்றோம். இதற்கு முன்பு இருந்த அரசிலேகூட நாங்கள் இதைப்பற்றிச் சொன்ன நேரங்களிலே, 'தூண்டில் வளைவா போ' என்று என்னை வெளியேற்றிக் கொண்டிருந்தார்கள். மீனவ நண்பர்களுடைய அந்தப் பிரச்சினையை அவர்கள் செவிமடுக்கத் தயாராக இல்லை. எனவே, நமது அரசு, டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு, இதிலே கவனம் செலுத்தி, கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு 650 கோடி ரூபாய் வருமானம் ஈட்டித் தருகின்ற தொழிலைச் செய்கின்ற அவர்கள்பால் ஒரு அக்கறை

கொண்டு--எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் தூண்டில் வளைவு அமைத்துத்தர வேண்டுமென்று அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நண்பர்களும் ஒருங்கிணைந்து பல போராட்டங்களை நடத்தினாலும், அவை யாவும், செவிடன் காதில் ஊதிய சங்கு போல இருந்ததே தவிர, பயன் ஒன்றும் ஏற்படவில்லை. எனவே, நமது அரசு அவர்கள்பால் அக்கறை கொண்டு--இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இணையம், புத்தன் துறை இராமன் துறை பகுதிகளிலே ஆண்டுக்கு குறைந்தபட்சம் 500 வீடுகள் அல்லது 1,000 வீடுகள் கடல் கொந்தளிப்பால் அடித்துச் செல்லப்படுகின்றன. இந்த ஆண்டுகூட கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்ட வீடுகள் கடல் கொந்தளிப்பின் காரணமாக அழிக்கப்பட்டு விட்டன. எனவே தூண்டில் வளைவு அமைத்துக் கொடுத்தால் இதைத் தடுத்திட முடியும். அதே நேரத்தில் அவர்கள் தொழிலுக்குச் செல்வதற்கும் சாத்தியக்கூறு ஏற்படும். கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பாக கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது 8 கோடி ரூபாய்க்குத் தடுப்புச் சுவர் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். நாங்கள் அதே பணத்தை வைத்துத்தான் தூண்டில் வளைவு அமைத்துத்தர வேண்டும் என்று கேட்கிறோம்.

முற்பகல் 9-45

அதை நம்முடைய அதிகாரிகள் டெக்னிக்கல் ஃப்ளா என்று சொல்லுவார்கள். கடலிலே தூண்டில் வளைவு அமைத்துத் தந்தால் இன்னொரு பகுதியிலே ஊரை அழித்துச் சென்றுவிடும், எனவே சாத்தியக்கூறுகள் இல்லை என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அது தவறு. ஏனென்றால் கேரள மாநிலத்தில் 5 கிலோ மீட்டர் அல்லது 3 கிலோ மீட்டர் வீதம் தூண்டில் வளைவு அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஒன்றும் அழித்துச் செல்லவில்லை. எனவே செய்ய வேண்டுமென்கிறபோது, அந்த டெக்னிக்கல் ஃப்ளாவை சரியாக்குவதற்கு உரிய சாத்தியக்கூறுகளை உருவாக்க வேண்டும். 8 கோடி ரூபாய் என்பது 10 கோடி ரூபாய் அளவுக்கு ஆகக் கூடும். தூண்டில் வளைவு அமைத்துக் கொடுப்பீர்கள் என்று சொன்னால், நிரந்தரமாக மீனவ நண்பர்கள் ஆண்டு முழுவதும் வேலைக்குச் செல்லுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களும் இதிலே தனிக் கவனம் செலுத்தி தூண்டில்

வளைவு அமைத்துக் கொடுத்து பல்லாயிரக்கணக்கான மீனவர்கள் தொழில் செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஏற்படுத்திக் கொடுத்திட வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், நம்முடைய மாநிலத்தில் பிடிக்கப்படுகின்ற மீன்களை வெளி மாநிலங்களுக்குக் கொண்டு சென்று, அங்கே பதப்படுத்தி அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக நம்முடைய மாநிலத்தில் அதிகமாக எங்கே உற்பத்தி ஆகின்றதோ அந்தப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அங்கே பிடிக்கப்படுகின்ற மீன்களைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான தொழிற்சாலையை அமைத்துத் தருவதற்கு நமது அரசு முன் வர வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமாத்திரம் அல்லாமல், மீனவ நண்பர்கள் கடலிலே மீன்பிடிக்கச் செல்லும்போது, அவர்களுக்கு அபாயம் ஏற்பட்டு, துர்மரணம் அடையக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படுகின்றபோது, அவர்களுடைய உடல் அவர்களது குடும்பத்திற்குக் கிடைப்பதற்கு 2 தினங்கள், 3 தினங்கள் அல்லது ஒரு வாரம்கூட ஆகிவிடுகிறது. அதற்குப் பிறகும், உடன் மீன் பிடிக்கச் சென்ற நண்பர்கள் அத்தனைபேரும், இவர் விபத்திலே காலம் ஆகிவிட்டார் என்று சொன்னாலும்கூட, அரசாங்கம் கேட்டுக்கொள்ளாமல் அந்த பாடியை போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டுமென்று சொல்லி, பிரேத பரிசோதனை செய்த பிறகுதான் பாடியை அவரது குடும்பத்தாரிடம் ஒப்படைகிறார்கள். அவர்களுக்கு உதவித் தொகை ரூ. 5,000–மோ அல்லது ரூ. 10,000–மோ வழங்குவதற்காகக் கூட போஸ்ட் மார்ட்டம் செய்கின்ற ஒரு கொடுமை இருந்து கொண்டிருக்கிறது. அதை நீங்கள் தவிர்த்திட வேண்டும். ஏனென்று சொன்னால் ஒரு வாரம் கண்ணீரும் கம்பலையுமாக இருக்கின்றவர்கள், அந்த உடல் கிடைத்த பிறகு மீண்டும் பிரேதப் பரிசோதனை என்கிற பெயரில் இன்னும் வேதனையை அதிகப்படுத்துகிற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே இயற்கையின் உபாதையின் காரணமாக துர்மரணம் அடைந்தவர்களுக்கு அப்படிப்பட்ட கொடுமையான நிகழ்ச்சிகள் வேண்டாம். அதை நீங்கள் தவிர்த்திடுவதற்கு முன் வர வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) சீக்கிரம் பேசி முடித்துவிடுகிறேன்.

அதேபோல, நம்முடைய பகுதிகளில், மீனவ நண்பர்கள் மீன் பிடிக்கச் செல்லுகின்றபோது, இலங்கை இராணுவப் படையினரால் பெரும் உபாதைக்கு உள்ளாகிறார்கள். நிரந்தரமாக அதிலிருந்து அவர்களுக்கு விடுதலை தருகிற முகத்தான், பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு அவர்களின் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு தருவதற்கான நல்ல திட்டங்களை, நல்ல வழிவகைகளைக் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மீனவ நண்பர்கள் மீன் பிடிக்கச் செல்லுகின்றபோது காணவில்லை என்று சொன்னால் ஹெலிகாப்டர் வைத்துத் தேட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி ஒரு தீர்மானத்தில் பேசுகிற போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். எப்போதோ ஒரு முறை நடைபெறுகிற நிகழ்ச்சி இதற்கு ஒரு ஹெலிகாப்டர் வைத்துத் தேடுவது என்பது இயலாத காரியம். எனவே அதை நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் ஒன்றை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். புயல், கொந்தளிப்பு, பெருவெள்ளம் இவைகளின் காரணமாக மட்டுமல்லாமல் சாதாரண காலங்களில்கூட மீனவர்கள் காணாமல் போகிறார்கள். இப்போதுகூட எங்களுடைய தலைவர் அவர்களின் கவனத்திற்கு இரண்டு நண்பர்கள் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். அதாவது ஆர். 200 போலோ என்ற பெயர் கொண்ட ஒரு மீன்பிடிக் கப்பலில் சென்ற 4 பேரும் ஆர்.எம்.எஸ். 20 ராதிகா என்ற கப்பலில் சென்ற 4 பேரும், கழிந்த ஒரு வாரகாலமாக காணவில்லை. அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வதெல்லாம் மீனவ நண்பர்களைக் காணவில்லை என்று சொன்னால், அவர்களை உடனடியாக தேடிக் கண்டுபிடிப்பதற்கு வழி வகை செய்ய வேண்டும். ஏனென்றால் உயிருக்காகத் தத்தளித்துக் கொண்டிருக்கின்றவர்கள் உள் நாட்டிலே என்று சொன்னால், இன்றைக்கு அல்லது நாளைக்காவது வந்துவிடுவார்கள் என்ற உணர்வோடு இருக்க முடியும். ஆனால் கடலிலே எந்த நேரத்திலும் அவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்படக்கூடும். ஆபத்து வருகின்ற காலத்திலே மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்காக உறுதுணையாக நிச்சயமாக நீங்கள் ஒரு ஹெலிகாப்டரைப் பயன்படுத்துவீர்கள் என்று சொன்னால், தமிழகத்தினுடைய 100 கிலோ மீட்டர் பகுதியில் இருக்கக்கூடிய மீனவர்களை, ஆபத்

ருகின்ற நேரத்திலே, தகவல் வந்தவுடனேயே அவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்படும். தனியாக சுகம் அனுபவிப்பதற்கு ஒரு ஹெலிகாப்டரும், ஒரு ஆகாய விமானமும் வாங்கி அனுபவித்த முதல்வர் இருந்த நாடு, இன்றைக்கு கிட்டத்தட்ட இலட்சம் மக்களுடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக ஒரு ஹெலிகாப்டர் வாங்கி, அவர்களுக்கு ஆபத்து வருகின்ற நேரத்திலே ஓடோடி வந்து உதவும் கரங்களாக நீங்கள் இருப்பீர்கள் என்று சொன்னால், அந்த மீனவ நண்பர்கள் வாழ்நாள் முழுவதும், வாழ்நாள் உள்ள அளவிலும், உயிருக்குப் பிரச்சினை வருகின்றபோது காப்பாற்றுவதற்கு நம்முடைய கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் அவர்கள் மீன்பிடிக்கச் செல்ல முடியும். எனவே நீங்கள் அதிலே தனிக்கவனம் செலுத்தி, அவர்களுக்கு ஒரு ஹெலிகாப்டர் தளத்தை அமைத்துத் தந்து, ஒரு ஹெலிகாப்டரை வாங்கி அவர்களுடைய உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்புத்தர முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–50

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற ஆபத்தான நேரங்களில் மீனவர்கள் காணாமல் போகிற அந்த நேரங்களில் கேட்டால் நிச்சயமாகத் தருவதற்கு, ஹெலிகாப்டர்களைத் தருவதற்கு இராணுவம் தயாராக இருக்கிறது. இராணுவத்திடம் இருந்து ஹெலிகாப்டர்களைப் பெற்று மீனவர்களைத் தேடுகிற முயற்சியிலே ஈடுபடலாம். அண்மையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளிலேகூட பாதுகாப்புத் துறையினுடைய கப்பல்கள் எல்லாம்கூட அதற்குப் பயன்படுத்தப்பட்டன. பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் சோமு அவர்கள் மூலம் கேட்டு, அந்தக் கப்பல்களை எல்லாம்கூட நாம் பெற்று, மீனவர்களைத் தேடுகின்ற முயற்சியில் ஈடுபட்டோம். அதேபோல, உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, ஹெலிகாப்டர்களை இராணுவத்திடம் இருந்து பெற்று தேடுகிற முயற்சியிலே ஈடுபடலாம். அதற்காக 20 கோடி ரூபாயிலே ஹெலிகாப்டர், 20 கோடி ரூபாயிலே விமானம் தேவை இல்லை. எனவேதான் இவைகளை விற்றுவிடவும் முடிவு செய்து இருக்கிறோம் என்று ஏற்கெனவே குறிப்பிட்டு இருக்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய கருத்திற்கு நன்றி. அதிலே காலதாமதம், சுணக்கம் ஏற்படுகிறது. ஏனென்று சொன்னால், இதற்கு முன்பும் இதேமாதிரி நம்முடைய நேஷனல் ஃபோர்ஸ், நேவி ஃபோர்ஸ் ஆகியவற்றிடமிருந்து எல்லாம் உதவி பெற முயற்சி செய்து இருக்கிறோம். இரண்டு, மூன்று முறை மீனவர்கள் காணாமல் போன நேரத்திலே, அதுபற்றி பப்ளிக் டிபார்ட்மென்டுக்குச் சொல்லி, அவர்கள் ஃபிஷரீஸ் டிபார்ட்மென்டுக்குச் சொல்லி, அப்புறம் இவர்கள் பணம் கட்டி, அதற்குப் பிறகு சென்ட்ரலிலே இருந்து கிளியரன்ஸ் வந்து, அதற்குப் பிறகுதான் நேவி ஃபோர்ஸ் தேடப் போகிறது. அதற்குக் கிட்டத்தட்ட 2 தினங்கள் ஆகிவிடுகிறது. ஆக, அந்த உயிரை 2 தினங்களில் காப்பாற்ற வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த ஹெலிகாப்டர் நேரடியாகவே நம்மிடம் இருக்கும் என்று சொன்னால், இப்படி ஆபத்து என்று சொன்னவுடன் நேரடியாக உதவிக்கு வரும். உடனடியாக நிவாரணம் கிடைக்கும் என்கிற காரணத்தினாலே குறிப்பிட்டேனே தவிர, மற்றபடி 20 கோடி ரூபாய் செலவு செய்து ஹெலிகாப்டர்கள் வாங்கி இங்கே வீண் செலவு செய்ய வேண்டும் என்ற உணர்வோடு சொல்லவில்லை. இதற்கு மாற்று பரிகாரம்கூட நீங்கள் கண்டு--உடனடியாக அதைச் செய்யவில்லை என்றாலும்கூட, ஒரு மணி நேரம் அல்லது ஐந்து மணி நேரத்திலே அவர்களைத் தேடுவதற்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தித் தந்துவிட முடியும் என்று சொன்னால், அதுவே போதுமானது. அதற்குக் கண்டிப்பாக தனியாக ஹெலிகாப்டர் தேவை என்று நான் சொல்லவில்லை. உடனடியாக தேவை வரும் பட்சத்திற்குத்தான் நான் குறிப்பிட்டேன். எனவே, நீங்கள் அதிலே தனிக்கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர் நலனைப் பொறுத்தவரைக்கும் *(மணியடிக்கப்பெற்றது.)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

டாக்டர் தே. குமாரதாஸ்: அப்படியா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆம்.

டாக்டர் தே. குமாரதாஸ்: இவ்வளவு காலமும் தீர்க்கப்படாத பிரச்சினைகளைப் பற்றி நான் ஒரே நிமிஷத்திலே பேசி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ்: தொழிலாளர் பிரச்சினை என்று வருகிறபோது எல்லா இலாக்காகளிலும் நீங்கள் அவர்களுடைய குறைகளைக் கண்டறிந்து கேட்டு, அவர்களுடைய பணி இறக்கம், பணி மூப்பு--இவைகளில் ஏற்படுகின்ற குளறுபடிகளை நிவர்த்தி செய்வதற்கு குழுக்களைப் போட வேண்டும். இப்போது ஒரே கேட்டகரியிலே ஒரே வேலையிலே எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள் பல்வேறு இலாக்காகளிலே இருக்கிறார்கள். அவர்களிடையே ஏற்றத்தாழ்வு இருக்கிறது; அவர்கள் பல்வேறு விதமான சம்பளங்களிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வருகிறபோது, எலக்ட்ரிசிட்டி போர்டில் இருப்பவர்களுக்கு அதிக சம்பளம் இருப்பதுபோலவும், மற்ற இலாக்காகளில் இருப்பவர்களுக்கு குறைவான சம்பளம் இருப்பது போலவும்--இதுபோன்ற ஒரு தாழ்வு மனப்பான்மை இருக்கிறது. எனவே, அனைத்துத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய பேசிக் குவாலிஃபிகேஷனை அடிப்படையாக வைத்து நீங்கள் ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று என்னுடைய தாழ்மையான வேண்டுகோளை உங்கள் முன்னாலே வைக்கிறேன்.

இரண்டாவது, தொழிலாளர் பிரச்சினையை பொறுத்தவரைக்கும் அவர்களுடைய பிரச்சினைகளில் நிவர்த்தி காண்பதற்கு அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து, அதன் மூலம் அவர்களுடைய குறைகளைக் கேட்டுத் தெரிந்து நீங்கள் நிவர்த்தி செய்வதற்கு முன்வருவீர்கள் என்று சொன்னால், அதிலே அரசியல் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் அவர்களுடைய குறைகளை எல்லோரும் சேர்ந்து நிவர்த்தி செய்கிற ஒரு சாத்தியக்கூறும் ஏற்படும். (குறுக்கீடு)

தொழிலாளர்களுடைய பிரச்சினை என்று வருகிறபோது, (குறுக்கீடு) போனஸ் வழங்குகின்ற பிரச்சினையும் வருகிறது. போனஸ் வழங்குகின்ற பிரச்சினையைப் பொறுத்தவரையல், சில கம்பெனிகளில், தனியார் நிறுவனங்களில் லட்சக் கணக்கில், கோடி கணக்கில் அவர்களுக்கு லாபம் கிடைக்கும்; சிலவற்றில் குறைவான லாபம் கிடைக்கும் சாத்தியக்கூறுகள் உண்டு. எனவே, ஏற்றத்தாழ்வு இல்லாமல், அனைவருக்கும் ஒரே போனஸ், ஒரு குறிப்பிட்ட தொகை, 25 ஆயிரமோ, 50 ஆயிரமோ-இப்படி ஃபிக்ஸ் செயது அவர்களுக்கு

போனஸ் கொடுக்கும் முகத்தான் நீங்கள் ஒரு செயல்பாட்டை உருவாக்குவீர்கள் என்று சொன்னால், அனைத்துத் தரப்பு மக்களும் போனஸுக்கு என்று ஒரு பேச்சுவார்த்தை, பின்னர் அதற்கு ஒரு ஸ்ட்ரைக்–அப்படிப்பட்ட காலதாமதங்கள் ஏற்படாமல் அனைவரும் சேர்ந்து இயக்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே, அதையும் அரசு கவனத்திலே கொண்டு செயல்பட வேண்டும் என்று கேட்டு அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. டி. சி விஜயன் *(குறுக்கீடு)*

திரு. டி.சி. விஜயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . .

4. தகவல் கோரல்

(அ) கவன ஈர்ப்புகளை அவையில் எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. சி. ஞானசேகரன்: Point of order.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. குமாரதாஸ் பேசியதிலா?

திரு. சி. ஞானசேகரன்: இல்லை. மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் நேற்று இந்த 55–வது விதியின் கீழ் வரக்கூடியவற்றிற்கெல்லாம் உறுப்பினர்களுக்கு நாம் சர்குலேட் செய்து விடலாம் என்ற கருத்தைத் தெரிவித்து இன்று நிகழ்ச்சி நிரலிலே 55–வது விதியின் கீழ் கொண்டுவரப்படக்கூடிய கவன ஈர்ப்புகள் ஒன்றுகூட போடவில்லை. இன்றுதான், அதாவது இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்லக்கூடிய மானியங்களோடு முடிந்துவிடுகிறது. மற்ற நாட்களில் எல்லாம் கேள்வி நேரம் வரப்போகிறது. கேள்வி நேரத்தை அடுத்து, 55–வது விதியின் கீழ் நாம் எப்போதுமே கவன ஈர்ப்பைக் கொண்டு வருவது முறையாக இருக்கின்ற காரணத்தால், எங்களுடைய உரிமையைப் பறிக்காவண்ணம்.....

[26 ஆகஸ்ட் 20]

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதாவது, நேற்று மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே அறிவிக்கும்போது நீங்கள் அவையில் இருந்தீர்கள். அவர்கள் சொன்னது, இதுவரைக்கும் வந்திருக்கின்ற கவன ஈர்ப்புகளை, அவற்றின் முக்கியத்துவம் கருதி, எல்லா உறுப்பினர்களுக்கும் அப்படியே அந்த பதில்களை அனுப்பி விடுங்கள் என்று சொல்லி, அதன்மீது மேலும் விளக்கங்கள் தேவையானவர்கள் இருந்தால், மறுபடியும் அவர்கள் அதைக்கொண்டு வரட்டும் என்றார்கள். அப்போது நீங்களும் இருந்தீர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: தாங்கள் அனுமதிக்கப்போவது ஒரு நாளைக்கு இரண்டே இரண்டு கவன ஈர்ப்புகள்தான். நமக்கு இன்னும் பத்து நாட்கள் கூட இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் ஒரு டஜனுக்கு மேலே கொடுக்கிறீர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: என்னுடைய கவன ஈர்ப்புகளை எடுத்துக்கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை. மற்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்ற உரிமைகள் பாதிக்கப்படக்கூடாது. 55-வது விதியின் கீழ் ஒரு அமைச்சர் பதில் சொல்வது என்பது, அதற்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவம் என்பது, உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற மிகச் சிறந்த ஒரு முக்கியத்துவம். ஆகவே.....

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 55-வது விதியின் கீழ் இந்த அவையில் ஒரு பிரச்சினையைப் பற்றிக் கேட்டு, விளக்கத்தைத் தெரிந்து கொள்வதற்கான எந்த உரிமையையும் நான் மறுக்கவில்லை. ஆனால் அதிக அளவில் பதில்கள் தரப்படுகின்ற நிலையில், அவற்றை அவையில் எடுத்துக்கொள்வதற்கு ஏறத்தாழ ஒரு வாரம் அல்லது பத்து நாட்கள் கடந்துபோகும் என்ற காரணத்தால், உடனடியாக மாண்புமிகு உறுப்பனர்களின் கவனத்திற்கு அந்தப் பதில்கள் கிடைக்குமானால், அது எடுத்துக்கொள்ளப்படுவதற்கு ஆகும் காலதாமதத்தின் காரணமாக உறுப்பினர்கள் அந்த விளக்கத்தை அறியாமல் இருக்கின்ற நிலைமைகள் மாற்றப்படும். அதற்காகத்தான், அந்தப் பதில்களையும் கூட இந்த அவையிலேயே வைக்கப்படும்

என்றும் எல்லா உறுப்பினர்களும் அவற்றைத் தெரிந்துகொள்ளலாம் என்றும் குறிப்பிட்டேன். அதற்கு மேலும் அதே பிரச்சினை குறித்து விளக்கம் கேட்டு எழுப்பவேண்டிய அவசியம் வந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் பிரச்சினையை எழுப்பலாம். அது ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஆ) விதி 32-ஐத் தளர்த்தி வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ம. அப்துல் லத்தீப்.

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, *55*-வது விதியோ, *56*-வது விதியோ, அதனுடைய முக்கியத்துவம் கருதி எடுத்துக் கொள்வதில், அமைச்சரவையில் இருக்கக்கூடியவர்களுடைய சௌகரியத்தைப் பொறுத்து, அதை எடுத்துக்கொள்ளலாம். அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தால் உடனே கூட எடுத்துக் கொள்ளலாம். அதுகுறித்து யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் கேள்வி நேரம் என்பது ஒரு அவையினுடைய முக்கியமான நேரம். நம்முடைய Parliamentary Procedure-லே கூட "There shall be a Question hour" என்று இருக்கிறது. "So, Question hour" இருந்தே ஆக வேண்டும். There shall be a Question Hour.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி நேரம் சம்பந்தமாக, அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவெடுக்கப்பட்டதுதான். அதுகூட இன்றைக்கு வரையில்தான். ஒரு நாளைக்கு இரண்டு அமைச்சர்களுடைய மானியக் கோரிக்கைகள் வருவதாக இருந்தால், அன்றைக்கு, கேள்வி நேரத்தை ஒத்திவைத்து, இதர அலுவல்களை எடுத்துக்கொள்ளலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்டதுதான்.

திரு. ம. அப்துல் லத்தீப்: உறுப்பினர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றது என்ற எண்ணம் வந்துவிடக்கூடாது என்பதை வலியுறுத்தியும், அவசர அவசிய பொது முக்கியத்துவம் வாய்ந்த

1996 ஆகஸ்ட் 20] [திரு. ம. அப்துல் லத்தீப்]

பிரச்சினைகளை அமைச்சரவையில் இருக்கக்கூடியவர்கள், அதற்கான தகவல்களைச் சேகரித்து அவர்களுடைய சௌகரியத்தைப் பொறுத்து, விஷயத்தின் தன்மையையும் அவசரத்தையும் பொறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். அதிலே யாருக்கும் எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால், there shall be a Question hour. இதிலே discretion கிடையாது. அடிக்கடி அவையிலே வந்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவது என்பது கூட ஏற்புடையது அல்ல. அதாவது....

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் இல்லை என்ற தீர்மானத்தை நிறைவேற்றுவது கூட ஏற்புடையது அல்ல என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது, வேதனையாகவும் இருக்கின்றது. ஏனென்றால், இந்த முடிவை அலுவல் ஆய்வுக் குழுவிலே-மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்களும் இருக்கின்ற அந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்து, அதன்படி அவை முன்னவர் அவர்கள் இங்கே அதை அறிவிக்கின்றார்கள். இரண்டு அமைச்சர்களுடைய மானியங்கள் வருகின்ற நாட்களில், கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு, இரண்டு மானியங்களிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதற்கு அதிக நேரம் அல்லது போதுமான நேரம் ஒதுக்க வேண்டும் என்பதற்காகத்தான், கேள்வி நேரம் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. அதை ஏற்புடையதல்ல என்று சொன்னால், அதை அலுவல் ஆய்வுக் குழுவிலேயே அவர் தெரிவித்திருக்க வேண்டும். அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒருமித்தக் கருத்துடன் அது ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்ற காரணத்தால், அவர்கள் இங்கே அப்படிக் கூறுவது சரியல்ல என்பதை மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ம. அப்துல் லத்தீப்: துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதில் ஏதோ சரியாகச் சொல்லவில்லையோ என்னவோ தெரியாது. அல்லது அதைச் சொல்வதற்குரிய ஆற்றல் இல்லாமல் சொல்லியிருக்கிறேனோ என்னவோ, அதைக்கூட நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், நான் சொல்லும்போது அடிக்கடி என்று சொன்னேன். அடிக்கடி அதைத் தள்ளிவைப்பது, ஒத்திவைப்பது என்பது ஏற்புடையதல்ல என்றுதான் சொன்னேன். அடிக்கடி என்ற வார்த்தையைப் பயன்படுத்தினேன்.

[1996 ஆகஸ்ட் 20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இரண்டு அமைச்சர்களின் மானியக் கோரிக்கைகள் இருக்கின்ற நாட்களுக்கு மட்டும்தான் இந்த முடிவு. அலுவல் ஆய்வுக் குழுவிலே நீங்கள் ஒத்துக்கொண்டுதான் இப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டது

Thiru M. Abdul Latheef: It is only an exceptional case. That cannot be a rule. ஆகையினால்தான் நான் சொல்கிறேன், அடிக்கடி செய்வது சரி அல்ல என்று. அதுவும் ஒத்திவைத்துவிட்டு, கேள்வி நேரம் இல்லை என்று சொல்லிவிட்டு, அந்த நேரத்தை வேறு காரியங்களுக்காக அவசர, அவசிய முக்கியத்துவம் என்ற பெயரிலே பயன்படுத்துவது சரியல்ல. எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது என்றால், சப்ளிமெண்டரி போடலாம். அவர்கள் புதிய தகவல்களைப் பெறலாம். கேள்வி நேரத்தில்தான் அதைச் செய்ய முடியும். இன்னொன்று இந்தக் கேள்வி நேரம் என்பது ஒரு அவையினுடைய முக்கியமான நேரம். There shall be a Question hour. ஆனால் மற்றவை உங்களுடைய சமயோசித டிஸ்கிரஷனரி பவருக்கு உட்பட்டது.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்சினைகூட நாளையிலிருந்து இருக்காது. நாளையிலிருந்து ஒவ்வொரு அமைச்சரின் மானியக் கோரிக்கைதான் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தினுடைய முக்கியத்துவத்தை ஆளுங்கட்சியும் உணர்ந்திருக்கிறது. எதிர்க்கட்சியும் உணர்ந்திருக்கிறது. அதிலே எந்த மாறுபாடும் இல்லை. ஆனால் இந்த அவையினுடைய வசதிக்காக, அவையிலே உள்ள அனைவருடைய வசதிக்காக, இரண்டு மானியங்கள் விவாதிக்கப்படுகிறபோது அமைச்சர்கள் விடை சொல்கிறபோது, அவை முடிகிறபோது 2-30 மணி ஆகிறது. பல உறுப்பினர்களுக்கு இது பெரும் துன்பமாக இருக்கிறது. எனவே அதற்காகத்தான் அலுவல் ஆய்வுக் குழுவில் கலந்து பேசி, இரண்டு மானியங்கள் விவாதிக்கப்படுகிற நாளில் அன்றைக்கு மட்டும் இந்தக் கேள்வி நேரத்தை ஒத்தி வைக்கலாம் என்று மொத்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைக்காக அன்றாடம், மறுநாள் ஒத்தி

1996 ஆகஸ்ட் 20] [பேராசிரியர் க. அன்பழகன்]

வைப்பதற்கு முதல் நாள், நான் தீர்மானம் கொண்டு வருகிறேனே தவிர, அவை ஏற்றுக் கொண்டதற்குத்தான் நான் தீர்மானம் கொண்டு வருகிறேனே தவிர, முன்னதாக ஏற்றுக் கொள்ளாததற்கு நான் தீர்மானம் கொண்டு வரவில்லை. அடிக்கடி கேள்வி நேரத்தை ஒத்திவைக்கிற நோக்கமும் இந்த அவைக்கு இல்லை. மேலும் கேள்வி நேரத்தை ஒத்திவைத்து அவசர முக்கியத்துவம் உள்ள பிரச்சினைகளுக்காக அதிக நேரம் எடுத்துக்கொண்டாலும் மானிய விவாதம் தடைபடுகிறது என்ற காரணத்தால்தான், நேற்றோ அல்லது அதற்கு முந்தைய நாளோ நம்முடைய முதலமைச்சர் அவர்களே தெரிவித்து, இப்படி அவசர முக்கியத்துவம் என்ற பெயரால் அதிக நேரம் செலவிடப்படுவது விவாதத்தைப் பாதிக்கிறது; எனவே ஒரே ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை மட்டும் எடுத்துக்கொண்டால் போதும் என்று அறிவுறுத்தி, அதுவும் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது அவையினுடைய மொத்த நலனுக்காகவே தவிர ஆளுங்கட்சியினுடைய நலனுக்காக அல்ல.

திரு. சி. ஞானசேகரன்: துணைத் தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். உறுப்பினர்கள் பேச ஆரம்பித்து விட்டார்கள். இப்படியே நீட்டித்துக் கொண்டு போனால் நேரம் அதிகமாகிவிடும். மேலும் இன்றைக்கு சபையை அரை மணி நேரம் ஒத்தி வைக்கப் போகிறோம்.

திரு. ம. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையினுடைய நன்மைக்காகவும் இது செய்யப்படுகிறது; இது ஏற்புடையது. ஒத்திவைக்கப்படுவது, தேவைப்படும்போது, ஒட்டுமொத்த நன்மைக்காக சில வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக, அப்படிச் செய்யப்படுகிறது. அதுவும் ஏற்புடையது. ஆனால் எதற்காக ஒத்தி வைக்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேறாமல், வேறு பிரச்சினைகளுக்குப் போகிறபோது, அதைத்தான் நான் ஆட்சேபிக்கிறேன். ஆகவே நேற்றே அதை முடிவு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள்....

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நான் இதுவரையில் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டதில்லை, இப்போது கேட்கிறேன். (சிரிப்பு) மானியக் கோரிக்கைகளை இரண்டு அமைச்சர்களும் முன்மொழிந்து விட்டு, மானியக் கோரிக்கைகள்மீது மாண்புமிகு உறுப்பினர் ஒருவரும் பேசிய பிறகு, அடுத்து பேச வேண்டியவர் எழுந்த பிறகு, இப்படி இந்தப் பிரச்சினையை, நேற்று நடந்து முடிந்த ஒரு பிரச்சினையை எழுப்பி, நேரத்தைக் கடத்தி, தொழிலாளர்கள் மீது அக்கறை இல்லாமல், (சிரிப்பு) மீனவர்கள் மீது அக்கறை இல்லாமல், உறுப்பினர்கள் நடந்து கொள்வது முறையா, தகுமா, சரியா என்று கேட்க விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அக்கறை இருந்தால் உறுப்பினர்கள் அப்படியே அமரலாம்.

3. மானியக் கோரிக்கைகள் 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.சி. விஜயன்.

திரு. டி.சி. விஜயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழு கோடி தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, இளைஞர்களின் எழுச்சி நாயகன், எங்களது தளபதி அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, எனக்கு வாக்களித்த என்னுடைய தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய கன்னிப் பேச்சினைத் தொடங்குகிறேன். இந்த கன்னிப் பேச்சில் ஏதேனும் தவறு இருந்தால் மன்னிக்கவும் கேட்டுக் கொள்கிறேன்.

திருவொற்றியூர் தொகுதியில் உள்ள திருவொற்றியூர் நகரம், கத்திவாக்கம் நகரம், மாதவரம் நகரம், மணலி தொழிற்பகுதி உள்ளிட்ட புழல் ஒன்றியம் ஆகிய பகுதிகள் தொழிற்சாலைகள் நிரம்பியவைகளாக உள்ளதால் ஏராளமான எண்ணிக்கையில் தொழிலாளர்கள், உழைக்கும் மக்கள் வாழ்கின்ற, பகுதிகளாக

விளங்குகின்றன. தொழிலாளர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழும் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான கழக ஆட்சியின் மூலம் தங்களுக்குப் பணிப் பாதுகாப்பும், ஊதிய உயர்வும், இன்னும் பல நன்மைகள் யாவும் கிடைத்திடும் என்கிற திடமான நம்பிக்கையில் தொழிலாளர்கள் உள்ளார்கள்.

முற்பகல் 10-05

கடந்த 5 ஆண்டுகளாக திருவொற்றியூர் தொகுதியில் முந்தைய அரசு குறிப்பிடும்படியான சாதனை எவற்றையும் செய்யவில்லை. மாறாக, மணலி பகுதியில் அமைய இருந்த ஆரோமெட்டிக் திட்டம் அரியானா மாநிலத்திற்குச் செல்லும் நிலை உருவானதில் கடந்த ஆட்சிக்குப் பங்குண்டு.

திருவொற்றியூர் தொகுதியில் பல தொழிற்சாலைகள் உள்ளன. அப்பகுதியில் சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மாசுக் கட்டுப்பாட்டு வாரிய நிரந்தர அலுவலகம் ஒன்றை மணலி பகுதியில் அமைத்திடவும், மக்களின் இன்னல்களை அகற்றிடவும் அரசு முன்வர வேண்டும்.

போக்குவரத்து நெரிசலில் திருவொற்றியூர் பெரிதும் பாதிக்கப்படுகிறது. பெரிய அளவிலான நீண்ட கன்டெயினர்கள் 24 மணி நேரமும் எடுத்துச் செல்லப்படுவதால், திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் மழைக்காலத்தில், மக்கள் பயன்படுத்த முடியாதபடி பெரும் பள்ளங்கள் ஏற்பட்டுவிடுகின்றன. மேலும் குறுகிய சாலையாக வேறு இருப்பதால், நெரிசல் அகல, பல மணி நேரமாகி, வீண் காலதாமதம் ஆகின்றது. எனவே, திருவொற்றியூர் நெடுஞ்சாலையை அகலப்படுத்தி, புதுப்பித்து சோடியம் மின் விளக்குகளை அமைத்திட எழில்மிகு சென்னை-2000 திட்டத்தில் சேர்த்திட அரசு முன்வரவேண்டும.

திருவொற்றியூர் தொகுதியில் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். அவர்கள் பயன்பெறும் வண்ணம், புதிய நவீன வசதிகளுடன் கூடிய ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை ஒன்றை உடனே நிறுவிட அரசு முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1996 ஆகஸ்ட் 20] [திரு. சி. ஞானசேகரன்]

கொறடா அமர்ந்துகொண்டிருக்கிற இடத்தில் யாரோ--சிவப்பு சால்வை போர்த்திக்கொண்டு--ஒரு கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் அமர்ந்துகொண்டிருக்கிறாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கட்சியினுடைய உறுப்பினரையே உங்களுக்கு அடையாளம் தெரியவில்லை என்கிறபோது எனக்கு வருத்தமாக இருக்கிறது.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இன்று உடல்நலம் சற்றுக் குறைவாக இருக்கிறது. இந்தக் குளிர் தாங்கமுடியவில்லை. ஆகவேதான் சால்வையை வாங்கி கதகதப்பாகப் போர்த்திக் கொண்டிருக்கிறேன். வேறு ஒன்றுமில்லை.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் சொன்னதிலேயிருந்து பொதுவாக உடல்நலத்திற்கும் பாதுகாப்பிற்கும் சிகப்பே சிறந்தது என்பது தெளிவாகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மு.க. ஸ்டாலின்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவப்பு சால்வை போடுகிறவர்கள் எல்லாம் கம்யூனிஸ்டு கட்சியினராகி விடமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொடியிலே கறுப்பு ஏன் இருக்கிறது என்று கேட்டபோது காலத்தால் சிவப்பு கறுப்பை எடுத்துவிடும் என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'We are the real Black Communists' அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-15

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவப்பு என்பது டேஞ்சர். ஆகையால், இந்தத் துண்டைப் போட்டிருக்கிறதினாலே, இன்னும் கொஞ்சம் உடல் குன்றிப்போகும் சொக்கருக்கு. (சிரிப்பு).

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, சிவப்பு அல்லது இந்த வர்ணங்களால் அந்தக் கதகதப் வருவதில்லை. கம்பளி சால்வை என்ற காரணத்தினால்தா அந்தக் கதகதப்பு வருகிறது. நிறத்திற்கும், கதகதப்பிற்கும் சம்பந்த இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்க அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இதனுடன் நிறுத்திவிடுவோமா?

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்க சிவப்புத் துண்டு போட்டிருப்பதால் உடல் குன்றிவிடும் என்றார்க அவர் உடலில் ஓடுவது சிவப்பு இரத்தம்தான். அதனால் உட குன்றிவிடாது.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, சால்வை பிரச்சினையை விட்டு விட்டு, சால்வ ஆ வேண்டிய பிரச்சினையைப் பற்றி பேசும்படி கேட்டுக்கொள்கிறே

திரு. ஜி. பழனிசாமி: எப்படியோ கைமாறின சிவப்புத் துண் என் தோளுக்கு வந்தால் சரி. *(சிரிப்பு)*

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, நேற்று நீங்கள் உங்கள் ஆசனத்தில் அமர்வதற் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்க அழைக்கும்போது, என் தோளிலே சால்வை இருக்கிறது. அதை கழற்றிவிட்டு என்னால் வந்து அமர முடியாது என்று கூறினா இன்று எப்படி அந்தச் சால்வையை தன் தோளிலிருந்து இறக்கினா என்பது தெரியவில்லை. அதற்கான விளக்கத்தை அவர் தருவார

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் இந்த ஆசனத்தி அமர்வதற்குத்தான் அந்தக் காரணத்தைச் சொன்னார். அத பக்கத்திலே அங்கேயே உள்ள இருக்கை. போதும், இத்துடன் விட்டுவிடுங்கள். திரு. டி.சி. விஜயன்.

. மானியக் கோரிக்கைகள், 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி.

கோரிக்கை எண் 28-தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்--தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 21-மீனளம்--தொடர்ச்சி

திரு. டி.சி. விஜயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ர்களே, நான் கன்னிப் பேச்சு பேசிக்கொண்டிருக்கிறேன். (சிரிப்பு) ன் பேசும்போது நடுவிலே என்னை திசைமாற்றி விட்டார்கள் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கன்னிப் பேச்சு சும்போது, யாரும் குறுக்கிடக் கூடாது என்பது மரபு. அதனால் னுடன் விட்டுவிடுங்கள்.

திரு. டி.சி. விஜயன்: மேலும் அந்தப் பகுதியில் 10,000 ம்பத்தினரின் நலனுக்காக ஒதுக்கப்பட்ட அந்தத் தொகையை னடியாக வழங்கி திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, எங்கள் பகுதியில் கடற்கரை ஓரம் வாய்க்கால் தியாக இருப்பதால், பருவமழை வரும்போதெல்லாம் கடல் அரிப்பு பட்டு பல மீனவக் குடும்பங்கள் வருடா வருடம் பெரும் திப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றார்கள். இப்போதுகூட, அந்தக் ல் அரிப்பு மிக மோசமான நிலையில் இருக்கிறது. அண்ணன் ாதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இன்று வந்து ர்வையிடுகிறார் என்பதால், அதைப் பார்வையிட்டு எங்களுக்கு ந்தத் தடுப்புச் சுவரைப் போட்டு, மீனவ சமுதாயத்தையும், கைளையும் காப்பாற்ற வேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான ண்டுகோளை விடுத்து, எனக்கு இந்த அளவுக்குப் பேச ய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு ன்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, டைபெறுகிறேன். வணக்கம்.

என்ற காரணத்திற்காக, இப்போது 12,000-மாகத் திறந்துவிட்டிருக்கிறோம். இது வெண்ணாற்றுப் பாசனம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி சொன்ன ஊர்கள் எல்லாம் வெண்ணாற்றுப் பாசனத்திலே வருகின்றன. இது கடைகோடியிலே இருக்கக்கூடிய ஒன்று. எனவே, இந்த முறை எப்படியும் தண்ணீரை அந்தப் பகுதிக்கு அனுப்ப வேண்டும் என்று நம் அதிகாரிகளை எல்லாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். 12,000 கியூசெக்ஸ் திறந்திருக்கிற காரணத்தினால் தண்ணீர் போகும். நாளை மறுதினம் நல்ல செய்தியை அவர்கள் சொல்வார்கள்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதையொட்டி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தண்ணீர் திறந்துவிட்டிருக்கிற இந்த நேரத்தில் முறைவைக்காமல்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அவரிடம் விளக்கம்தான் கேட்க முடியும். கருத்து எல்லாம் நீங்கள் சொல்ல முடியாது. அது மானியக் கோரிக்கையிலேதான் சொல்ல வேண்டும். என்ன விளக்கம் என்று கேளுங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஆலடி அருணா: துணைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின்மீது விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினை ஏற்கனவே ஆரம்பத்திலே துவக்கப்பட்டு அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். இதிலே மீண்டும் இன்னொரு திசையை நோக்கி விவாதம் போய்க்கொண்டிருக்கிறது. இது ஒரு நல்ல முன்மாதிரியா என்பதைத் துணைத் தலைவர் அவர்களே நிர்ணயிக்கட்டும். ஏனென்றால், இன்றைக்கு நீங்கள் கொடுக்கின்ற வாய்ப்பை இன்னொரு உறுப்பினருக்கும் கொடுக்க வேண்டிய நிர்பந்தம் உங்களுக்கும் ஏற்படும். இதையும் நீங்கள் யோசித்து முடிவுக்கு வரவேண்டும் என்று பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

திரு. குத்தாலம் பி. கல்யாணம்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் இருவருக்கு வாய்ப்பு இல்லை.

3. மானியக் கோரிக்கைகள், 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 28-தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்-தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 21-மீனளம்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ந.பூ. இராமஜெயம் பேசுங்கள்.

திரு. ந.பூ. இராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தொழிற்சாலை உள்ளடங்கலான தொழிலாளர் நலன் மற்றும் மீனளம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பினை அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எங்கு சென்றாலும் கோரிக்கையை வைப்பது தொழிலாளர்கள் பழக்கம் என்ற காரணத்தினால் முதலிலே ஒரு கோரிக்கை உங்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த சட்டமன்றத்திற்கு முதன்முறையாக வந்திருக்கிறேன். முதன் முதலாக பேசுகின்ற வாய்ப்பையும் பெற்று இருக்கிறேன். வாய்ப்பு அளித்தவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய தொகுதி பிரச்சினைகளையும் கூறி மானியத்தின்மீதும் ஒருசில கருத்துக்களை கூறுகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் முடிப்பதற்கு முயற்சிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் முயற்சி வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

திரு. ந.பூ. இராமஜெயம்: துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள் கூடுதலானால் அதை அனுமதிக்க வேண்டும். இடையிலே ஏற்படுகின்ற இடையூறுகளுக்கு எல்லாம் அந்த நேரத்தையும் எனக்கு கூட்டிக் கொடுக்க வேண்டும் என்

முதலில் நான் கேட்டுக் கொண்டு என் உரையை ஆரம்பிக்கின்றேன். சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னை இந்த பெருமைமிக்க மாமன்றத்தில் உறுப்பினராக்கி ஒரு பெருமையைத் தேடித் தந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்து பத்திரிகை தொழிற்சங்கத் தலைவர் சோமு அவர்களுக்கு மத்திய இணை அமைச்சர் ஆகும் வாய்ப்பையும், பொதுச் செயலாளராகிய எனக்கு சட்டமன்ற உறுப்பினராகும் வாய்ப்பையும் ஒரே நேரத்தில் வழங்கி தொழிலாளர் வர்க்கத்தை பெருமைப்படுத்தியதற்காக இந்து நிறுவனத்தின் சார்பிலும், சங்கத்தின் சார்பிலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். அதே போன்று 1994-ல் நடைபெற்ற மைலாப்பூர் இடைத் தேர்தலில் கழக வேட்பாளராக வெற்றிபெற வேண்டும் என்று கருதி இரவு பகலாகப் பாடுபட்ட அத்தனை பேருக்கும் குறிப்பாக தளபதி மு.க. ஸ்டாலின், மாவட்டச் செயலாளர் கிட்டு மற்றும் மத்திய மாநில அமைச்சர்களாகப் பொறுப்பேற்று உள்ளவர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக செயல் மறவர்கள் அத்தனை பேருக்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன்.

'குயில் ஒன்று பறக்க விட்டேன் பாடி வர
கோட்டான்கள் கூட்டத்தில் குயிலோசை எடுபடுமா'

என்று கவியரசு கண்ணதாசன் அவர்களைப் பற்றி மாண்புமிகு கலைஞர் அவர்கள் முன்பு குறிப்பிட்டார்கள்.

முற்பகல் 10-25

இதனால் தயவுசெய்து நான் யாரையும் கோட்டான் என்று கூறுவதாக நினைக்க வேண்டாம். அவர்களும் கோட்டான் அல்ல, நானும் குயில் அல்ல. எனவே, இதன் பொருளைப் புரிந்துகொண்டு மயிலாப்பூர் வாக்காளப் பெருமக்கள் என்னை 1994-லே வெற்றிபெறச் செய்யவில்லை. வெற்றி பெறச் செய்தால் மாண்புமிகு பேரவைத் [illegible]ணைத் தலைவர் அப்போது பட்ட அவஸ்தைகளை இவனும் பட [illegible]வண்டுமா என்று கருதி, அவர்களாலேயே தாக்கு பிடிக்க முடியவில்லை, இவன் எங்கே தாக்குப் பிடிக்கப் போகிறான் என்ற ஒரு காரணத்தால் எனக்கு வெற்றி வாய்ப்பைத் தரவில்லை. அதற்கு மாறாக ஜனநாயகத்தில் முழு நம்பிக்கை வைத்துள்ள தலைவர்

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற இந்த மன்றத்தி பங்குகொள்ளும் வகையில் பெருவாரியான வாக்குகளை அளித்து வெற்றிபெறச் செய்த மயிலாப்பூர் வாக்காளப் பெருமக்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

இந்த வெற்றிக்கு உழைத்த தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவ மதிப்பிற்குரிய திரு. மூப்பனார் அவர்களுக்கும் அந்த இயக்கத்தி முன்னோடிகளுக்கும், கலை உலகப் பெருமக்களான ரஜினி காந் சரத் குமார் ஆகியோருக்கும், கழகச் செயல் வீரர்களுக்கும், தோழமை கட்சி செயல் வீரர்களுக்கும், பல்வேறு தொழிற்சங்க தோழர்களுக்கும், குறிப்பாக இந்து பத்திரிகை தொழிலாளர்களுக்கு இந்து நிறுவனத்திற்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மயிலைத் தொகுதியைப் பொறுத்தவரையில் சாதாரண பிரச்சினைகளைத் தவிர பெரிய பிரச்சினைகள் எதுவும் இல்ல என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். இருந்தாலும்கூ அந்த சித்திரைக் குளம் பிரச்சினை ஒரு பொதுப் பிரச்சினையாக கருதப்பட்டு அங்கு ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஏற்கனவே கடந் கால ஆட்சியில் அதற்குக் கிட்டத்தட்ட 12 லட்சம் ரூபாய்க் திட்டமிடப்பட்டு, ஒதுக்கி, அந்தப் பணி தொடர்ந்து நடைபெறாம இருக்கிறது. எனவே, அந்தப் பணி மீண்டும் தொடர்வதற்கு ஆவ செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், அடையார் திரு.வி.க. பாலம் அருகில் உள்ள பழை பாலத்தை பூங்காவாக மாற்ற திட்டமிடப்பட்டது. வழக்கம்போலே திட்டமிடப்பட்டதே தவிர, பணி முடியவில்லை. இதை நிறைவேற் வேண்டுமென்றும், அதோடு இந்தப் பாலத்திற்கும் கடற்கரைக்கு இடையில் உள்ள ஆற்றுப் பகுதியில் சாக்கடை நீரைக் கலக் விடாமல், வீணாகும் மழை நீரைத் தேக்கி வைத்தால் அடையாருக் தண்ணீர் கொடுக்க முடியும் அல்லது தண்ணீரைத் தேக்கினா படகு விட்டு சுற்றுலா மையம் ஆக்குவதற்கு சாத்தியம் உள்ளது எனவே இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடித்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பக்கிங்காம் கால்வாயை சுத்தம் செய்ய ஒரு கோடியே லட்சம் ரூபாய் செலவு செய்ய இருக்கிறார்கள். கடந்த மழையி மயிலாப்பூர் தொகுதி வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டபோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சி

துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் பார்வையிட்டு, பக்கிங்காம் கால்வாயை சுத்தப்படுத்துவதற்கு இந்த நிதியை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சோ ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிற மானியக் கோரிக்கைகள், மீன்வளம் மற்றும் தொழிற்சாலைகளும், தொழிலாளர் நலனும் என்பன ஆகும். பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை இன்று இல்லை. அது ஏற்கனவே நிறைவேறி விட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது துவக்கத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். இது கன்னிப் பேச்சு என்றும் மானியக் கோரிக்கைகள் மீது பேசினாலும் அதோடு அவர் தொகுதி சம்பந்தமாக ஓரிரு வார்த்தைகள் சொல்லுகிறேன் என்று சொன்னதாலும் கன்னிப் பேச்சு என்பதாலும் அது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. திரு. ஆர். சொக்கர்.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது பக்கிங்காம் கால்வாயை சுத்தப்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதை சுத்தப்படுத்தி தண்ணீர் நன்றாக இருந்தால் அதில் மீன் வளர்க்க முடியும். ஆகவே, அவர் தொடர்புபடுத்திதான் பேசுகிறார் என்று நான் நினைக்கிறேன். *(சிரிப்பு)*

திரு. ந.பூ. இராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கு ஏற்ப நான் மானியக் கோரிக்கைக்கு வருகிறேன்.

கடைசியாக ஒன்று. நெரிசல் மிகுந்த லஸ் பகுதியில் சுரங்கப் [illegible]தை அமைப்பதற்கு ஒரு கோடியே 30 லட்சம் ரூபாய்க்கு அனுமதி [illegible]ளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பி. அண்டு சி. மில் பிரச்சினை. பி. அண்டு சி. மில் நிர்வாகம் மழையினால் பாதிப்பு என உற்பத்தி நிறுத்தத்தைச் செய்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில் 16-7-199 அன்று ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி வல்லுநர் குழு அமைத்து உடனடியாக அந்த ஆலையைத் திறக்க வேண்டுமென்று அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது. ஆனால், அந்த ஒப்பந்தத்திற்கு மாறாக, அந்த ஆலை திறக்கப்படக்கூடிய சூழ்நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, உடனடியாக அந்த ஆலையைத் திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

அடுத்து, பல தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல வரிகளை ரத்து செய்தது போலவே, மாதச் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கும் நடுத்தர மக்களை மிகவும் பாதிக்கின்ற அந்தத் தொழில் வரியை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 25 ஆண்டு காலமாக அகில இந்திய ரீதியிலே ஏறாமல் இருப்பது போனஸ் பிரச்சினை ஒன்று. 8.33 என்ற சதவீதம்தான் குறைந்தபட்ச போனசாக இருக்கிறது. 1971-ஆம் ஆண்டு முதல்வர் அவர்கள், முதலமைச்சராக இருந்தபோது என்.வி. நடராசனை டெல்லிக்கு அனுப்பி தொழிலாளர்கள் மாநாட்டிலே அந்தக் குறைந்தபட்ச போனஸ் 4 சதவீதம் என்பதை 8.33 சதவீதம் என்று உயர்த்தினார்கள். அதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று பொறுப்பேற்று இருக்கின்ற காரணத்தால் பல ஆண்டு காலமாக தொழிலாளர்கள் மினிமம் போனசை, குறைந்தபட்ச போனசை 10 சதவீதமாக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கின்ற அந்தக் கோரிக்கையை மாண்புமி முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றித்தர வேண்டுமென்று இந் நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, கடந்த மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட பென்ஷன் திட்டம், தொழிலாளர்கள் வைப்பு நிதியிலிருந்து பெரும் பகுதி எடுத்து பென்ஷன் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. அத

வெல்லத்தில் பிள்ளையார் செய்து, அதில் கொஞ்சம் கிள்ளி படையல் செய்வது போல இருக்கிறது. பென்ஷன் மூன்றாவது உரிமையாக இருக்க வேண்டுமென்று கோரி தடை வாங்கப்பட்டுள்ளது. எனவே, தொழிலாளர்களுக்கு மூன்றாவது உரிமையாக இருக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நலிவுற்ற பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் ரூ.500 லிருந்து 1,000-மாக உயர்த்தியதற்கு நன்றி தெரிவிப்பதோடு, பாகுபாடின்றி பத்திரிகைகளில் பணிபுரிபவர்களுக்கு, அனைவருக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்டை மாநிலங்களில், கேரளா, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகியவற்றில் பாகுபாடின்றி இந்த ஓய்வூதியம் தரப்படுவதால் தமிழக அரசும் கொடுக்க வேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த கால ஆட்சியில் சிறிதும் அக்கறை காட்டாததால், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். ஸ்டேண்டர்டு மோட்டார் தொழிற்சாலை நிரந்தரமாக மூடப்பட்டுவிடுமோ என்ற பயம் உள்ளது. அந்தப் பயத்தைப் போக்குகின்ற வகையில், தொழிலாளர்களுக்கு மீண்டும் புது வாழ்வு அளிக்க முதலமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள 15 இலட்சம் தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கப்பட வேண்டும், அதற்கு ஒரு தனிச்சட்டம் வேண்டும். சுரங்கத் தொழிலின்கீழ் இந்த கல் உடைக்கும் தொழில் இருந்தபோதிலும், சுரங்கத் தொழிலுக்குத் தனிச் சட்டம் இருக்கும்போது, இந்தக் கல் உடைக்கும் தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட ஒரு தனிச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சென்னையில் சிங்காரவேலர் இராயபுரம் படகு தளம், மண்டபம், நாகை படகு கட்டும் தளம் போன்ற இடங்களில் 520 பேர், 1982-ல் பணி நீக்கம் செய்யப்பட்டனர். 6 மாதப் பணி முறிவுக்குப் பிறகு மீண்டும் பல துறைகளில் வேலைவாய்ப்பு கிடைத்தது. பணி முறிவை மன்னித்து தொடர் சர்வீசாகக் கொடுத்தால் பென்ஷன் கிடைக்க வழி பிறக்கும். எனவே, இதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு,

இ.எஸ்.ஐ. டிஸ்பென்சரி எல்லாம் லீவ் கொடுக்கும் மையங்களாக தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதை சீரமைத்து தொழிலாளர்கள் நல்ல சிகிச்சை பெறும்வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மு. அப்பாவு.

***திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் தொழிலாளர் நலன் பற்றியும், மீனவர்களுடைய நலன் பற்றியும் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறிக்கொள்கிறேன். தொழிலாளர்களை எடுத்துக்கொள்வோமானால், தொன்று தொட்டு நடந்து கொண்டிருக்கின்ற ஒரு முக்கியமான பிரச்சினை தொழிலாளர்களுக்கும் நடந்துகொண்டேதான் இருக்கிறது. தொழிலாளர்களிலே ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிலாளர்கள், ஒழுங்குபடுத்தப்படாத தொழிலாளர்கள் என இரு பிரிவினர்களாக இருக்கிறார்கள். ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிலாளர்கள், யூனியன்கள், சங்கங்கள் அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காகப் போராடுவதற்கு, பேசுவதற்கு அவர்கள் யூனியன் வைத்திருக்கிறார்கள்.

முற்பகல் 10–35

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் அவர்களைத்தான் அழைத்துப் பேசி அவர்களுக்கு நல்ல சலுகைகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதிலே பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குக் கணிசமான சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, மறுபுறம் ஒழுங்குபடுத்தப்படாத தொழிலாளர்கள் இந்த நாட்டில், மிக அதிகமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சுதந்திரம் கிடைத்து கிட்டதட்ட 50 ஆண்டுகள் ஆன பின்பும் அவர்களைப் பற்றி யாருமே சிந்திக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள. குறிப்பாக, கல் உடைக்கும் தொழிலாளர்கள் சுமார் 10 இலட்சம் பேர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி யாருமே கண்டுகொள்வதேயில்லை. கடந்த கால ஆட்சியிலே ஊழல் செல்லாத இடமே கிடையாது. பாறைகளுக்குள்ளும் அந்த ஊழல்கள் சென்றுவிட்டன. தனியாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சிறு கனிமங்கள், பாறைகளை ஏலம் கொடுப்பதற்கு முன்னுரிமை

வழங்கப்பட்டுக்கொண்டிருந்தது. கிட்டதட்ட 1959–ஆம் ஆண்டிலிருந்து அந்தச் சட்டம் இருந்தது. 22-6-1994 அன்று ஒரு அரசாணையைப் பிறப்பித்து, ஆணை எண் 166–ன் மூலம் அந்தச் சிறு கூட்டுறவு விவசாயச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமையைப்பறித்து, அந்த உரிமையை அவர்கள் வேண்டப்பட்டவர்களுக்கே கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக, அந்தப் பாறைகளுக்குள்ளேயும் ஊழல் சென்று, அந்த ஆணையின் மூலம் கல் உடைக்கும் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தக் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு வாரியம் அமைத்து நிச்சயமாக அவர்களுடைய வாழ்வு நலம் பெற வேண்டும், அந்தக் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு 35 ரூபாய், 40 ரூபாய் என்று குறைந்தபட்ச ஊதியம்தான் இருக்கின்றதே தவிர, அவர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை; பணியிலே ஒரு பாதிப்பு ஏற்பட்டாலோ, உடலிலே ஒரு பாதிப்பு ஏற்பட்டாலோ, யாருமே அவர்களைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். ஆகவே, ஒரு தனி வாரியம் கல் உடைக்கும் தொழிலாளர்கள் சங்கத்திற்கு அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று எண்ணற்ற தொழிலாளர்கள், எந்த அமைப்பின் கீழும் ஒழுங்குபடுத்தமுடியாத நிலையில் இருக்கிறார்கள். உதாரணமாக, கல் உடைக்கும் தொழிலாளர்களைப் போன்று, மீனவத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், பனை ஏறும் தொழிலாளர்கள் ஆகியோர் மிக மிகத் துன்பப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். அவர்களை ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிலாளர்களாக மாற்றி, அவர்களுக்கும் முறைப்படி ஊதியம் கிடைக்கவும், முறைப்படி வேலை கொடுக்கவும், வேலைக்கு உத்தரவாதம் கொடுப்பதற்கும்--மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிச்சயமாக, தொழிலாளர்கள் நலனைப் பற்றி நன்கு அறிந்தவர்கள்-- ஒழுங்குபடுத்தப்படாத தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை கொள்ள வேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கொத்தடிமை முறையை மாற்ற வேண்டும் என்று 1985–ஆம் ஆண்டு மக்கள் சிவில் உரிமைக் கழகம் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு கேஸ் போட்டதன் விளைவாக, 1995–ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள 13 மாநிலங்களில் இரண்டு பேர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. தமிழகத்திலே சிராஜ் சேட் மற்றும் டாக்டர் பெலீக்ஸ் சுதீர்ராஜ் என்பவர்களுடைய தலைமையிலே ஒரு

குழு அமைக்கப்பட்டு, அவர்கள் எட்டு வார காலத்திற்குள் தங்களுடைய கருத்துக்களை சுப்ரீம் கோர்ட்டிலே சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறியிருக்கின்றது. கடந்த கால ஆட்சியில் அது சமர்ப்பிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகவே, உடனடியாக நம்முடைய கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் அந்த அறிக்கையை அரசுக்கு அனுப்பி, தொழிலாளர்களுடைய நலனில் அக்கறை காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மீனவர்களைப் பற்றிப் பேசும்போது இந்த நாட்டில், தீர்க்கமுடியாமல் மிகவும் ஆண்டாண்டுக்காலமாக அவர்கள் பிறந்தது முதல் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம், முத்துக்குளிப்பவர்களை எடுத்துக்கொள்வோமேயானால் அவர்களுடைய உயிரைப் பணயம் வைத்து தொழில் செய்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் ஆண்டிற்கு ஆயிரம் ரூபாயை ஒரு போட்டிற்குக் கொடுக்க வேண்டும். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் 500 ரூபாய் ஆண்டுக்குக் கொடுக்க வேண்டும் என்றுதான் இருக்கிறது. மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள், மீனவர்களைப் பற்றி நன்றாக அறிந்த குடும்பத்தில் பிறந்தவர்கள். ஆகவே கருணையோடு ஆயிரம் ரூபாய் போட்டிற்குக் கொடுக்க வேண்டும் என்பதை மாற்றி 500 ரூபாய் ஒரு நபருக்கு என்பதை நிலைநிறுத்துகின்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடந்த காலத்தில் திருநெல்வேலி, வ.உ.சி மாவட்டங்கள் இணைந்திருந்த காலத்தில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே இன்றைய மாண்புமிகு மத்திய அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன் அவர்கள் மீனவர்களுக்கு ரேஷன் அடிப்படையில் ரேஷன் கடைகளிலே மண்ணெண்ணெய் கொடுக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் ஆறு மாதகாலங்களுக்கு அவர்களுக்கு ரேஷனிலே மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அது நன்றாகத் தெரியும். ஆனால், ஆறு மாதத்திற்குப்பின் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

மீனவர்களுடைய நண்பர் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாக மீனவர்களுடைய நலனில் அக்கறை கொண்டு வழங்கப்பட்டு, மீனவர்களுக்கு ஒரு அடையாள அட்டை கொடுத்து அதன் மூலம் மீனவர்களுக்கு ஒரு நாளைக்கு 25 லிட்டர் மண்ணெண்ணெய் ரேஷனிலே வழங்குவதற்கு நிச்சயமாக ஒரு

திட்டத்தைக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் மீன் பிடிக்கச் சென்று அவர்கள் திரும்பி வரும்பொழுது, 250 ரூபாய்க்குக் கூட மீன் இல்லாமல் வருவது நமது மாண்புமிகு மீனளத் துறை அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, நிச்சயமாக ஒவ்வொரு நாளும் 25 லிட்டர் மண்ணெண்ணெய் வீதம் அவர்களுக்குக் ரேஷனில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

நாட்டுப் படகிலே அவுட் போட் என்ஜின்கள் என்பதைப் பொருத்தியிருக்கிறார்கள். வெளிநாட்டிலேயிருந்து வருகின்ற யமகா போன்ற எஞ்ஜின்களை வாங்கிப் பொருத்துகின்றார்கள். ஊட்டியிலே உல்லாசமாகச் செல்வதற்கு இந்த என்ஜினை அவர்கள் பயன்படுத்தவில்லை. மத்திய அரசுக்கு மீனவர்கள் மீது உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் அவர்கள் இந்த என்ஜின்மீது போடுகின்ற--வரியை ரத்து செய்து, கருணையோடு--இப்பொழுது 52,000 ரூபாய் வீதம் விற்கின்றார்கள்--அந்த வரியில்லாமல் கொடுப்பதாக இருந்தால்--30,000 ரூபாய்க்கு அந்த என்ஜின்களைக் கொடுக்கலாம். இந்த 30,000 ரூபாய் என்ஜினில் மத்திய அரசு 5000 ரூபாய் சப்சிடியும், மாநில அரசு 5,000 ரூபாய் சப்சிடியும் வழங்கி, 10,000 ரூபாயை அவர்களைக் கட்டச் சொல்லி, மீனவர்களுக்கு உண்மையிலேயே உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மீனவர்கள் வாங்குகின்ற கடன்களை அவர்களால் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. காரணம், மீனவர்கள் இப்பொழுது கடலுக்குச் சென்றால்--அமைச்சரவர்களே கூறினார்கள், மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் கூறினார்கள்--மீன் குறைந்து விட்டது என்று. அவ்வாறு இருக்கும்பொழுது, மீனவத் தொழிலாளர்கள் அதிகரித்துக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் சாப்பிடக்கூட மீன் கொண்டு வர முடியாத நிலையில் இருக்கும்பொழுது, அவர்கள் இதுவரை வாங்கியிருக்கக் கூடிய கடன்களை, திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் இருப்பவர்களுக்கு நிச்சயமாகத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுகின்றேன். மிக அதிகமான ரூபாய் ஒன்றும் வராது. 2 அல்லது 3 கோடி ரூபாய்தான் இருக்கும். அந்தக் கடன்களை ரத்து செய்துவிட்டு,

மீண்டும் அவர்களுக்கு-ஏழை மீனவர்களுக்கு அவுட் போட் என்ஜின்கள் கடனாகக் கொடுக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கூறிக்கொள்கின்றேன்.

தற்போது, தமிழகத்திலே மீனவர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காக 6 பயிற்சி நிலையங்கள் உள்ளன. இன்னும் அதிகமான அளவு பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு ஆரம்பிக்கும்போது, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த உவரி, இடிந்தகரை, கூட்டங்குளி, கூட்டபுளி ஆகிய பின்தங்கிய பகுதிகளில் ஏதாவது ஒரு இடத்தில் நீங்கள் அதை ஆரம்பிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

ஒரு நீண்ட நாள் பிரச்சினையாக, விசைப் படகுக்காரர்களுக்கும், நாட்டுப் படகுக்காரர்களுக்கும் ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. இது மிக எளிதாகத் தீர்க்கக் கூடிய ஒரு பிரச்சினை. விசைப் படகுக்காரர்கள் சற்று ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கச் செல்ல வேண்டும். நாட்டுப் படகிலே உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் அவர்கள் செல்ல முடியாது. அதோடு விசைப் படகுக்காரர்கள் இவ்வளவு நேரம்தான், இத்தனை காலங்களில், இவ்வளவு நாட்கள்தான் அவர்கள் செல்ல வேண்டும். மீதி நேரங்களில் நாட்டுப் படகுக்காரர்கள் செல்ல வேண்டும் என்று பேசி ஒரு முடிவெடுத்து அரசு ஒரு சட்டமாக இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகின்றேன். விசைப்படகு, நாட்டுப் படகுகளை எடுத்துக்கொண்டோமேயானால் அந்தப் பிரச்சினைகள் எங்கள் பகுதியில் மிக நீண்ட காலமாக நடந்து கொண்டிருக்கின்றது. அவைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஒரு முடிவு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

மீனவர்கள் 8 மாதங்கள் தொழில் செய்கின்றார்கள்; 4 மாதங்கள் தொழில் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றார்கள். அந்த 8 மாதங்களில், ஒரு மாதத்திற்கு 45 ரூபாய் வீதம் வசூல் செய்து 360 ரூபாய் அவர்களிடம் வாங்கி, மத்திய அரசு 360 ரூபாயும், மாநில அரசு 360 ரூபாயும் அவர்களுக்குப் போட்டு மாதாமாதம் 4 மாதங்கள் அவர்களுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை மத்திய அரசு தற்போது நிறுத்தியதாகக் கேள்விப்படுகிறேன்.

நிச்சயமாக இந்தத் தொகையே காணாது. மேற்கொண்டு மத்திய அரசும், மாநில அரசும் ஆளுக்கு 1,000 ரூபாய் வீதம் போட்டு, மீனவர்களிடம் பணம் வாங்காமலேயே அவர்களுக்கு 4 மாதங்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் காலத்தில் எல்.டி.டி.இ.-விடுதலைப் புலிகளோ அல்லது இலங்கைப் படையினரோ பெரும் துன்பத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, நிரந்தரமாக, மத்திய அரசினுடைய கப்பல் படைப் பிரிவு ஒன்று அவர்களுக்குப் பாதுகாப்பாக-நம்முடைய மீன்பிடித் தொழிலாளர்கள் மீன் பிடிப்பதற்குப் பாதுகாப்பாக--இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த அரசு பொறுப்பேற்றதும், மீனவர்கள் மீது அக்கறை கொண்டு, கிட்டத்தட்ட 4,000 வீடுகள் 5 ஆண்டுகளிலே கட்டுவதாகத் திட்டம் தீட்டியிருக்கின்றார்கள். (குறுக்கீடு) சாரி, 20,000 வீடுகள் கட்டுவதாகத் திட்டம் தீட்டியிருக்கின்றார்கள். எங்கள் பகுதியிலே மிகவும் நலிந்தவர்கள் இருக்கின்றார்கள். ராதாபுரம் தொகுதியிலுள்ள மீனவர்களுக்கு அதிகமாக குடியிருப்புகளை நீங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

5. அறிவிப்பு

முன்னாள் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தியின் பிறந்த நாளில் உறுதிமொழி எடுப்பதற்காக பேரவை முப்பது நிமிடங்கள் ஒத்திவைப்பு

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று அமரர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த தினம். இன்று முதல் 5-9-96 வரை மத நல்லிணக்க இரு வாரங்களாகக் கொண்டாடப்படுவதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11.00 மணிக்கு தலைமைச் செயலகத்தின் பிரதான கட்டிடத்தின் மேற் புறத்திலுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் உறுதிமொழி செய்து வைக்க இருக்கிறார்கள். எனவே, நேற்று பேரவையில் அறிவித்ததற்கு இணங்க, பேரவையின் நிகழ்ச்சிகள் 10.45 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்று, மீண்டும் 11.15 மணிக்கு பேரவை கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

பின்னர் பேரவை முற்பகல் 10.45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

முற்பகல் 11.15

மீண்டும் பேரவை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் முற்பகல் 11.15 மணியளவில் கூடியது.

3. மானியக் கோரிக்கைகள், 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 28-தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்

(ஆ) கோரிக்கை எண் 21-மீன்வளம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சுப தங்கவேலன். (குறுக்கீடு)

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைர் அவர்களே, நான் இன்னும் பேசி முடிக்கவில்லை. இன்னும் கொஞ்ச நேரம் அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரே நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மீனவர்கள் மீனபிடித் தொழிலின் மூலம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து கடந்த ஆண்டில் மட்டும் 645 கோடி ரூபாய் அன்னியச் செலாவணியாக ஈட்டித் தந்திருக்கின்றனர். இந்த அளவுக்கு நமது நாட்டுக்கு, இந்தியத் திருநாட்டுக்கு அன்னியச் செலாவணியை ஈட்டுத் தருகின்றவர்கள் நமது மீனவர்கள். கடந்த காலத்தில் மண்ணெண்ணெய் அவர்களுக்கு ரேஷன் மூலம் வழங்கப்பட்டது போல தற்போதும் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர்கள் மீன்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும்போது இடைத்தரகர்கள் அதிலே தலையிட்டு அதிக அளவில் சம்பாத்தியம் செய்கின்றனர். மீனவர்களுக்கு ஒரு கூட்டுறவு அமைப்பினை ஏற்படுத்தி அவர்களே மீன்களைப் பதப்படுத்தி அந்த லாபத்தினை

அடையக்கூடிய வகையில் ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள புன்னக்காயல் என்ற கடற்பகுதியில் ஒரு மணல் திட்டு உள்ளது. இதனால் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல முடியாத நிலை இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். அந்த மணல் திட்டை அப்புறப்படுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆத்தூருக்கும், புன்னக்காயலுக்கும் இடையே ஒரு பாலம்-குறைந்த அளவு மழை பெய்தால்கூட இந்த இரு ஊர்களிலே....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புன்னக்காயல் என்ற பகுதி என்னுடைய தொகுதியாகும் என்பது உறுப்பினருக்குத் தெரியும், அது அவர் பகுதியல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எனது தொகுதி என்று குறிப்பிடவில்லை. எங்கள் பகுதி என்று தான் குறிப்பிட்டேன். நாங்களெல்லாம் இணைந்திருக்கக்கூடிய மீனவர்கள். ஆகவே, புன்னக்காயலுக்கும், ஆத்தூருக்கும் இடையிலே ஒரு பாலத்தை நீங்கள் உடனடியாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரியதாழை என்ற பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் வழியில் ஒரு பெரிய பாறை இருக்கின்றது. அதனால் வருடத்திற்கு 2, 3 விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதனால் பல மீனவர்கள் இறந்திருப்பதும் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே அந்தப் பாறையை அகற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டப்பனை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கடந்த சில மாதங்களுக்கு முன் ஏற்பட்ட பெரிய தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடியிருப்புகளை உடனடியாக நீங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலைக்கென ரூ. 25 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடற்கரைச் சாலையில்

இணைப்பு-I

(43-ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.)

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை கொள்கை விளக்கக் குறிப்பு-1996-97 கோரிக்கை எண் 28

கொள்கை விளக்கக் குறிப்பு

அத்தியாயம்-1

தொழில் உறவுகள்

நாட்டின் தொழில் அமைதியைக் காத்து, சுமுகமான தொழில் உறவினை நிலை நாட்டவும், தொழிலாளர்களின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்பட்டு அவர்களது குறைபாடுகள் அனைத்தும் தொழிலாளர் நலத் துறையின் மூலம் தீர்வு காணப்படவும், மேலும் வேலை நிறுத்தங்களற்ற ஒரு சுமுகமான தொழில் உறவு நிலவும் சூழ்நிலையில் தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்தினர் தங்களது கூட்டு முயற்சி மற்றும் உழைப்பின் சக்தியை உணர்ந்து, நாட்டு நலனைப் பெரிதெனக் கொண்டு உற்பத்தித் திறனைப் பெருக்க உதவுவதற்கும் தொழிலாளர் துறை பெரிதும் பாடுபட்டு வருகிறது. வேலை நிறுத்தம் மற்றும் கதவடைப்பினால் வீணான மனித உழைப்பு நாட்கள் (mandays lost) பற்றிய விவரங்கள் இணைப்புகள் *1–2ல்* கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வீணான மனித உழைப்பு நாட்கள் மேலும் குறைய தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும். இவ்வரசு தொழிலாளர்களின் நலனையும் தொழில் உறவினையும் காப்பதில் உறுதி கொண்டுள்ளது. இதற்காக பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், மற்றும் தீர்ப்புகள் போன்றவற்றை அமுல்படுத்த சீரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

1.1 தீர்த்து வைக்கப்பட்ட முக்கிய தொழில் தகராறுகள்:

ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதில் இந்த அரசு முனைப்பாக உள்ளது. *1995-ம்* ஆண்டில் எழுப்பப்பட்ட *9,027* தொழிற் தகராறுகளில், *8,782* வழக்குகள் சமரச அலுவலர்களால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க சில ஒப்பந்தங்களின் விவரங்கள் இணைப்பு *3-ல்* கொடுக்கப்பட்டுள்ளன.

[1996 ஆகஸ்ட் 20

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கீழ்க்கண்ட தொழிற் தகராறுகளை சுமுகமாக சமரசம் செய்து தீர்த்து வைத்துள்ளது.

1. பி & சி மில்ஸ், சென்னை:

ஜூன் திங்கள், 1996-ல் சென்னையில் பெய்த பெருமழை காரணமாக சென்னையில் உள்ள பி & சி மில்லில் வெள்ளம் புகுந்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியதால் தொழிற்சாலைக்கும் தொழிலாளர்களுக்கும் பிரச்சினை எழுந்தது. எதிர்பாராத வெள்ளத்தினால் இயந்திரங்கள், உற்பத்தி முடிந்த மற்றும் பாதி உற்பத்தியில் இருந்த பொருட்கள், மற்றும் கச்சாப் பொருள்கள் மூழ்கியதால் பி. & சி. மில்ஸ் நிர்வாகம் 'உற்பத்தி நிறுத்தம்' அறிவித்திருந்தது. இந்த அறிவிப்பே நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் கருத்து வேறுபாட்டை ஏற்படுத்தி பிரச்சினையாக உருவாகியது. துறை அதிகாரிகளால் சமரசப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது. எனினும், பிரச்சினைக்கு விரைவான முடிவு ஏற்படாத நிலையில் உற்பத்தி இழப்பைத் தடுக்கவும், தொழிலாளர்களின் இன்னலைத் தீர்க்கவும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலையிட்டார்கள். தொடர்ந்து இருதரப்பினரிடையேயும் பல நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் ஒப்பந்தம் ஏற்பட வழி வகுத்ததின் வாயிலாக 15-6-96 முதல் இயக்கமின்றி இருந்த இந்த ஆலையின் பிரச்சினைக்கு ஒரு சுமுக முடிவு ஏற்பட்டிருப்பது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். இதனால் சுமார் 4000 தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள்.

2. எம்.ஆர்.எப். தொழிற்சாலை, திருவொற்றியூர்:

சென்னை, திருவொற்றியூரில் உள்ள எம்.ஆர்.எப். நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்குமிடையே சில கோரிக்கைகள் குறித்து ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக தொழிலமைதி சீர்குலைந்திருந்தது. உற்பத்திக்கும் மனித உழைப்பிற்கும் பங்கம் ஏற்பட்டிருந்தது. இருதரப்பினரிடையே நடந்த நேரடிப் பேச்சுவார்த்தையில் பிரச்சனை தீரவில்லை. தொழிலாளர் துறை அதிகாரிகள் முன்பு நடந்த பேச்சுவார்த்தையிலும் முழு இணக்கம் ஏற்படாத நிலையில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு இருதரப்பினரிடையேயும் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதன் விளைவாகக் கருத்து வேறுபாடு களையப்பட்டு இணக்கம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தினால் முப்பது நாட்களுக்கும் மேலாக முடங்கிக் கொண்டிருந்த தொழிற்சாலை மீண்டும் திறக்கப்பட்டது. இதனால் சுமார் 1500 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

1996 ஆகஸ்ட் 20]

3. இந்தியன் ஆர்கானிக் கெமிகல்ஸ் லிமிடெட், மணலி:

சென்னை அருகிலுள்ள மணலியில் உள்ள இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிமிடெட் என்ற தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையே போனஸ், வருடாந்திர ஊக்கத் தொகை மற்றும் இதர சில பிரச்சினைகள் குறித்து கருத்து வேறுபாடு இருந்தது. இந்தக் கருத்து வேறுபாடு முற்றி வேலை நிறுத்தமாக வந்து நின்றது. சமரசப் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் சில பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டது. பிரச்சினைக்கு மையமாக இருந்த சில கோரிக்கைகள் குறித்து கருத்து வேறுபாடு தொடர்ந்தது. தொழிலமைதிக்கு தொய்வு ஏற்பட்டிருந்த இந்நிலையில், தொழிலாளர்களின் துயர் துடைக்கவும், உற்பத்திக்கு இழப்பைத் தடுக்கவும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதன் விளைவாக பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டது. இதன் மூலம் இந்த நிறுவனத்தில் பணிபுரிந்த 1000 தொழிலாளர்கள் தம் வேலைநிறுத்தத்தை விலக்கிக் கொண்டனர். இதன் மூலம் பல மாதங்களாக தீர்வு காணப்படாமல் இருந்தப் பிரச்சனைகளுக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் தலையீட்டால் தீர்வு காணப்பட்டது.

4. அண்ணாமலையார் டெக்ஸ்டைல்ஸ், திண்டுக்கல்:

இவ்வாலையைச் சார்ந்த 272 தொழிலாளர்கள், மே மாதச் சம்பளத்தினை அளிப்பதில் தாமதம் ஏற்பட்டதையடுத்து 15-6-1996 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரச்னையில் தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்), திண்டுக்கல், சமரசப் பேச்சு வார்த்தைகளின் போது 19-6-96 அன்று அளித்த ஏற்புடைய அறிவுரைக்கு பின்னர் தொழிலாளர்கள் 19-6-96 அன்று பணிக்குத் திரும்பினர்.

5. நாச்சியம்மை காட்டன் மில்ஸ், 'ஏ' மற்றும் 'பி' யூனிட், மதுரை:

இவ்வாலையில் 'ஏ' மற்றும் 'பி' யூனிட்டில் பணிபுரியும் 528 தொழிலாளர்கள் 18-4-96 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இவ்வேலை நிறுத்தத்தினைத் தொடர்ந்து பஞ்சாலையை நிர்வாகம் 4-5-96 அன்று கதவடைப்பு செய்தது.

இப்பிரச்சினையில், மதுரை தொழிலாளர் இணை ஆணையர் தலையிட்டு பேச்சு வார்த்தைகள் நடத்தியதையடுத்து கதவடைப்பு 15-5-96 அன்று நீக்கப்பட்டு 20-5-96 அன்று முதல் சிஐடியு தொழிலாளர்களைத் தவிர இதர தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர். இதனைத் தொடர்ந்து மதுரை, தொழிலாளர் இணை ஆணையர் 12-6-96 அன்று வழங்கிய ஏற்புடைய அறிவுரையை அடுத்து அவர்களும் 12-6-96 அன்று முதல் பணிக்குத் திரும்பி விட்டனர்.

6. டெரஸ் எஸ்டேட், நடுவட்டம், நீலகிரி:

இந்நிறுவனத்தில் உள்ள 110 தொழிலாளர்கள் ஊதிய உயர்வு உள்ளிட்ட பொதுக் கோரிக்கைகளை வலியுறுத்தி 25-4-96 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரச்சினையில் கோவை தொழிலாளர் இணை ஆணையர் தலையிட்டு சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் காரணமாக 3-7-96 அன்று தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12(3)-ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டு தொழிலாளர்கள் 5-7-96 முதல் பணிக்குத் திரும்பியுள்ளனர்.

7. வேம்படிதாளம் ஸ்ரீ பாலாஜி காட்டன் மில்ஸ்:

சேலம் மாவட்டம், வேம்படிதாளத்திலுள்ள ஸ்ரீ பாலாஜி காட்டன் மில்ஸ் நிறுவனத்தில் 250 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். நிர்வாகம் தொழிலாளர்களை இழிவாகவும், தரக்குறைவாகவும் நடத்தியதைத் தொடர்ந்து திடீரென தொழிலாளர்கள் 16-8-95 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதுசம்பந்தமாக, சேலம், தொழிலாளர் நல அலுவலர் முன்பு பல்வேறு தேதிகளில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு முடிவு காண இயலாததால் இறுதியாக 5-7-96-ல் சேலம் தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12(3)-ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி 15-7-96-ல் முதல் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினார்கள்.

8. ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் பிராசசர்ஸ் லிமிடெட், ஈரோடு:

பெரியார் மாவட்டம், ஈரோட்டில் உள்ள ராஜலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் பிராசசிங் மில்ஸ் என்ற நிறுவனத்தில் 207 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். கேண்டீன் வசதி வேண்டி 10-6-96 முதல் வேலை நிறுத்தம் செய்து வந்தனர். ஈரோடு,

1996 ஆகஸ்ட் 20]

தொழிலாளர் அலுவலர் முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்று பயனில்லாததால் இறுதியாக கோவை தொழிலாளர் இணை ஆணையர் முன்பு 10-7-96-ல் ஏற்புடைய அறிவுரை வழங்கப்பட்டு தொழிலாளர்கள் 12-7-96 முதல் பணிக்குத் திரும்பினார்கள்.

9. பாண்டியன் கிராபைட்ஸ் இந்தியா லிட்., மானாமதுரை:

சுமார் 196 தொழிலாளர்கள் பணிபுரியும் மானாமதுரை, பாண்டியன் கிராபைட்ஸ் நிறுவனத்தில், நிர்வாகம் 8 நாட்கள் ஊதியப் பிடித்தம் செய்ததையும் 10 அப்ரண்டீஸ் தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததையும் ஆட்சேபித்து தொழிலாளர்கள் 16-5-96 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இப்பிரச்சினை தொடர்பாக சிவகங்கை தொழிலாளர் அலுவலர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பயனாக 31-5-96 அன்று பிரிவு 12(3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தின் பயனாக பிடித்தம் செய்யப்பட்ட சம்பளத் தொகையை மீள வழங்கவும், வேலை நீக்கம் செய்யப்பட்ட 10 அப்ரெண்டிஸ்கள் மீண்டும் வேலையிலும் அனுமதிக்கப்பட்டனர். அதன் விளைவாக 1-6-96 முதல் தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பினர்.

10. உமா மகேஸ்வரி ஸ்பின்னிங் மில்ஸ், ஓசூர்:

தர்மபுரி மாவட்டம் ஓசூரிலுள்ள உமா மகேஸ்வரி மில்ஸ் லிட்., ஓசூர் என்ற நிறுவனத்தில் 586 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். வேலைப் பளு சம்பந்தமாக தொழிலாளர்கள் 22-5-96 முதல் வேலை நிறுத்தம் செய்ததால் 22-5-96 முதல் நிர்வாகம் கதவடைப்பு செய்தது. கிருஷ்ணகிரி தொழிலாளர் அலுவலர் முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. 14-7-96 முதல் சேலம் துணை ஆணையர் முன்பு பேச்சுவார்த்தை நடைபெற்ற பின்பு 15-7-96 முதல் கதவடைப்பு விலக்கிக் கொள்ளப்பட்டு தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பியுள்ளனர்.

11. பிரகா இண்டஸ்ட்ரீஸ் (பி) லிட்., கோவை:

சுமார் 100 தொழிலாளர்கள் பணிபுரியும் பட்டன் தயாரிக்கும் நிறுவனமான பிரகா இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட் நிறுவனத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரிக்கையை வலியுறுத்தி 13-2-96 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இப்பிரச்சினை தொடர்பாக கோவை தொழிலாளர் துணை ஆணையர் முன்பு பிரிவு 12(3)-ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து

தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு 2-5-96 முதல் பணிக்குத் திரும்பியுள்ளனர். இவ்வொப்பந்தம் 31-12-98 வரை அமுலில் இருக்கும்.

இவ்வொப்பந்தத்தின் பயனாக, (1) தொழிலாளர்களுக்கு ஊதியம் 1-1-96 முதல் ரூ. 300/- உயர்த்தப்பட்டு, ஊதிய நிலுவைத் தொகை 7-6-96 'மே' மாத ஊதியத்துடன் வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது; (2) மேலும் 1997, 1998 ஆகிய ஆண்டுகளுக்கான ஊதிய உயர்வும் முறையே ரூ. 125/-, ரூ. 100/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (3) பிராவிடண்ட் பண்ட் பிடித்தம் 8.33%லிருந்து 10% ஆக உயர்த்தவும் அதற்கு இணையான தொகை நிர்வாகம் செலுத்தவும் ஒப்புக்கொள்ளப்பட்டது; (4) பிடித்தம் செய்யக் கூடிய முன்பணம் ரூ. 600/- தொழிலாளர்களுக்கு வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது.

12. பெல்போர்ஜ் லிமிடெட், நாகல்கேணி, சென்னை-44:

சென்னை-44, நாகல்கேணியில் உள்ள பெல்போர்ஜ் லிமிடெட் என்ற நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் தங்களின் இன்சென்டிவ் தொகையை நிர்வாகம் வழங்காததால் 8-6-96 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். நிர்வாகம் 22-6-96 முதல் கதவடைப்பு செய்தது. இது தொடர்பாக தொழிற்சங்கம் தொழிலாளர் துறை துணை ஆணையர்-2, சென்னை முன்பு தொழிற் தாவா எழுப்பியதில் இத்தாவா குறித்து அவர் முன்பு 8-7-96 அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தைகளில் பயனாக தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (3)ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தினை இருதரப்பாரும் ஏற்றுக் கொண்டு 9-7-96 முதல் கதவடைப்பு விலக்கிக் கொண்டு, தொழிலாளர்கள் அனைவரும் 9-7-96 முதல் பணிக்குத் திரும்பினர்.

13. கோயமுத்தூர் ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ், கோவை:

இவ்வாலையில் 1341 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். ஒரு தொழிலாளியை ரோலிங் பிரிவிற்கு மாற்றப்பட்டதை ஆட்சேபித்து 15-7-96 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரச்சினையில் உடனடியாக தலையிட்டு 17-7-96 அன்று கோவை தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-1 அளித்த அறிவுரையின்படி தொழிலாளர்கள் பணிக்குத் திரும்பிவிட்டனர். ஆலை தற்போது சுமுக நிலையில் இயங்குகிறது.

1996 ஆகஸ்ட் 20]

14. லஷ்மணா காட்டன் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், கோவை:

இவ்வாலையில் பணிபுரியும் 150 தொழிலாளர்கள் குடிநீர் பிரச்சினை தொடர்பாக 8-5-96 முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இப்பிரச்சினையில், கோவை தொழிலாளர் உதவி ஆணையர் (சமரசம்)-2 முன்பு நடைபெற்ற பேச்சு வார்த்தைகளுக்குப் பின் அளித்த அறிவுரையை ஏற்று தொழிலாளர்கள் 22-5-96 அன்று பணிக்குத் திரும்பினர்.

1.2 மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகள்:

தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள நிறுவனங்களின் பட்டியல் இணைப்பு 4-இல் கொடுக்கப்பட்டுள்ளது. நிதி நெருக்கடியினாலும் லாபகரமாக இயங்க இயலாத நிலையிலும் (not viable) இந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இந்த தொழிற்சாலைகளில் மீண்டும் திறக்கின்ற வாய்ப்பு இருந்தால் தொழில் அதிபர்களுடனும் தொழிற் சங்கத் தலைவர்களுடனும் வங்கிகளுடனும் பேசித் திறப்பதற்கான சாத்தியக் கூறுகளை இந்த அரசு பரிசீலிக்கும்.

ஸ்டாண்டர்டு மோட்டார் புராடக்ஸ் ஆப் இந்தியா லிட்.:

இந்த கம்பெனியின் நிர்வாகம் 31-12-1989-ல் ரூ. 30/- கோடி நஷ்டம் அடைந்துள்ளது என்றும், தினம் ரூ. 10/- லட்சம் நஷ்டம் ஏற்படுவதாகவும் சுமார் 3000 தொழிலாளர்கள் அப்போது பணியில் இருந்ததால் அதிகப்படியான 1000 தொழிலாளர்களைக் குறைக்க வேண்டியது அவசியம் என தெரிவித்தது. 7-2-89-ல் உற்பத்தியை நிறுத்தியது. தொழில் மற்றும் நிதி சீரமைப்பு வாரியம் (பி.ஐ.எப்.ஆர்.)-ன் பரிந்துரையின் பேரில் 999 அதிகப்படியான தொழிலாளர்களை குறைக்க 3-1-1990-ல் ஓர் 12(3) ஒப்பந்தம் ஏற்பட்டு அதன் மூலம் தொழிலாளர்கள் தன்னிச்சையாக ஓய்வு பெறும் திட்டம் (வி.ஆர்.எஸ்.) அமுலுக்கு வந்தது. ஆலை மீண்டும் 4-2-1992-ல் இயங்க ஆரம்பித்தது. அப்போது தொழிலாளர்களின் எண்ணிக்கை 2320 ஆகும். வி.ஆர்.எஸ். திட்டத்தின்படி தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய பணம் அவர்களுக்கு நிர்வாகம் கொடுக்க ரூ. 3/- கோடி கடன் தொகையாக அரசு, நிர்வாகத்திற்கு கொடுத்தது. ஆனால் இத்திட்டம் செயல்படுத்த ரூ. 7/- கோடி தேவையென நிர்வாகம் தெரிவித்தது.

நிர்வாகம் ரூ. 3/- கோடியை சமமாக 999 தொழிலாளர்களுக்கு அளிக்கலாம் என தெரிவித்த கருத்தை அப்போது தொழிற்சங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. இது சம்பந்தமாக தொழிலாளர் ஆணையர் 8-2-1993-ல் ஓர் அறிவுரையை வழங்கினார். அதன்படி, 1-4-1998-ல் பணி ஓய்வு பெறும் 319 தொழிலாளர்களுக்கு வி.ஆர்.எஸ். முழுத்தொகை அளிக்கப்பட்டது. (சுமார் ரூ. 2/- கோடி) உற்பத்தி சம்பந்தமாக நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கத்திற்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக 16-6-1993-ல் தொழிலாளர் ஆணையர் முன்பு ஏற்பட்ட பேச்சு வார்த்தையில் 1-7-1993-ல் குறைந்தபட்சம் ஒரு ஷிப்டிற்கு 9 வாகனங்களிலிருந்து படிப்படியாக 12 வாகனங்கள் உற்பத்தி அளிக்க செப்டம்பர் 1993-க்குள் அளிக்குமாறு அறிவுரை வழங்கினார். மேலும், நிலுவை வி.ஆர்.எஸ்.தொகை 30-9-1993-முதல் ஒவ்வொரு காலாண்டிற்கும் ரூ. 50/- லட்சம் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார். ஆனால் 3 முதல் 4 வாகனங்கள் மட்டும் உற்பத்தி செய்யப்பட்டதால் மிகவும் பாதிக்கப்பட்ட தொழிற்சாலை மீண்டும் 13-7-93-ல் நிறுத்தப்பட்டது.

மேற்கொண்டு இருதரப்பினருடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தியதன் விளைவாக 1-8-1993-முதல் மீண்டும் உற்பத்தி துவங்கப்பட்டது. ஆனால், தொழிலாளர்கள் நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி தருவதில்லை என்றும், வன்முறையில் ஈடுபட்டதாகவும் புகார் செய்ததுடன் 1-4-1994-முதல் கதவடைப்பு செய்தது. இது சம்பந்தமாக நடத்தப்பட்ட சமரச பேச்சு வார்த்தைகள் பயனளிக்கவில்லை. தொழில் மற்றும் நிதி புனரமைப்பு வாரியம் (பி.ஐ.எப்.ஆர்.) 7-11-1994-அன்று இந்த ஆலையை மூடிவிட ஆணையிட்டது. இதற்கான காரணங்களைக் கீழ்க்கண்டவாறு தெரிவித்தது :

(1) நிறுவனத்தை மீண்டும் செயல்படுத்துவதற்குத் தேவையான நிதியை புதிய நிர்வாகத்தால் கொண்டு வர முடியவில்லை. அதோடு இணை நிறுவனங்களையும் புதியவர்களால் சேர்த்துக் கொள்ள முடியவில்லை.

(2) வங்கிகள், நிதி நிறுவனங்களுக்கு ஸ்டாண்டர்டு மோட்டார் நிறுவனம் செலுத்த வேண்டிய பாக்கித் தொகைகள் மிக அதிகமாக இருப்பதால், இந்நிறுவனத்திற்கு புத்துயிர் அளிக்க எவரும் முன்வரவில்லை.

1996 ஆகஸ்ட் 20]

(3) தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்து நிறுவனத்தை நடத்திச் செல்லவும் சாத்தியமில்லாமல் போய்விட்டது. இக்காரணங்களால் தொழிற் சாலையை மூடுவதாக அறிவித்துள்ளது.

இந்த தொழில் புனர் அமைப்பு நிதி வாரியம் (பி.ஐ.எப்.ஆர்) உத்தரவின் மீது தொழிற்சங்கம் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது.

தொழிற்சாலையை எடுத்து நடத்த யாராவது முன் வந்தால் தொழில் துறையும் தொழிலாளர் நலத்துறையும் இணைந்து உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

1.3. தொழிற்தகராறுகளைத் தீர்ப்பதில் காலக்கெடு நிர்ணயிப்பது:

சில சமயங்களில் தொழிற்சாலைகளில் தாவாக்கள் ஏற்படும்போது பல்வேறு சிக்கல்கள் காரணமாக தாவாக்களைத் தீர்ப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. பிரச்சினைகளின் தன்மையைப் பொறுத்து சில தாவாக்கள் 6 மாதங்கள் மேற்பட்டும்கூட தீர்வு காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மனித உழைப்பு நாட்கள் வீணாவதைத் தடுப்பதில் முழு முயற்சி காட்டி வரும் இந்த அரசு, இத்தகைய தாவாக்களைத் தீர்ப்பதில் காலக்கெடு ஒன்று நிர்ணயிக்க முடியுமா என்று பரிசீலித்து வருகிறது. இத்தாவாக்களை 3 மாத காலத்தில் முடிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளுமாறு தொழிலாளர் நலத்துறை ஆணையாளரை இவ்வரசு அறிவுறுத்துகிறது.

1.4 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம்:

1995ம் ஆண்டு 16 மூடப்பட்ட பஞ்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களிலுள்ள 9,910 தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 39.64 லட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

வ. எண்.	நிறுவனத்தின் பெயர்	தொழிலாளர் களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (நபர் ஒன்றுக்கு ரூ. 400 வீதம்)
1.	2.	3.	4.
1.	மெட்டல் பாக்ஸ் (இந்தியா) லிட்., திருவொற்றியூர், சென்னை-19	*686*	ரூ. *2,74,400*

2.	எம்.ஆர். எலக்ட்ரானிக்ஸ் காம்பொனென்டஸ், சென்னை-32	407	1,62,800
3.	சவுத் ஈஸ்ட் டேனிங் கம்பெனி, ஆம்பூர், வடஆற்காடு மாவட்டம்	779	3,11.,600
4.	ஸ்பென்சர் கன்சுயூமர் பிராடக்ட்ஸ் & சர்வீஸ் லிமிடெட், சென்னை.	116	66,400
5.	சேஷசாயி இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், வடலூர்	1483	5,93,200
6.	ஸ்டாண்டர்டு மோட்டார் ப்ராடக்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், பெருங்களத்தூர், சென்னை-66	2205	8,82,000
7.	சீதா வெங்கடேஷ் மில்ஸ், கதிர்வேடு, சென்னை-66	301	1,20,400
8.	டெக்னோ அலாய் (பி) லிமிடெட், புதுக்கோட்டை	78	31,200
9.	நிஜாம் பேப்பர் & போர்டு லிமிடெட், புதுக்கோட்டை	175	70,000
10.	என். ஏ.பி. அழகிரி ராஜா & கம்பெனி, பழனி தாலுகா	130	52,000
11.	சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், முத்தனேந்தல்	230	92,000
12.	லயன்ஸ் ரப்பர் இண்டஸ்ட்ரீஸ், மதுரை	186	74,400
13.	மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்ட்ரீஸ், சேலம்	2537	10,14,800
14.	டூல்ஸ் இண்டர்நேஷனல், சேலம்	58	23,200
15.	தமிழ்நாடு அலாய்ஸ், சேலம்	87	34,800
16.	சிவானந்தா மில்ஸ் லிமிடெட், கோவை	402	1,60,800
	மொத்தம்	**9910**	**39,64,000**

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

1.5 மதுரையில் தொழிலாளர் அலுவலக வளாகம் கட்டுதல்:-

இத்துறையைச் சார்ந்த அலுவலகங்களுக்காக மதுரையில் கட்டப்பட உள்ள ஒருங்கிணைந்த கட்டிட வளாகத்திற்குத் தேவையான ஒரு ஏக்கர் நிலத்தினை ஒதுக்கக் கோரி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரால் சென்னை நில நிர்வாக ஆணையருக்குப் பிரேரணை அனுப்பப்பட்டுள்ளது.

1.6 தொழிலாளர் நீதிமன்றங்கள்:-

தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் சட்ட ரீதியான நிவாரணத்தை விரைவில் பெற வசதியாக இம்மாநிலத்தின் 10 தொழிலாளர் நீதிமன்றங்கள் செயல்பட்டுவருகின்றன.

இந்த நீதிமன்றங்களின் ஆட்சி எல்லைகள் விவரம் பின்வருமாறு:-

	தொழிலாளர் நீதிமன்றங்கள்		ஆட்சி எல்லை
1.	முதன்மை தொழிலாளர் நீதிமன்றம் சென்னை.	}	சென்னை மற்றும் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டங்கள்.
2.	முதல் கூடுதல் தொழிலாளர் நீதி மன்றம், சென்னை.	}	
3.	இரண்டாம் கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், சென்னை.	}	
4.	தொழிலாளர் நீதிமன்றம், வேலூர்.	:	வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள்.
5.	தொழிலாளர் நீதிமன்றம், சேலம்	:	சேலம் மற்றும் பெரியார் மாவட்டங்கள்.
6.	தொழிலாளர் நீதிமன்றம், கோயம்புத்தூர்	:	கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள்.
7.	தொழிலாளர் நீதிமன்றம், கடலூர்	:	தென்னாற்காடு-வள்ளலார், விழுப்புரம்-ராமசாமி படையாச்சியார், நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள்.

[1996 ஆகஸ்ட் 20

8. தொழிலாளர் நீதிமன்றம், திருச்சி.	:	திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல்–அண்ணா மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள்.
9. தொழிலாளர் நீதிமன்றம், மதுரை	:	மதுரை, காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்கள்.
10. தொழிலாளர் நீதிமன்றம், திருநெல்வேலி	:	திருநெல்வேலி–கட்டபொம்மன், சிதம்பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள்.

இதைத் தவிர, சென்னையில் தொழிற் தீர்ப்பாயமும் ஒரு சிறப்புத் தொழிற் தீர்ப்பாயமும் (தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலை தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைகளுக்காக) இயங்கி வருகின்றன.

அத்தியாயம்-2

1985ம் வருட தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமுல்) சட்டம் மற்றும் 1977ம் வருட தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள் அமுலாக்கம்:-

2.1 தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமுல்) சட்டம், 1985:

தமிழ்நாட்டில் 1985ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் சட்டம் மற்றும் 1977ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகளின் அமுலாக்கப் பணி, சென்னை, தொழிலாளர் ஆணையர் தலைமையில் சட்டமுறை எடையளவு கட்டுப்பாடு அதிகாரியின் பொறுப்பில் இருந்து வருகிறது.

1996 ஆகஸ்ட் *20*]

சென்னை, தொழிலாளர் துணை ஆணையர் (ஆய்வுகள்) சட்டமுறை எடையளவு கட்டுப்பாடு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கு உதவியாக தலைமையகத்தில் ஒரு நிர்வாக அலுவலர் (எடையளவுகள்) (சட்டமுறை எடையளவு துணை கட்டுப்பாட்டு அதிகாரி) மற்றும் ஒரு தொழிலாளர் துணை ஆய்வர் (தலைமையகம்) (சட்டமுறை எடையளவு உதவி கட்டுப்பாடு அதிகாரி) ஆகியோர் உள்ளனர். மேலும் அமுலாக்கப் பணியில் இவருக்கு உதவியாக இம்மாநிலத்தில் *23* தொழிலாளர் ஆய்வர்கள் (சட்டமுறை எடையளவு துணை கட்டுப்பாடு அதிகாரிகள்) *67* தொழிலாளர் துணை ஆய்வர்கள் (சட்டமுறை உதவி கட்டுப்பாடு அதிகாரிகள்). *210* தொழிலாளர் உதவி ஆய்வர்கள் (சட்டமுறை எடையளவு ஆய்வர்கள்) மற்றும் *95* முத்திரை ஆய்வர்கள் பணியாற்றுகின்றனர்.

நுகர்வோர் நலன்களுக்குப் பாதகமாகப் பொருட்களை எடை அல்லது அளவு குறைவாக விநியோகித்தல், தவறான எடை அளவைகளை வியாபாரப் புழக்கத்தில் பயன்படுத்துதல் அல்லது தவறாக எடையளவுகளைப் பயன்படுத்துதல் போன்ற முரண்பாடுகளைக் கண்டறிந்து அப்படிப்பட்ட முரண்பாடுகளுக்குப் பொறுப்பாளர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அடிக்கடி முறையான ஆய்வுகள், கூட்டாய்வுகள் மற்றும் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன.

சட்டமுறை எடையளவு கட்டுப்பாடு அதிகாரி இம்மாநிலத்தில் அனைத்து எடையளவு துணைக் கட்டுப்பாடு அதிகாரிகளின் நிர்வாக எல்லையிலும் திறனாய்வுக் கூட்டங்கள் நடத்தி *1985*ம் ஆண்டு எடையளவு (அமுல்) சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் அமுலாக்கம் சம்பந்தமாக சார்நிலை அலுவலர்களின் பணி தொடர்பாகவும், நுகர்வோர் நலன்கள் சம்பந்தமாக அவர்கள் மேற்கொண்ட அமுலாக்க மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் குறித்தும் திறனாய்வு செய்துள்ளார்.

*1995*ம் ஆண்டில் மாநிலம் முழுவதும் இச்சட்டத்தின் கீழ் *3,75,370* ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. எடையளவு சட்ட விதிகளை கிராமப் பகுதிகளிலும் தீவிரமாகச் செயற்படுத்தும்பொருட்டு, சார்நிலை அதிகாரிகளால் கிராமங்களிலும் சந்தைகளிலும் முறையான ஆய்வுகளும் கூட்டாய்வுகளும் நடத்தப்பட்டன. மொத்தம் *25,305* கிராம ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலமாக *1,00,767* வணிக நிறுவனங்கள் ஆயவுக்குட்படுத்தப்பட்டன. மேலும் *1995*ம் ஆண்டில் மொத்தம் *6,341* கூட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதில் *67,830* வர்த்தக நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

[1996 ஆகஸ்ட் 20

2.2. 1977-ம் வருட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள்:

நுகர்வோர் நலன் கருதி 1976-ம் ஆண்டு எடையளவு சட்டத்தின் கீழ் 1977-ம் வருடத்தில் தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதிகள் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டது. இவ்விதிகள் மாநிலங்களுக்கிடையே விற்கப்படும் (இண்டர் ஸ்டேட்) அனைத்துப்பொட்டலப் பொருட்களுக்கும் பொருந்தும். இவ்விதிகள் 1-4-1984 முதல் இம் மாநிலத்தில் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்திற்குள்ளேயே விற்பனைக்காக வர்த்தக ரீதியாகத் தயாரிக்கப்படும் பொட்டலப் பொருட்களுக்கும் மேற்கண்ட விதிகளை விரிவுபடுத்த 1985-ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் (அமுல்) சட்டம் பிரிவு 33 மூலம் வகை செய்யப்பட்டு 1-3-89 முதல் அமுல்படுத்தப்படுகிறது. நுகர்வோரின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற சிறந்த நோக்கத்தில் எடை அளவுகள் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகளைத் தீவிரமாக அமுலாக்கம் செய்யும் முயற்சியில் 1995-ம் ஆண்டில் மாநிலம் முழுவதுமாக சிறப்பு கூட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. கீழ்க்கண்டவாறு ஆய்வுகள் செய்து முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன :

வ.எண். (1)	நிறுவனத்தின் பெயர் (2)	ஆய்வு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை (3)	முரண்பாடு காணப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை (4)
1.	நியாயவிலைக் கடைகள்	12712	2763
2.	பள்ளி நோட்டு புத்தக விற்பனை நிலையங்கள்	645	70
3.	பெட்ரோல் & டீசல் பம்புகள்	5090	400
4.	பால் விநியோக நிலையங்கள்	4729	709
5.	மீன்/இறைச்சி விற்பனை நிலையங்கள்	3307	377
6.	காய்கறி மார்க்கெட்டுகள்	8780	1067
7.	சமையல் எரிவாயு நிறுவனங்கள்	590	48
8.	மண்ணெண்ணெய் மற்றும் இதர வியாபாரிகள்	12650	1850
9.	பொட்டலப் பொருட்கள்-விதிகள்	20762	4103

1996 ஆகஸ்ட் 20]

பொட்டலப் பொருட்கள் உற்பத்தி செய்யும் அல்லது பொட்டலங்களில் அடைக்கும் உற்பத்தியாளர்கள் நிறுவனங்களில் நிகர எடை சோதனை செய்வதற்காக முதல் கட்டமாக சென்னையிலும், மதுரையிலும் கம்ப்யூட்டருடன் இணைக்கப்பட்ட நவீன தானியங்கி நிறுக்கும் கருவிகள் 1991-ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுள்ளன. இவை, நுகர்வோர் நலன் கருதி இவை பொட்டலப் பொருள் உற்பத்தியாளரின் பொட்டலங்கள் அடைக்கும் இடங்களுக்கு ஆய்வர்களால் எடுத்துச் செல்லப்பட்டு 'நிகர எடை சோதனை' செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இது போன்ற நவீன தானியங்கி நிறுக்கும் இயந்திரங்கள் கோவை மற்றும் திருச்சிக்கு அடுத்தக்கட்டமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்தியாயம்-3

குறைந்த பட்ச ஊதியச் சட்ட அமுலாக்கம்

பேச்சு வார்த்தைகளின் மூலம் தங்களது உரிமைகளைப் பெற இயலாத அமைப்பு ரீதியற்ற முறையில் இயங்கும் தொழிலாளர்கள் [illegible]டத்தின் மூலம் குறைந்தபட்ச ஊதியப் பயன்களைப் செ[illegible]பிந்தில் இவ்வரசு ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது.

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்கள் மிகுந்துள்ள தொழில்களுக்கு அரசு குறைந்தபட்ச ஊதிய விகித நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்து வருகிறது. இது நாள்வரை 67 தொழில்கள் குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில் அரசால் சேர்க்கப்பட்டுள்ளன.

குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை நிர்ணயம்/மறுநிர்ணயம் செய்யும் தருணங்களில் அடிப்படை ஊதிய விகிதங்களைத் தவிர, நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் அகவிலைப்படியை நிர்ணயம் செய்வதை அரசு கொள்கையாகக் [illegible]காண்டுள்ளது.

31-வது தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டின் [illegible]ரிந்துரையின் அடிப்படையில், குறைந்த பட்ச ஊதிய விகிதங்கள் தற்போது ஈராண்டிற்கு ஒருமுறை மறுநிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

நிர்ணயம் செய்யப்பட்டு குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் தினசரி ரூ. 20/–க்கு குறையாத வகையில் இருக்க வேண்டும் என்பதை அரசு தனது கொள்கையாகக் கொண்டுள்ளது.

தையல் தொழில், காலணி தயாரிக்கும் தொழில், தோல் பொருள் தயாரிக்கும் தொழில் மற்றும் பொதுப் பொறியியல் தொழில் போன்ற தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து அரசு அறிவித்ததை எதிர்த்து அத்தொழில்களைச் சார்ந்த நிர்வாகிகள் உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்து அவ்வறிக்கைகளை அமுல்செய்வதற்குத் தடை உத்தரவுகள் பெற்றதனால் அத்தொழில்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்த குறைந்தபட்ச ஊதியம் கிடைக்க வழியில்லாத நிலையில், அத்தொழிலாளர்கள் பயன் பெறும் வகையில் அத்தடை உத்தரவுகளை அகற்றவும், அவ்வழக்குகளை முடிக்கவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

1995ம் ஆண்டில் பின்வரும் தொழிலாளர்களுக்கு அரசால் ஊதிய விகிதங்கள் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1. லாண்டரி மற்றும் துணி துவைக்கும் (கம்பளி உட்பட) தொழில்
2. (அ) புகையிலை தயாரிப்பு (பீடி சுற்றுதல்) தொழில்.
 (ஆ) புகையிலை தயாரிப்பு (வாசனை மற்றும் மெல்லும் புகையிலை) தயாரிப்பு தொழில்.
3. பொது மோட்டார் போக்குவரத்துத் தொழில்
4. பேக்கரீஸ் மற்றும் பிஸ்கட் தயாரிப்புத் தொழில்.
5. கயிறு தயாரிக்கும் தொழில்
6. பொதுப் பொறியியல் மற்றும் கட்டமைப்புத் தொழில்
7. வனத் தொழில்
8. காபி பதப்படுத்தும் தொழில்
9. தோட்ட நிறுவனங்கள் தொழில்
10. சோப்பு தயாரிக்கும் தொழில்
11. விலைக்கு வாங்கும் தேயிலைகளைப் பதப்படுத்தும் தொழில்
12. அச்சகங்கள் தொழில்
13. ஜவ்வரிசித் தொழில்
14. ஓட்டல்கள் மற்றும் உணவு நிறுவனங்கள் தொழில்.

1996 ஆகஸ்ட் 20]

1-1-96 முதல் 31-3-96 முடிய கீழ்க்காணும் தொழில்களுக்கு அரசால் குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:-

1. விசைத்தறித் தொழில்
2. திரைப்படத் தொழில் (தயாரிப்பு, விநியோகம் மற்றும் விளம்பரம் உட்பட)
3. எலக்ட்ரானிக் தொழில்
4. பட்டுப் பூச்சி வளர்ப்புத் தொழில்
5. அப்பளம் தயாரிக்கும் தொழில்
6. ஆட்டோமொபைல் ஒர்க்ஷாப் தொழில்
7. தேங்காய் உரிப்புத் தொழில்
8. செயற்கை வைரக் கற்களுக்கு பட்டை தீட்டும் தொழில்
9. உப்பளங்கள் தொழில்
10. காட்டன் ஜின்னிங், பிரஸ்ஸிங் மற்றும் காட்டன் வேஸ்ட் தொழில்
11. பட்டு இழை முறுக்கும் தொழில்

பின்வரும் தொழில்களுக்குக் குறைந்தபட்ச ஊதிய நிர்ணயம்/மறுநிர்ணயம் தொடர்பான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

நிர்ணயம்

1. காற்றூட்டப்பட்ட நீர் தயாரிப்பு தொழில்.

மறு நிர்ணயம்

1. காகிதம் மற்றும் அதன் செயல்முறைத் தொழில்
2. எண்ணெய் ஆலைத் தொழில்
3. புகையிலை தயாரிப்பு (பீடி தயாரிப்பு) தொழில்
4. சலனப்படத் தயாரிப்பு தொழில்
5. கொள்கலன்கள் தயாரிப்புத் தொழில்
6. அ.தீப்பெட்டி தயாரிக்கும் தொழில்
 ஆ.பட்டாசு தயாரிக்கும் தொழில்

7. மர ஆலைத் தொழில்

8. சினிமாத் தொழில்

9. காலணிகள் தயாரிப்புத் தொழில்

10. பாலிதீன், ப்ராஸஸிங் ஃபோம் அயிட்டம்ஸ் மற்றும் பிளாஸ்டிக் தயாரிக்கும் தொழில்

11. கட்டுமானப் பணி மற்றும் சாலைகள் பராமரிப்புத் தொழில்

12. உணவு பதப்படுத்தும் தொழில்

13. தச்சு மற்றும் கருமார் தொழில்

அத்தியாயம்-4

நலத்திட்டங்கள்

தொழிலாளர் நலன் குறித்தான அரசின் பட்டியலில், அமைப்பு ரீதியற்ற நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் தொடர்ந்து முதன்மையிடத்தை வகிக்கிறது. தற்போது, பீடித் தொழில், கட்டுமானத் தொழில், சினிமாத் தொழில் மற்றும் ஒப்பந்தத் தொழில் ஆகிய அமைப்பு ரீதியற்ற தொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நலன் குறித்து அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. ஆயினும், சில இடங்களில் அரசின் தனிக்கவனம் செலுத்தப்பட்டதின் மூலம், ஒட்டுமொத்தமாகத் தொழிலாளர்களுக்கு சிறந்த பயன் கிடைக்கப்பெறுகிறது.

கீழ்க்கண்ட சில முக்கிய நலத் திட்டங்கள் இத்துறையினால் செயல்படுத்தப்படுகிறது:-

4.1 தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம்:-

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்:-

வீடு ஒன்றுக்கு மத்திய அரசு வழங்கும் மான்யத் தொகை ரூ. 9,000/- மற்றும் ஒரு வீட்டிற்கு ரூ. 13,000/- என்ற விகிதத்தில் ஹட்கோ நிறுவனத்தின் மூலம் கடன் பெறுதல் ஆகியவற்றைக் கொண்டு மேலப்பாளையத்தில் 439 வீடுகளும் முக்கூடலில் 482 வீடுகளும் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1996 ஆகஸ்ட் 20]

ஹட்கோ நிறுவனம் இதற்காக ரூ. 119.73 இலட்சம் கடன் வழங்க அனுமதி அளித்துள்ளது. அரசு, இத்தொகைக்கான பொறுப்புறுதி கொடுத்துள்ளது.

(ஆ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம்:-

மேலும் வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள பீடித்தொழிலாளர்களுக்கும் 625 வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு உத்தேசித்துள்ளது. உரிய பிரேரணை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

(இ) அந்தியூர், பெரியார் மாவட்டம்:-

பெரியார் மாவட்டம் பவானி வட்டம் அந்தியூர் கிராமத்தில் 93 வீடுகள் கட்டிக் கொடுக்க முன்மொழிவு ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

4.2. தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் நலன்:-

தோட்டத் தொழிலாளர்களின் பணி நிலைமை 1951ம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்படி வரையறுக்கப்பட்டுள்ளது. தோட்ட நிறுவனங்களின் பணியில் ஈடுபட்டுள்ள மொத்தத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1.60 இலட்சமாகும். இவற்றில் தேயிலைத் தொழிலில் மட்டும் 1 லட்சம் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள்.

தோட்டத் தொழிலாளர் சட்டத்தினை 7 தோட்ட நிறுவன ஆய்வர்கள் அமல் செய்கிறார்கள். இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள இலவச வீட்டு வசதி, இலவச அடிப்படைக் கல்வி, தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு சிறப்பு மருத்துவ வசதி உள்ளிட்ட இலவச மருத்துவ சிகிச்சை தொழிலாளர்களின் குழந்தைகள் காப்பக வசதி, குழந்தைகளுக்கு இலவச பால் மற்றும் உணவு, பணியாளர்களின் இருப்பிடத்திற்கு சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீர் வசதி, வெளியில் விளையாடுவது உள்ளிட்ட பொழுது போக்கு வசதிகள் மற்றும் கம்பளி போன்ற பாதுகாப்பான சாதனங்கள் வழங்குதல் போன்றவைகள் தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்றனவா என்பதை மேற்படி ஆய்வர்கள் கூர்ந்து கண்காணிக்கின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்குத் தோட்ட உரிமையாளர்களால் உரிய மருத்துவ வசதி அளிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ள இரண்டு உதவி மருத்துவர்கள் (தோட்ட நிறுவனங்கள்)

நியமனம் செய்யப்பட்டுப் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். அதே போன்று தோட்ட நிறுவனங்களில் பணி புரியும் பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேறு நலச் சட்டம் மற்றும் சம ஊதியச் சட்டம் ஆகியவற்றின் பயன்கள் கிடைக்கின்றனவா என்பதை மூன்று மகளிர் தொழிலாளர் ஆய்வர்கள் கண்காணித்து வருகின்றனர். தோட்டத் தொழிலாளர்களில் 98% தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளதன் மூலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடத்தை வகிக்கிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் செயலரைத் தலைவராகவும், நிர்வாகம் மற்றும் தொழிலாளர் தரப்புப் பிரதிநிதிகள் அங்கத்தினர்களாகவும் கொண்ட தோட்டத்தொழிலாளர் வீட்டு வசதி ஆலோசனை வாரியம், வீட்டு வசதி சம்பந்தப்பட்ட அனைத்து விவகாரங்களையும் கவனித்து வருகிறது. தொழிலாளர் ஆணையரைத் தலைவராகக் கொண்ட தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு, வீட்டு வசதி தவிர இதர பிரச்சினைகளைக் கவனித்து நடவடிக்கை மேற்கொள்கிறது.

4.3. ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல், நீக்குதல்) சட்டத்தைச் செயற்படுத்துதல்:-

இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள், இச்சட்டத்தை அமல் படுத்துவது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதின் மூலம், ஒப்பந்ததாரரால் வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் இச்சட்டத்தில் குறிப்பிட்ட நலன்களைப் பெறுகின்றனர்.

இச்சட்டத்திற்கு அப்பாற்பட்ட பிரச்சனைகள் மற்றும் இதர அலுவலர்கள் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவும் மற்றும் ஆலோசனை வழங்கவும், தமிழக அரசு, நிர்வாகப் பிரதிநிதிகள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் அடங்கிய மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக்குழு ஒன்றை அமைத்துள்ளது.

மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக்குழு அளித்த பரிந்துரையின்படி இதுவரை பொறியியல் துறையில், 13 செயல் முறைகள் முறைப்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து, அரசாணை எண் 187, தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறை, நாள் 2-9-93 அன்று வழங்கியுள்ளது.

1996 ஆகஸ்ட் 20]

4.4 இதர நலத் திட்டங்கள்:--

4.4.1 தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழு:

தொழிலாளர்கள் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் பயன் பெறவும், குறிப்பாக, அமைப்பு ரீதியற்ற தொழிலாளர்களுக்கு வேண்டிய அறிவுரைகள் வழங்கவும், மாநிலத்தில் மூன்று தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் பணியாற்றுகின்றன.

4.4.2 தொழில் நல்லுறவுப் பரிசுத் திட்டம்:

நாட்டில் சுமுகமான தொழில் உறவை நிலைநாட்டும் வகையில் தொழில் நல்லுறவைப் பேணிப் பாதுகாக்கும் பணியில் முன்னிலையில் நிற்கும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கங்களுக்குப் பரிசுகள் வழங்கி ஊக்குவிக்கும் வகையில் தொழில் நல்லுறவுப் பரிசு வழங்கும் திட்டத்தை இவ்வரசு உருவாக்கியுள்ளது. 1991 மற்றும் 1992 ஆண்டுகளுக்கான பரிசுக்குரியவர்கள் தொழில் நல்லுறவுப் பரிசு வழங்கும் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவ்விவரம் 18-10-95-ஆம் தேதி தமிழ்நாடு அரசிதழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. பரிசுகள் வழங்கும் விழா 3-7-96 அன்று நடைபெற்றது.

4.4.3 தொழிலாளர் துயர் தணிப்பு நிதி:

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணி நேரத்தில் ஊனமுற்றாலோ அல்லது மரணமடைந்தாலோ வேலையாள் இழப்பீடு சட்டத்தின் கீழ் தீர்ப்பளிக்கப்பட்ட நட்ட ஈட்டுத் தொகையைப் பெற இயலாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு இந்த நிதியை ஏற்படுத்தியுள்ளது. 1995-ஆம் ஆண்டில் இந்நிலையிலிருந்து 10 வழக்குகளில் ரூ. 11,000/- நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

4.4.4 தமிழக அரசு தொழிலாளர் புனர்வாழ்வு நிதி:

தொழிற்சாலைகள் நவீனசாலைகள் நவீனப்படுத்துதலினாலோ அல்லது தொழில் நுட்ப மேம்பாட்டினாலோ அல்லது மூடப்பட்ட நிலையினாலோ வேலையின்மை ஏற்படுகிறது. எனவே, அவ்வாறு பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் பொருட்டு அரசு **"தமிழக அரசு தொழிலாளர் புனர்வாழ்வு நிதி"** என்னும் ஒரு தொழிலாளர் மறுவாழ்வு நிதியை ஏற்படுத்தி ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

[1996 ஆகஸ்ட் 20

4.4.5. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம், 1994:

தமிழ்நாட்டில் பணிபுரியும் உடலுழைப்புத் தொழிலாளர்களின் பணி நிபந்தனைகள் குறித்தும் அவர்கள் தொழில் சம்பந்தப்பட்ட வேறு சில விவரங்கள் குறித்தும் முறைப்படுத்தும் வகையில் 1982-ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தினை தமிழ்நாடு அரசு இயற்றியது.

கட்டுமானப் பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலனுக்காக மேற்படி சட்டத்தின் பிரிவு 3-ன்படி 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டத்தினை அரசு உருவாக்கியது. இத்திட்டம் ஆரம்பகட்டமாக சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய மாநகராட்சியிலும் அமுலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள் நலன் சம்பந்தமாக விபத்துக் காப்பீடு, குழந்தை காப்பகங்கள், சேம நல நிதி, தொழிலாளர்கள் மாநில இன்சூரன்ஸ் மற்றும் ஓய்வூதியம் போன்ற நலத் திட்டங்கள் உள்ளன.

மேற்படி நலத் திட்டங்களுக்கு மாநகராட்சிகளிடமிருந்து கீழ்க்கண்டுள்ளவாறு நிதி (31-3-95 முடிய) பெறப்பட்டுள்ளன:--

1.	சென்னை	–	ரூ. 24,00,000
2.	கோவை	–	ரூ. 41,864
3.	மதுரை	–	ரூ. 3,01,497
4.	மற்றவை (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் போல)	–	ரூ. 16,636
	மொத்தம்		ரூ. 27,59,997

31-3-96 முடிய 20,573 கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு அவர்களிடமிருந்து தலா ரூ. 25/- வீதம் ரூ. 5,14,325/- பதிவுக் கட்டணம் பெறப்பட்டு அந்தத் தொகை இன்சூரன்ஸ் நிறுவனத்திடம் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி காலத்தில் 4 பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு விபத்து ஏற்பட்டதன் காரணமாக வழங்கப்பட்ட இழப்பீடு தொகை விவரங்கள் பின்வருமாறு:-

1996 ஆகஸ்ட் 20]

வ. எண் (1)	தொழிலாளரின் பெயர் (2)	விபத்து தன்மை மற்றும் நாள் (3)	வழங்கப்பட்ட தொகை (ரூ.) (4)
1.	திரு. விஸ்வநாதன்	மரண விபத்து, நாள் 24-6-95	50,000/-
2.	திரு. கே. ஜானகிராமன்	காய விபத்து, நாள் 19-8-95	7,500/-
3.	திரு. வி. சுப்பிரமணியன்	மரண விபத்து, நாள் 9-11-95	50,000/-
4.	திரு. என். சிவா	காய விபத்து, நாள் 3-6-95	7,500/-

இதற்கிடையில் கட்டுமானத் தொழிலாளர்கள் நலன் குறித்து கட்டிடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் நல வரி (Cess) பிரகடனம் 1995 மற்றும் கட்டிடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) பிரகடனம் 1995 ஆகிய இரண்டு அவசரப் பிரகடனங்கள் மத்திய அரசால் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழ்நாடு உடல் உழைக்கும் (கட்டிடத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் அமுலாக்கம் செய்வது தற்சமயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

4.4.6. திரைப்படத் தொழிலாளர்கள் விபத்துக் காப்பீட்டுத் திட்டம்:

திரைப்படத் தொழிலாளர்களுக்காக அரசாணை எண் 66, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 16-4-1995-ல் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஓய்வூதியத் திட்டம் ஆகிய திட்டங்கள் ஏற்படுத்தியுள்ளது. விபத்துக் காப்பீட்டுத் திட்டம் 14-4-95 முதலும், ஓய்வூதியத் திட்டம் 1-4-95 முதலும் அமலுக்கு வந்துள்ளது. இது ஒரு சுய நிதித் திட்டமாகும்.

அரசு விபத்து காப்பீட்டுச் செலவிற்காக ரூ.5 இலட்சமும், ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் முதல் 3 மாதங்களுக்குள் வழங்கும் பொருட்டு ரூ.9 லட்சமும் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 60 வயது நிறைவான திரைப்படத் தொழிலாளர்கள் 1-4-95

முதல் மாதம் ரூ.300/-ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவார்கள். பணிக்காலத்தில் ஏற்படும் விபத்தால் பணியாளர்கள் இறக்க நேரிடின் அவர்தம் குடும்பத்திற்கும் விபத்தில் ஏற்படும் நிரந்தரக் குறைபாடுகளுக்கும் இழப்பீட்டுத் தொகை பெற விபத்து காப்பீட்டுத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 727 ஓய்வூதியப் பணியாளர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு 1995 ஏப்ரல் மாதத்திற்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. திரைப்படத் தொழிலாளர்கள் அத்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி மாதச் சந்தா ரூ.25/–னை செலுத்தாத காரணத்தினால் 1995 மே மாதம் முதல் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

4.4.7. குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கமர்த்துவதை அகற்றுதல்:

பீடித் தொழில்: பீடித் தொழில் திருநெல்வேலி–கட்டபொம்மன் மற்றும் வடஆற்காடு–அம்பேத்கார் மாவட்டங்களில் மட்டுமே குழந்தைத் தொழிலாளர்கள் அதிகம் காணப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தத்தம் பெற்றோர்களுக்கு உதவி புரிவது தெரிய வந்துள்ளது. பீடித் தொழிலில் குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதை முற்றிலும் அகற்றும் வகையில் இத்துறை சட்ட அமுலாக்க ஆய்வர்கள் முடுக்கிவிடப்பட்டு இத்தொழிலில் குழந்தைத் தொழிலாளர்கள் காணப்பட்டால் சம்பந்தப்பட்ட வேலையளிப்பவரின் மீது 1986–ம் வருடத்திய குழந்தைத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் வழக்குகள் தாக்கல் செய்யத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதன் விளைவாக திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் பீடித் தொழில் நிறுவனத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் பணிபுரிவது கண்டறியப்பட்டு இந்த முரண்பாட்டிற்காக பீடி மற்றும் சுருட்டுத் தொழிலாளர்கள் சட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட வேலையளிப்பவர்களின் மீது 6 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதே போல் வட ஆற்காடு–அம்பேத்கார் மாவட்டத்திலும் பீடித் தொழிலில் குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்தியதற்காக சம்பந்தப்பட்ட வேலையளிப்பவர்களின் மீது 16 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

1996 ஆகஸ்ட் 20]

இதர தொழில்கள் : இவை தவிர, 1986-ம் வருடத்திய குழந்தைத் தொழிலாளர்கள் சட்டம் பொருந்தாத இதர தொழில் நிறுவனங்களிலும், இத்துறை அமுலாக்க அலுவலர்களால் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட சட்டத்தின் கீழ் வழக்குகள் தொடரப்பட்டு வருகின்றன. இதன் விளைவாக 1-1-95 முதல் 30-11-95 வரையிலான காலத்தில் கீழ்க் கண்டவாறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன :

1. தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம். 1947 = 47
2. தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958 = 75
3. தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951 = 23

மேலும், குழந்தைத் தொழிலாளர்கள் கணக்கெடுப்புப் பணிக்காக தமிழ்நாடு அரசு, அரசாணை எண்.116, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 21-6-95-ன் மூலம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ.19,76,000/=ஐ காமராஜர், வ.உ.சிதம்பரனார், திருச்சி, திருநெல்வேலி-கட்டபொம்மன், கோயம்புத்தூர், வட ஆற்காடு-அம்பேத்கார் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளது.

மக்களிடையே விழிப்புணர்ச்சிகளை ஏற்படுத்துவதற்கும், சிறப்புப் பள்ளிகள் தொடங்குவதற்கும், குழந்தைகளுக்கும் முறைசாராக் கல்வி பயில்விப்பதற்கும் அரசு கீழ்கண்ட 7 மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மாவட்டத்தின் பெயர் (1)	பள்ளிகள் எண்ணிக்கை (2)	குழந்தைகளின் எண்ணிக்கை (3)	நிதி ஒதுக்கீடு (ரூ.) (4)	முதல் தடவையாக அளிக்கப் பட்ட தொகை (5)
1. கோயம்புத்தூர்	40	2000	69,38,000	8,96,300
2. சிதம்பரனார்	40	2000	69,56,000	8,98,100
3. தர்மபுரி	40	2000	69,56,000	8,98,100
4. காமராஜர் (கூடுதல்)	40	2000	69,38,800	8,96,300
5. சேலம்	40	2000	69,38,000	8,96,300
6. புதுக்கோட்டை	40	2000	69,38,000	8,96,300
7. திருச்சி	30	1500	53,40,000	7,36,500
	270	**13500**	**4,70,04,800**	**61,17,900**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 20

வடஆற்காடு-அம்பேத்கார், திருநெல்வேலி-கட்டபொம்மன் ஆகிய 2 மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு ஆணை மத்திய அரசிடமிருந்து எதிர் நோக்கப்படுகிறது. மேற்கண்ட 7 மாவட்டங்களில் செய்துள்ள முன்னேற்றப் பணியின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

மாவட்டத்தின் பெயர்		நடவடிக்கை விவரம்
1. கோயம்புத்தூர்	கணக்கெடுப்பு முடிவடைந்தது. விழிப்புணர்ச்சி பணி ஆரம்பிக்கப்பட்டு ரூ. 2.5 லட்சம் செலவிடப்பட்டது.	5 பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. விரைவில் மேலும் 20 பள்ளிகள் துவக்கப்படவுள்ளன.
2. காமராஜர்	–	டிசம்பர் 1995ல் 10 பள்ளிகள் திறக்கப்பட்டன. கூடிய விரைவில் 40 பள்ளிகள் திறக்கப்படவுள்ளன.
3. புதுக்கோட்டை	–	25 பள்ளிகள் துவக்க முடிவெடுக்கப்பட்டது. விரைவில் 40 பள்ளிகள் திறக்கப்படவுள்ளன.
4. சேலம்	..	12 சிறப்பு பள்ளிகள் திறக்கப்பட்டு விட்டன. மேலும் 28 பள்ளிகள் திறக்கப்படவுள்ளன.
5. திருச்சி	கணக்கெடுப்பு மற்றும் விழிப்புணர்ச்சி பணி நடத்தப்பட்டது.	30 பள்ளிகளில் 29 பள்ளிகள் நவம்பர் 1995ல் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.
6. செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்.	விழிப்புணர்ச்சி பணி நடத்தப்பட உள்ளது.	பள்ளி ஏதும் திறக்கப்படவில்லை.
7. திருநெல்வேலி-கட்டபொம்மன்	கணக்கெடுப்பு மற்றும் விழிப்புணர்ச்சி பணி முடிவடைந்து, ரூ. 2.76 லட்சம் செலவிடப்பட்டது.	பள்ளி ஏதும் திறக்கப்படவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

8. சிதம்பரனார்	கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.	விரைவில் 40 பள்ளிகள் திறக்கப்பட உள்ளது.
9. வடஆற்காடு-அம்பேத்கார்	கணக்கெடுப்புப்பணி முடிவடைந்து விட்டது. விழிப் புணர்ச்சி பணி நடைபெற்று வருகிறது.	47 பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன

அத்தியாயம் 5

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சென்னை-6

5.1. தொழிலாளர் நலன் என்றாலே நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அளிப்பதே என்ற நிலையை 1972-ம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச்சட்டம் மாற்றியுள்ளது. தொழிலாளர், வேலையளிப்போர், மற்றும் அரசு ஆகியோர் முறையே ரூ. 3, ரூ. 6, ரூ .3, என்று அளிக்கின்ற நல நிதிப்பங்குத் தொகையினைக் கொண்டு பல்வேறு தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பங்களுக்கும் பயன் பெறும் வகையில் நலத் திட்டங்களை இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது.

5.2. தமிழ்நாடு தொழிலாளர் நல நிதியானது தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் வேலையளிப்போர் பிரதிநிதிகள் அடங்கிய வாரியத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இவ்வாரியத்திற்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலைவராவார்.

5.3. இவ்வாரியம் மாநிலம் முழுமையும் 52 இடங்களில் தொழிலாளர் நல மையங்களையும் 19 இடங்களில் தையற் பயிற்சி மையங்களையும் நடத்தி வருகிறது. தொழிலாளர் மையங்கள் ஒவ்வொன்றிலும் தையற் பயிற்சி வகுப்பும் குழந்தைகள் பாதுகாப்பகமும் இயங்கி வருகின்றன. மேற்படி தையற் பயிற்சி வகுப்புகள் தொழிலாளர்களைச் சார்ந்த அவர்களது மனைவி, திருமணமாகாத மகள் மற்றும் திருமணமாகாத சகோதரிகளுக்கு நடத்தப்படுகிறது. பயிற்சி காலங்களில் உதவித் தொகையாக பிரதி மாதம் ரூ. 40-ம், தேர்வுக்குச் சென்றால் பயிற்சி பெற்ற காலம் முழுவதற்கும், மேலும் பிரதி மாதம் ரூ. 20-ம் தேர்வில் தேர்ச்சி பெற்றால் மேலும் ரூ. 20 பிரதி மாதமுமாக மொத்தம் பிரதி மாதம்

ரூ. 80/-ம் வழங்கப்படுகிறது. இப்பயிற்சி காலம் ஓராண்டாகும். பயிற்சி முடிவில் பயிற்சியாளர்கள் அரசு நடத்தும் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். இத்தேர்விற்கான தேர்வுக் கட்டணமும் வாரியத்தால் செலுத்தப்படுகிறது. மேலும் இதற்கான கீழ்நிலை-மேல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்று ஒவ்வொரு மையத்திலும் முதல் மதிப்பெண் பெறுபவர்களுக்கு ஒரு தையல் இயந்திரம் பரிசாக வழங்கப்படுகிறது. குழந்தைகள் பிரிவில் பயிலும் குழந்தைகளுக்கு இலவச தொடக்கக் கல்வி அளிப்பதுடன் இலவச சத்துணவு, பால், பழம், முட்டை ஆகியவையும் வழங்கப்படுகின்றன. தவிர அனைத்துக் குழந்தைகளும் தகுதி பெற்ற மருத்துவர்களால் மாதமிருமுறை மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகின்றனர். தவிர ஒவ்வொரு குழந்தைக்கும் இரண்டு டெரிகாட்டன் சீருடைகள் வாரியத்தால் அளிக்கப்படுகிறது.

5.4. தொழிலாளர்களும், அவர்களைச் சார்ந்தோர்களும் படிக்கும் வழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழகத்தில் 13 இடங்களில் இலவசப் படிப்பகத்தை இவ்வாரியம் நடத்தி வருகிறது.

5.5. மாமல்லபுரம், குற்றாலம் மற்றும் வால்பாறை ஆகிய மூன்று இடங்களில் தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் தங்குவதற்காக ஓய்வு இல்லங்கள் உள்ளன. இங்கு மிகமிகக் குறைந்த வாடகையே வசூலிக்கப்படுகிறது.

5.6. சமரசப் பேச்சு வார்த்தை, வழக்குகள் ஆகியவற்றில் கலந்து கொள்ள சென்னைக்கு வரும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சென்னை தேனாம்பேட்டையில் தங்குவதற்காக ஜீவா இல்லம் என்ற ஓய்வு இல்லத்தையும் வாரியம் கட்டியுள்ளது.

5.7 தொழிலாளர்களுக்கென தாம்பரத்தில் 26 படுக்கைகளும், திருப்பூரில் 26 படுக்கைகளும், ஆசாரிப்பள்ளத்தில் 20 படுக்கைகளும் ஆண்டிப்பட்டியில் 20 படுக்கைகளும் கீழ்பெண்ணாத்தூரில் 24 படுக்கைகளும் அடங்கிய காசநோய் சிகிச்சைக்கான தனிப்பிரிவை அவ்விடங்களிலுள்ள அரசு மருத்துவமனைகளில் வாரியம் கட்டியுள்ளது.

5.8. இவ்வாரியம் நடைமுறைப்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களின் மூலம் பயன் பெற்றவர்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

1996 ஆகஸ்ட் 20]

1-1-1995 முதல் 31-3-1996 முடிய

(1) தொழிலாளர் நல மையங்கள் (தையல்பயிற்சி நிலையங்கள் மற்றும் குழந்தைகள் காப்பகங்கள்)	:	52
தையற் பயிற்சி நிலையங்கள்	:	19
மொத்தம்	:	71

மொத்தப் பயிற்சியாளர்கள் (நாட்காட்டி ஆண்டில்)

(அ) 1-1-95 முதல் 31-12-95 முடிய	:	2,363
(ஆ) 1-1-96 முதல் 31-3-96 முடிய	:	2,092
மொத்தம்	:	4,455

(2) குழந்தைகள் பிரிவு:

மொத்தக் காப்பகங்கள் எண்ணிக்கை	:	52
பயனுற்ற குழந்தைகள்	:	4,025
(அ) 1-6-94 முதல் 30-4-95 முடிய	:	2,139
(ஆ) 1-6-95 முதல் 30-4-96 முடிய (கல்வி ஆண்டு)	:	1,886
மொத்தக் குழந்தைகள்	:	4,025
(3) மொத்தம் படிப்பகங்கள்	:	13

(4) தொழிலாளர்களின் குழந்தைகள் படிப்பிற்கான உதவித் தொகை வழங்கிய விவரம்:

	1-1-1995 முதல் வழங்கப் பெற்ற தொகை	31-3-1996 முடிய பயன் பெற்றவர்கள் ரூ.
1. பொறியியல் பட்டப்படிப்பு	162	1,94,400
2. பொறியியல் பட்டயப் படிப்பு	415	2,98,800
3. மருத்துவப் பட்டப் படிப்பு	47	56,400

[1996 ஆகஸ்ட் 20

4. மருத்துவப் பட்டயப் படிப்பு	2	1,440
5. சட்டப் பட்டப் படிப்பு	2	2,400
6. வேளாண்மை பட்டப் படிப்பு	6	7,200
7. தொழிற் பயிற்சிக் கல்வி	144	72,000
8. மேல் நிலைக் கல்வி	154	92,400

(5) ஏனைய நலத் திட்டங்கள் மூலம் பயன் பெற்றவர்கள்:

(1-1-95 முதல் 31-3-96 முடிய)

(அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையைத் திருப்பி அளித்தல்	1097	1,37,125
(ஆ) தொழிலாளர் பிள்ளைகளுக்குத் தட்டச்சு சுருக்கெழுத்து படிக்கக் கட்டணங்கள் ஈடு செய்தல்	327	49,355
(இ) பாடநூல் உதவித் தொகை	3427	1,59,155
(ஈ) ஈமச்சடங்கிற்குரிய செலவு	452	1,35,600
(உ) உடல் ஊனமுற்றவர்களுக்கு செயற்கை உறுப்புகள் வழங்குதல்	1	350
(ஊ) காது கேட்கும் கருவிகள் வழங்குதல்	30	32,410
(எ) ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல்	1	2,270

5.9. எதிர்காலத் திட்டங்கள்

தொழிலாளர் ஓய்வு இல்லம் கட்டுவதற்கு இராமேஸ்வரம், உதகமண்டலம் மற்றும் கொடைக்கானல் ஆகிய மூன்று நகரங்கள் தொழிலாளர் நல வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

அத்தியாயம்-6

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

6.1. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973 ஆம் ஆண்டு நிறுவப்பட்டு, அரசுத் துறையாக செயல்பட்டு வந்தது. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி 8-10-87 முதல் சங்கமாகப் பதிவு செய்யப்பட்டு, தன்னாட்சி நிறுவனமாக இயங்கி

1996 ஆகஸ்ட் 20]

வருகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்டு ஆட்சிமன்றக் குழு, இந்நிலையத்தின் நிர்வாகத்தினை கவனித்து வருகிறது. இந்நிலையத்திற்கு இயக்குநராக தொழிலாளர் துறையிலிருந்து இணை ஆணையர் நிலையில் அரசு நியமனம் செய்துள்ளது.

இக்கல்வி நிலையத்தின் நோக்கங்கள் என்னவென்றால்-

(1) தொழிற்சங்கங்களிடையே ஆரோக்கியமான செயல்பாடுகளை உருவாக்குதல்.

(2) நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் இணக்கமான நெருக்கத்தை தோற்றுவித்தல்.

(3) தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் பணியாற்றும் அலுவலர்களின் திறமைகளை வளர்த்தல்.

(4) தொழிலாளர்கள் குறித்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

6.2. இக்கல்வி நிலையம் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் கருத்தரங்குகள், இயல்பாக்கப் பயிற்சிகள், புத்தாக்கப் பயிற்சி ஆகியவற்றைக் கால முறையாக நடத்தி வருகிறது. தொழிலாளர்களுக்கும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும், தொழிலகங்களில் பணியாற்றும் மேற்பார்வையாளர்களுக்கும், நிர்வாகப் பணியாளர்களுக்கும், தொழிலாளர் துறை மற்றும் தொழிற் சாலைகள் துறை அலுவலர்களுக்கும், தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் தொழிலாளர் சட்டங்களும் மற்றும் தொழிற்சாலைகள் சட்டங்களின் கீழ் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, இக்கல்வி நிலையம் தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டயப்படிப்பும், (பி.ஜி.டி.எல்.ஏ) (பகுதி நேர மற்றும் அஞ்சல் வழிக் கல்வி மூலம்) தொழிலாளர் நிர்வாக இளங்கலை பட்டப்படிப்பும் (பிஎல்.எம்) தொழிலாளர் நிர்வாக முதுகலை பட்ட மேற்படிப்பும் (எம்.எல்.எம்) நடத்தி வருகிறது. இக்கல்வி நிலையத்தால் நடத்தப்படும் மேற்படி தொழிலாளர் நிர்வாக இளநிலை பட்டப்படிப்பிற்கும் தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்ட மேற்படிப்பிற்கும் சென்னைப் பல்கலைக்கழகம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேலும் இக்கல்வி நிலையம் 'உழைப்பவர் உலகம்' என்ற மாத இதழையும் வெளியிடுகிறது.

[1996 ஆகஸ்ட் 20

6.3. 1995-96 ஆம் ஆண்டில் பன்னிரண்டு வர்த்தக நிறுவன கருத்தரங்குகளும் ஒன்பது தொழிற் சாலைகளுக்குப் பொருந்தும் தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் மற்றும் அறிக்கை தயாரித்தல் கருத்தரங்கும், சமரச அலுவலருக்கான மறு கவன பயிற்சி கருத்தரங்கு ஒன்றும், உதவி தொழிலாளர் ஆய்வாளர் மற்றும் தொழிலாளர் துறை கண்காணிப்பாளர்களுக்கான புத்தாக்கப்பயிற்சி கருத்தரங்கு ஒன்றும், தொழிலாளர் துறை அமுலாக்க அலுவலர்களுக்கான புத்தாக்கப்பயிற்சி ஒன்றும் நடத்தப்பட்டன; தமிழ்நாடு மின்சார வாரிய பணியாளர் பயிற்சி கல்லூரிக்காக "தொழில் உறவுகள்" என்னும் பயிற்சி நான்கு அணிகளுக்கு நடத்தப்பட்டன. மொத்தம் 1981 நபர்கள் இப்பயிற்சிகளில் பங்கேற்றனர். 1995-96 ஆம் ஆண்டில் தொழிலாளர் நிர்வாகம் பற்றி இரண்டு ஆண்டு முதுநிலை பட்டயப்படிப்பில் (பகுதி நேரம்) (பி.ஜி.டி.எல்.ஏ) 42 மாணவர்களும், இதே பட்டயப்படிப்பில் 1995-96 ஆம் ஆண்டில் அஞ்சல் வழிக்கல்வி மூலம் 93 மாணவர்களும் பயிலுகின்றனர். 1996-97 ஆம் ஆண்டுக்கு 41 தொழிலாளர் நிர்வாகம் பற்றி இரண்டு ஆண்டு முதுநிலை பட்டயப்படிப்பில் (பகுதிநேரம்) (பி.ஜி.டி.எல்.ஏ) 41 மாணவர்களும் இதே பட்டயப்படிப்பில் 1996-97 ஆம் ஆண்டில் 102 மாணவர்களை அஞ்சல் வழிக் கல்வி மூலம் படிக்க சேர்க்கப்பட்டுள்ளனர். தொழிலாளர் நிர்வாக இளநிலை பட்டப்படிப்பு (பி.எல்.எம்) வகுப்பில் 50 மாணவர்களும், தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டமேற் படிப்பில் (எம்.எல்.எம்) 36 மாணவர்களும் 1994-95 ஆம் ஆண்டில் சேர்க்கப்பட்டு தற்போது கல்வி பயின்று வருகின்றனர். 1995-96 ஆம் ஆண்டிலும் தொழிலாளர் நிர்வாக இளநிலை பட்டப்படிப்பு (பி.எல்.எம்) வகுப்பில் 50 மாணவர்களும் தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டமேற்படிப்பில் (எம்.எல்.எம்) 36 மாணவர்களும் சேர்க்கப்பட்டு பயின்று வருகின்றனர். 1996-97 ஆம் ஆண்டில் தொழிலாளர் நிர்வாக இளநிலை பட்டப்படிப்பு (பி.எல்.எம்) வகுப்பில் 50 மாணவர்களும் தொழிலாளர் நிர்வாக முதுநிலை பட்டமேற்படிப்பில் (எம்.எல்.எம்.) 30 மாணவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

6.4. 1995 ஆம் ஆண்டில் சென்னை நகரில் அட்டவணைப் படுத்தப்பட்ட வேலைகளில் அமைப்பு ரீதியான மற்றும் அமைப்பு ரீதியில்லாத தொழிலில் உள்ள தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி சம்பளம் வழங்குதல் என்பது குறித்து இக்கல்வி நிலைய ஆராய்ச்சி அலுவலரால் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

1996 ஆகஸ்ட் 20]

6.5. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் 1996-97ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்:

1. இக்கல்வி நிலையத்தின் கீழ்க்கண்ட பயிற்சி திட்டங்களும் கருத்தரங்குகளும் 1996-97 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ளன.

(1) நீதிமுறை சார்பு பற்றி தொழிலாளர் துறை அலுவலர்களுக்கான பயிற்சிகள் ;

(2) தொழிலாளர் நலச் சட்டங்கள் பற்றி தோட்ட-தொழில் நிறுவனங்கள், பீடி நிறுவனங்கள் மற்றும் கடைகள், சிறு தொழில்கள் ஆகியவற்றில் உள்ளோருக்கு விளக்க முறை கருத்தரங்கு ;

(3) தொழிலாளர் நிறுவனங்களில் பணிபுரியும் செயல் அலுவலர்களுக்கு "மேற்பார்வை செயல் திறமையை வளர்ச்சியடைச் செய்தல்" என்பது பற்றிய பயிற்சிகள்;

(4) கூட்டுறவு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் "தொழிலாளர்கள் நல அலுவலர்களின் பங்கு" என்பது பற்றிய பயிற்சிகள் ;

(5). தொழிலாளர் துறை அலுவலர்களுக்கு சமரச. நடவடிக்கைகள் மற்றும் அமுலாக்க பணி தொடர்பான பயிற்சிகள் ;

(6) தொழிலாளர்களுக்கும் அவர்களது இல்லத்தரசிகளுக்கும் 'தரமிகு வாழ்வு' என்பது பற்றிய பயிற்சி;

(7) 'நல்ல தொழிற்சங்கம் மற்றும் தொழிற்சங்க தலைவர்களை உருவாக்குதல்' என்பது பற்றிய பயிற்சி;

(8) "நிர்வாகம் தொழிலாளர் மனித உறவில் புதிய நோக்குகள்" பற்றி தொழிற்சங்கங்களில் பணிபுரியும் நிர்வாக அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்;

(9) தொழிலாளர் உயர் அதிகாரிகளுக்கு மனிதவள மேம்பாடு பற்றிய பயிற்சிகள்.

2. மேலும் கீழ்க்காணும் புதிய பயிற்சிகளையும் இக்கல்வி நிலையம் நடத்த உள்ளது.

1. பொது மற்றும் தனியார் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு தொழிலாளர் நல சட்டங்கள் குறித்த பயிற்சி.

[1996 ஆகஸ்ட் 20

2. பீடி தயாரிக்கும் நிறுவனங்களுக்கு பொருந்தும் தொழிலாளர் நல சட்டங்கள் குறித்து பீடி நிறுவன பிரதிநிதிகளுக்கு பயிற்சி அளித்தல்.

3. தனியார் மருத்துவமனைகளுக்கு பொருந்தும் தொழிலாளர் நல சட்டங்கள் குறித்து தனியார் மருத்துவமனை பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

4. தீப்பெட்டி தொழில் மற்றும் பட்டாசு தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு "பதிவேடுகள் பராமரித்தல், வருடாந்திர அறிக்கைகள் அனுப்புதல் மற்றும் தொழிலாளர் நல சட்டங்கள்" குறித்து பயிற்சி அளித்தல்.

5. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உள்ள தொழிலாளர் நல அலுவலருக்கான தொழிலாளர்கள் நலச்சட்டங்கள் குறித்த பயிற்சி.

6. கூட்டுறவு நூற்பாலைகளிலுள்ள தொழிலாளர் நல அலுவலர்களுக்கான பயிற்சி.

7. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவன பிரதிநிதிகளுக்கு தொழிலாளர் நலம், உள் விசாரணை நடத்துதல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து பயிற்சி நடத்துதல்.

8. தமிழ்நாடு அரசு ரப்பர் தோட்ட நிறுவன நிருவாகிகளுக்கு "தொழிலாளர் நல சட்டங்கள், உள் விசாரணை நடத்துதல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை செயல் முறைகள்" குறித்து பயிற்சி நடத்துதல்.

9. தமிழ்நாடு தேயிலை தோட்ட நிறுவன நிருவாகிகளுக்கு தொழிலாளர் நல சட்டங்கள் குறித்த பயிற்சி நடத்துதல்.

10. தோட்ட நிறுவனங்கள், கடைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், உணவு நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண் சிப்பந்திகள் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கான பயிற்சி.

11. எடையளவு சட்டம் மற்றும் பொட்டலப் பொருட்கள் விதிகள் குறித்து வணிகர்களுக்கான ஒருநாள் பயிற்சி.

12. புதிதாக நியமனம் செய்யப்பட்ட தொழிற்சாலை ஆய்வாளர்களுக்கான பயிற்சி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 20]

13. மனிதவள மேம்பாடு, தொழில் நல்லுறவு மற்றும் குழந்தை தொழிலாளர்கள் சம்பந்தமான வீடியோ படங்கள் காண்பித்தல்.

14. உப்பளத் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் நிர்வாகப் பிரதிநிதிகளுக்கான பயிற்சி.

15. சிறு தொழில் நிறுவனதாரர்களுக்கு தொழிலாளர் நலச் சட்டங்கள் குறித்த பயிற்சி.

16. புதிதாக தொழில் தொடங்க இருப்பவர்களுக்கு தொழிலாளர் நலச்சட்டங்கள் குறித்த பயிற்சி.

17. தொழிற்சாலை ஆய்வு துறையுடன் சேர்ந்து உற்பத்தி மேம்பாட்டு திட்டம் குறித்த பயிற்சி.

18. கட்டிட தொழிலில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள்/ பிரதிநிதிகளுக்கு தொழிலாளர் நலச் சட்டங்கள் குறித்த பயிற்சி.

19. அரிசி ஆலை உரிமையாளர்கள் / பிரதிநிதிகளுக்கான தொழிலாளர் நலச் சட்டங்கள் குறித்த பயிற்சி.

3. சர்வதேச குழந்தை தொழிலாளர்கள் வேலை ஒழிப்புத் திட்டம் 2-வது கட்டம்.

நொய்டாவிலுள்ள தேசிய தொழிலாளர் நிலையம் சென்னை தமிழ் நாடு தொழிலாளர் கல்வி நிலையம் மூலம் சர்வதேச குழந்தைத் தொழிலாளர் வேலை ஒழிப்புத் திட்டம் - இரண்டாவது கட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர் துறை ஆய்வாளர்களுக்கு, குழந்தைத் தொழிலாளர்கள் சட்டத்தினை நற்பயன் அளிக்கக் கூடிய வகையில் அமல் செய்திட பயிற்சி அளிக்கும் பணியினை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிக்கு தமிழ்நாட்டிலிருந்து 44 தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சாலைகள் துறை ஆய்வாளர்களுக்கும் பாண்டிச்சேரியிலிருந்து 6 ஆய்வாளர்களுக்கும், ஆந்திர பிரதேச மாநிலத்திலிருந்து 25 ஆய்வாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. ஆந்திர பிரதேச மாநிலத்தில் இத்திட்ட செயலாக்கத்திற்கு இக்கல்வி நிலையம் ஒருங்கிணைப்பாளராக செயல்படும்.

அத்தியாயம் 7

தொழிற்சாலைகள் நிர்வாகம்

7.1 தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையின் நிர்வாக அமைப்பும் அதன் பணிகளும்:

தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை, 1948 ஆம் ஆண்டு தொழிற் சாலைகள் சட்டம் மற்றும் 14 முக்கிய தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற தொழிற்சாலைகளில் அமுல்படுத்தப்படுகின்றன. மேற்குறிப்பிட்டுள்ள தொழிலாளர் நலச்சட்டங்களின் அமுலாக்கத்தினால் தொழிற்சாலைகளில் பணியாற்றும் 10 இலட்சத்து நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் உடல் நலம் பாதுகாப்பு ஆகியவை பேணப்படுகின்றன.

தொழிலாளர் சட்டங்களை செயல்படுத்தி நிர்வகிக்க இத்துறையின் முழு பொறுப்பு, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரை சாரும். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளருக்கு உறுதுணையாக ஒரு தொழிற்சாலைகள் கூடுதல் தலைமை ஆய்வாளர், 4 தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள், 29 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள், 49 தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள், 43 தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர்கள், ஒரு அறுவை சிகிச்சை மருத்துவர், 8 உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள், ஒரு நிர்வாக அலுவலர் மற்றும் ஒரு கணக்கு அலுவலர் உள்ளனர்.

13 சட்ட அமுல் நடத்தும் கோட்டங்கள் தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தொடர்புள்ள தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்துகின்றன. மாநிலத்தில் 10 தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் தலைமையில் சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்கள் செயலாற்றுகின்றன. அழுத்த கலன்கள் சோதனை, பாதுகாப்பு வகுப்புகள், பாதுகாப்பு ஆய்வுகள், கருத்தரங்குகள் நடத்துதல் ஆகியவை இக்கோட்டங்களின் பணியாகும்.

7.2. தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய சார்புள்ள சட்டங்களை நிர்வகித்தல்.

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் அதிகப்படியான பதிவுறாத் தொழிற்சாலைகள் பதியப்பட்டுள்ளன. 31-3-96 முடிய பதிவு பெற்ற தொழிற்சாலைகள் மற்றும் அவற்றில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு:-

1996 ஆகஸ்ட் 20]

விவரங்கள்.	1993.	1994.	1995.	1996 (31-3-96 முடிய)
ஆண்டு இறுதியில் பதிவு பெற்ற மொத்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை	20,589	21,964	23,053	23,352
பயனடைந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை	9,72,975	10,09,526	10,38,535	10,46,269

1995 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட உரிமத் தொகை ரூ.3,52,91,963/-

1996 ஆம் ஆண்டில் 1-1-1996 முதல் 31-3-1996 முடிய உள்ள ரூ.57,22,583/- காலத்தில் வசூலிக்கப்பட்ட உரிமத்தொகை.

31-3-1996 முடிய தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட மொத்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை கீழ்க்கண்ட வகைப்படி பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன:--

2 எம் (1)	2 எம் (2)	85(1)	மொத்தம்.
21,678	880	794	23352


சிறுதொழில்சான்று பெற்ற தொழிற்சாலைகள்	சிறுதொழில் சான்று பெறாத தொழிற்சாலைகள்.	மொத்தம்.
12,689	10,663	23,352


தொழிலாளர் நலச் சட்டங்கள் அமுலாக்குவதில் பயன்தரத்தக்க முறைகள் இத்துறையினரால் மேற்கொள்ளப்படுவதால், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு மற்றும் சிறப்பான பணி சூழ்நிலை உறுதிப்படுத்தப்படுகிறது.

மேற்கூறிய சட்டங்களில் குறிப்பாக ஊதிய வழங்குதல் சட்டம் 1936, குறைந்தபட்ச ஊதிய சட்டம் 1948 ஆகியவற்றின் கீழ் தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் தனிச்சலுகைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.


1995 மற்றும் 1996 ஆண்டுகளில் தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:--

[1996 ஆகஸ்ட் 20


தொழிற்சாலைகள்
30,000
20,000
10,000
ஆண்டு 0
18,062
19,052
20,589
21,964
23,053
1991
1992
1993
1994
1995


தொழிலாளர்கள்
15,00,000
10,00,000
5,00,000
ஆண்டு 0
9,01,943
9,28,883
9,72,975
10,09,526
10,38,535
1991
1992
1993
1994
1995

1996 ஆகஸ்ட் 20]



த்மிழ்நாடு தொழிற்சாலை விதிகள் *1950*-க்கு திருத்தங்கள் கொண்டுவந்ததால் *1995* ஆம் ஆண்டில் உரிமத்தொகை சரிந்துள்ளது. ஏனெனில் ஆண்டுக்கு ஒருமுறை உரிமம் பெறும் முறைக்கு பதிலாக தொழிற்சாலை நிறுவனங்கள் *5* ஆண்டுகளுக்கு ஒருமுறை உரிமத்தொகை செலுத்தும்முறை கொண்டுவரப்பட்டதால் சரிந்துள்ளது. இம்முறை *1993* ஆம் ஆண்டிலிருந்து அமுலுக்கு வந்தது.

[*1996* ஆகஸ்ட் *20*

ஆய்வு

தொழிற்சாலைகள் சட்டம், 1948

ஆண்டு (1)	முறை ஆய்வுகள் (2)	சோதனை ஆய்வுகள் (3)	தனி ஆய்வுகள் (4)	திடீர் ஆய்வுகள் (5)	விடுமுறை ஆய்வுகள் (6)	இரவுநேர ஆய்வுகள் (7)
1995	*15,863*	*1,120*	*4,449*	*229*	*775*	*477*
1-1-96 முதல் *31-3-96* வரை	*4,794*	*252*				

1995 ஆண்டிலும் மற்றும் *1-1-96* முதல் *31-3-96* முடிய உள்ள காலாண்டில் ஏனைய முக்கிய சட்டங்களின் கீழ்செய்யப்பட்ட ஆய்வு விவரங்கள் பின்வருமாறு:-

சட்டங்கள்	ஆய்வுகளின் எண்ணிக்கை 1995	1-1-96 முதல் 31-3-96 முடிய
1. ஊதிய வழங்கும் சட்டம் *1936*	*13,647*	*4,589*
2. குறைந்தபட்ச ஊதிய சட்டம் *1948*	*11,669*	*2,921*
3. சம ஊதிய சட்டம் *1976*	*8,045*	*3,120*
4. தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல் சட்டம்	*10,208*	*1,849*

7.3 வழக்குகள்

பொதுவாக ஒரு தொழிற்சாலைகள் ஆய்வர் தொழிற்சட்டங்கள் அமுலாக்குவதில் உள்ள குறைபாடுகளை இரண்டு, மூன்று முறை ஆய்வின் போது சுட்டிக்காட்டியும், களையப்படாவிட்டால், காரணம் காட்டும் அறிக்கை அனுப்புகிறார். நிர்வாகத்தினருக்கு காரணம் காட்டும் அறிக்கைக்கு பதில் அனுப்ப ஏழு நாட்கள் அவகாசம் அளிக்கப்படுகிறது. நிர்வாகத்தினர் குறைகளை களைய சிறிது கால அவகாசம் கேட்டால், கால அவகாசம் அளிக்கப்படுகிறது. நிர்வாகத்தினர் பெரும்பாலான ஆணைகளை நிறைவேற்றிவிட்டால் சட்டப் பூர்வ தொடர் நடவடிக்கைகள் எடுப்பதில்லை.

1996 ஆகஸ்ட் 20]

தவிர்க்க முடியாத குறைபாடுகளான முதல் உரிமம் எடுக்காமை / உரிமம் புதுப்பிக்காமை, வரைபடம் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்காமை, வருகைப் பதிவேடு பேணப்படாமை, நிர்ணயித்த குறைந்த பட்ச ஊதிய விகிதம் வழங்கப்படாமை, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விதிகள் அனுசரிக்காமை ஆகிய குற்றங்களுக்கு நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. சில அறிவிக்கைகளை நிறுவனங்களில் அனைவரும் பார்க்குமிடத்தில் வைக்காமல் இருந்ததற்கும் ஒருசில பதிவேடுகளை நிர்வகிக்காமல் இருந்ததற்கும் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்படுவதில்லை.

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள் விவரம் பின்வருமாறு:-

1995 ஆம் ஆண்டில், தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ், 3,006 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. மேலும் இதர சட்டங்களின்கீழ் 545 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. ரூ.19,09,900/-அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளன. மேலும் 1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலத்தில் தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் 208 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. ரூ.6,19,950/- அபராத தொகை வசூலிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள்

1995 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் (1-1-1995)	நடப்பு ஆண்டில் தொடரப் பட்டவை	நடப்பு ஆண்டில் முடிவுற்றவை	1995 ஆம் ஆண்டு இறுதியில் நிலுவை யில் உள்ள வழக்குகள் (3-12-1995)
3,532	**3,006**	**2,682**	**3,856**
1-1-96ல் நிலுவையில் உள்ள வழக்குகள்	*1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலத்தில் தொடரப்பட்ட வழக்குகள்*	*1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலத்தில் முடிவுற்ற வழக்குகள்*	*31-3-96ல் நிலுவையில் உள்ள வழக்குகள்*
3,856	*208*	*283*	*3,781*

[1996 ஆகஸ்ட் 20

தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர சட்ட்ங்களின் கீழ் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1.	1-1-96ல் நிலுவையிலுள்ள வழக்குகள்	4,771
2.	1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலத்தில் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	260
3.	1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலத்தில் குற்றம் என்று தீர்ப்பளிக்கப்பட்டவை	322
4.	வேறுவகையில் முடிவடைந்த வழக்குகள் எண்ணிக்கை	25
5.	31-3-96ல் நிலுவையிலுள்ள வழக்குகள்	4,684
6.	அபராதத் தொகை	ரூ.6,29,740/-

7.4 குறைந்தபட்ச ஊதியச் சட்டம்

1948ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதியச் சட்ட விதிகள், மிக நல்ல முறையில் அமுலாக்கப்பட்டு செயல்பட்டு வருவதால், தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதங்களின்படி ஊதியம் வழங்கப்படுகிறது. குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தின்கீழ் முரண்பாடுகள் காணப்படின் உடனுக்குடன் இத்துறை ஆய்வாளர்களால் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் கோரிக்கை மனுக்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்கீழ் வழக்குகள்:

1995ஆம் ஆண்டில் ஆரம்ப நிலுவை (1-1-1995)	நடப்பு ஆண்டில் தொடரப் பட்டவை.	நடப்பு ஆண்டில் முடிவுற்றவை	ஆண்டு இறுதியில் நிலுவை (31-12-11995)
330	192	178	344
1-1-96ல் ஆரம்ப நிலுவை	1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலத்தில் தொடரப்பட்டவை	1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலத்தில் முடிவுற்றவை	31-3-96ல் நிலுவை
344	18	23	339

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

கோரிக்கை மனுக்கள்

		1995	1-1-96 முதல் 31-3-96 முடிய
1.	நடப்பு ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட கோரிக்கை மனுக்கள்	53	1
2.	சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள்	49	1
3.	சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள்	1569	91
4.	கோரிக்கை மனுமூலம் கோரிய தொகை	ரூ.22,89,389/-	ரூ.80,317/-
5.	பயனடைந்த தொழிலாளர்கள்	443	735 (முந்தைய நிலுவை)
6.	தீர்வு செய்யப்பட்ட கோரிக்கை மனுக்கள்	12	26 (முந்தைய நிலுவை)
7.	பட்டுவாடா செய்யப்பட்ட தொகை	ரூ.2,63,793/–	ரூ.1,43,118/–

7.5 தொழிற்சாலைகளின் குறைகள் மற்றும் புகார்கள்

தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களால் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதமொரு முறையும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் அவர்களால் காலாண்டிற்கு ஒரு முறையும், தொழிற்சங்க பிரதிநிதிகளைக் கூட்டி தொழிலாளர்களின் குறைகளை அறிந்து அவை உடனுக்குடன் ஆய்வாளர்களால் கவனிக்கப்படுகின்றன. தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் புகார்கள், உடனடியாக விசாரிக்கப்பட்டு 15 தினங்களுக்குள் பதிலளிக்கப்படுகின்றன.

நடப்பு (1995)ஆம் ஆண்டில் பெறப்பட்ட புகார்கள்	492
1995 ஆம் ஆண்டில் விசாரித்து பதிலளிக்கப்பட்ட புகார்கள்	457
1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலாண்டில் பெறப்பட்ட புகார்கள்	136
1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலாண்டில் விசாரித்து பதிலளிக்கப்பட்டவை	135

[1996 ஆகஸ்ட் 20

வரைபடங்கள்

வரைபடங்கள் ஒப்புதலளிப்பதை துரிதப்படுத்த வரைபடங்கள் ஒப்புதலளிக்கும் அதிகாரம் சார்நிலை அலுவலர்களுக்கு கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

1.	அபாயகரமான உற்பத்திமுறைகள் உள்ள தொழிற்சாலைகளை தவிர்த்து 200க்கு குறைவாக தொழிலாளர்கள் பணிபுரியும் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள்.	தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்
2.	அபாயகரமான உற்பத்திமுறைகள் உள்ள தொழிற்சாலைகளை தவிர்த்து 200க்கு மேற்பட்ட 1000 தொழிலாளர்களுக்கு உட்பட்டு பணிபுரியும் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள்.	தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்
3.	அபாயகரமான உற்பத்திமுறை உள்ள தொழிற்சாலைகள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள்.	தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர்

1-1-95 முதல் 31-3-96 முடிய ஒப்புதல் செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் வரைபடங்கள் விவரங்கள் பின்வருமாறு:-

வரைபடங்கள் ஒப்புதல் அளித்த அலுவலர்	ஒப்புதல் செய்யப்பட்ட வரைபடங்கள் 1995	1-1-96 முதல் 31-3-96 வரை
தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர்	1,088	256
தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள்	201	53
தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள்	2,400	543
மொத்தம்	**3,689**	**852**

1996 ஆகஸ்ட் 20]

7.6 சிறு தொழில்களின் வளர்ச்சி குறித்து 1948-ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டத்தில் எளிதாக்கும் முறை:

1-4-96 தேதியில் உள்ளவாறு 1948-ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டத்தின்படி 23,352 தொழிற்சாலைகள் உள்ளன. அவற்றில் 12,689 தொழிற்சாலைகள் சிறு தொழில் பிரிவாகும்.

சாதாரணமாக தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும். மாநிலத்தில் சிறு தொழிற் நிறுவனங்களில் தொழில் வளர்ச்சி கருதி ஆய்வு பணி கால அளவு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட ஆய்வு பணி கால அளவு கீழ்க்கண்டவாறு கடைபிடிக்க சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	தொழிற்சாலைகளின் வகைப்பாடு	தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வேண்டிய காலமுறை
1.	சிறுதொழில் நிறுவனங்கள் கேடு விளைவிக்கக்கூடிய மற்றும் அபாயகாரமான தொழிலில் ஈடுபடாதவை (சிறுதொழில் நிறுவன சான்று பெற்ற தொழிற்சாலைகள்)	இச்சிறு தொழில் நிறுவனங்களை தொழிலாளர்கள் அல்லது தொழிற்சங்கங்களிடமிருந்து புகார் பெறப்பட்டால் மட்டும் ஆய்வு செய்ய வேண்டும். அவ்வாறு புகார்கள் பெறப்படாத நிலையில் ஐந்தாண்டுக்கு ஒருமுறை ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.

2 (1)	1950-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதி அட்ட வணை 1 முதல் 32 முடிய உள்ள அட்டவைண (அட்டவணை 24 தவிர) படி கேடு விளைவிக்கக்கூடிய மற்றும் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் நிறுவனங்கள்	இத்தொழிற்சாலைகளை ஆறுமாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும்.
(2)	சிறுதொழில் நிறுவனங்கள் வகைப்படுத்தாத இதர தொழிற்சாலைகள் மட்டும் இதில் அடங்கும்.	இத்தொழிற்சாலைகளை ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஆய்வு செய்ய வேண்டும்.
(3)	அட்டவணை 24-ற்கு உட்பட்ட தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகள் அவைகள் சிறுதொழில் நிறுவனமாக வகைப்படுத்தப்பட்டாலும்.	இத்தொழிற்சாலைகளை மூன்று மாதத்திற்கு ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும்.

முந்தைய ஆண்டுகளிலும் நடப்பு காலத்திலும் (1-1-96 முதல் 31-3-96 முடிய) மேற்கொள்ளப்பட்ட ஆய்வு விவரங்கள் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

	1993	1994	1995	1-1-96 முதல் 31-3-96 முடிய
1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட முறை ஆய்வுகள்	28,541	23,837	15,863	4,794

1988-ஆம் ஆண்டு தொழிலாளர் சட்டங்கள் (சில நிறுவனங்களை அறிக்கைகள் அளித்தல் மற்றும் பதிவேடுகள் பராமரித்தலில் இருந்து விதிவிலக்கு அளித்தல்) சட்டம் குறைந்த தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்களுக்கு பதிவேடுகள் பராமரிப்பதிலும், அறிக்கைகள் அளிப்பதிலும் விதிவிலக்கு அளிக்க வகை செய்து

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

இம்மாநிலத்தில் நடைமுறைபடுத்தப்படுகிறது. 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு 19 தொழிலாளர்களுக்கு உள்ளிட்ட தொழிற்சாலைகளுக்கு இச்சட்டம் பொருந்தும்.

7.7 சட்டதிருத்தங்கள்

தற்போது 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் உரிமத் தொகையினை காசோலை மூலமாக செலுத்தி வருகின்றன. இந்நடைமுறையினை எளிதாக்கும் பொருட்டு உரிமக் கட்டணத்தை கேட்பு வரைவு ஓலை மூலமாக செலுத்த 1950-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் உரிமையாளர்கள் ஒவ்வொரு ஆண்டும் உரிமத்தினை புதுப்பித்தலுக்குப் பதிலாக அவர்கள் விருப்பம் போல் முதல் உரிமத்தினையோ அல்லது புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமத்தினையோ ஓராண்டுக்கோ அல்லது ஐந்தாண்டுக்கோ உரிமம் பெற்றுக்கொள்ள 1950-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இம்முறை 1993-ஆம் வருடத்திலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதிக வேலை பளு காரணமாக மிகை நேர வேலை பார்க்க ஆண் தொழிலாளர்களுக்கு விதிவிலக்கு ஓராண்டுக்கு அளிக்கப்பட்டு வந்தது. தற்போது தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளுக்கு அளிக்கப்படுகிறது. சார்நிலை அலுவலர்களுக்கு இதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டு கடைபிடிக்கப்படுகின்றன.

பெண் தொழிலாளர்களுக்கு இரவு 7-00 மணிக்கு மேல் 10-00 மணி வரை பணியாற்ற தொழிற்சாலை சட்டம் பிரிவு 66-ஐ தளர்த்தி இரண்டு ஆண்டுக்கு அரசால் கீழக்கண்ட நிபந்தனைகளுடன் விதிவிலக்கு வழங்கப்படுகிறது.

1. பெண் தொழிலாளர்களிடமிருந்து இரவு 7-00 மணிக்குமேல் பணிபுரிய சம்மதக் கடிதம் பெறப்பட வேண்டும்.

2. பெண் தொழிலாளர்களை இரவு 7-00 மணிக்கு மேல் பணியில் ஈடுபடுத்துவதன் நிமித்தம் தினம் ஒன்றுக்கு 9-00 மணி நேரம் வேலைக்கு மிகாமலும், வாரம் ஒன்றுக்கு 48 மணி நேரத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

3. நிர்வாகத்தினர் அவர்களுடைய சொந்த செலவில் பெண் தொழிலாளர்கள் பணிபுரிந்து வீடு திரும்ப வாகன வசதி செய்துதர வேண்டும்.

[1996 ஆகஸ்ட் 20

4. பெண் தொழிலாளர்களின் பாதுகாப்புக்கு நிர்வாகம் பொறுப்பேற்க வேண்டும்.

5. மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் ஒன்று கடைபிடிக்கப்படாவிட்டாலும் விதிவிலக்கு ஆணை ரத்தானதாகக் கருதப்படும்.

மேற்கண்ட விதிவிலக்கினை ஓராண்டுக்கு பதிலாக ஈராண்டுகளுக்கு தொடர்ச்சியாக அரசு அளித்து வருகிறது.

9 (ஒன்பது) தொழிலாளர்களுக்குக் குறைவாக பணிபுரியும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் தற்போது தொழிற்சாலை சட்டத்தின்கீழ் புதிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசாணை 1248, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 13-6-88ல் அறிவிக்கப்பட்டபடி 1948ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டப் பிரிவின் 85(1)-கீழ் 9 தொழிலாளர்களுக்கு குறைவாக பணிபுரியும் தீப்பெட்டி தொழிற்சாலைகள் தற்போது பதியப்பட்டு வருகின்றன. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் ஈடுபடுவதை அகற்றுவது என்பது தற்போதைய அரசின் கொள்கைகளில் ஒன்றாகும். இக்குறிக்கோள்களை அடைய தீவிரமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

7.8 சிறுதொழில் நிறுவனங்களுக்கான குழு:

இந்திய அரசின் ஆலோசனைப்படி சிறுதொழில் நிறுவனங்களின் தொழிலாளர் சட்டங்கள் நடைமுறைப்படுத்துவதை குறித்து தமிழ்நாடு அரசு மாநில அளவில் ஒரு குழு அமைத்துள்ளது. இக்குழு தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை செயலாளரின் தலைமையில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் அவர்களை உறுப்பினர் செயலாளராகக் கொண்டு இயங்குகிறது. இந்தக் குழுவின் கூட்டம் 18-11-94 அன்று நடைபெற்றது. இக்குழுவின் உறுப்பினர்கள் தொழிற்சாலை ஆய்வகத்துறையின் பணியினைக் குறித்து தங்களது திருப்தியினை வெளியிட்டனர்.

தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளை பொருத்து சிறு தொழில் நிறுவனங்களின்கீழ் அடங்கினாலும்கூட இத்தொழில் தொழிற்சாலைகளை முறையற்ற விதத்தில் குழந்தைத்

1996 ஆகஸ்ட் 20]

தொழிலாளர்களை ஈடுபடுத்துவதாலும், கேடு விளைவிக்கக்கூடிய உற்பத்தி முறை மேற்கொள்ளப்படுவதாலும் 3 மாதங்களுக்கு ஒருமுறை இவற்றினை ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

7.9 தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்கள் நிரந்தரப் படுத்துதல்) சட்டம், 1981:

இச்சட்டம் தொழிலாளர்கள் 24 மாதங்களில் தொடர்ச்சியாக 480 நாட்கள் தொழிற்சாலையில் பணிபுரிந்திருப்பின் அவர்களை நிரந்தரம் செய்யக்கோரும் தகுதியை அளிக்கிறது.

இந்தச் சட்டத்தின் கீழ் ஆய்வு செய்யப்பட்டு, நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள்		நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை	
1994 வருடம்	1995 வருடம்	1994 வருடம்	1995 வருடம்
1752	1569	18262	15456

7.10 மனை மதிப்பீட்டுக் குழு:

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் பிரிவு 41-ஏ-ன்படி ஒரு மனை மதிப்பீட்டுக் குழு அரசாணை எண் 132, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 8-6-1992 மூலமாக அமைக்கப்பட்டுள்ளது. கேடு விளைவிக்கக்கூடிய உற்பத்தித் துறையில் ஈடுப்பட்டுள்ள தொழிற்சாலைக்கு ஆரம்ப உரிமம் வழங்குதல் மற்றும் அத்தகைய தொழிற்சாலைகளின் விரிவாக்கம் சம்பந்தமாக உரிமம் வழங்கவும் ஆலோசனைகள் வழங்கவும் இம்மனை மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை தலைமை ஆய்வர் இக்குழுவின் தலைவர் ஆவார். கேடு விளைவிக்கக்கூடிய உற்பத்தி முறையில் ஈடுபட்டுள்ள மற்றும் இத்தகைய தொழிற்சாலைகள் விரிவுபடுத்த அரசின் ஒப்புதல் பெறவேண்டும். இக்குழு தொழிற்சாலைகள் வரைபடங்களை ஆராய்ந்து தொழிற்சாலையின் மனை பொருத்தம் சுற்று வட்ட சூழ்நிலை ஆகியவைகள் குறித்த ஒப்புதல் வழங்க அரசுக்கு ஆலோசனை வழங்கும்.

இந்த மனை மதிப்பீட்டுக் குழுவில் 33 வரைபடங்கள் பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசு 2323 வரைபடங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதர வரைபடங்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

7.11 தேசிய குழந்தை தொழிலாளர் வேலைத் திடடம்:

இந்த திட்டம் 1986 ஏப்ரல் திங்களில் மைய அரசினால் சிவகாசியில் ஆரம்பிக்கப்பட்டது. 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களை தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரிவதைத் தடுத்து நீக்குதலும், அவர்களது குடும்ப வருமானத்தைப் பெருக்குதலும், கல்வி மற்றும் சுகாதார அடிப்படை வசதிகளை அளிப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். 1975 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட தேசிய குழந்தை தொழிலாளர் சங்கத்தினால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

காமராசர் மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் இந்தச் சங்கத்தின் தலைவர் ஆவார். மாவட்ட வருவாய் அலுவல் நிலையில் ஒரு திட்ட இயக்குநர் சங்கத்தின் உறுப்பினர் செயலராகப் பணியாற்றுகிறார். இத்திட்டத்தின் கீழ் அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்படுவதற்கு ஒரு ஒழுங்கு முறைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

7.12 குழந்தை தொழிலாளர்கள் நீக்குதல்:

தமிழக அரசு தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர்களை நீக்குவதற்கு முன்னுரிமை அளிக்கிறது. தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை தலைவராகக் கொண்ட மாநில ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முதல் கூட்டம் 7-12-94 அன்று நடைபெற்றது. துணைக் குழுவில் பரிந்துரையின்படி ஐந்தாண்டுகளுக்குள் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர்களை நீக்குவதற்கான திட்ட வடிவமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் முதல் கட்ட நடவடிக்கையாக 1010 குழந்தைத் தொழிலாளர்கள் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் இருந்து நீக்கப்பட்டு பள்ளிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். குழந்தைத் தொழிலாளர்களை நீக்குவதில் மைய அரசின் உதவியினை பயன்படுத்திக் கொள்வதற்கான திட்ட செயல்முறைகள் வரையப்பட்டுள்ளன.

1996 ஆகஸ்ட் 20]

குழந்தை தொழிலாளர்கள் நீக்குதல் திட்டத்திற்கென 1994–95ம் ஆண்டிற்கு இந்திய அரசு ஒப்பளிப்பு செய்துள்ள தொகை ரூ. 19,76,000/- தமிழக அரசு தன்னுடைய அரசாணை எண் 116, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 21-6-95ன்படி மேற்படி ஒப்பளிப்பு செய்துள்ள தொகையினை பயன்படுத்தி குழந்தை தொழிலாளர்களைக் கண்டறிந்து அக்குழந்தைத் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை வழங்க கீழ்க்குறிப்பிட்டுள்ள 7 மாவட்டங்களுக்கு தகுதி வழங்கியுள்ளது.

மாவட்டம் (1)	வழங்கப்பட்ட தொகை (2)	குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை (3)
	ரூ.	
1. காமராஜர் மாவட்டம்	3,04,000	32,000
2. வ.உ. சிதரம்பரனார் மாவட்டம்	1,90,000	20,000
3. திருச்சிராப்பள்ளி மாவட்டம்	41,000	4,334
4. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்	8,63,400	90,890
5. கோயம்புத்தூர் மாவட்டம்	95,000	10,000
6. வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம்	4,27,500	45,000
7. புதுக்கோட்டை மாவட்டம்	55,000	5,800
மொத்தம்	**ரூ. 19,76,000**	**2,08,024**

மேலும் மாவட்ட ஆட்சியர்களை மேற்குறிப்பிட்டுள்ள தொகையை பயன்படுத்தியதற்கான சான்றினை வழங்கக் கோரியுள்ளதோடு இந்திய அரசு வகுத்தமைத்துள்ளபடி காலாண்டு அறிக்கையினை அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, சென்னை அவர்களின் மூலமாக இந்திய அரசுக்கு அனுப்பிவைக்க மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[1996 ஆகஸ்ட் 20

7.13 பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் பயிற்சி அளித்தல்.

தொழிலாளர் உடல் நலனை பாதுகாக்கவும், அபாயகரமான தொழில் விளைவுகளினால் உடல்நலம் பாதிக்கப்படும் நிலைமை இருப்பின் அதனின்று பாதுகாத்துக்கொள்ளவும் உரிய பாதுகாப்பு நடைமுறைகளை சேர்த்தும் தொழிற்சாலைகள் சட்டத்திற்கு 1987ம் ஆண்டு இந்திய அரசு ஒரு சட்டத்திருத்தம் கொண்டு வந்தது. தொழில் பாதுகாப்பு என்ற குறிக்கோளை விரிவுபடுத்தி தொழிற்சாலைக்குள் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பினை மட்டும் அல்லாமல் இத்தொழிற்சாலைகளின் சுற்றுப்புறத்தில் குடியிருக்கும் பொது மக்களின் நலனையும் பாதுகாப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதும் திருத்தச் சட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான பணிச் சூழ்நிலையை உறுதி செய்யும் பொருட்டு தொழிற்சாலையின் வரைபடங்கள், கட்டிட உறுதித் தன்மை, காற்றோட்டம், வெளிச்சம், தட்பவெப்பம், பணிச்சூழ்நிலை குறிப்பாக செயல்முறைகள் அபாயப்பணி இயந்திரங்கள் நிறுவுதல் மற்றும் பொருட்களை கையாளுதல் ஆகிய கோணங்களில் தொழிற்சாலை ஆய்வகத்தால் ஏற்பளிக்கப்பட வேண்டும்.

நம் மாநிலத்தில் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற் சாலைகள் இயங்கும் 6 பகுதிகளை அடையாளம் கண்டுள்ளோம். அவையாவன: மணலி, நெய்வேலி, கடலூர், ராணிப்பேட்டை, மேட்டூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களாகும். இந்த இடங்களை பொறுத்தவரை அபாயகரமான உற்பத்தி முறை கையாளும் தொழிற்சாலைக்கு தொழிற்சாலைகளுக்குள் விபத்து ஏற்படாமல் தடுக்கும் முறைகளும், அவ்வாறு விபத்து ஏற்பட்டால் அதனை சமாளித்துக் கட்டுப்படுத்தும் திட்டங்களும், தொழிற்சாலையை சுற்றியுள்ள பகுதியில் எந்தவிதமான பாதிப்பு ஏற்படும்பொழுது மக்களை பாதிப்புக்கு உள்ளாகாமல் பாதுகாப்பாக வெளியேற்ற திட்டம், பாதுகாப்பு நடைமுறைகள் ஆகியவை தீட்டப்பட வேண்டும். சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டம் மற்றும் பெரும் விபத்து தடுப்பு பிரிவும் இணைந்து இத்திட்டங்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுத்துவருகின்றன.

1996 ஆகஸ்ட் 20]

அபாயகரமான இரசாயனப் பொருட்களை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் தொழிற்சாலைகளாக 53 தொழிற்சாலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 50 தொழிற்சாலைகளுக்கு அவசர நிலை ஆயத்த திட்டம் (On Site Emergency Plan) இவ்வலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏனையவை பரிசீலனையில் உள்ளன.

ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் அபாயகரமான உற்பத்தி முறைகளை கையாளும் தொழிற்சாலைகள் பொறுத்தவரை மாவட்ட அளவில் அவசர கால நிலைமையை சமாளிக்க ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கும் பணியில் அந்தந்த தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள் இணைந்து செயல்படுகின்றனர்.

7.14 சோதனை மற்றும் பாதுகாப்புக் கோட்டம்:

அபாயகரமான இராசயனப் பொருட்களை மூலப் பொருளாகக் கொண்டு செயல்படும் 53 தொழிற்சாலைகள் இம்மாநிலத்தைப் பொறுத்தவரை அடையாளம் காணப்பட்டுள்ளது. சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்ட ஆய்வாளர்கள், தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் நிர்வாக அலுவலர்களுக்கு தொழிற்சாலையில் பல்வேறு திட்டத்தில் கையாள வேண்டிய பாதுகாப்பு முறைகளை கற்பிக்க பயிற்சி வகுப்புகள் நடத்தி வருகின்றார்கள். 1995ம் ஆண்டிற்கான பாதுகாப்பு அளவீடு மற்றும் பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் குறித்த விபரங்கள் பின்வருமாறு அளிக்கப்படுகிறது:--

பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள்			
1995ம் ஆண்டில் நடத்தப்பட்ட பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள்	பாதுகாப்பு பயற்சி வகுப்புகள் நடத்தப்பட்ட தொழிற்சாலை களின் எண்ணிக்கை	பாதுகாப்பு பயிற்சி வகுப்புகளின் மூலமாக பயனடைந்த தொழிலாளர் களின் எண்ணிக்கை	அதிக விபத்துக்கள் அறிவித்த தொழிற்சாலைகளில் நடத்தப்பட்ட பாதுகாப்பு பயிற்சிகளின் எண்ணிக்கை
218	191	5837	24

பாதுகாப்பு அளவீடுகள் தொழிற்சாலைகளில் நடத்தப்பெற்று அதன் முடிவுகள் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுப்பப்பட்டுள்ளன. 1-1-1996 முதல் 31-3-1996 முடிய உள்ள காலத்தில் தொழில் சார்ந்த சுகாதார அளவீடுகள் 27 மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை, சுகாதார அளவீடு நடத்துதல் மற்றும் சான்று வழங்குதல் குறித்த பணிகள் சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டத்துடன் இணைந்து உதவி மருத்துவ அலுவலர் மேற்கொள்கிறார்.

7.15 விபத்துக்கள்:

விபத்துக்களின் எண்ணிக்கை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:


ஆண்டு	மரண விபத்து	மரணம் இல்லாத விபத்து
1991	*106*	*9,341*
1992	*99*	*10,099*
1993	*73*	*11,334*
1994	*43*	*9,067*
1995	*37*	*6,879*
1996		
(1-1-1996 முதல் 31-3-1996 முடிய)	*28*	*1,174*


7.16 மாநில பாதுகாப்பு பரிசுகள்:

தொழிற்சாலையில் சிறந்த பாதுகாப்பு செயல்களை தெரிந்து கொள்ளவும் தொழில் பாதுகாப்பில் ஆழ்ந்த பற்றுக்கொண்டு இயங்கச் செய்யவும் நிர்வாகத்தினருக்கு தமிழக அரசு மாநில பாதுகாப்பு பரிசுகள் வழங்குகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]





TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 20

தொகுதி-அ : 10 இலட்சம் மனித நேரத்திற்கு குறைவில்லாமல் வேலை செய்த தொழிற்சாலைகள்.

தொகுதி-ஆ : 5 முதல் 10 இலட்சம் மனித நேரத்திற்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.

தொகுதி-இ : 2 முதல் 5 இலட்சம் மனித நேரங்களுக்கு இடையில் வேலை செய்த தொழிற்சாலைகள்.

கீழ்க்கண்ட மூன்று திட்டங்கள் செயலில் உள்ளன.

திடடம்-1 : முந்தைய ஆண்டை ஒப்பு நோக்குகையில் விபத்து விகிதத்தை மிக அதிகமாக குறைத்து காண்பிக்கும் தொழிற்சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.

திட்டம்-2 : இதே வகைப்பட்ட மற்ற தொழற்சாலைகளுடன் ஒப்பிடும்போது குறைவான அதிர்வு எண் விகிதத்தை அந்த ஆண்டில் மிகக் குறைத்துக் காண்பிக்கும் தொழிற்சாலைக்கு இந்த பரிசினை வழங்குதல்.

திட்டம்-3 : பரிசுக்குரிய ஆண்டில் விபத்தின்றி அதிக மனித நேரம் செயல்புரிந்த தொழிற்சாலைக்கு வழங்குதல்.

பாதுகாப்பு கேடயம் வழங்குதல் மற்றும் சான்றிதழ்கள் வழங்க அரசால் அமைக்கப்பட்ட குழுவின் மூலமாக வெற்றி பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

90 முதல் பரிசு கேடயங்கள் ஒவ்வொன்றும் ரூ. 2,500/- மதிப்புடையது.

90 இரண்டாவது பரிசு கேடயங்கள் ஒவ்வொன்றும் ரூ. 1500/- மதிப்புடையது.

1996 ஆகஸ்ட் 20]

6-7-96 அன்று கோயம்புத்தூரில் 1994ம் ஆண்டிற்கான மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கும் விழா நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டது.

பரிசுகள்

	முதல்	இரண்டாம்	மூன்றாம்
1994	83	73	59

7.17 மாநில தொழிலாளர் நல் ஆலோசனை விருதுகள்:

தொழில் வளர்ச்சியின் பாதுகாப்புத்தரம், தூய்மையான சுற்றுப்புறச் சூழ்நிலை, உற்பத்தி அதிகரிப்பு குறித்து உபயோகமான ஆலோசனைகள் வழங்கும் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் நல் ஆலோசனை விருது வழங்கப்படுகிறது.

தொழிலாளர்களின் ஆலோசனைகள் கீழ்க்குறிப்பிட்டுள்ள தகுதிகளின் அடிப்படையில் தொழிலாளர் நல் ஆலோசனை விருதுகள் வழங்கப்படுகிறது.

1. பாதுகாப்பு தரத்தின் முன்னேற்றம், பணிச் சூழ்நிலையில் சுற்றுப்புறத் தூய்மையின்மை காரணமாக ஏற்படும் பாதுகாப்பு குறைகள், உடல் நலம் மற்றும் தொழில் முறை நோய்களில் இருந்து பாதுகாப்பளித்தல்.

2. உடல் உழைப்பினை எளிதாக்குதல் மற்றும் கடின வேலையை எளிமைப்படுத்துதல்.

3. தொழிற்சாலைகளில் தளவாட பொருட்கள் கையாளுதல் மற்றும் அவற்றினை முறைப்படி சிப்பம் கட்டுவதில் முன்னேற்றம்.

4. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு ஈடாக உள்நாட்டுப் பொருட்களை உபயோகிப்பதற்கான வழிவகைகளில் முன்னேற்றம்.

5. கண்டுபிடிப்பு மற்றும் முன்னேற்றத்தின் மூலமாக எரிபொருள் மின்சாரம் ஆகியவற்றை சேமிப்பது மற்றும் இயந்திரங்களை செயல்படுத்துவதில் முன்னேற்றம்.

6. கழிவு மற்றும் வீணாக்கப்படும் பொருட்களைக் குறைத்தல் மற்றும் தவிர்க்க இயலாவிடில் அவைகளை நல்ல முறையில் பயன்படுத்தல், ஆகியவற்றில் முன்னேற்றம்.

7. உற்பத்தித்திறனை இதர வழிகளில் அதிகரிப்பதில் முன்னேற்றம்.

8. நிர்வாகத்தின் திறமையினை உயர்த்துவதில் முன்னேற்றம்.

வழங்கப்படும் மூன்று வகையான விருதுகளின் விவரங்கள்

இனம் - அ : ரூ. 5,000/-க்கான பணப்பரிசுடன் 3 பரிசுகள் கொடுக்கப்படுகிறது.

இனம் - ஆ : ரூ. 3,000/-க்கான பணப்பரிசுடன் 6 பரிசுகள் கொடுக்கப்படுகிறது.

இனம் - இ : ரூ. 1,000/-க்கான பணப்பரிசுடன் 15 பரிசுகள் கொடுக்கப்படுகிறது.

6-7-96 அன்று கோவையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் 1994ம் ஆண்டிற்கான பரிசுகளை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கினார்.

மாநில தொழிலாளர் நல் ஆலோசனை விருதுகளுக்கான பரிசுத் தொகை 1991ம் ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

மாநில தொழிலாளர் நல் ஆலோசனை பரிசுகள்-1994:

		பரிசுகள்	
வருடம்	முதல் (ரூ. 5,000/- மதிப்புடையது)	இரண்டாம் (ரூ. 3,000/- மதிப்புடையது.	மூன்றாம் (ரூ. 1,000/- மதிப்புடையது.
1994	3	6 பரிசுகள் 14 நபர்களுக்கு வழங்கப்பட்டன	15 பரிசுகள் 18 நபர்களுக்கு வழங்கப் பட்டன.

1996 ஆகஸ்ட் 20]

7.18 அழுத்த கலன்கள் சோதனை:

தமிழ்நாட்டில் 21,874 அழுத்தக்கலன்கள் உள்ளன. தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு அழுத்தக்கலன்களையும் தகுதியுள்ள நபர்களால் காலமுறையில் முழுமையாக ஆராய்ந்து அதன் பாதுகாப்பான வேலைத் தன்மைக்கு தகுதிச் சான்று வழங்க வேண்டுமென்று 1948ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் 1950ம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலைகள் ஆய்வுத் துறையே இப்பணியை செய்து வருகிறது. அழுத்தக்கலன்களை சோதனை செய்யும் பணி, சோதனை மற்றும் பாதுகாப்பு கோட்டங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1995ம் அண்டு மற்றும் 1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலத்திலும் சோதனை செய்யப்பட்ட கலன்களின் விவரம் கீழே வருமாறு:

	1995	1-1-96 – 31-3-96
வெளிப்புறத் சோதனை	36,853	8,888
உட்புறச் சோதனை	1,114	79
நீரழுத்தச் சோதனை	6,257	1,260
கதழ் அதிர் ஆய்வு சோதனை	1,630	265

1995ம் ஆண்டில் இந்த நோக்கத்திற்காக வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகை ரூ. 84.41,392/– ஆகும். 1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலாண்டில் மேற்படி சோதனைகளுக்காக வசூலிக்கப்பட்ட கட்டணத் தொகை ரூ. 30,17,258/– ஆகும்.

7.19 உடல் நலப்பாதுகாப்பு நடவடிக்கை:

தொழிலாளர்களின் உடல்நலம் முக்கிய குறிக்கோளாகும். தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் உடல் நலனை கவனிக்க தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையில் தொழிற்சாலை சுகாதார ஆய்வு பிரிவு ஒன்று உள்ளது.

[1996 ஆகஸ்ட் 20

மருத்துவத் துறையைச் சார்ந்த அறுவைச் சிகிச்சை மருத்துவர் தரத்தில் ஒருவர் தலைமை மருத்துவ அலுவலர் (தொழிற்சாலைகள்)-ஆக இப்பிரிவிற்கு தலைமை வகிக்கிறார். தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் சுகாதாரம் தொடர்பானவற்றில் தலைமை மருத்துவ அலுவலர் (தொழிற்சாலைகள்) மற்றும் அவரைச் சார்ந்த பணியாளர்கள் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வருக்கு உதவுகிறார்கள்.

நடப்பு ஆண்டில் அறுவை சிகிச்சை மருத்துவர்கள் இரசாயனம் துணி ஆலை, பொறியியல், சிமெண்ட், கிரானைட், தோல், மோட்டார் டயர், மருந்து, நூற்பாலை, கண்ணாடி, கட்டுமானம் ஆகிய தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொண்டு உடல் நலத்தினை பாதிக்கின்ற தொழிற்சாலைகள் எவையென அறிவதோடு ஆய்வின்போது மேற்குறிப்பிட்டுள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளர்களை பரிசோதித்து பணியின் காரணமாக உடல் நலக்கேடு ஏற்பட வாய்ப்புள்ளதா எனக் கண்டறியப்படுகிறது.

1995-ஆம் ஆண்டில் இத்துறையினைச் சார்ந்த மருததுவர்கள் 56 தொழிற்சாலைகளில் 633 தொழிலாளர்களை பரிசோதனை செய்துள்ள்னர். மேலும் 616 இரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு இரத்த மூலக்கூறு அமைப்பில் ஏதேனும் இயல்பிற்கு மாறாய் உள்ளதா என சோதிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தவிர தொழில் சுகாதார ஆய்வுக்கூடம் 1995-ஆம் ஆண்டில் ஏழுமுறை தொழிலாளர் உடல்நலம் மற்றும் சுகாதார அளவீடு குறித்து சோதனை நடத்தியுள்ளது.

1995-ஆம் ஆண்டில் சுற்றுப்புற மாசு கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

1. சல்பர் டை ஆக்ஸைடு
2. சிமெண்ட் துகள்கள்
3. அம்மோனியா
4. பருத்தித்தூள்
5. ஏனையத் துகள்கள்.
6. பணியிட சுற்றுப்புற சூழலில் சத்தம் குறித்த மதிப்பீடு

1996 ஆகஸ்ட் 20]

உடல் நல ஆய்வின்போது தொழிலாளர்களின் பல்வேறு உடல் உறுப்புகள் குறித்து மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டு தொழிலாளர்களின் உடல்நலம் சுகாதாரம் குறித்து தெரிவிக்கப்பட்டது. சிகரெட் புகைத்தல், பான்மசாலா உபயோகித்தல், மதுபானம் குடித்தல் ஆகியவற்றால் ஏற்படும் கெடுதல்கள் குறித்து தொழிலாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. மருத்துவ ஆலோசனை தேவைப்பட்ட தொழிலாளர்களுக்கு சிறப்பான அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

மேலும் இவ்வாய்வின்போது தொழிலாளர்களுக்கு அவர்களது சுகாதாரம், உடல்நலக் கல்வி, உடல்நல முன்னேற்றம், சத்துணவு, குடும்பக் கட்டுப்பாடு, மனநிலை ஆரோக்கியம் குறித்து அறிவுறுத்தப்பட்டது.

இத்தொழிற்சாலைகள் ஆய்வகத்துறையைச் சார்ந்த தொழிற்சாலைகள் சுகாதார ஆய்வுக்கூடம் தொழிலாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு தன் பணியினைச் செவ்வனே செய்கிறது:-

ஆரோக்கியமான வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்

ஆரோக்கியக் கேட்டினைக் குறைத்தல்.

உடல்நல முன்னேற்றத்திற்குத் தேவையான பாதுகாப்பு முறைகளை அனைத்துத் தொழிலாளர்களும் அடைவது இதன் முக்கியக் குறிக்கோளாகும்.

அறுவை சிகிச்சை மருத்துவர் மற்றும் உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களின் பணி குறித்த விவரங்கள்:-

வ. எண்.	விவரம்	1995-ஆம் ஆண்டிற் குரியது	1-1-96 முதல் 31-3-96 முடிய உள்ள காலத்திற்குரியது
1.	1995-ஆம் ஆண்டில் பார்வையிட்ட தொழிற்சாலைகள்	1,273	286
2.	பரிசோதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை	15,679	3,741

3. 1995–ஆம் ஆண்டில் சான்றளிக்கப்பட்டவை:-		
அ. அபாயத் தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்கள்	11,604	2,271
ஆ. வளர் இளம் பருவத்தினர்	9,288	1,043
இ. சிற்றுண்டி விடுதி தொழிலாளர்கள்	2,896	427
ஈ. வசூலிக்கப்பட்ட பரிசோதனைக் கட்டணம்	ரூ. 11,52,408/-	ரூ. 2,29,650/-

7.20 உற்பத்தித் திறன் குழு அமைப்பு (Productivity cell):-

தொழிற்சாலைகள் ஆய்வகத் துறையைச் சார்ந்த உற்பத்தித்திறன் குழு தொழிலாளர்களுக்கு உற்பத்தி மற்றும் பொருட்களின் தரம், ஆகியவை குறித்து தொழிலாளர்களுக்கு பயிற்சியளிப்பதைத் தன் நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

ஆலோசனை நல்கும் அமைப்பான உற்பத்தித் திறன் குழு உற்பத்தித் திறனை மேம்படுத்துதல், அதிக அதிகாரங்களை பயன்படுத்துதல், வீணாவதை நீக்குதல், கால ஆய்வு/இயக்க ஆய்வு நடத்துவதன் மூலம் பணி கோட்பாடுகளை வரையறுத்தல், வேலை பகுப்பாய்வு, வேலை பாதுகாப்பு, பகுப்பாய்வு நடத்துதல், பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருதல், தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் முறையான பயிற்சி அளித்தல் போன்ற பணிகளையும் புரிகிறது. தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்கள் அவர்கள் உற்பத்தித் திறன் குழுவின் தலைவராவார்.

1-1-95 முதல் 31-3-96 முடிய உள்ள காலத்தில் உற்பத்தித் திறன் சம்பந்தமாக 62 பயிற்சி வகுப்புகள் உற்பத்தித்திறன் குழுவால் நடத்தப்பட்டு அதன்மூலமாக 1,450 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளார்கள்.

7.21 உற்பத்திக் குழுமம் (Productivity Council):--

உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக் குழுமத்தில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரும், கோவை, மதுரை, சேலம், திருச்சி மற்றும்

1996 ஆகஸ்ட் 20]

திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள பிராந்திய உற்பத்தித் திறன் குழுவின் ஆட்சிக் குழுமத்தில் அப்பிராந்தியத்திலுள்ள தொழிற்சாலைகள் இணை/துணைத் தலைமை ஆய்வாளர்கள் உறுப்பினராக செயலாற்றுகின்றனர்.

7.22 தொழிலாளர் நலம் பேணுதல்:-

7.22.1 **தமிழ்நாட்டிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலை மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்கள் தொகுதி தனி நபர் விபத்து ஆயுள் ஈட்டுறுதித் திட்டம்:-**

1986-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முதல் நாளிலிருந்து முதற்கட்டமாக காமராஜர் மாவட்டத்திலுள்ள பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு என தொகுதி தனி நபர் விபத்து ஈட்டுறுதி திட்டத்தினை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. பின்னர் இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

இத்திட்டம் காப்பீடு செய்யப்பட்டவர்களுக்கு விபத்துக் காரணமாக பார்வை அல்லது கை, கால்கள் இழப்பு அல்லது இறப்பு ஏற்பட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஈட்டுறுதிப்பயன் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்துக்களுக்கு மட்டும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தினால் 10 வயது முதல் 65 வயது வரையிலான தீப்பெட்டி, பட்டாசுத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் பயனடைவர்.

இத்திட்டத்தினை 1-7-95 முதல் 30-6-96 முடிய உள்ள நடப்பு காலத்திற்கு பட்டாசு தொழிலாளர்களுக்கு ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட் ரூ. 50,000/-க்கான காப்பு நிதிக்கு ஒரு தொழிலாளிக்கு பிரிமியமாக ரூ. 19/- +5% வரியாகப் பெற காப்பீடு வழங்கியுள்ளது. இதைப்போலவே நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி தீப்பெட்டி தொழிற்சாலைக்கும் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும். தொழிலாளர்களுக்கு காப்பீடு நிதி ரூ. 50,000/-க்கு ஒரு தொழிலாளிக்கு வருடத்திற்கு பிரிமிய தொகையாக ரூ.6/-+5% வரியும் வசூலிப்பதற்கான காப்பீடு திட்டம் வழங்கியுள்ளது.

மேற்படி திட்டங்களின்படி 66,454 தொழிலாளர்கள் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு சந்தா தொகையாக ரூ. 5,62,486/– வசூலிக்கப்பட்டுள்ளது. 1995–ம் ஆண்டில் 9 உரிமை கோரிக்கைகள் தீர்க்கப்பட்டு ரூ. 4,50,000/– வழங்கப்பட்டுள்ளது.

7.22.2 நலநிதி:-

தமிழ்நாடு தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தீப்பெட்டி தொழிலாளர்கள் நலத் திட்டம்:-

இத்திட்டத்தின் கீழ் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணிபுரியும் சிறுவர்களுக்கு மருத்துவ வசதி, பொழுது போக்கு வசதி, கல்வி வசதி அளிக்கக் கூடிய திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொருட்டு ஒரு நல நிதியை அரசு 1-1-1991 முதல் தீப்பெட்டி தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கென உருவாக்கியுள்ளது. இத்திட்டம் 1-4-1992 முதல் பட்டாசுத் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலை அதிபர்கள் ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 10/-வீதம் 1-4-1992 முதல் செலுத்துவதுடன் அரசும் இதற்கு இணையாக மானியம் வழங்கியுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்டு ஒரு மாவட்டக் குழு இந்தத் தொழிலாளர் நல நிதியை நிர்வகிக்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிப் பேராணை எண் 465/86-ன்படி மாவட்டக்குழு ஒன்று மாவட்ட நீதிபதி தலைமையில் மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது. இக்குழு உச்சநீதிமன்றத்தில் உத்தரவுகளை அமுல்படுத்துவதைக் கண்காணிக்கும்.

7.22.3 1950ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலை சட்ட விதி முறைகளைத் திருத்தியமைத்தல்:

தொழிற்சாலை ஆயவகத் துறை குழந்தைத் தொழிலாளர் பணிபுரிவதைத் தடுப்பதற்குத் தொழிற்சாலை சட்ட விதிமுறைகளின் கீழ் வகுக்கப்பட்ட வழிமுறைகள் செவ்வனே செயல்பட நடவடிக்கை எடுத்து வருகிறது. 14 வயதுக்குக் கீழ் குழந்தைகள் வேலைக்கு அமர்த்துவதை தண்டிப்பதைத் தவிர குழந்தைத் தொழிலாளர்களின்

1996 ஆகஸ்ட் 20]

சுகாதாரம் பாதுகாப்பு நலத் திட்டங்களில் சட்டம் மீறும் செயல்கள் ஏற்பட்டால் அதன்மீது கடுமையாக நடவடிக்கையை இவ்வரசு மேற்கொள்கிறது. அத்தகைய செயல்களுக்கு அபராதமும் விதிக்கப்படுகிறது.

உச்சநீதிமன்ற உத்தரவுகளின் பேரில் 1950-ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது, அதன்படி குழந்தையின் பிறந்த தேதியினை தினக்கூலி வருகைப் பதிவேட்டில் குறிப்பிட வேண்டும். தீப்பெட்டிகளில் தீக்குச்சிகளை அடைக்கும் பணியை தனியாக வேறு ஒரு இடத்தில் தொழிற்சாலை ஆய்வாளரது விருப்பத்திற்கு ஏற்றவாறு அமைக்க வேண்டும் என்ற நிபந்தனையும் சேர்க்கப்பட்டுள்ளது.

10 தொழிலாளர்களுக்கும் குறைவாக பணிபுரியும் தீப்பெட்டி மற்றும் பட்டாசுத் தொழிற்சாலைகள் பிரிவு 85(1)-ன் கீழ் தொழிற்சாலை சட்டம் 1948-க்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

7.22.4 சர்வதேச குழந்தை தொழிலாளர் தடுப்பு திட்டம்:

சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் சார்பில் இத்திட்டம் செயல்படுகிறது. இது தொண்டுள்ளம் கொண்ட அரசு சார்பற்ற 8 சங்கங்கள் தேர்ந்தெடுத்து குழந்தை தொழிலாளர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண அவற்றின் ஒத்துழைப்பை நல்குகிறது. குழந்தைத் தொழிலாளர்கள் குறித்து சர்வதேச தொழிலாளர் நிறுவனம் நிறைவேற்றிய தீர்மானம் மாநில அரசால் முழு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

7.22.5 1995-96 ஆம் ஆண்டில் மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழுவின் செயல்பாடுகள்:

மும்பாயில் உள்ள பொது இயக்குநர் தொழிற்சாலைகள் ஆலோசனை பணி மற்றும் தொழிலாளர் நிலையம் அமைப்பினைப்போல் இம்மாநில மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறைக்கென மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான சிறப்புப் பணி அமைப்பு (டாஸ்க் போர்ஸ்) அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1. இதன் துணைக்குழு காகித தொழிற்சாலைகள் குறித்து இறுதியறிக்கையினை அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பித்துள்ளது.

2. இத்துணைக் குழு 18 சிமென்ட் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டுள்ளது.

3. 30 சர்க்கரை ஆலைகள் மற்றும் 7 சுத்திகரிப்பு ஆலைகள் கண்டறியப்பட்டு அவற்றில் தற்போதுள்ள பாதுகாப்பு, தொழிலாளர் உடல் நலம் மற்றும் சுற்றுப்புற மாசு குறித்து ஆய்வு செய்து அதில் முன்னேற்றம் காண திருத்தங்கள் கொண்டுவர தனி துணைக்குழு ஒன்று அமைக்கப்பட உள்ளது.

7.22.6 1996-97 ஆம் ஆண்டில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள்:

1. ஆபத்து விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகள் குறித்து தீவிர ஆய்வறிக்கை தயாரித்து மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்பு பாதுகாப்புக் குழுவின் முடிவிற்கென வைக்கப்பட உள்ளது.

2. அரசின் உத்தரவுடன் ஒரு பாதுகாப்புத் தனிக்குழு அமைக்கப்பட உள்ளது.

3. பாதுகாப்பு தணிக்கைக் குழு அமைக்கப்பட்டவுடன் இக்குழு அபாயகரமான தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

4. பிரிவு 40பி(1)-ன் படி பாதுகாப்பு அலுவலர்களை நியமனம் செய்யப்பட வேண்டிய சிமென்ட் தொழிற்சாலைகள் கண்டறியப்பட உள்ளது.

5. மாநில அளவிலான உயர்மட்ட முத்தரப்புப் பாதுகாப்புக் குழு மற்றும் மாநில அளவிலான சிறப்புப்பணி அமைப்பு (டாஸ்க் போர்ஸ்) மற்றும் வல்லுநர் குழு (எக்ஸ்பர்ட் கமிட்டி) உடன் சர்க்கரை மற்றும் சுத்திகரிப்பு ஆலைக்கென அமைக்கப்பட்டுள்ள துணைக் குழுவினை மாற்றி அமைப்பதற்கான பிரேரணை அரசிற்கு சமர்ப்பிக்கப்பட உள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

அத்தியாயம்-8

வேலைவாய்ப்புப் பணிகள்

8.1 வேலைவாய்ப்பு அலுவலகங்கள்

தமிழ்நாட்டில் இயங்கி வரும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை வருமாறு:-

1. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள்	..	24
2. துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள்	..	3
சிறப்பு அலுவலகங்கள்		
3. தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை.	..	1
4. உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை-40.	..	1
5. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்), சென்னை-20.	..	1
6. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (தொழில் நுட்பப் பணியாளர்கள்).	..	4
7. பழங்குடியினருக்கான தொழில் நெறி வழிகாட்டும் சிறப்பு அலுவலகம் (உதகமண்டலம், சங்கராபுரம், சேலம் மற்றும் திருவண்ணாமலை).	..	4
8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் திருச்சி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேலூர் மற்றும் கடலூர்.	..	5
9. பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்.	..	3
மொத்தம்	..	46

இதனைத் தவிர வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைக் கண்காணிக்கும் பொருட்டு சென்னை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நான்கு மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களும் இயங்கி வருகின்றன.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தோர், அறிவிக்கப்பட்ட காலியிடங்களின் எண்ணிக்கை, பணியில் அமர்த்தப்பட்டோர், வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பணியைப் பயன்படுத்திய வேலையளிப்போரின் எண்ணிக்கை மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உயிர்ப்பதிவேட்டில் காத்திருப்போரின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் வருமாறு:-

	1-1-93 முதல் 31-12-93	1-1-94 முதல் 31-12-94	1-1-95 முதல் 31-12-95	1-1-96 முதல் 31-3-96
1. பதிவு செய்த மனுதாரரின் எண்ணிக்கை	5,77,768	4,97,027	5,03,453	71,657
2. அறிவிக்கப்பட்ட காலியிடங்கள்	25,443	19,316	37,170	6,246
3. பணியில் அமர்த்தப்பட்ட மனுதார்கள்	22,845	14,959	16,592	3,516
4. வேலைவாய்ப்பு அலுவலகங்களைப் பயன்படுத்திய வேலையளிப்போரின் எண்ணிக்கை.	7,535	5,701	7,788	2,193
5. உயிர்ப்பதிவேட்டில் உள்ளோரின் எண்ணிக்கை	38,38,012	36,49,515	34,79,202	34,33,329

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

சென்னை தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட மனுதாரர்களின் எண்ணிக்கை, பணியில் அமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை மற்றும் இவ்வலுவலக உயிர்ப்பதிவேட்டில் காத்திருப்போரின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் வருமாறு:-

	1-1-93 முதல் 31-12-93	1-1-94 முதல் 31-12-94	1-1-95 முதல் 31-12-95	1-1-96 முதல் 31-3-96
1. பதிவு செய்த மனுதாரர்களின் எண்ணிக்கை	26,624	21,506	20,403	4,119
2. பணியில் அமர்த்தப்பட்ட மனுதாரர்களின் எண்ணிக்கை	1,358	1,004	1,155	156
3. உயிர்ப்பதிவேட்டில் உள்ளோரின் எண்ணிக்கை	1,55,446	1,70,872	1,40,580	1,41,201

உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை.

சென்னையில் உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் 13 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் இயங்கும் உடல் ஊனமுற்றோருக்கான சிறப்புப் பிரிவுகள் ஆகியவற்றில் பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்ற மனுதாரர்கள், பணியில் அமர்த்தப்பட்டோர் மற்றும் இவ்வலுவலகங்களின் உயிர்ப்பதிவேட்டில் உள்ளோரின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 20

	1-1-93 முதல் 31-12-93 வரை			1-1-94 முதல் 31-12-94 வரை			1-1-95 முதல் 31-12-95 வரை			1-1-96 முதல் 31-3-96 வரை		
	பதிவு செய்தோர்	பணியில் அமர்த்தப்பட்டோர்	உயிர்ப் பதிவேட்டில் இருந்தோரின் எண்ணிக்கை.	பதிவு செய்தோர்	பணியில் அமர்த்தப்பட்டோர்	உயிர் பதிவேட்டில் இருந்தோரின் எண்ணிக்கை.	பதிவு செய்தோர்	பணியில் அமர்த்தப்பட்டோர்	உயிர் பதிடில் இருந்தோரின் எண்ணிக்கை.	பதிவு செய்தோர்	பணியில் அமர்த்தப்பட்டோர்	உயிர்ப் பதிவேட்டில் இருந்தோரின் எண்ணிக்கை.
பார்வையற்றோர்	557	24	4068	337	35	4452	408	27	4748	18	6	4760
காது கேளாதோர்	508	43	3332	241	41	3626	257	34	3733	15	11	3737
எலும்பு ஊனமுற்றோர்	4633	1083	35863	3315	781	38289	3515	1069	39158	200	83	39275
மொத்தம்	5698	1150	43263	3893	857	46367	4180	1130	47639	233	100	47772

8.2 வேலை நிலவரத் தகவல் திட்டம்:

*1959*ம் ஆண்டு கட்டாய காலியிட அறிவிப்புச் சட்டத்தின்படி எல்லா பொதுத்துறை நிறுவனங்களும் *25* மற்றும் அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட தனியார் துறை நிறுவனங்களும் (வேளாண்மை நீங்கலாக), ஒவ்வொரு காலாண்டிலும் தங்கள் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை, தோன்றிய மற்றும் நிரப்பப்பட்ட காலியிடங்கள், தகுந்த பணியாளர்கள் கிடைக்காததால் அந்தக் காலாண்டில் காலியாக இருந்த பணியிடங்கள் முதலான விவரங்களை குறிப்பிட்ட படிவத்தில் வேலை வாய்ப்பு அலுவலகங்களுக்கு அளிக்க வேண்டும். இது தவிர இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை இந்நிறுவனங்களிலிருந்து தொழில் வாரியாக உள்ள பணியாளர்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்களும் திரட்டப்படுகின்றன.

1996 ஆகஸ்ட் 20]

8.3 தொழில் நெறி வழிகாட்டுதல்/வேலைவாய்ப்பு ஆலோசனை:

தமிழ்நாட்டில் இயங்கி வரும் தொழில் நெறி வழிகாட்டும் பிரிவுகளின் எண்ணிக்கை விவரம் வருமாறு:

1.	மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுடன் இணைக்கப்பட்ட தொழில்நெறி வழிகாட்டும் பிரிவுகள்	18
2.	பல்கலைக் கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்	3
3.	பழங்குடியினருக்கான சிறப்பு தொழில் நெறி வழிகாட்டும் நிலையம், உதகமண்டலம், சங்கராபுரம், சேலம் மற்றும் திருவண்ணாமலை	4
4.	தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான பயிற்றுவிப்பு மற்றும் வழிகாட்டும் நிலையங்கள் (திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் வேலூர் மற்றும் கடலூர்).	5

8.4 சுய வேலைவாய்ப்பு:

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முயற்சியால் பயன்பெற்றோர், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் தொகை ஆகிய விவரங்கள் வருமாறு:-

1.	31-3-96 வரை பயன் பெற்றோர்கள் ..	569
2.	நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் தொகை ..	ரூ. 3.97 கோடி

8.5 தாழ்த்தப்பட்டோருக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகள்:

பணியாளர் தேர்வு வாரியம், வங்கிப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் சீருடைப் பணியாளர் தேர்வாணையம், காவலர்களுக்கான தேர்வு போன்ற நிறுவனங்கள் நடத்திய போட்டித் தேர்வுகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மனுதாரர்களின் எண்ணிக்கை (31-3-96 வரை).	12,516

[1996 ஆகஸ்ட் 20

8.6 வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளைக் கணினி மூலம் புகுத்தல்

1. இத்திட்டத்தின் கீழ் இதுவரை கணினி நிறுவப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை 17

2. 1996-97ல் கணினி நிறுவப்படவிருக்கும் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் எண்ணிக்கை 2

8.7 பார்வையற்றோருக்கான வேலைவாய்ப்பு நிவாரணம்:

பார்வையற்ற பதிவுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு நிவாரணம் வழங்கும் திட்டம் 1-10-1981 முதல் நடைமுறையில் உள்ளது. இத்திட்டம் ஆரம்பித்தது முதல் 31-3-9196 வரை 3,864 பார்வையற்றவர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ. 126.17 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1995-96க்கான நிதியாண்டின் இறுதியில் 1106 நடப்புப் பயன்தாரர்கள் பயனடைந்துள்ளனர். இவர்களுக்கு நிவாரணத் தொகையாக ரூ. 20.80 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

8.8 தீவிர தொழில்முறை வழிகாட்டுதலுக்காக கிராமப்புறப் பள்ளிகளைத் தத்து எடுத்துக்கொள்ளும் முன்னோடித் திட்டம்

மேல்நிலைப் பள்ளிக் கல்வி முடித்த, மாணவர்களுக்குத் தீவிர தொழில் நெறி வழிகாட்டல் தொடர்பில் உதவி அளிப்பதற்கேற்ப ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் அரசு கிராமப்புற மேல்நிலைப் பள்ளியைத் தத்து எடுப்பதற்கு அரசாணை எண் 17, தொழிலாளர் மறறும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23-1-1995ன் வாயிலாக ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மேல்நிலைக் கல்வியில் இரண்டாம் ஆண்டு பயிலும் சுமார் 200 மாணவர்களைக் கொண்ட மேல் நிலைப் பள்ளியைக் கல்வித்துறையுடன் கலந்தாய்வு செய்து தெரிவு செய்து தீவிரத் தொழில் நெறி வழிகாட்டுதல் நடத்தப்பட்டது. பாடக் குறிப்புகள் தயாரிக்கவும், தொழில்முறை வழிகாட்டி சொற்பொழிவு வழங்கும் நிபுணர்களுக்கு மதிப்பூதியம் வழங்கவும் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ரூ. 2,000/- ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

1996 ஆகஸ்ட் 20]

*1994-95*ஆம் ஆண்டில் தீவிர தொழில் முறை வழிகாட்டுதல் திட்டத்தின் ஒரு பகுதியை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தொழில்நெறி வழிகாட்டும் பிரிவின் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கல்வியை முடித்துச் செல்லும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும்போது, அவர்களுக்கு தற்போதுள்ள வேலைவாய்ப்புகள், பயிற்சித் திட்டங்கள், உயர் கல்வி, போட்டித் தேர்வுகள் மற்றும் சுய வேலைவாய்ப்பு முதலானவை தொடர்பில் குழு வழிகாட்டல் சொற்பொழிவு வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டில் இத்திட்டத்திற்குக் கிடைத்த நல்ல வரவேற்பின் காரணமாக மாவட்ட கல்வி அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து பிற பள்ளிகளிலும் இத்திட்டத்தினை நடப்பு நிதியாண்டிலும் செயல்படுத்தும்படி தொழில்நெறி வழிகாட்டும் அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

8.9 பகுதி-2 திட்டங்கள்:

1. வேலைவாய்ப்பு அலுவலகங்களை கணினிமயமாக்குதல்:

*1996-97*ம் ஆண்டில் திருவள்ளூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களை கணினிமயமாக்க ரூ. *12.00* இலட்சம் அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2. கோயம்புத்தூர் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஈப்பு வண்டி வழங்குதல்:

கோயம்புத்தூர் மண்டலத்திலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளை சீரிய முறையில் கண்காணிக்கும் பொருட்டு, கோயம்புத்தூர் மண்டலத் துணை இயக்குநரின் அலுவலகத்திற்கு ரூ. *3.10* இலட்சம் செலவில் ஒரு ஈப்பு வண்டி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

8.10. நிதி ஒதுக்கீடு:

1996–97ம் நிதி ஆண்டில் ஒதுக்கீடு குறித்த விவரம் பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளது :

	ரூபாய் இலட்சங்களில்
திட்டம் சாராதவை	570.58
மாநில திட்டம்	81.07
மத்திய அரசு உதவியுடன் செயல்படும் திட்டம்	13.23
மொத்தம்	**664.88**

8.11. வேலைவாய்ப்பிற்கான இவ்வரசின் புதிய திட்டங்கள்:

"வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 1988ம் ஆண்டில் பதிவு செய்தோரின் எண்ணிக்கை 26,07,092லிருந்து படிப்படியாக உயர்ந்து 1995ம் ஆண்டில் 34,79,202 என்ற எண்ணிக்கையை எட்டியுள்ளது. ஆனால், 1988ஆம் ஆண்டில் 54,388 ஆக இருந்த வேலை கிடைத்தவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து 1995–ல் 16,592 அளவிற்குச் சரிந்துள்ளது. இந்த நிலையைச் சீராக்கவும், ஊரக மற்றும் நகர்ப்பகுதிகளில் உள்ள வேலை வாய்ப்பற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டுவதை உறுதி செய்வதற்கும், இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும்" கீழ்க்கண்ட திட்டங்களை இந்த அரசு செயல்படுத்த உள்ளது :

(அ) "பத்தாம் வகுப்பு வரையிலும், அதற்கு மேலும் படித்துவிட்டு வேலைவாய்ப்புக் கிட்டாமல் இருக்கும் இளைஞர்களுக்கு, மாதம் ரூ. 500 மதிப்பூதியத்தில், கிராமப்புறங்களில் முதியோர் கல்வி, தொடர் கல்வி, படிப்பகங்கள் மூலம் ஊரக அறிவு பரப்புதல், கிராமப் பொதுச் சொத்துக்களைப் பேணிக் காத்திடத் துணை புரிதல், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் போன்ற பணிகளை வழங்கி, ஓர் ஊராட்சிக்கு 2 நபர் வீதம் "மக்கள் நலப் பணியாளர்" என்று மொத்தம் 25,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்திற்கு புத்துயிர் அளிக்கப்படும். இதேபோல் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 12–வது வகுப்பு (+2) தேர்வு பெற்ற 10,000 நபர்கள் மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்கப்படுவார்கள்."

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

(ஆ) "குடிப்பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு எடுத்துரைக்க மகளிர் குழுக்கள் மூலம் விளம்பரங்கள் செய்யும் பணி, ஏற்கனவே தமிழ்நாட்டில் சில தனியார் முயற்சிகள் மேற்கொண்டுள்ளது போல், அரசால் மேற்கொள்ளப்படும். 25,000 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளித்து இப்பணியில் ஈடுபடுத்தி இத்திட்டத்தைச் செயல்படுத்த, ரூ. 5 கோடி நிதி ஒதுக்கம் செயயப்பட்டுள்ளது."

(இ) "1989ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்" என்னும் பெரும் திட்டத்தை கழக அரசு துவங்கியது. இத்திட்டம், தற்போது ஆறு மாவட்டங்களில் சில பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு, சுமார் 55,000 ஏழைப் பெண்களுக்குப் பயனளித்து வருகிறது. கிராமப்புறங்களில் வாழும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள எல்லாப் பெண்களுக்கும், அதிக வருமானம் கிடைக்கவும் வேலை வாய்ப்பினைப் பெருக்கவும், இத்திட்டத்தினை நிதி உதவி நிறுவனங்கள், வங்கிகள் ஆகியோரின் பங்கு பெற்று, மொத்தம் ரூ. 1420 கோடி செலவில் மாநிலம் முழுவதும் நீட்டிக்க, இந்த அரசு முடிவு செய்துள்ளது. நடப்பாண்டில் 10 மாவட்டங்களில் 3 இலட்சம் மகளிர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் செயல்பாட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற மகளிர் குழந்தைகளுக்கான வளர்ச்சித் திட்டம், பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பயன்படுத்தாத நிலை அபிவிருத்தி, நீர்ப்பிரிமுகடு, வேளாண்மை போன்ற பல திட்டங்களுக்கு ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுவதன் மூலம் வரும் ஐந்தாண்டுகளில் 10 இலட்சம் மகளிர் பயன் பெறுவர்."

மேற்கண்ட புதிய திட்டங்கள் அமல் செய்வதின் மூலம் கணிசமான அளவில் இதுகாறும் வேலைவாய்ப்பு இல்லாதிருந்தோர் வேலைவாய்ப்பு பெறுகின்ற சூழ்நிலை உருவாகியிருக்கிறது.

[*1996* ஆகஸ்ட் *20*

அத்தியாயம்-9

கைவினைஞர் பயிற்சித் திட்டம்

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுத் திட்டங்களில் தொழில் துறையின் வளர்ச்சிக்காக பொதுத் துறை மற்றும் தனியார் துறைகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதன் காரணமாக, பல்வேறு தொழிற்பிரிவுகளில் தேர்ச்சி பெற்ற தொழில் நுட்பப் பணியாளர்களின் தேவை மிகுதியாக உயர்ந்தது. எனவே தொழிற்சாலைகளின் தேவையை நிறைவு செய்யும் நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு முறையான தொழிற்பயிற்சியின் மூலம் பல வேறு தொழிற் பிரிவுகளில் செயல்திறன் மிக்க கைவினைஞரை உருவாக்கும் இலட்சியத்தில் கைவினைஞர் பயிற்சித் திட்டம் பெரும் பங்கு வகிக்கிறது. இக்கைவினைஞர் பயிற்சித் திட்டம் தமிழ்நாட்டில் *16,188* இருக்கைகள் கொண்ட *52* அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் கைவினைஞர்களை உருவாக்குகிறது. இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில் நுட்ப மனிதத்திறனைப் பெறவும், சுய வேலை வாய்ப்பு மற்றும் எளிதில் வேலைவாய்ப்புகள் கிடைக்கக்கூடிய *36* பொறியியல் மற்றும் *15* பொறியியல் அல்லாத பிரிவுகளில் தொழிற்பயிற்சி வழங்கப்படுகிறது. இவற்றில் மகளிருக்காக *10* தொழிற்பயிற்சி நிலையங்களும், தாழ்த்தப்பட்டோருக்கென சிதம்பரத்திலும், பழங்குடியினருக்கு என சங்கராபுரத்திலும் தொழிற் பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன. இந்தியா முழுவதிலும் செய்முறை மற்றும் கருத்தியல் இரண்டிலும் ஒரே சீரான தரத்தைப் பராமரித்து, பயிற்சியாளர்கள் தேசிய அளவில் நடைபெறும் தொழிற் திறன் போட்டியில் பங்கு கொள்ளும் வகையிலும், நாட்டின் எப்பகுதியிலும் வேலைவாய்ப்பு பெறும் வகையிலும், தொழிற் பாடத் திட்டங்களை வாழ்க்கைக் கல்வி பயிற்சித் திட்டத்தின் தேசீயக் குழு வடிவமைத்துள்ளது. அகில இந்தியத் தொழிற் தேர்வின் தரத்தை பராமரிக்கவும் மதிப்பீடுகளில் சமச்சீர் நிலையை உறுதிபடுத்துவதற்காகவும் "மத்திய மதிப்பீடு முறை *1979* ஜூலைத் திங்கள் முதல் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அரசினர் தொழிற் பயிற்சி நிலைய சான்றிதழ் பெற்றவர்கள் நம் நாட்டில் மட்டுமல்லாது அயல் நாடுகளிலும் வேலை வாய்ப்புகள் அதிகம் பெற்று மிகவும் நன்மதிப்பு பெறுவதால் ஆண்டுதோறும் மிகுதியான பயிற்சியாளர்களை அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் தன்பால் ஈர்க்கின்றன. தற்போது *13,100* மாணவர்களும் *2,016* மகளிரும் தமிழ்

1996 ஆகஸ்ட் 20]

நாட்டிலுள்ள அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர்."

பள்ளி இறுதித் தேர்வில் சராசரி மதிப்பெண்களைப் பெற்றவர்கள் மற்றும் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் வாய்ப்பு இல்லாதவர்கள் எளிதாக வேலை கிட்டும் பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெறும்வகையில் 44,344 இருக்கைகளுடன் மாநில அரசின் ஒப்புதல் பெற்ற 438 தனியார் தொழிற் பயிற்சி. நிலையங்களும் இயங்குகின்றன. இங்ஙனம் ஒப்புதல் பெற்ற தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களைப் போன்றே பயிற்சி வழங்குகின்றன. ஆண்டுதோறும் இந்த தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் ஐம்பது விழுக்காடு பயிற்சி இருக்கைகள் தகுதியின் அடிப்படையிலும் மற்றும் நடைமுறையிலுள்ள சமுதாய விகிதச் சுழற்சியின் அடிப்படையிலும் நிறைவு செய்யப்படுகின்றன. தமிழ் நாட்டில் மேலும் அரசு ஒப்புதல் பெற்ற 115 தனியார் தொழிற் பள்ளிகள் இயங்குகின்றன. இவற்றில் 50 தொழிற் பள்ளிகள் பணியாளர் ஊதியம் மற்றும் பயிற்சிச் செலவினங்களுக்கு எழுபத்தைந்து விழுக்காடுகள் அரசின் மானியமாக பெற்று வருகின்றன.

ஆண்டுதோறும் அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களிலிருந்து ஏறத்தாழ 19,000 பயிற்சியாளர்கள் தொழிற் பயிற்சி முடித்து வெற்றியுடன் வெளியேறுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் உள்ளூர் தொழிற்சாலைகளிலும் சிலர் அயல்நாட்டு தொழில் நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புகள் பெறுகின்றனர். ஒருசிலர் சொந்தமாக சுய வேலைவாய்ப்பு தொழில் மையங்களையும் அமைத்துக் கொள்கின்றனர். 1996 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற 31 அகில இந்திய தொழிற் திறனாய்வு போட்டிகளில் 15 முறை முதல்நிலை பெற்று தன்னிகரில்லா பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

பயிற்சியாளர்களின் தொழிற் திறன் வளர்ச்சியினை மென்மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்தோடு தனியான ரொக்க சிறப்புப் பரிசுகள் 1996 ஆம் ஆண்டு மாநில அளவில் நடைபெற்ற தொழிற் திறனாய்வுப் போட்டியில் மாநில அளவில் முதலாவதாக வந்த 16 பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன. அதே நேரத்தில் சிறந்த பயிற்சியாளர்களை உருவாக்கிய 68 பயிற்றுநர்களுக்கும் இவ்விருதின் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டு அவர்களும் கௌரவிக்கப்பட்டனர். இச்சீரிய நோக்கத்திற்காக அரசு வருடந்தோறும் ரூ.1.23 லட்சம் நிதி

ஒதுக்குகிறது. இதுவுமல்லாது பயிற்றுநர்கள் சிறந்த முறையில் பயிற்சி அளித்து முன் மாதிரியாகத் திகழ்ந்து செம்மையாய் செயல்படுவதை ஊக்குவிக்கும் முகத்தான் 10 பயிற்றுநர்களுக்கு "நல்லாசிரியர் விருதுகளும்" வழங்கப்பட்டன.

கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு உதவும் வகையில் "கிராமங்களை தத்தெடுக்கும் திட்டம்" 1995 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி கிராமங்களில் குடிநீர் குழாயைப் பழுது பார்த்தல், நீர் இறைக்கும் இயந்திர சாதனங்கள், விவசாய சாதனங்கள் முதலியவைகளை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகள் அருகிலுள்ள தொழிற் பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் மற்றும் பயிற்றுநர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது செயல்படும் மாநில திட்டங்களின் மூலம் கீழ்க்கண்ட சீரிய முன்னேற்றங்களும் செயல்படுத்தப்பட்டுள்ளன :

9.1. கைவினைஞர் மற்றும் மேற்பார்வையாளர் பயிற்சி

ஒவ்வொரு ஆண்டும் 25 இளநிலை பயிற்சி அலுவலர்கள் சமீப தொழில் நுட்ப செயல்திறனும் அவற்றின் முன்னேற்றமும் தெரிந்து கொள்ளும் வகையில் பயிற்சி பெற பல்வேறு மத்திய பயிற்சி நிலையங்கள் மற்றும் மேம்பட்ட பயிற்சி நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்றனர். இதனால் அவர்கள் வகுப்பறையில் பாடங்களை செவ்வனே போதிக்கவும் பணிமனையில் நன்கு பணியாற்றவும் ஏதுவாகிறது. இதற்காக 1996-97 வரவு செலவு திட்டத்தில் ரூ.1.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.2. தொழிற் பயிற்சி நிலையங்களில் ஊரக இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு பயிற்சித் திட்டம்

ஊரக கைவினைஞர்கள் தங்களின் செயல்திறனை மேம்படுத்தி சமீப தொழில் நுட்ப வளர்ச்சியை அறிந்து கொள்ளவும், அவர்கள் வேலை வாய்ப்பிற்காக நகர்புறங்களில் குடியேறுவதைத் தடுக்கவும், ஊரக இளைஞர்கள் மற்றும் சமுதாயத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே மிகவும் பின்தங்கியுள்ள பிரிவினரையும் தேர்ந்தெடுத்து ஊரக மக்களிடையே மிகவும் பிரபலமான தொழிற் பிரிவுகளில் தொழிற் பயிற்சி அளித்து சுய வேலைவாய்ப்பிற்கு வழி வகுக்க இத்திட்டம் செயல்படுகிறது. 9 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில்

1996 ஆகஸ்ட் 20]

முழு நேரமாகவும், 26 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பகுதி நேர அடிபபடையிலும் சுய வேலை வாய்ப்புகளுள்ள 23 தொழிற் பிரிவுகளில் இவ்வூரக இளைஞர் பயிற்சி அளிக்கப்படுக்கிறது. பயிற்சி காலத்தில் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் மாதம் ரூ.300/-உதவித் தொகையும், பயிற்சி முடிந்தவுடன் ரூ.600/- மதிப்புள்ள கருவிகள் அடங்கிய பெட்டியும் சுயமாக தொழில் செய்ய வழி வகை செய்யும் விதத்தில் இலவசமாக அளிக்கப்படுகிறது. தற்சமயம் இப்பயிற்சித் திட்டத்தின் கீழ் 265 ஊரக இளைஞர்கள் பயிற்சி பெறுகின்றனர். இதுவரை இத்திட்டத்தினால் 23,251 ஊரக இளைஞர்கள் பயனடைந்துள்ளனர். மாநில அரசு இத்திட்டத்தின் கீழ் 1996-97 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.19.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

9.3. தொழிலாளர்களுக்கு மாலை நேர வகுப்புகள்

இப்பயிற்சித் திட்டம் முழு நேர மற்றும் பகுதி நேர மாலை வகுப்புகளாக தொழிற்சாலைகள் செறிவுள்ள அம்பத்தூர், கிண்டி, வடசென்னை, மதுரை, கோவை, திருச்சி, மேட்டூர் அணை, ஒசூர் முதலிய இடங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெறுகிறது. தொழிலாளர்களுக்கு அவர்களுடைய தொழிற் பிரிவுகளில் கருத்தியல் அறிவினை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் பெருவாரியான தொழிற்சாலை நிறுவனங்களின் திருப்திகரமான எதிர்பார்ப்பினை பெற்றுள்ளது. ஆண்டுதோறும் ஏறத்தாழ 1925 தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பயன்பெறுகின்றனர். இதுவரை 12,150 தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த அரசு 1996-97ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.5.29 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

9.4. தொழிற் பிரிவுகளை மாற்றியமைத்தல்

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் வேலை வாய்ப்புகள் அதிகம் இல்லாத தொழிற் பிரிவுகள் நீக்கப்பட்டு அவற்றிற்கு பதிலாக வேலை வாய்ப்புகள் மிகுதியாக உள்ள தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இதற்காக 1996-97 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்டத்தில் 0.13 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.5 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்துதல்:

சட்டப் பேரவையில் அளித்த உறுதிமொழிக்கிணங்க நாகை காயிதே மில்லத் மாவட்டத்தைச் சார்ந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் பொருட்டு 1995 ஆகஸ்டு திங்களில் நீடாமங்கலத்தில் ஒரு புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் துவங்கப்பட்டு உள்ளது.

புதிய தொழில் நுட்ப செயல்திறன் உள்ள கைவினைஞரின் தேவை பெருகிவரும் இந்நாளில் தொடர்ந்து மாறிவரும் தொழில் நுட்ப உத்திக்கு இணையாக அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் புதிய தொழிற் பிரிவுகளை அறிமுகப்படுத்தி பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதில் அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது. இதற்கேற்றாற்போல் மகளிர் வேலை வாய்ப்பினை அதிகப்படுத்த புதிய குறுகிய கால தொழிற் பயிற்சிகள், உதாரணமாக திரை அச்சுத் தொழிற் பிரிவு (Screen Printing) மற்றும் ஆயத்த ஆடை ஏற்றுமதி தையல் பயிற்சி (Export Garments and Tailoring Trade) மற்றும் டெஸ்க் டாப் பப்ளிஷிங் ஆப்பரேட்டர் பயிற்சி (Desk Top publishing operation) போன்றவைகள் ஈரோடு, கிண்டி (மகளிர்) தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குழைவியல்பு (Plastic) தொழிற் பிரிவுகளில் வேலை வாய்ப்புகள் மிகுதியாக உள்ளதைக் கருத்தில் கொண்டு குழைவியல் செய்முறைப் பணியாளர் பயிற்சி (Plastic Processing Operator Trade) கடலூர், சேலம், கோவை மற்றும் அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

15 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் 3,000 வேலையற்ற இளைஞர்களுக்கு பல்வேறு தொழிற் பிரிவுகளில் பயிற்சியளிக்க குறுகிய கால பயிற்சி வகுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. இதற்கு அரசு ரூ.9.38 லட்சம் செலவிட இசைவு அளித்துள்ளது.

தொழிற் பயிற்சி செய்முறையை பயிற்சியாளர்கள் திறம்பட மற்றும் துல்லிய நுட்பத்துடனும் செய்வதற்கு ஏதுவாக, அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் 30 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கும் உடைந்த பழைய மற்றும் வழக்கொழிந்த கைக்கருவிகள் கொள்முதல் செய்யப்பட்ட புதிய கைக்கருவிகளால் மாற்றம் செய்யப்படுகின்றன. இந்நோக்கத்திற்காக 1996-97 ஆம் ஆண்டில் ரூ.7.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1996 ஆகஸ்ட் 20]

நாகர்கோவில் தொழிற் பயிற்சி நிலையத்தில் குடி தண்ணீர் வசதியை மேம்படுத்தி, தொடர்ந்து தண்ணீர் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்துக்காக ரூ.45.00 லட்சம் செலவில் சொந்த நிலையான புதிய கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

சமீப கால தொழில் நுட்ப முன்னேற்றத்திற்கு இணையாக பயிற்சியாளர்களுக்கு கணினியின் உதவியால் கட்டுப்படுத்தப்படும் இயந்திரங்கள் (C.N.C. Machines) போன்ற நவீன இயந்திரங்களில் பயிற்சி அளிக்க இவ்வரசு திட்டமிட்டுள்ளது. எனவே, சென்னை, கோவை, ஓசூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் கணினியின் துணை கொண்டு இயங்கும் உற்பத்தி எண் கட்டுப்பாடுடைய இயந்திரங்களை (C.N.C. Machines) 1995-96ல் ரூ. 34.35 லட்சம் செலவில் கொள்முதல் செய்து நிறுவ அரசு தனது இசைவினை வழங்கியுள்ளது. இவ்வாண்டிற்கு இதே போன்று (C.N.C. Machines) இயந்திரங்களை திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூரில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு ரூ.32 லட்சம் செலவில் வழங்க உள்ளது.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள பயிற்சியாளர்கள் மற்றும் பணியாளர்கள் கோடை கால வெயிலின் பாதிப்புகளை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு 8.19 லட்சம் ரூபாய் செலவில் நீர் குளிர்விக்கும் பொறி (Water Coolers) மற்றும் மின்விசிறிகளை நிறுவிட இவ்வரசு இசைவினை வழங்கியுள்ளது. இவ்வாண்டிற்கு இதே போன்று (C.N.C. Machines) இயந்திரங்களை திருச்சிராப்பள்ளி மற்றும் வேலூரில் உள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு ரூ. 32.00 இலட்சம் செலவில் வழங்க உள்ளது.

இத்திட்டங்களை நிறைவேற்ற அரசு 1996-97ம் நிதியாண்டில் செயல்படும் மாநில திட்டங்களில் தொடரும் மற்றும் தொடரா செலவீனமாக ரூ.51.28 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

9.6 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனமயமாக்குதல்:

வளர்ந்து வரும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப நடைமுறையில் பெருகிவரும் இயந்திர சாதனங்களை கருத்தில் கொண்டு வாழ்வியல் பயிற்சி மேம்பாட்டு திட்டம், அம்பத்தூர், கோவை,

[1996 ஆகஸ்ட் 20

ஓசூர் ஆகிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் தொழிற்சாலை பணியாளர்கள் தம்முடைய செயல் திறனை மேம்படுத்தி நடைமுறையில் உள்ள நவீன நுண்கருவிகள் மற்றும் இயந்திர சாதனங்களை கையாளவும், பராமரிக்கவும் தேவையான மேம்பட்ட தொழில் நுட்பவியலை தெரிந்து கொள்ள ஏதுவாகிறது. தற்போது 70 தொழிலாளர்கள் பயிற்சி மேற்கொண்டுள்ளனர். இதுவரை 9,729 தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர். 1996-97 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் இதன் தொடரும் செலவினமாக ரூ. 11.43 லட்சமும் தொடரா செலவினமாக ரூ. 0.19 லட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

9.7 கைவினைஞர் பயிற்சி திட்டத்தின் கீழ் மகளிருக்கென புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள்:

ஆறாம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் மகளிருக்கென மூன்று அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் மட்டும் இயங்கி வந்தன. உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிர் ஆண்டுதோறும் அதிக அளவில் தேர்ச்சி பெறுவதினாலும், தொழிற் பயிற்சி நிலையங்களில் மகளிருக்கென அதிக அளவில் இருக்கைகளின் தேவையை முன்னிட்டும் திருப்பூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் மகளிருக்கென புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் 1985-86ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன. இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்த அரசு 1996-97 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 25.87 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

9.8 தொழிற் பழகுநர் பயிற்சி திட்டம்:

1961ம் ஆண்டின் தொழிற் பழகுநர் பயிற்சி திட்டத்தின் சட்ட விதிகளின்படி இம்மாநிலத்தில் தொழிற் பழகுநர் பயிற்சி திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்தவர்களுக்கும் மற்றும் புதியவர்களுக்கும் தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுநர் பயிற்சி அளிக்க வாய்ப்பளிக்கிறது. தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுநர்களுக்கு செய்முறைப் பயிற்சி வழங்கப்படும் காலத்தில் அவர்களுக்கான தொழிற் பிரிவுகளைச் சார்ந்த கருத்தியல் பாடங்களை இதற்கென நிறுவப்பட்டு உள்ள 11 அரசு தொடர் அறிவுரை மையங்களில் கற்றுத் தரப்படுகின்றன. தற்போது 2041 தொழில் நிறுவனங்களில் 15,292 தொழில் பழகுநர்கள் இத்திட்டத்தின் கீழ் தொழிற் பழகுநர்

1996 ஆகஸ்ட் 20]

பயிற்சி பெற்று வருகின்றனர். இது வரையில் 1,30,496 தொழில் பழகுநர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் அடைந்துள்ளனர். இதற்காக மாநில திட்டத்தில் 1996-97-ஆம் ஆண்டு நிதியாண்டில் ரூ.39.86 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சட்டமன்றத்தில் அறிவித்தபடி 1,000 ஆதிதிராவிட பொறியியல் பட்டதாரிகளுக்கும் மற்றும் 1,000 ஆதிதிராவிட பட்டயப் பொறியாளர்களுக்கும் உதவித் தொகையுடன் தொழிற் பழகுநர் பயிற்சி வழங்கும் தனி சிறப்புத் திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. இதற்கென மைய அரசின் நிதி உதவியுடன் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டமைப்பு மற்றும் விரிவாக்க கழகத்தின் மூலம் சிறப்பு நிதியாக ரூ. 2.41 கோடி வழங்கப்பட்டு இத்திட்டத்திற்காக செலவிட இவ்வரசு இசைவு வழங்கியுள்ளது.

9.9 பழங்குடியினர் துணைத் திட்டம்:

பழங்குடியினர் துணைத் திட்டம் குறிப்பிட்ட பகுதியில் வாழும் மலை வாழ் பழங்குடியினருக்கு மட்டும் பயன் அளிக்கக்கூடிய தனிச் சிறப்புத் திட்டமாகும். இத்திட்டம் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் செயல்பட்டுவருகிறது. பழங்குடியினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில், அவர்களுக்கு எளிதில் வேலை வாய்ப்புகள் கிட்டும் சில தொழிற் பிரிவுகளில் தொழிற் பயிற்சி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்ட செலவினங்களுக்காக 1996-97-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ. 7.66 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர் நலனில் மிகுந்த அக்கறையுள்ள இவ்வரசு, விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் கல்ராயன் மலைத் தொடரிலுள்ள கரியலூரில் மைய அரசு தொகுப்பு திட்டத்தின் கீழ் ரூ.14.78 லட்சம் செலவில், பழங்குடியினருக்காக "வாழ்வியல் பயிற்சி நிலையம்" ஒன்றினைத் தொடங்க இவ்வரசு பெருமகிழ்வுடன் இசைவு அளித்துள்ளது. இந்நிலையத்தின் பழங்குடியினர் சுயவேலை வாய்ப்பு பெறத்தக்க பிரபலமான சில தொழிற் பிரிவுகளில் "குறுகிய கால வாழ்க்கைக் கல்வி பயிற்சி" அளிப்பதே இதன் நோக்கமாகும். இந்நிலையம் வெகு சீக்கிரம் செயல்படவிருக்கிறது.

9.10. சீர் மரபு வகுப்பினருக்கு பயிற்சி

மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர் மரபு வகுப்பினர், பயிற்சிக்குப் பின் எளிதில் வேலை கிடைக்கக் கூடிய தொழிற் பிரிவுகளை பொருத்துநர், உலோகத் தகடு வேலையாள், வாயு மின் பற்ற வைப்பவர் போன்ற தொழிற் பிரிவுகளில் பயிற்சி பெறும் வாய்ப்பினை உருவாக்கிட செக்காணூரணி, முதுகுளத்தூர் மற்றும் வீரகேரளம்புதூர் ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு வருடமும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர் மரபினைச் சேர்ந்த 129 பயிற்சியாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

9.11. சமூக நலப் பாதுகாப்புத் திட்டம்

மகளிருக்கென வேலை வாய்ப்புகளைப் பெருக்கும் நோக்குடன் பெரிதும் விரும்பத்தக்க வேலை வாய்ப்புகளுக்கு 6 தொழிற் பிரிவுகளில், அம்பத்தூர், கிண்டி மற்றும் திருவான்மியூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இச்சமூக நலப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மகளிருக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது. 1996-97 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ.5.29 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

9.12. மைய அரசு மற்றும் மாநில அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (உலக வங்கித் திட்டங்கள்)

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களை நவீனப்படுத்தி, பல்வேறு தொழில்களில் மனித ஆற்றலின் தேவைக்கேற்ப தற்போதுள்ள பயிற்சித் திட்டத்தினை விரிவுபடுத்தும் நோக்கமுடன், "உலக வங்கி உதவியுடன் செயல்படும் திறன் மேம்பாட்டுத் திட்டம" ரூ.2,174.41 லட்சங்கள் மதிப்பீட்டில் 1989-90 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு 1995-96 வரை ஏழு ஆண்டுகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டம் டிசம்பர் 1996 வரை செயல்பட அரசு இசைவு அளித்துள்ளது. இத்திறன் மேம்பாட்டு திட்டத்தின் செலவினம் மைய, மாநில அரசுகளால் சரி சமமாக பொறுப்பேற்கப்படுகின்றது. கைவினைஞர் பயிற்சி, தொழிற் பழகுநர் பயிற்சி, மகளிர் வாழ்வியல் தொழிற் பயிற்சி மற்றும் திறமை மிகு தொழிலாளருக்கான முன்னேறிய வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சி ஆகியவைகள் இத்திட்டத்தில் உள்ளடங்கியவைகளாகும்.

1996 ஆகஸ்ட் 20]

இந்த திறன் மேம்பாட்டுத் திட்டம், கீழே குறிப்பிட்டுள்ள துணைத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

9.12.1. மாநில திட்ட செயலாக்கப் பிரிவு நிறுவுதல்

உலக வங்கி உதவியுடன் செயல்படும் திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மாநில திட்ட செயலாக்கப் பிரிவு ஒன்று, தனியாக. இயக்கத்தில் உருவாக்கப்பட்டு உள்ளது. செயலாக்கப்பட வேண்டிய பல்வேறு திட்டங்களை செவ்வனே அமுல்படுத்தி அவைகளை திறம்பட நடைமுறைப்படுத்துதல், பல்வேறு பயிற்சி நடவடிக்கைகளை செயல் படுத்துதல் ஆகிய பணிகளை இப்பிரிவு மேற்கொண்டுள்ளது. இதற்காக 1996-97-ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.16.53 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.12.2. மகளிருக்காக தொழிற் பயிற்சி நிலையங்கள்

திறமைமிகு மற்றும் திறமையான மனித ஆற்றலின் தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில் மகளிரின் வாழ்வியல் பயிற்சித் திட்டத்தினை நிறைவானதாகவும், தரமுற்றதாகவும் செய்திட அம்பத்தூர், கோவை, சேலம், மதுரை மற்றும் புள்ளம்பாடி ஆகிய 5 இடங்களில் மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் 742 மகளிர் பயிற்சியாளர் ஆண்டுதோறும் பயன் அடைகின்றனர்.

இம்மகளிர் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் 1996-97 ஆம் ஆண்டில் புதிய மகளிர் விடுதிகள் கட்டப்படவுள்ளன. இதற்காக 1996-97-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய் செலவினமாக ரூ.52.73 லட்சங்களும், ஐந்து மகளிர் விடுதி கட்டிடங்கள் கட்ட ரூ.191.01 லட்சங்களும், இயந்திரங்களும், கருவிகளும் கொள்முதல் செய்வதற்தகாக ரூ.0.52 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.12.3. இயந்திர பராமரிப்பு மையங்கள் மற்றும் பணிமனை நிறுவுதல்:

தொழிற் பயிற்சி நிலையங்களில் இயந்திரங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு, அவற்றின் மூலம் பயிற்சியின் தரத்தினை உயர்த்திட வடசென்னை, கோவை, திருச்சி, பேட்டை, மதுரை மற்றும் சேலம் ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு இயந்திர பராமரிப்பு மையமாக ஆறு மையங்களும், அம்பத்தூரில்

[1996 ஆகஸ்ட் 20

மாநில அளவிலான பராமரிப்பு பணிமனை ஒன்றும் நிறுவப்பட்டுள்ளன. தொழிற் பயிற்சி நிலையங்களிலுள்ள பழுதடைந்த இயந்திரங்கள் முன்பு தனியார் தொழிற்சாலைகளில் பழுதுபார்க்கப்பட்டு வந்த நிலைமை மாறி, தற்போதுள்ள பராமரிப்பு மையங்களிலும் பணிமனையிலுமேயே அவைகள் உடனுக்குடன் பழுதுபார்க்கப்பட்டு சீர் செய்யப்படுகின்றன. இம்மையங்களின் வருவாய் செலவினமாக ரூ.38.37 லட்சங்களும், கட்டிடப் பணிகள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ. 0.76 லட்சமும் 1996-97 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

9.12.4. தொழிற் பயிற்சி நிலையங்களின் விரிவாக்கம்

மாறிவரும் தொழிற்சாலைகளில் தேவைக்கு தகுந்தாற்போல், தேர்ச்சி பெற்ற கைவினைஞர்கள் மிகுதியாக தேவைப்படுவதினை கருத்தில் கொண்டு புத்தம் புதிதான பல தொழிற் பிரிவுகள் இவ்விரிவாக்கத் திட்டத்தின் கீழ் தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்படுகின்றன. கம்மியர் இயந்திர பராமரிப்பு, பம்ப் மெக்கானிக், கம்மியர் கருவிகள், கம்மியர் பராமரிப்பு (இரசாயன சாதனம்), கம்மியர் மின்னணுவியல், டேட்டா பிரிபரேஷன் மற்றும் கம்ப்யூட்டர் சாப்டுவேர் போன்ற 25 புதிய நவீன தொழிற் பிரிவுகள் உண்மையான தேவையின் அடிப்படையில் 16 தொழிற் பயிற்சி நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டு இதனால் 848 பயிற்சியாளர்கள் பயனடைந்து வருகின்றனர். இவ்விரிவாக்கத் திட்டத்தின் கீழ் வருவாய் செலவினமாக ரூ.41.20 லட்சங்களும், கட்டிடப்பணி மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ.4.04 லட்சங்களும், 1996-97 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.12.5. வாழ்வியல் முன்னேற்ற பயிற்சித் திட்ட விரிவாக்கம்

புதுமைமிகு இயந்திரங்களைக் கையாளுவதில் முன்னேற்றம் காண்கின்ற வகையில், தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு, முன்னேறிய பயிற்சி வசதிகள் அளிக்க கோவை தொழிற் பயிற்சி நிலையத்திலுள்ள வாழ்வியல் மேம்பாட்டு பயிற்சித் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு வருவாய் செலவினமாக ரூ.3.97 லட்சங்களும், கட்டிடப் பணிகள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ.2.85 லட்சங்களும் 1996-97-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

9.12.6. இயந்திரங்களை நவீனப்படுத்துதல்

பதினைந்து முதல் இருபது ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு, செயல்பட்டு வரும் 31 தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்றவைகள் வழக்கொழிந்தவைகளாகவும், பழுதுபட்டவைகளாகவும் ஆகிவிட்டன. எனவே அவைகளை படிப்படியாக மாற்றியமைத்து பற்றாக்குறைவான இயந்திரங்களும் கருவிகளும் புதிதாக கொள்முதல் செய்து வழங்கப்பட்டு, பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், புதுமைமிகு நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்து பயிற்சியாளர்களுக்கு, முன்னேறிய தொழிற் பயிற்சி அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே புதுமைமிகு நவீன இயந்திரங்களும் இதர இயந்திரங்களும் கொள்முதல் செய்யப்பட 1996-97-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில், ரூ.867.72 லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9.12.7. ஒலி, ஒளி சாதன வசதிகள் அமைத்தல்

பயிற்சியாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உபயோகமானதாகவும் திறம்பட அமையவும் வகுப்புகளில் கற்றுக் கொடுக்கப்படும் பாடப் பயிற்சிகளும் திறம்பட அமையவும், ஒலி, ஒளி சாதனங்கள் கொள்முதல் செய்யப்பட்டு 38 தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

9.12.8. அடிப்படை பயிற்சி மையங்கள் மற்றும் தொடர் அறிவுரை மையங்கள் நிறுவுதல்

வேதியியல் மற்றும் தோல் தொழிற்பிரிவுகளைக் கொண்ட அடிப்படை பயிற்சி மையம் ஒன்று இராணிப்பேட்டையிலும், உணவு விடுதி மற்றும் உணவு தயாரித்தல் ஆகிய தொழிற் பிரிவுகளைக் கொண்ட மற்றுமொரு அடிப்படை பயிற்சி மையம் அம்பத்தூரிலும் துவக்கப்பட்டுள்ளன. மிகுதியான தொழிற் பழகுநர்கள் பயிற்சி பெறும் வகையில் நான்கு தொடர் அறிவுரை மையங்களும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இதற்காக வருவாய் செலவினமாக ரூ.18.10 லட்சங்களும், கட்டிடப் பணிகள் மற்றும் இயந்திரங்கள் கொள்முதல் செய்ய ரூ.2.03 லட்சங்களும் 1996-97-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 2,160 தொழிற் பழகுநர்கள் தொடர் அறிவுரை வகுப்புகள் மற்றும் அடிப்படைப் பயிற்சி வகுப்புகள் மூலமாகவும் பயனடைந்து வருகின்றனர்.

[1996 ஆகஸ்ட் 20

இத்துறையின் மேற்கூறப்பட்ட பல்வேறு பயிற்சித் திட்டங்களை அமுல்படுத்த "கோரிக்கை எண் 28, தொழிலாளர் நலன் மற்றும் தொழிற்சாலை" என்னும் தலைப்பின் கீழ் வருவாய் செலவினமாக ரூ.2714.30 லட்சங்களும்; "கோரிக்கை எண் 60, பல்வகை மூலதனச் செலவுகள்" என்னும் தலைப்பின் கீழ் மூலதனச் செலவாக ரூ.1070.26 லட்சங்களும் 1996-97 பகுதி ஒன்று வரவு செலவு திட்டத்தின் நிதி கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

(பயிற்சிப் பிரிவு)

1996-97 வரவு-செலவு திட்டம் (பகுதி 1 மதிப்பீடுகள்)

திட்டம்	வருவாய்ச் செலவு	மூலதனச் செலவு	மொத்தம்
	(ரூபாய் லட்சங்களில்)		
திட்டம் சாராதவைகள்	2365.52	..	2365.52
மாநில திட்டங்கள்	172.52	1.52	174.04
மைய அரசும், மாநில அரசும் பொறுப்பேற்கும் உலக வங்கித் திட்டங்கள்	170.97	1068.74	1239.71
மைய அரசு பொறுப்பு ஏற்கும் திட்டம்	..	..	..
சமூக நல பாதுகாப்பு திட்டம்	5.29	..	5.29
மொத்தம்	**2714.30**	**1070.26**	**3784.56**

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

9.13. 1996-97 இல் அமுலாக்கப்பட வேண்டிய பகுதி 2 திட்டங்கள்

9.13.1. திருச்சி மற்றும் வேலூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் சி.என்.சி. இயந்திரங்களை நிறுவுதல்:

பெரிய தொழிற்சாலைகள், உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன் சி.என்.சி. இயந்திரங்களை நிறுவி வருகின்றன. அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் இவ்வகையான இயந்திரங்களை நிறுவி பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதன் அவசியத்தை தொழிலதிபர்கள் பலர் வலியுறுத்துகின்றனர். மேலும் இந்த நவீன இயந்திரங்களில் பயிற்சியாளர்கள் தற்போதைய தேவைக்கேற்றவாறு பயிற்சி பெறாவிடில் தொழிற்சாலைகளில் அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறையக் கூடும். குறிப்பாக இயந்திர வேலையாள் மற்றும் கடைசல் தொழிற் பிரிவுகள் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில் சி.என்.சி போன்ற பயிற்சி இயந்திரங்கள் நிறுவப்பட்டால் பயிற்சியாளர்கள் போதிய நவீனப் பயிற்சியினை இத்தகைய இயந்திரங்களில் பெற முடியும். இதனால் தொழிற் சாலைகளுக்கும் தேவையான உயர் தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களை வழங்க இயலும். எனவே தலா ரூ. 16.00 லட்சங்கள் செலவில் திருச்சி மற்றும் வேலூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் 1996–97ல் சி.என்.சி. இயந்திரங்கள் நிறுவ தீர்மானிக்கப்பட்டுள்ளது.

9.13.2. மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் "தோல் ஆடைகள் தைத்தல்" என்னும் குறுகிய கால பயிற்சி துவக்குதல்

சென்னையைச் சுற்றிலும் ஏராளமான தோல் பதனிடும் தொழிற் சாலைகள் உள்ளன. சென்னை, தோல் சம்பந்தப்பட்ட தொழில் வளர்ச்சிக்கு மையமாகவும், தோல்பொருள் ஏற்றுமதி செய்யும் முக்கிய மையமாகவும் திகழ்கிறது. சென்னைக்கு அருகில் நிறுவப்பட்டுள்ள வெளிநாட்டு ஏற்றுமதி மையத்தில் தோல் ஆடைகள் தயாரிக்கும் நிறுவனங்கள் ஏராளமாக உள்ளன. எனவே தோல் ஆடைகள் தைத்தல் என்ற தொழிற்பிரிவில் குறுகிய கால பயிற்சியினை மகளிருக்கு அளித்தால் அவர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்புகள் கிடைக்கக் கூடும். எனவே கிண்டி மகளிர்

தொழிற் பயிற்சி நிலையத்தில் ரூ. 5.98 லட்சங்கள் செலவில் "தோல் ஆடைகள் தைத்தல்" என்னும் குறுகிய கால பயிற்சி 1996-97ல் அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9.13.3. சென்னை மற்றும் கோவை மண்டல பயிற்சி இணை இயக்குநர்களுக்கு மாருதி வேன் வழங்குதல்

பல்வேறு பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துவதிலும், அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழில் நுட்ப ஆய்வு மேற்கொள்ளுவதிலும் மண்டல இணை இயக்குநர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டத்தின் தீவிர அமலாக்கம் தொடர்பாக பல்வேறு நிறுவனங்களில் உயர் அதிகாரிகளை சந்தித்து விவாதிப்பது அவசியமாகிறது. இத்தகைய முக்கிய பணிகளைச் செய்ய இணை இயக்குநர்களுக்கு வாகன வசதி மிகவும் இன்றியமையாததாகிறது. எனவே முதலாவதாக சென்னை மற்றும் கோவை மண்டல பயிற்சி இணை இயக்குநர்களுக்கு ரூ.7.78 லட்சங்கள் செலவில் மாருதி வேன்களை இவ்வாண்டு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

9.14. 1996-97 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் தொழில் பயிற்சி நிலையங்கள் துவக்குவது

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் பயிற்சிப் பிரிவு கைவினைஞர் பயிற்சித் திட்டத்தின் வாயிலாக திறமை வாய்ந்த கைவினைஞர்களை தொழிற்சாலைகளுக்கு அளிக்கும் பணியில் பணியாற்றி வருகிறது. படித்த இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தினை அகற்றி வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் பணியில் இத்துறை ஈடுபட்டுள்ளது. மாறிவரும் தொழில் வளர்ச்சிக்கு ஏற்றார்போல் புதிய தொழில் பிரிவுகளை ஏற்படுத்தி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது 36 பொறியியல் மற்றும் 15 பொறியியல் சாரா தொழில் பிரிவுகள் 52 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களிலும், 438 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 59 வளர்ச்சிக் கோட்டங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிலும் அரசு அல்லது தனியார் அல்லது இரண்டும் உள்ளன. மேலும் 387 ஊராட்சி ஒன்றியங்களில், 169 ஒன்றியங்களில்

1996 ஆகஸ்ட் 20]

அரசு அல்லது தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் உள்ளன. ஆனால் 218 ஒன்றியங்களில் எந்தத் தொழிற் பயிற்சி நிலையமும் இல்லை.

வருகின்ற ஆண்டுகளில் தமிழ்நாட்டில் தொழிற்பயிற்சி நிலையங்கள் இடம்பெறாத 218 பஞ்சாயத்து யூனியன்களில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை மூன்று ஆண்டுகளில் படிப்படியாக துவக்க அனுமதி வழங்கவும் பின்தங்கிய வட்டாரங்களில், தனியார் முன்வராத நிலையில் அரசே, மத்திய அரசின் நிதியுதவிகளைக் கொண்டு துவக்க முடிவு செய்திருக்கிறது. இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும். தற்போது ஆண்டுக்கு ஒருமுறை ஆகஸ்ட் மாதம் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்கள் சேர்க்கப்படுகிறார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பயிற்சியாளர்களை சேர்க்க அனுமதி கோரி மத்திய அரசுக்கு எழுதப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைத்தவுடன், பிப்ரவரி மாதத்திலும் புதிய தொழிற் பயிற்சி நிலையங்களைத் திறந்து பயிற்சியாளர்கள் சேர்க்கப்பட உரிய நடவடிக்ககளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

தற்போது அமலில் இருந்து வரும் தடையினை நீக்கி, தொழிற் பயிற்சி நிலையம் இல்லாத ஒன்றியங்களில் துவங்க முன்வரும் தனியாருக்கு அனுமதி அளிக்கலாம் என்றும் தனியார் முன்வராத மற்ற ஒன்றியங்களில் மத்திய அரசின் நிதியுதவிகளைப் பெற்று அரசே துவங்கலாம் என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

அத்தியாயம் 10

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நிறுவனமாகும். இது ஒரு வரையறுக்கப்பட்ட நிறுவனமாக 1978, நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று, 1956, இந்தியக் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது.

இந்நிறுவனம், அதனுடன் பதிவு செய்துள்ள மனுதாரர்களுக்கு அயல்நாடுகளில் வேலை வாங்கித் தருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.50 இலட்சமாகும். இது ரூ.1000/–வீதம் பிரிக்கப்பட்ட 5000 சமவீதப் பங்குகளாக உள்ளது. இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.25 இலட்சமாகும்.

இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 31–3–96 வரை 4628 மனுதாரர்களுக்கு (இணைப்பில் உள்ள விவரப்படி) அயல்நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுத் தந்துள்ளது. 1995–96 ஆம் ஆண்டில் 122 மனுதாரர்களுக்கு அயல் நாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தந்துள்ளது. அந்த ஆண்டில் இந்நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.6.7 இலட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதே ஆண்டில் 60 மனுதாரர்களுக்கு பாஸ்போர்ட்டுகள் எடுத்துக் கொடுக்கும் பணியையும் செய்துள்ளது. இந்நிறுவனம் 31–3–96 வரை ரூ.13,71,850 மதிப்புக்கு அந்நியச் செலாவணி ஈட்டியுள்ளது.

இந்நிறுவனத்தின் மனுதாரர்களின் விவர வங்கி கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் அயல்நாடுகளில் உள்ள அரசுத் துறை நிறுவனங்களாகிய சவூதி அரேபியா சுகாதார அமைச்சகம், ஷார்ஜாவிலுள்ள மின்வாரியம் போன்ற நிறுவனங்களிடமிருந்து சிறப்பான பணிக்காக நற்பெயர் பெற்றுள்ளது. இந்நிறுவனம் விரைவில் விமானப் பயணச் சீட்டுக்களை விற்கும் தொழிலை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-1

தொழிற் தகராறுகள்

விவரம் (1)	1994 (1994 சனவரி முதல் நாளிலிருந்து 1994 டிசம்பர் 31-ம் நாள் வரை) (2)	1995 (1995 சனவரி முதல் நாளிலிருந்து 1995 டிசம்பர் 31-ம் நாள் வரை) (3)	1-1-96 முதல் 31-3-96 வரை (4)
அ. ஆண்டுத் தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை	1875	2,004	2,248
ஆ. இந்த ஆண்டில் வரப்பெற்ற புகார்கள் / எழுந்த தொழிற் தகராறுகள் எண்ணிக்கை	12,763	9,026	2,096
இ. முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகள் எண்ணிக்கை	12,634	8,782	2,079
ஈ. சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை	5,695	5,630	2,079
உ. தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழில்கள் நடுவர் நீதிமன்றத் தீர்ப்பிற்கு விடபட்ட தகராறுகளின் எண்ணிக்கை	86	113	--
ஊ. நடுவர் நீதிமன்ற தீர்ப்பிற்கு விடப்பட்டவை	--	--	--
எ. ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை	2,004	2,248	2,265

இணைப்பு-2

வேலை நிறுத்தங்கள் மற்றும் கதவடைப்புகள்

1. கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை	212	141	45
2. இழந்த உழைப்பு நாட்கள்	16,68,495	9,10,947	3,16,599

இணைப்பு-3

1-1-95 முதல் 31-3-96 முடிய ஏற்பட்ட முக்கிய ஒப்பந்தங்களில் குறிப்பிடத் தக்கவை

1. இந்துஸ்தான் மோட்டார்ஸ் லிமிடெட், திருவள்ளூர்.

தொழிலாளர்களின் பொதுக் கோரிக்கைள் சம்பந்தப்பட்ட தாவா தொழிலாளர் துறை ஆணையர் அவர்களால் 4-1-95 அன்று தீர்த்து வைக்கப்பட்டது. இதனால் 769 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

2. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட், நெய்வேலி.

நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் தொழிலாளர்கள் (ஜாயின்ட் கௌன்சில் மூலம்) மற்றும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் நிறுவனம் ஆகியவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தொழிலாளர் துறை ஆணையர் மற்றும் சென்னை மத்திய மண்டல தொழிலாளர் ஆணையர் ஆகியோர் முன்பாக தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் 26-8-95 அன்று ஊதிய விகிதத் திருத்தம் குறித்து ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் 18,600 தொழிலாளர்கள் பயன் அடைந்ததோடு மாதம் ஒன்றுக்கு ரூ.250/-முதல் ரூ.650/-வரை ஊதிய உயர்வு பெற்றனர்.

3. டன்லப் (இந்தியா) லிமிடெட், அம்பத்தூர், சென்னை.

தொழிலாளர்களின் சார்பாக எழுப்பப்பட்ட பல்வேறு கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட தொழிற்தாவா தொழிலாளர் ஆணையர் அவர்களால் 5-4-95 அன்று தீர்த்து வைக்கப்பட்டது.

4. அரசு ரப்பர் கார்ப்பரேஷன், நாகர்கோவில்.

தொழிலாளர்களால் எழுப்பப்பட்ட சம்பளத் திருத்தம் அகவிலைப்படி மற்றும் இதர படிகள் சம்பந்தப்பட்ட தொழிற் தாவா தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்களால் 4-9-95 அன்று தீர்த்து வைக்கப்பட்டது. இதனால் 2,500 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

5. தனியார் ரப்பர் பிளான்டேஷன்ஸ், கன்னியாகுமரி

சம்பளத் திருத்தம் மற்றும் இதர கோரிக்கைகளை முன்வைத்து 3,500 தொழிலாளர்கள் 14-10-94 முதல் செய்து வந்த வேலை

1996 ஆகஸ்ட் 20]

நிறுத்தம் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்)அவர்களால் 21-1-95 அன்று தீர்த்து வைக்கப்பட்டது.

6. அண்ணாமலையார் டெக்ஸ்டைல்ஸ், பேகாம்பூர்.

நிதி நெருக்கடி காரணமாக 30-10-93 முதல் தற்காலிகமாக நிறுவனம் இயக்கத்தை நிறுத்தியது. இதனால் 250 தொழிலாளர்கள் வேலையிழந்தனர். தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக 3-3-95 முதல் நிறுவனம் இயங்க ஆரம்பித்தது.

7. ஆன்ட்ரூ-யூல் & கம்பெனி லிமிடெட் (டிரான்ஸ்பார்மர் & ஸ்விட்ச் கீயர் யூனிட்) சென்னை.

தொழிலாளர்களால் எழுப்பப்பட்ட ஊதியத் திருத்தம் சம்பந்தப்பட்ட தொழிற்தாவா 18-3-95 அன்று தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்கள் முன்பாக தீர்த்து வைக்கப்பட்டது. இதனால் 200 தொழிலாளர்கள் சம்பளம், அகவிலைப்படி மற்றும் இதர படிகளின் மூலம் ரூ.450/-முதல் ரூ.500/-முடிய ஊதிய உயர்வு பெற்றனர்.

8. ஜி.இ.சி. அல்ஸ்தாம் இந்தியா லிமிடெட், பல்லாவரம்.

800 தொழிலாளர்கள் போனஸ் கோரிக்கையை வலியுறுத்தி 6-9-95 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் 13-10-95 அன்று தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் இவர்களது பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தினால் தொழிலாளர்கள் 1994-95 ஆம் கணக்காண்டிற்கு 20% போனஸும், ரூ.2,000/-ஊக்கத் தொகையும் மற்றும் 1993-94 ஆம் கணக்காண்டிற்கான நிலுவை போனஸையும் பெற வழி வகை செய்யப்பட்டது.

9. லக்ஷ்மி ஆட்டோமெடிக் லூம் ஒர்க்ஸ் லிமிடெட், ஒதூர்.

சம்பள உயர்வு சம்பந்தப்பட்ட தொழிற்தாவா 26-1-95 அன்று தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்களால் முடித்து வைக்கப்பட்டு அதன் பயனாக 357 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

[1996 ஆகஸ்ட் 20

10. 18 கூட்டுறவு நூற்பாலைகளில் போனஸ் பிரச்சினை.

18 கூட்டுறவு நூற்பாலைகளில் 1994–95 ஆம் கணக்காண்டிற்கான போனஸ் பிரச்சினை தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) 17-10-1995 அன்று வழங்கிய ஆலோசனையின்படி தீர்த்து வைக்கப்பட்டது. இதனால் 12,620 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

11. வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அரியூர், வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்.

வேலைப் பளு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து 467 தொழிலாளர்கள் 15-9-1995 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) 4-12-1995 அன்று வழங்கிய ஆலோசனையின் பேரில் தொழிலாளர்கள் 6-12-1995 முதல் வேலை நிறுத்தத்தை கைவிட்டனர்.

12. தமிழ்நாட்டில் இயங்கும் அரசு போக்குவரத்துக் கழகங்கள்.

சம்பள உயர்வு மற்றும் பல கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட தொழிற்தாவா சுமுகமான முறையில் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்கள் முன்னிலையில் 28-9-95 அன்று தொழிற்தகராறு சட்டப் பிரிவு 12(3)-ன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தினால் மாதம் ஒன்றுக்கு ரூ.300/- முதல் ரூ.552/- வரை தொழிலாளர்கள் ஊதிய உயர்வு பெற வழி வகை செய்யப்பட்டது. இதனால் 1,05,000 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர். இவ்வொப்பந்தத்தின் விளைவாக தொழிலாளர்கள் நடத்தவிருந்த வேலை நிறுத்தத்தை கைவிட்டனர்.

13. தமிழ்நாடு நியூஸ்பிரிண்ட் அண்டு பேப்பர்ஸ் லிமிடெட், புகளூர்.

தமிழ்நாடு நியூஸ்பிரிண்ட் அண்டு பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவன தொழிலாளர்களால் எழுப்பப்பட்ட தொழிற்தாவா தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்களால் 10-8-1995 அன்று தீர்த்து வைக்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் விளைவாக 800 தொழிலாளர்கள் சம்பள உயர்வும் மற்ற சலுகைகளும் பெற்றனர்.

1996 ஆகஸ்ட் 20]

14. இந்தியன் டுபாகோ கம்பெனி (பேக்கிங் & பிரிண்டிங் டிவிஷன்), திருவொற்றியூர்.

இந்நிறுவனத் தொழிலாளர்களால் எழுப்பப்பட்ட சம்பள விகித மாற்றம் உள்ளிட்ட பல கோரிக்கைகள் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்களால் 12-4-95 அன்று தீர்த்து வைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தினால் 360 தொழிலாளர்கள் சராசரியாக மாதம் ஒன்றுக்கு ரூ.1000/-சம்பளம் மற்றும் இதர படிகளில் உயர்வு பெற்றனர்.

15. ஆசியா டுபாகோ கம்பெனி லிட்., ஓசூர்.

538 தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை முன் வைத்து, 8 மாத காலமாக செய்துவந்த வேலை நிறுத்தம், தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்கள் முன்னிலையில் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 12(3)ன்கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் 29-3-1995 முதல் கைவிடப்பட்டது. இவ்வொப்பந்தத்தினால் சம்பளம் மற்றும் இதர படிகள் உயர்வு மூலம் தொழிலாளர்கள் சராசரியாக மாதம் ரூ.820/-ஊதிய உயர்வு பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

16. எஸ்.ஆர்.எப். லிமிடெட், மணலி, சென்னை.

சுமார் 800 தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து 3-5-94 முதல் செய்து வந்த உள்ளிருப்பு வேலைநிறுத்தம் 1-8-1994 முதல் விலக்கிக் கொள்ளப்பட்டது. அதன்பின்னர் தொழிலாளர் இணை ஆணையர் (நிர்வாகம்) அவர்கள் முன்னிலையில் 19-1-95 அன்று தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் விளைவாக 800 தொழிலாளர்கள் ரூ.1,049/-ஊதிய உயர்வும் மற்ற இதர சலுகைகளும் பெற்றனர்.

17. க்ளோவ் இந்தியா (பி) லிமிடெட், சென்னை.

பொதுக் கோரிக்கைகள் குறித்த தொழிற் தாவா தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12 (3-)ன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் தீர்த்து வைக்கப்பட்டது. இதனால் 85 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

18. இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் லிட்., மணலி.

ஐ.எஸ்.ஓ. 9,002 வாக்களிப்பினை அமுல் செய்து தொழிலாளர்களுக்கு பணச்சலுகை அளிக்க கோரிய தொழிற்தாவா 29-6-95 அன்று தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) முன்னிலையில் ஐ.ஓ.சி நிறுவனம் மற்றும் தொழிலாளர்கள் சார்பாக ஐ.ஓ.சி. தொழிலாளர்கள் சங்கத்தோடு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தினால் தொழிலாளர்கள் 23-5-1993 முதல் மொத்தத்தில் கூடுதல் தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.86/-பெறுவர்.

19. திருவாங்கூர் கெமிக்கல் மேன்யூபாக்சரிங் கம்பெனி லிட்.,

இந்நிறுவனத் தொழிலாளர்களால் எழுப்பப்பட்ட பல கோரிக்கைகள் அடங்கிய தொழிற்தாவா, தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்களால் தொழிற்தகராறு சட்டப்பிரிவு 12(3) ஒப்பந்தத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தினால் தொழிலாளர்கள் சம்பளம், அகவிலைப்படி மற்றும் இதர படிகளின் உயர்வு மூலமாக மொத்தத்தில் ரூ.510/-ஊதிய உயர்வு பெற்றனர். மேலும் நல்லெண்ண அடிப்படையிலும் வேலைப்பளு மாற்றம் மற்றும் உற்பத்தித் திறன் காரணமாக 1-7-1995 முதல் ரூ.75/-என்ற விகிதத்தில் 3 சிறப்பு ஊதிய உயர்வு அளிக்க நிர்வாகம் ஒப்புக் கொண்டது. இதனால் சுமார் 200 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

20. ஆரோணிட் எக்ஸ்போர்ட்ஸ் (இந்தியா) லிமிடெட், சென்னை

நிர்வாகம் 27-1-95 முதல் 14 நாட்கள் கதவடைப்பு செய்தது. பின்னர் தொழிலாளர் இணை ஆணையர் (சமரசம்) அவர்கள் முன்பு 9-2-1995 அன்று தொழிற்தகராறு சட்டப்பிரிவு 12(3)-ன் கீழ் ஒப்பந்தம் ஏற்பட்டதன் விளைவாக நிறுவனம் 10-2-1995 அன்று முதல் மீண்டும் திறக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தினால் 350 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

21. பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், சென்னை.

சம்பளத் திருத்தம் குறித்த தொழிற்தாவா தொழிலாளர் தனித் துணை ஆணையர் அவர்களால் 1-2-1995 அன்று தீர்த்து வைக்கப்பட்டது. இதனால் 185 தொழிலாளர்கள் ரூ.530/-ல் இருந்து ரூ.760/-வரை ஊதிய உயர்வு பெற்றனர்.

1996 ஆகஸ்ட் 20]

22. சோடியா ரப்பர் ப்ராடக்ட்ஸ், மணப்பாக்கம்.

சம்பள உயர்வு குறித்து தொழிற்தாவா தொழிலாளர் தனித் துணை ஆணையர் அவர்களால் 5-10-1995 அன்று தீர்த்து வைக்கப்பட்டது. இதனால் 70 தொழிலாளர்கள் குறைந்தபட்சம் ரூ.800/-ம் அதிகபட்சமாக ரூ.1000/-ம் சம்பள உயர்வு பெற்றனர்.

23. ஆட்டோமெடிக் கோச்சஸ் & காம்போனன்ட்ஸ் லிமிடெட், கும்மிடிப்பூண்டி.

இந்நிறுவனத் தொழிலாளர்களால் எழுப்பப்பட்ட 1994-95 கணக்காண்டிற்கான போனஸ் பிரச்சினை தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன் ஏற்பட்ட தொழிற்தகராறு சட்டப்பிரிவு 12(3) ஒப்பந்தத்தினால் தீர்த்து வைக்கப்பட்டது. இதனால் 650 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

24. எல்காட் நியூ எரா டெக்னாலஜி லிமிடெட், ஓசூர்.

தொழிலாளர்களது போனஸ் பிரச்சினை 5-10-1995 அன்று தொழிலாளர் தனித் துணை ஆணையர் அவர்களால் தீர்த்து வைக்கப்பட்டது.

25. எல்காட் நியூ எரா டெக்னாலஜி லிமிடெட், ஓசூர்

பல கோரிக்கைகளை முன்வைத்து 11-6-1995 முதல் தொழிலாளர்களால் தொடரப்பட்ட வேலைநிறுத்தம் 5-10-1995 அன்று தொழிலாளர் தனித் துணை ஆணையர் முன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக 8-10-1995 முதல் கைவிடப்பட்டது. இதனால் 143 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

26. காதர் ஸ்பின்னர்ஸ் லிட்., கோவிலூர்.

தொழிலாளர்கள் 1993-94 ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் பிற கோரிக்கைகளை முன்வைத்து 7-11-1994 முதல் வேலை நிறுத்தம் செய்ததைத் தொடர்ந்து நிர்வாகம் 10-11-1994 முதல் கதவடைப்பு செய்தது. இதில் தனித் துணை ஆணையர் தலையிட்டு அறிவுரை வழங்கியதன் பேரில் நிர்வாகம் 9-1-1995 முதல் கதவடைப்பை விலக்கிக் கொண்டது.

27. பால் இண்டஸ்ட்ரீஸ், ஒசூர்

பொதுக் கோரிக்கைகளை முன்வைத்து தொழிலாளர்கள் 16-11-95 முதல் வேலை நிறுத்தம் செய்தனர். 6-12-95 முதல் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது. 9-12-95 அன்று தனித் துணை ஆணையர் முன்னிலையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலமாக 130 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர்.

2. இத்திட்டத்தின்கீழ் பின்வரும் உதவிகளைத் தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தார்களும் பெறுவதற்கான வகை செய்யப்பட்டுள்ளது:—

1. மருத்துவ உதவி	:	மருத்துவப் பொருட்களும் மற்றும் சிகிச்சையுமாக அளித்தல்
2. உடல் நலமின்மைக்கான உதவி	:	பணமாக அளித்தல்
3. நீடித்த உடல்நலமின்மைக்கான உதவி	:	பணமாக அளித்தல்
4. பேறுகால உதவி	:	பணமாக அளித்தல்

5. தற்காலிகமாக இயலாமையுற்றோருக்கு : பணமாக அளித்தல்

6. நிரந்தரமாக இயலாமையுற்றோருக்கு உதவி : பணமாக அளித்தல்

7. சார்ந்துள்ளோர்கள் நல உதவி : பணமாக அளித்தல்

8. இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை : பணமாக அளித்தல்

9. உடல் நலமின்மைக்கான கூடுதல் உதவி: பணமாக அளித்தல்

3. இத்திட்டத்தின்கீழ் மருத்துவ வசதி அளிக்கும் பொறுப்பு தமிழ்நாடு அரசின் கடமையாகும்.

தற்போது இத்திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தில் சென்னை அயனாவரம், மதுரை, கோவை, வேலூர், சேலம், சிவகாசி மற்றும் ஒசூர் ஆகிய ஏழு இடங்களில் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனைகள் உள்ளன. மேலும் 147 நிலையான மற்றும் 6 நடமாடும் மருந்தகங்களும் மற்றும் 2 பயன்பாட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட மருத்துவம்னைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

1. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, அயன்புரம், சென்னை-23 : 616

2. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, கோவை : 500

3. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை : 209

4. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர் : 50

5. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, சேலம் : 50

6. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, சிவகாசி : 50

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

7. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, ஓசூர்.	:	50
8. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை இணைப்புகளில்	:	136
9. அரசு மருத்துவமனைகளில் ஒதுக்கப்பட்டுள்ளவை	:	266
10. தனியார் மருத்துவமனைகளில் ஒதுக்கப்பட் பட்டுள்ளவை	:	87

155 தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி நிலையான மற்றும் நடமாடும் மருந்தகங்களில் 52 மருந்தகங்கள் காப்புறுதிக் கழகத்தினால் கட்டப்பட்ட கட்டிடங்களில் இயங்குகின்றன. இரண்டு தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்கள் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்திற்கு சொந்தமான நிலத்தில் மாநில அரசால் கட்டப்பட்ட கட்டிடங்களிலும் மற்றும் இரண்டு மருந்தகங்கள் மாநிலத்திற்குச் சொந்தமான கட்டிடங்களிலும் இயங்குகின்றன.

தனியார் வாடகைக் கட்டிடங்களில் இயங்கும் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்கள் சொந்தக் கட்டிங்களில் இயங்குவதற்கான கட்டிடங்கள் கட்டித் தர தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகம் ஒப்புக் கொண்டு அதற்கான மனைகள், தேர்ந்தெடுக்கும் வேலைகள் மற்றும் மனைகள் ஆர்ஜிதம் செய்யும் பணிகள் முன்னேற்றம் கண்டுள்ளன.

4. இத்திட்டத்தின் மூலம் காப்புறுதி செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை (31-3-95 அன்று) தொடர்பான விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. இதில் அடங்கிய காப்பீட்டு நபர்கள்/ குடும்பப் பிரிவுகளின் எண்ணிக்கை	:	9,44,100
2. பயன் அடைந்தோரின் மொத்த எண்ணிக்கை	:	36,63,108

5. இத்திட்டத்தின் கீழ் மருத்துவ வசதிக்காக செலவிடப்படும் மொத்தத் தொகையை புதுதில்லி, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகமும், தமிழ்நாடு மாநில அரசும், மாநில முதன்மைக் கணக்காயர் அளிக்கும் வருடாந்திர தணிக்கைச் சான்றிதழின் அடிப்படையில் முறையே 7:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

6. 1-4-94 முதல் முழுமையாக மருத்துவ வசதிக்காக, ஒவ்வொரு தொழிலாளிக்கும் அளிக்கப்பட்ட முழுமையான மருத்துவ வசதிக்கான தொகையை ரூ.345/-இல் இருந்து ரூ.410/-ஆக உயர்த்தி புதுதில்லி, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகம் உத்தரவிட்டுள்ளது. இதில் ரூ.130/-மருந்துக்கான செலவு மற்றும ரூ.280/-நிர்வாக செலவுக்காக அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் 1-4-1990 முதல் புதிதாக துவக்கப்படும் மருந்தகங்களுக்கான முழுச்செலவினத்தையும் முதல் மூன்றாண்டுகளுக்கு மட்டும் முழுமையாக ஈட்டுறுதி கழகம் ஏற்றுக்கொள்ள இசைவு தந்துள்ளது. மற்றும் 1-4-80 முதல் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்தினால் கட்டப்பட்டு அதில் குடியிருக்கும் அரசு அலுவலர்கள் இருக்கும் குடியிருப்புகள் மூலம் கிடைக்கக் கூடிய வாடகை தொகைகளும் ஒப்புக் கொள்ளப்பட்ட விகிதத்தின் மேற்படி உச்ச வரம்பிற்கு வெளியே பகிர்ந்து கொள்வதாகும். மற்றும் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்திற்கு மாநில அரசால் செலுத்தப்பட வேண்டிய வாடகைத் தொகைக்கான மொத்த செலவீனத்தில் 7/8 பங்கினை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகம், 1/8 பங்கினை மாநில அரசும், 1-4-90 முதல் ஏற்றுக் கொண்டுள்ளன.

7. 1992-93, 1993-94, 1994-95 மற்றும் 1995-96 ஆம் ஆண்டுகளின் சாதனைகள்

1992-93

1. இரண்டு மருத்துவர்கள் வகை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகம் ஒன்று 16-8-92 அன்று செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் மறைமலை நகரில் துவங்கப்பட்டு இயங்கி வருகின்றது.

2. நான்கு மருத்துவர்கள் வகை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகம் ஒன்று 16-8-92 அன்று நீலகிரி மாவட்டம் உதகமண்டத்தில் துவங்கப்பட்டு இயங்கி வருகின்றது.

3. காமராசர் மாவட்டம் வடக்கு வெங்கநல்லூர் பகுதியைச் சேர்ந்த 130 காப்பீட்டு நபர்களை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகம் இராசபாளையத்துடன் இணைந்து 1-2-93 முதல் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

1996 ஆகஸ்ட் 20]

4. 160 காப்பீட்டு நபர்களை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகம் பறவை என்பதுடன் *16-2-93* முதல் இணைக்கப்பட்டதன் மூலம் மதுரை மாவட்டம், சித்தாலங்குடி பகுதிக்கு திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

5. 1138 காப்பீட்டு நபர்களை வாணியம்பாடி மற்றும் பேரணாம்பட்டு தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்களுடன் *16-2-93* முதல் இணைந்ததன் மூலம் பேராணாம்பட்டு சுற்றிலும் உள்ள பகுதிக்கு தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. *870* காப்பீட்டு நபர்களை விருதுநகர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்துடன் *1-3-93* முதல் இணைத்து 'காமராசர் மாவட்டம் பாவாலி மற்றும் சத்திரரெட்டிப்பட்டி ஆகிய பகுதிகளுக்கு திட்டம் விரிவு செய்யப்பட்டுள்ளது.

1993-94

1. ஒரு டாக்டர் வகை நிலையான தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகம் ஒன்று ஆரல்வாய்மொழி, கன்னியாகுமரி மாவட்டத்தில் *15-10-93* முதல் *756* காப்பீட்டு நபர்களுடன் இயங்கி வருகின்றது.

2. 4730 காப்பீட்டு நபர்கள், பல்லாவரம் மற்றும் தாம்பரம் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைக்கப்பட்டதன் வாயிலாக கடப்பேரி, சென்னை ஏற்றுமதி அபிவிருத்தி மண்டலம் (சென்னை-எம்.ஜி.ஆர். மாவட்டம்) இத்திட்டத்தில் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

3. 160 காப்பீட்டு நபர்கள், மதுக்கரை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகத்துடன் *1-12-93* முதல் இணைத்ததன் மூலம் நாவக்கரை மற்றும் கே.ஜி. சாவடி (கோயம்புத்தூர் மாவட்டம்) ஆகிய பகுதிகளுக்கு திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது.

1994-95

1. அரசாணை எண் *1137*/தொ.ம.வே.வா. துறை நாள் *6-5-80*-ன் படி *618* காப்பீட்டு நபர்கள் கொண்டு ஒரு மருத்துவர் வகை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி நிலை மருந்தகம் செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டம் கொடுங்கையூரில் *20-5-94* அன்று துவங்கப்பட்டுள்ளது.

[*1996 ஆகஸ்ட் 20*

2. அரசாணை எண் 135/தொ(ம)வே.வா. துறை நாள் 12-7-94-ன் படி 2700 காப்பீட்டு நபர்கள் கொண்டு இரண்டு மருத்துவர் வகை தொ.அ.ஈ. நிலை மருந்தகம் கும்மிடிபூண்டியில் 1-6-94 அன்று துவங்கப்பட்டுள்ளது.

3. அரசாணை எண் 20/தொ(ம)வே.வா.துறை நாள் 10-2-93-ன்படி 1430 காப்பீட்டு நபர்கள் கொண்டு ஒரு மருத்துவர் வகை தொ.அ.ஈ. நிலை மருந்தகம் மதுரை மண்டலம் குளத்தூரில் 10-6-94 அன்று துவங்கப்பட்டுள்ளது.

4. அரசாணை எண் 19/தொ(ம)வே.வா. துறை நாள் 10-2-93-ன்படி 850 காப்பீட்டு நபர்கள் கொண்டு ஒரு மருத்துவர் வகை தொ.அ.ஈ. நிலை மருந்தகம் தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறையில் 16-2-95 அன்று துவங்கப்பட்டுள்ளது.

5. அரசாணை எண் 216/தொ(ம) வே.வா. துறை நாள் 1-11-94-ன் படி 50 படுக்கை வசதி கொண்ட தொ.அ.ஈ. மருத்துவமனை ஒன்று ஓசூரில் 19-2-95 முதல் துவங்கப்பட்டு இயங்கி வருகின்றது.

6. 160 காப்பீட்டு நபர்கள், அரசாணை எண் 26/தொ(ம)வே.வா. துறை நாள் 15-2-93ன்படி அம்மாபேட்டை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகத்துடன் இணைந்ததன் மூலம் 16-5-94 முதல் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

7. 820 காப்பீட்டு நபர்களை, அரசாணை எண் 27/தொ(ம)வே.வா. துறை நாள் 15-2-93-ன்படி, ஆரல்வாய்மொழி தொ.அ.ஈ. மருந்தகத்துடன் இணைத்ததன் மூலம் 16-8-94 முதல் கன்னியாகுமரி மாவட்டம் செண்பகராமன் புதூருக்கு திட்டம் விரிவு செய்யப்பட்டது.

8. அரசாணை எண். 234/தொ(ம)வே.வா. துறை நாள் 29-11-94-ன் படி 400 காப்பீட்டு நபர்களை தூத்துக்குடி, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகத்துடன் இணைத்ததன் மூலம் 16-2-94 முதல் தூத்துக்குடி புறநகர் பகுதிகளுக்கு திட்டம் விரிவு செய்யப்பட்டது.

9. அரசாணை எண் 191/தொ(ம)வே.வா. துறை நாள் 20-9-94-ன் படி 300 காப்பீட்டு நபர்களை அம்பாசமுத்திரம் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகத்துடன் இணைத்ததன் மூலம் 16-2-95 முதல் அம்பாசமுத்திரம் பகுதிக்கு திட்டம் விரிவு செய்யப்பட்டது.

1996 ஆகஸ்ட் 20]

10. அரசாணை எண் இ 192/தொ.(ம)வே.வா. துறை நாள் 20-9-94-ன் படி 205 காப்பீட்டு நபர்களை அம்பத்தூர் மற்றும் கொரட்டூர் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைந்ததன் மூலம் சென்னை-எம்.ஜி.ஆர். மாவட்டம் அயனம்பாக்கம் பகுதிக்கு 1-2-95 முதல் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டம் விரிவு செய்யப்பட்டது.

1995-96 (நவம்பர் '95 முடிய)

1. அரசாணை எண் 185/தொ(ம) வே.வா. துறை நாள் 13-9-94-ன்படி, 1000 காப்பீட்டு நபர்கள் கொண்டு ஒரு மருத்துவர் வகை மருந்தகம், சென்னை மண்டலம் பூந்தமல்லியில் 1-9-95 முதல் துவங்கப்பட்டு இயங்கி வருகின்றது.

2. அரசாணை எண் 208/தொ(ம)வே.வா. துறை நாள் 19-10-94-ன்படி 1-9-95 முதல் 1350 காப்பீட்டு நபர்களைக் கொண்டு ஒரு மருத்துவர் வகை மருந்தகம் கோயம்புத்தூரில் நாரணபுரத்தில் இயங்கி வருகின்றது.

3. அரசாணை எண்.226/தொ(ம)வே.வா. துறை நாள் 17-11-94-ன்படி 16-9-95 முதல் 1700 காப்பீட்டு நபர்கள் கொண்டு, ஒரு மருத்துவர் வகை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகம், சேலம் மண்டலம் தர்மபுரியில் துவங்கப்பட்டு இயங்கி வருகிறது.

4. அரசாணை எண் 154/தொ(ம)வே.வா. துறை நாள் 27-7-95-ன்படி 1100 காப்பீட்டு நபர்களைக் கொண்டு ஒரு மருத்துவர் வகை மருந்தகம் மதுரை மண்டலம் எட்டையபுரத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம்மருந்தகம் துவக்கப்பட புதுதில்லி தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்தின் அறிவிப்பு ஆணை எதிர்ப்பார்க்கப்படுகிறது.

5. அரசாணை எண் 206/தொ(ம)வே.வா துறை நாள் 19-10-94-ன்படி 1500 காப்பீட்டு நபர்கள் கொண்ட மருந்தகத்திற்கு மதுரை மண்டலம், ஆண்டிப்பட்டியில் அனுமதி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இம்மருந்தகம் துவங்கப்பட புதுதில்லி தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்தின் அறிவிப்பு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

6. அரசாணை எண் 207/தொ(ம)வே.வா. துறை நாள் 19-10-94-ன்படி, 2000 காப்பீட்டு நபர்கள் கொண்ட மருந்தகம் சேலம், இளம்பிள்ளையில் அமைக்கப்பட அனுமதி ஆணை

LEGISLATIVE ASSEMBLY ... TRUTH ALONE TRIUMPHS

வழங்கப்பட்டுள்ளது. மருந்தகம் துவக்கப்பட புதுதில்லி தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்தின் அறிவிப்பு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

7. அரசாணை எண் 86/தொ(ம)வே.வா. துறை நாள் 26-5-95-ன்படி 890 காப்பீட்டு நபர்கள், திருச்சி மற்றும் புலியூர் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்களுடன் இணைத்து மாயனூர் மலைவாசி பகுதிகளுக்கு திட்டத்தை விரிவு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளன. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்தின் அறிவிப்பு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

8. அரசாணை எண் 137/தொ(ம)வே.வா. துறை நாள் 19-7-95-ன்படி, 115 காப்பீட்டு நபர்களை, பேட்டை(நிலை) தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகத்துடன் இணைத்து, திருநெல்வேலி மாவட்டம் வெள்ளான்குளம் மற்றும் அபசேபகப்பட்டி பகுதிகளுக்கு திட்டத்தை விரிவு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்தின் அறிவிப்பு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

8. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டத்தின் வளர்ச்சித் திட்டங்கள்:

1. அரசாணை எண் 174/தொ(ம)வே.வா. துறை நாள் 29-5-94-ன் மூலம், மாநிலத்தில் சிறந்த முறையில் பராமரிக்கப்படும் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை மற்றும் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகத்திற்கு வெகுமதி வழங்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனால், அவ்விடங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அவர் தம் மருத்துவமனை (அ) மருந்தகங்களை மாநில மற்றும் தேசிய அளவில் சிறந்த வகையாக கொண்டு வந்திட இயலும்.

(2) அரசு மருத்துவமனைகளுக்கு தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டப் பயன்பெறுவோர் பரிந்துரைக்கப்படும்பொழுது அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்களுக்கு இணையாக நடத்திட தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்தின் ஒப்புதலை பெறும் பொருட்டு அரசிற்கு ஆணை வேண்டி எழுதப்படுகின்றது.

1996 ஆகஸ்ட் 20]

(3) தீப்புண்சிகிச்சை பிரிவு, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்தவமனை, சிவகாசி

50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை சிவகாசியில் 5 படுக்கைகளை ஒதுக்கி தீப்புண் சிகிச்சை பிரிவு அமைத்து மருத்துவ வசதி அளித்திட அனுமதி வேண்டி உரிய கருத்துரு அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான அரசாணை அரசு நிலை ஆணை எண் 14 தொ.ம.வே.வா. நாள் 20-2-96ல் வெளியிடப்பட்டது.

(4) சிவகாசி தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனையில் இரத்த வங்கி தொடங்கிடல்

சிவகாசி தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனையில் இரத்த வங்கி ஒன்று தொடங்கிடவும் ஒரு கருத்துரு அரசிற்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் அரசு நிலை ஆணை எண் 14 தொ.ம.வே.வா நாள் 20-2-96ல் வெளியிடப்பட்டது.

9. **இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படும் மொத்த தொகை கீழ்க்கண்ட தலைப்புகளில் குறிக்கப்படுகின்றன.**

பெரும்பான்மை தலைப்பு:

"2210-மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம்-01-நகர்ப்புற சுகாதாரப் பணிகள் ஆங்கிலமுறை மருத்துவம்-102 தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டம் 1 திட்டத்தில் சேராதது"

சித்த மருத்துவம்:

"2210-மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம்-02-நகர்ப்புற மருத்துவப் பணிகள்-ஏனைய மருத்துவ முறைகள்-104 சித்த மருத்துவ முறை-1 திட்டத்தில் சேராதது-ஏஇ தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்கள்"

மேற்குறிப்பிட்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் 1995-96 மற்றும் 1996-97 ஆம் வருடத்திற்கான வரவு செலவு மதிப்பீடுகளை சித்த மருத்துவம் உள்பட கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 20

(ரூபாய் ஆயிரங்களில்)

1995-96 வரவு செலவு திட்ட மதிப்பீடு	:	404816
1995-96 வரவு செலவு திருத்திய மதிப்பீடு	:	414179
1995-96 வரவு செலவு திட்ட மதிப்பீடு	:	460184

10. வரவினங்கள்:

"2210 மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம்-01. நகர்ப்புற சுகாதாரப் பணிகள்-102 தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டத்திலிருந்து கிடைக்கும் வரவுகள்"

என்ற தலைப்பின்கீழ் கிடைக்கும் வரவுகள் ஈட்டுறுதிக் கழகத்தினால் இத்திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் செலவு ஆகும் தொகைகளுக்கான வழங்கப்படும் வரவுத் தொகைகள் ஆகும். மேற்படி ஈட்டுறுதிக் கழகத்தின் மூலம் பெறும் பங்குத் தொகையானது ஆண்டு செலவு அறிக்கையின்மேல் மாநில முதன்மை கணக்காயரால் வழங்கப்படும் சான்றிதழின் பேரில் கொடுக்கப்படுவது ஆகும்.

இதைத் தவிர உபயோகமில்லாத சாமான்கள் முதலியவைகளை ஏலத்தின்மூலம் விற்று அதனால் கிடைக்கும் தொகைகளையும் மற்றும் தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கட்டிடங்களில் வசிக்கும் மருந்தகங்களில் பணிபுரியும் அரசு அலுவலர்கள் மூலம் பெறப்படும் வாடகைத் தொகைகளையும் காப்புறுதிக் கழகமும் மாநில அரசும் செலவினங்களை எந்த விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனவோ, அதே விகிதத்தில் வரவுகளையும் பகிர்ந்து கொள்கிறது. மேற்குறிப்பிட்டுள்ள வரவுகள் தலைப்புகளின் கீழ் 1995-96 மற்றும் 1996-97 ஆண்டுகளுக்கான மதிப்பீடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (உத்தேசமானது)

(ரூபாய் ஆயிரங்களில்)

வரவுகள் 1995-96 திட்ட மதிப்பீடு	:	ரூ.200300
வரவுகள் 1995-96 திருத்திய மதிப்பீடு	:	ரூ.204000
வரவுகள் 1996-97 திட்ட மதிப்பீடு	:	ரூ.224500

1996 ஆகஸ்ட் 20]

11. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டம் (வரவு செலவு திட்ட ஒதுக்கீடு)

(ரூபாய் ஆயிரங்களில்)

திட்டத்தில் சேராதது	திருத்திய மதிப்பீடு 1995-96	திட்ட மதிப்பீடு 1996-97
2210-மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் 01. நகர்ப்புற சுகாதாரப பணிகள் ஆங்கில முறை மருத்துவம்-102 தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டம்-1 திட்டத்தில் சேராதது.	*413714*	*459666*
2210-மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம்-02. நகர்ப்புற சுகாதாரப் பணிகள்-ஏனைய மருத்துவமுறைகள்-104. சித்த மருத்துவம் 1. திட்டத்தில் சேராதது ஏஇ. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்கள்	*465*	*518*
2230-ஏ தொழிலாளர் நலன் ஏஇ தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பு	இல்லை	இல்லை
மொத்தம் ..	*414179*	*460184*

12. நிதி பெறப்படும் ஆதாரம் (ரூபாய் ஆயிரங்களில்)

விரிவான தலைப்பு (1)	உண்மையில் ஆன செலவு 1994-95 (2)	திட்ட மதிப்பீடு 1995-96 (3)	திருத்திய மதிப்பீடு 1995-96 (4)	திட்ட மதிப்பீடு 1996-97 (5)
2210-மருத்துவம் மற்றும் சுகாதாரம்-01. நகர்ப்புற சுகாதாரப் பணிகள்-ஆங்கில முறை மருத்துவம்-102 தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டம்-1 திட்டத்தில் சேராதது.	367375	404344	413714	459666

(1)	(2)	(3)	(4)	(5)
2210–மருத்துவம் மற்றும் பொதுசுகாதாரம்–02. நகர்ப்புற சுகாதாரப் பணிகள்–ஏனைய மருத்துவ முறைகள்–104. சித்த மருத்துவம்–1. திட்டத்தில் சேராதது–ஏ.ஈ.தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள்.	373	472	465	51[illegible]
2230–தொழிலாளர் நலம் எஎப்ட தொழிலாளர் சமூகப் பாதுகாப்பு–எபி தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்திற்கு செலுத்தப்பட்ட அதிகப்படி நோய் நலன் செலவின் பங்கு	இல்லை	இல்லை	இல்லை	இல்லை
மொத்தம்	367748	404816	414179	460184

13. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டத்தின் நிகழ்ச்சி மற்றும் செயல்கள் வகைப்பாடு

(ரூபாய் ஆயிரங்களில்)

விரிவான கணக்குத் தலைப்பு (1)	உண்மையில் ஆன செலவு 1994-95 (2)	திட்ட மதிப்பீடு 1995-96 (3)	திருத்திய மதிப்பீடு 1995-96 (4)	திட்ட மதிப்பீடு 1996-97 (5)
1. எஎ. நிர்வாகப் பிரிவு	6382	7305	7575	8206
2. எசி. நகர்ப்புற மருத்துவமனை தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, அயனாவரம்.	42203	46844	48658	53114
3. எடி. ஊரக மருத்துவமனை, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை.	28860	33754	38455	43751
4. எஇ. ஊரக மருத்துவமனை, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை.	10464	12574	12935	15482

1996 ஆகஸ்ட் 20]

(1)	(2)	(3)	(4)	(5)
5. எஎப். தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி கழகத்திடமிருந்து மொத்தமாக பெறக் கூடிய செலவு	1401	1602	1602	1613
6. எஜி.தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி திட்டகாப்பீட்டு நபர்கள் மற்றும் குடும்பத்தினர்களுக்காகும் செலவு	258171	277422	278298	308420
7. எ.கெ.எச். மண்டல அலுவலகங்கள்	4649	5220	5580	6056
8. எ.எல். நோய்த்தடுப்பு திட்டம் செயல்படுத்துதல்	315	407	422	465
9. எ.எம். ஊரக மருத்துவமனை, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர்.	3925	4825	5228	6263
10. எ.ஓ. ஊரக மருத்துவமனை, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, சேலம்.	5030	5595	6024	6533
11. எபி. ஊரக மருத்துவமனை, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, சிவகாசி.	4400	5106	5367	5702
12. எக்யூ. ஊரக மருத்துவமனை, தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை, ஒசூர்.	1575	3670	3570	4061
13. 104-சித்த மருத்துவம் எஇ. தொழிலாளர் அரசினர் ஈட்டுறுதி மருந்தகங்கள்	373	472	465	518
மொத்தம்	367748	404816	414179	460184

53-366—24a

14. கொள்குறி வகைப்பாடு மற்றும் உள்தலைப்பு கணக்கு வாரியாக

(ரூபாய் ஆயிரங்களில்)

உள் தலைப்பு	உண்மையில் ஆன செலவு 1994-95	திட்ட மதிப்பீடு 1995-96	திருத்திய மதிப்பீடு 1995-96	திட்ட மதிப்பீடு 1996-97
(1)	(2)	(3)	(4)	(5)
1. 01. ஊதியங்கள்	*128152*	*140959*	*142211*	*154980*
2. 02. கூலி	*73*	*102*	*117*	*117*
3. 03. அகவிலைப்படி	*107116*	*132944*	*142515*	*173094*
4. 04. பயணச் செலவுகள்	*698*	*643*	*749*	*786*
5. 05. அலுவலகச் செலவுகள்	*8456*	*6793*	*9800*	*9458*
6. 06. வாடகை வீதம் மற்றும் வரிகள்	*3644*	*3011*	*4038*	*3917*
7. 10. பங்களிப்பு	–	–	*1*	*1*
8. 18. பராமரிப்பு	–	–	*1*	*1*
9. 19. இயந்திரம் மற்றும் கருவிகள்	*1021*	*522*	*695*	*585*
10. 21. மோட்டார் வாகனங்கள்	*260*	*72*	*72*	*72*
11. 33. தொழில் மற்றும் சிறப்பு சேவைகளுக்காக வழங்கும் தொகை	*1402*	*1604*	*1604*	*1615*
12. 34. ஏனைய செலவுகள்	*210*	*32*	*32*	*32*
13. 42. சேவை அல்லது ஒப்பிய பொறுப்பு செலவுகள்	–	*1*	*1*	*1*
14. 45. பெட்ரோல், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்	*293*	*312*	*312*	*328*
15. 46. துணி, டென்டேஜ் மற்றும் கிடங்கு	*335*	*339*	*375*	*400*
16. 47. கிடங்கு மற்றும் கருவிகள்	*2912*	*3016*	*3016*	*3166*
17. 49. பண்டிகை முன்பணம்	*3135*	*3686*	*3658*	*4865*

1996 ஆகஸ்ட் 20]

(1)	(2)	(3)	(4)	(5)
18. 59. பரிசுகள் மற்றும் விருதுகள்	–	–	–	1
19. 66. மருந்துகள்	106601	109460	101837	110194
20. 67. ஊட்டுதல்/உணவுச் செலவுகள்	3860	3545	4270	4484
21. 68. புத்தகச் செலவு/ ஸ்லேட்டுகள் முதலியன	151	6	3	4
22. 72. பயிற்சி (பயணப்படி)	–	–	30	33
23. 99. பல்பொருள்	2598	1501	2500	2500
24. 77. குறைவுகள் பிடித்தங்கள்	(--)3169	(--)3732	(--)3658	(--)4731
மொத்தம்	367748	404816	414179	465903

இணைப்பு-27

தமிழ்நாடு வட்டாரத்தில் 1952ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி, பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் செயல்முறை

1. 1952ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைகள் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் வகுக்கப்பட்ட 3 திட்டங்களில் 1952ம் ஆண்டுத் தொழிலாளர் வைப்பு நிதித் திட்டமும் ஒன்று. இது 1-11-1952ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது. இச்சட்டம் ஜம்மு காஷ்மீர் மாநிலம், அசாம் மாநிலத்தில் தேயிலைத் தோட்டங்கள் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்கு கட்டாய பங்குத் தொகை, வருங்கால வைப்பு நிதியினை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதில் தொழிலாளரும், தொழிலதிபரும் பங்குத் தொகை செலுத்த வேண்டும். தொடக்கத்தில், இச்சட்டம் ஆறு பெருந்தொழில்கள் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டது. படிப்படியாக, இது மேலும் பல தொழில்களுக்கு ஏனைய நிறுவனங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. இன்று, இத்திட்டம் 177 தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கும் பல்வகையான நிறுவனங்களுக்கும் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளது.

வயது முதிர்வு ஓய்வு, பணி ஓய்வு, நிரந்தரமான மற்றும் முற்றிலும் ஊனமுற்றோர், பணியிலிருந்து ஓய்வுபெறும் முன்னரே இறக்க நேரிடுதல் மற்றும் இது போன்ற பல நிலையில் உள்ளவர்களுக்கு அவர்கள் செலுத்தும் வருங்கால வைப்பு நிதியிலிருந்து மாதாந்திர ஓய்வு ஊதியம் வழங்கும் திட்டம்குறித்து ஒரு சட்டம் அமுல்படுத்துவதற்கு தொழிலாளர் குடும்ப ஓய்வு ஊதியத்திட்டத்தை குடியரசுத்தலைவர் அவசரச்சட்டம் மூலம் 16-11-95 அன்று வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து 1971-ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் கைவிடப்பட்டது.

2. நிதியினை நிருவகித்தல்:

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், குடும்ப ஓய்வூதியத் திட்டம், ஈ.டி.எஸ்.ஐ திட்டம் ஆகிய இம்மூன்று திட்டங்களை மத்திய பொறுப்பாட்சியால் நிர்வகிக்கப்படுகிறது. இதை மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட தலைவர், துணைத் தலைவர், மத்திய வருங்கால வைப்புநிதி ஆணையர் (பதவி நிலையால்) மத்திய அரசின் 5 பிரதிநிதிகள், மாநில அரசுகளின் 15 பிரதிநிதிகள், தொழிலாளர் அமைப்புகளின் 10 பிரதிநிதிகள், தொழிலதிபர் அமைப்புகளின் 10 பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்ட முத்தரப்புக் குழுவாகும். தற்போதுள்ள மத்திய பொறுப்பாட்சியர் குழு 28-6-1990-ஆம் ஆண்டு மத்திய அரசால், மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது.

3. பொருந்தும் தன்மை:

இச்சட்டம், இத்திட்டங்கள் விதித்துறைகள் 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள்/ நிறுவனங்களுக்கு அல்லது மத்திய அரசு குறிப்பிட்டுள்ள பல்வகை நிறுவனங்களுக்கு பொருந்தும். 20 தொழிலாளர்களைப் பணியமர்த்தியுள்ள புதிய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் மூன்று ஆண்டுகளுக்கு இச்சட்டம் பொருந்தாது. 50 தொழிலாளர்களுக்கு குறைவாகப் பணி அமர்த்தியுள்ள கூட்டுறவு சங்கங்களின் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கும், மின்சக்தி உதவி இன்றிச் செயல்படுபவையும் கட்டுப்பாட்டிலுள்ள அல்லது அதற்குச் சொந்தமான அல்லது மத்திய/ மாநில அரசின் சட்டத்தால் நிறுவப்பட்ட நிறுவனங்களுக்கு (ஆனால்

1996 ஆகஸ்ட் 20]

இந்த நிறுவனங்களில் பணியாளர்கள் இத்தகைய பயன்களைப் பெற்று, அனுபவித்து வரவேண்டும்) இச்சட்டம் பொருந்தாது. இச்சட்டத்தின் விதித்துறைகள் கீழ் வராத தொழிற்சாலைகள்/ நிறுவனங்கள், அவற்றின் பெரும்பான்மை தொழிலாளர்களின் ஒப்புதலுடன் தானாக முன்வந்து இச்சட்டத்தின்கீழ் கொண்டு வருமாறு கோரலாம்.

4. பங்குத் தொகை விதம்:

இச்சட்டத்தின்கீழ் ஒவ்வொரு தொழிலாளிக்கும் தொழிலதிபர் வழங்கும் பங்குத்தொகை தொழிலதிபரின் பங்குத் தொகை ஆகிய இரண்டும் சேர்ந்து, அடிப்படைக் கூலியில் 81.3% அகவிலைப்படி (உணவுச் சலுகைக்கான ரொக்க மதிப்பு உட்பட) தொடர்படி எவையேனும் வழங்கப்படின், அதனையும் சேர்ந்து பங்குத்தொகையாக வழங்கவேண்டும். 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணியமர்த்திய, குறிப்பிடப்பட்டுள்ள 99 தொழில்/தொழில் வகையில் ஈடுப்பட்டுள்ள நிறுவனங்கள்/ தொழிற்சாலைகளைப் பொறுத்த மட்டில் 1-6-1989-ஆம் நாளிலிருந்து அதிகரிக்கப்பட்ட பங்குத் தொகை 10% ஆகும்.

5. நிர்வாக கட்டணங்கள்:

இத்திட்டத்தின் கீழ் வருகின்ற நிறுவனங்களின் தொழிலதிபர்களிடமிருந்து, உறுப்பினர்களின் மொத்த சம்பளத்தில் (இதன் அடிப்படையில் வருங்கால வைப்புநிதி வசூலிக்கப்படுகிறது) 0.65 சதவீதம் என்ற வீதத்தில் நிர்வாகக் கட்டணம் வசூலிப்பதன் மூலம், இந்நிதியை நிருவகிப்பதற்கான செலவு செய்யப்படுகிறது. விலக்களிக்கப்பட்ட நிறுவனங்கள் எந்த மொத்த கூலியில் வருங்கால வைப்புநிதி வசூலிக்கப்படுகின்றதோ அந்த மொத்த கூலித் தொகையில் 0.09% என்ற வீதத்தில் ஆய்வுக் கட்டணம் செலுத்த வேண்டும்.

6. 1952-ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் உறுப்பினராதல்:

6.1 மாதச் சம்பளம் 5000 ரூபாய்க்கு மிகைப்படாத தொழிலாளர்கள் அனைவரும் 1-10-1994-ஆம் நாளிலிருந்து தொழிற்சாலை/நிறுவனத்தில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து வருங்கால வைப்பு நிதித்திட்டத்தில்

உறுப்பினராக வேண்டும். முன்னர் குறிப்பிடப்பட்ட குறைந்த பணிக்கால அளவிற்கு உட்பட்டு அனைத்து தொழிலாளர்களிடமிருந்தும் வருங்கால வைப்புநிதி பிடிக்கப்பட வேண்டும்.

6.2. இத்திட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் சந்தாதாரர்கள் *(1952–ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்டம்):*

இவ்வட்டாரத்தில் *31-12-1995* நாள் வரை இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள நிறுவனங்கள் சந்தாதாரர்களின் விவரம் வருமாறு:-

	விலக்களிக்கப் பட்டவை	விலக்களிக்கப் படாதவை	மொத்தம்
நிறுவனங்களின் எண்ணிக்கை	*434*	*31,579*	*32,013*
சந்தாதாரர்களின் எண்ணிக்கை *(ரூபாய் இலட்சத்தில்)*	*4.83*	*23.69*	*28.52*

· 1-1-1995 முதல் 31-12-1995ம் நாள் வரையிலான கால அளவில் 2594 நிறுவனங்கள் இச்சட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

6.3. வட்டாரக்குழு:

1952–ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு வட்டாரக் குழுவை அமைக்க வகை செய்கின்றது. இதில் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலத்துறை செயலாளர் தலைவராவார். இதில் தொழிலாளர் நல ஆணையரும், நிதித்துறை துணைச் செயலாளரும் மாநில அரசின் பிரதிநிதிகளாக உறுப்பினர்களாக இருப்பர். இக்குழுக்கள் மத்திய பொறுப்பாட்சியர் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

வட்டாரக் குழுமத்திய குழுமத்திற்குப் பின்வரும் பிரச்சினைகளில் அறிவுரை வழங்குகின்றது.

1. மத்திய குழு அவ்வப்போது வட்டாரக் குழுவிற்கு அனுப்புகின்ற விஷயங்கள் குறித்து.

1996 ஆகஸ்ட் 20]

2. பொதுவாக மாநிலத்தில் இத்திட்டத்தின் நிருவாகம் தொடர்பான அனைத்து விஷயங்கள் அதிலும் குறிப்பாக--

(அ) வருங்கால வைப்பு நிதி பங்குத் தொகைகள், ஏனைய கட்டணங்களின் வசூல் முன்னேற்றம்

(ஆ) வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணல்

(இ) உரிமைக் கோரிக்கைகளை விரைந்து தீர்த்து வைத்தல்

(ஈ) இந்நிதி உறுப்பினர்களுக்கு ஆண்டு கணக்குகளை ஒப்படைத்தல்

(உ) திரும்பப் பெறக்கோரும் தொகைகளுக்கு விரைந்து அனுமதி வழங்குதல்.

6.4 துணை வட்டார அலுவலகங்கள்:

சென்னையில் உள்ள வட்டார அலுவலகத்துடன், கூடுதலாக சென்னை, செங்கை-அண்ணா, வடஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை - சம்புவராயர் மத்திய அரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்டு பாண்டிச்சேரி மாநிலம் ஆகியவற்றிலுள்ள சந்தாதாரர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு தமிழ்நாடு வட்டாரத்தில் கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் 5 துணை வட்டார அலுவலகங்கள் அருகிலுள்ள சந்தாதாரர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செயல்பட்டுவருகின்றன.

6.5 துணை வட்டார அலுவலகங்கள் வருமாறு:

கோயம்புத்தூர்	-	கோயம்புத்தூர் நீலகிரி மாவட்டங்கள்
மதுரை	-	மதுரை, திண்டுக்கல்-காயிதே மில்லத், இராமநாதபுரம், பசும்பொன்தேவர் திருமகன், காமராசர், சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 20

திருச்சி	– திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், இராமசாமி படையாச்சி-விழுப்புரம், வள்ளலார், கடலூர் மாவட்டங்கள்
திருநெல்வேலி	– நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம்
சேலம்	– சேலம், தருமபுரி, பெரியார் மாவட்டங்கள்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

6.6. 1952ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் பலன்கள்

இந்நிதியில், உறுப்பினராக உள்ள ஒருவர், அவருடைய பங்குத் தொகையையும், தொழிலதிபரின் பங்குத் தொகையையும் வட்டியுடன் முழுவதுமாக, பின்வரும் தேர்வுகளில் உடனடியாகத் திரும்பப் பெற உரிமையுடையவராவார்.

1. 55 வயதான பின்னர் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது.

2. நிரந்தரமாக, முழு தகுதியின்மை காரணமாக பணியிலிருந்து ஓய்வு பெறும்போது.

3. வெளிநாட்டில், நிரந்தரமாக குடியேற அல்லது வேலை வாய்ப்பு தேடி இந்தியாவிலிருநது குடிபெயரும்போது.

4. ஆட்குறைப்பு காரணமாகப் பணியிலிருந்து, பணியிறவு செய்யப்படும்போது.

5. தானாக முன்வந்து பணி ஓய்வு பெறும் திட்டத்தின் கீழ் பணியிறவு செய்யப்படும் போது.

இது தவிர, ஒரு உறுப்பினர் பணத்தைப் பெற விண்ணப்பித்த நாளுக்கு அடுத்து முன்னர் குறைந்தது 2 மாதங்கள் தொடர்ந்து பணியாற்றி முடித்ததன் பேரில், இருதரப்பு பங்குத் தொகையையும் வட்டியுடன் சேர்த்து, முழுமையாகப் பெற தகுதி உடையவராவார்.

ஒரு உறுப்பினர் இறந்து விட்டால், அவர் நியமித்த ஒருவர் அல்லது சட்டப்படிக்கான அவருடைய வாரிசுதாரர் இருபங்குத்

1996 ஆகஸ்ட் 20]

தொகைகளையும் வட்டியுடன் சேர்த்துப் பெறத் தகுதியுடையவராவார். திருமணம் காரணமாக பெண் உறுப்பினர்கள் பணியிலிருந்து ராஜினாமா செய்தால், இரண்டு மாதம் காத்திருக்க வேண்டும் என்ற அவசியம் இந்நேர்வில் பொருந்தாது.

6.7. சிறப்பு சேமநிதி (Special Reserve Fund).

13. வெளியேறும் உறுப்பினர்களுக்கு அவர்களது கூலியில் பிடித்தம் செய்யப்பட்டு கணக்குகளைத் தீர்க்கும்போது தொழிலதிபரால், இந்நிதியில் தொகை செலுத்தப்படாத, அவர்களுடைய பங்குத் தொகையை மட்டும் கொடுப்பதற்காக சிறப்பு சேமநிதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும், சிறப்பு சேமநிதியிலுள்ள இத்தொகை தொழிலதிபர் பங்குத் தொகை செலுத்தாததற்காக, தொகை வழங்கப் பயன்படுத்தப்படக்கூடாது.

6.8 தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கோரிக்கையினைத் தீர்த்து வைத்தல்.

கீழே காட்டப்பட்டுள்ள விவர அட்டவணை, வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை தீர்வு காணப்பட்டவை, நிலுவை ஆகியவற்றை காட்டுகிறது (*1-1-1995* முதல் *31-12-1995* வரை).

(1)	*1-1-1995* அன்றுள்ளபடி நிலுவையாக உள்ள கோரிக்கைகள்	*19,549* இனங்கள்
(2)	*1-1-1995* முதல் *31-12-1995* வரை வந்த கோரிக்கைகள்	*1,91,111* இனங்கள்
(3)	தீர்வு காணப்பட வேண்டிய மொத்த கோரிக்கைகள்	*2,10,660*
(4)	தீர்வு காணப்பட்ட கோரிக்கைகள்	*1,67,152* கோரிக்கைகள்
(5)	குறைகளைத் திருத்த திருப்பி அனுப்பப்பட்ட, மறுக்கப்பட்ட கோரிக்கைகள்	*34,713* கோரிக்கைகள்
(6)	*31-12-1995* அன்றுள்ளபடி, நிலுவையாக உள்ள கோரிக்கைகள்	*8,795* கோரிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 20

1-1-1995 முதல் *31-12-1995* வரை தீர்வு காணப்பட்ட கோரிக்கைகள் குறித்த பகுப்பாய்வு

		இனங்கள் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூ. லட்சத்தில்)
(1)	இறப்பு	3,892	607.19
(2)	வயது முதிர்வு ஓய்வு	5,318	19,47.54
(3)	நிரந்தர தகுதியின்மைநிலை	---	---
(4)	பதவி விலகல்	1,55,468	15,573.77
(5)	ஆட் குறைப்பு	11,403	2,35.65
(6)	பல்வகை	11,071	68.67
	மொத்தம்	1,67,152	1,84,32.82

31-12-1995-ம் நாளன்றுள்ளவாறு நிலுவையாக உள்ள கோரிக்கைகள் குறித்த பகுப்பாய்வு வருமாறு.

(1)	இரண்டு மாதங்களுக்கும் குறைவாக நிலுவையிலுள்ள கோரிக்கைகள்	8137 இனங்கள்
(2)	2 மாதங்களுக்கு மேல் 6 மாதங்களுக்குக் குறைவாக நிலுவையாக உள்ள கோரிக்கைகள்	658 இனங்கள்
	மொத்தம்	8795

6.9 தொகை திரும்பப் பெறுதல்:

உறுப்பினர்கள், அவர்கள் உறுப்பினர்களாக பின்வரும் காரணங்களுக்காக இருக்கும் காலத்தில் தொகைகளை திரும்பப் பெற/முன்பணமாக பெற அனுமதிக்கப்படுவர்.

(அ) உறுப்பனர் எடுக்கும் ஆயுள் காப்பீட்டுப் பத்திரத்திற்காக ;

(ஆ) குடியிருக்கும் வீடு/அடுக்குவீடு அல்லது வீட்டுமனை வாங்க, குடியிருக்கும் வீடு கட்ட;

1996 ஆகஸ்ட் 20]

(இ) குறிப்பிட்ட முகவர்களிடமிருநது பெற்ற வீட்டு கடன்களைத் திரும்பச் செலுத்த;

(ஈ) தொழிற்சாலை/நிறுவனம் கதவடைப்பு அல்லது மூடப்பட்டால் அல்லது வேலை நிறுத்தம் நீங்கலாக ஏனைய காரணத்தினால் உறுப்பினர் இரண்டு மாதம் கூலி பெறவில்லை எனில்;

(உ) உறுப்பினர் அல்லது அவருடைய சகோதரர் அல்லது சகோதரி திருமணம் அல்லது குழந்தையின் படிப்பிற்காக;

(ஊ) உறுப்பினர் அல்லது அவருடைய குடும்பத்தினர் உடல் நலமின்மைச் செலவிற்காக;

(எ) வெள்ளம், பூகம்பம் அல்லது கலவரம் போன்ற காரணங்களினால் சொத்துகளுக்குச் சேதம் ஏற்படுத்துவதால் ஏற்படும் எதிர்பாராச் செலவு;

(ஏ) உறுப்பினர் பணியாற்றும் தொழிற்சாலை அல்லது நிறுவனத்தில் மின்வெட்டு காரணமாக அவருக்கு ஏற்படும் ஊதிய இழப்பைச் சரிகட்ட; மற்றும்

(ஐ) உடல் ஊனமுற்ற உறுப்பினர் அவருக்குத் தேவையான சாதனங்களை வாங்குவதற்காகும் செலவிற்காக.

1-1-1995 முதல் 31-12-1995 வரையில் அனுமதிக்கப்பட்ட வரையிலான கால அளவில் திரும்ப பெற்ற/முன்பணம் உறுப்பினர்களுக்கு வழங்கியது பற்றிய விவரம்.

(ரூபாய் இலட்சத்தில்)

1.	ஆயுள் ஈட்டுறுதி பாலிசிகளுக்கு தொகை செலுத்துவதற்கு	93,87	1,24.14
2.	வீட்டுமனை/வீடு வாங்குவதற்காக அல்லது கட்டுவதற்காக அல்லது வீடு கட்டுவதற்காக/வீடு வாங்குவதற்காக பெறப்பட்ட கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கு	10,662	29,54.61

3.	கடன் கணக்கைத் தற்காலிகமாக முடிப்பதற்கு அல்லது நிறுத்தி வைப்பதற்கு	4367	189.11
4.	உறுப்பினரை/குடும்ப உறுப்பினர்களை மருத்துவமனையில் சிகிச்சைக்காக ஏற்பட்ட செலவைச் சமாளிப்பதற்கு	4004	440.03
5.	உறுப்பினரின்/உறுப்பினருடைய மக்களின்/சகோதரரின்/சகோதரியின் திருமணச் செலவுகளை சமாளிப்பதற்கு	13671	1109.06
6.	வெள்ளம், நிலநடுக்கம் அல்லது கலவரங்கள் போன்ற அசாதாரண நிலைமைகளைச் சமாளிப்பதற்கு		
7.	மின்வெட்டு காரணமாக ஊதிய இழப்பைச் சரிகட்டுவதற்கு	36391	1440.50
8.	உடல் ஊனமுற்ற உறுப்பினர்கள் துணைக் கருவிகள் வாங்குவதற்கு		
	மொத்தம்	78482	6257.45

6.10 ஆண்டுக் கணக்கு விவர அறிக்கை வழங்குதல்:

இந்நிலையில் உறுப்பினர் கணக்கில் இருந்த தொடக்க இருப்பு அவ்வாண்டு பெறப்பட்ட பங்குத் தொகை, வரவு வைக்கப்பட்ட மொத்த வட்டித் தொகை, தொகை பெறப்பட்டிருந்தால், அது குறித்த விரங்கள் ஆண்டு இறுதியில் உள்ள இறுதி இருப்பு ஆகிய விவரங்களைக் காட்டுகிற கணக்கு குறித்த விவர அறிக்கை. தொழிலாளர் எந்த தொழிற்சாலையில்/நிறுவனத்தில் இறுதியாகப் பணிபுரிந்தாரோ அந்த தொழிற்சாலையின்/நிறுவனத்தில் தொழிலதிபர் மூலமாக, ஒவ்வோர் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படுகிறது.

1-1-1995-ம் நாளிலிருந்து 31-12-1995-ம் நாள் வரையிலான கால அளவில் 29.77 இலட்சம் ஆண்டுக் கணக்கு விவர அறிக்கைக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. 31-12-1995-ம் நாள் நிலவரப்படி இன்னும் 21.48 லட்சம் கணக்கு விவர குறிப்புகள் வழங்க வேண்டியுள்ளது.

1996 ஆகஸ்ட் 20]

7. தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம், 1971

7.1 1971-ம் ஆண்டுத் தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் குறித்த விவரம் வருமாறு:

தொழிலாளர் வருங்கால வைப்புநிதி உறுப்பினர்கள், பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னரே இறக்க நேரிடின், அவர்களுடைய குடும்பங்களுக்கு நீண்ட கால நிதியுதவி வழங்கும் நோக்கத்துடன், 1952-ம் ஆண்டுத் தொழிலாளர் வருங்கால வைப்புநிதி பல்வகை நிதித்துறைகள் சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களுக்கு, 1971-ம் ஆண்டுக் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது.

7.2 பொருந்தும் தன்மை:

1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதி-பல்வகை விதித் துறைகள் சட்டம் பொருந்தும் அனைத்துத் தொழிற்சாலைகளிலும்/நிறுவனங்களிலும், 1971-ம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் 1-3-1971-ம் நாளிலிருந்து செயலுக்கு வந்தது.

7.3 உறுப்பினராவதற்கான தகுதி:

1971-ம் ஆண்டு மார்ச் திங்கள் முதல் நாளன்று அல்லது அதற்குப் பின்னர், வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களாக ஆகியுள்ள அனைத்துத் தொழிலாளர்களும் இதில் உறுப்பினர்களாக வேண்டியது கட்டாயமாகும்.

மேலே குறிப்பிட்ட நாளுக்கு முன்னர், வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களாக இருக்கும் தொழிலாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினராவது அத்தொழிலாளர்களின் விருப்புரிமைக்கு விடப்பட்டது. முன்னர் தங்கள் விருப்புரிமையைத் தெரிவிக்காத தொழிலாளர்கள், 1971-ம் ஆண்டு குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் உறுப்பினராவதற்கு 1971-ம் ஆண்டு மார்ச் திங்களிலிருந்து அவர் விருப்பம் தெரிவிக்கும் நாள் வரை பங்குத்தொகை வட்டியுடன் செலுத்தி, எந்தவொரு நேரத்திலும் தங்கள் விருப்புரிமையைத் தெரிவிக்கலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[*1996 ஆகஸ்ட் 20*

7.4. பங்குத் தொகை:

குடும்ப ஓய்வூதிய நிதிக்குத் தொழிலாளர்களும், தொழிலதிபரும் தனியே பங்குத்தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை. வருங்கால வைப்புநிதி பங்குத் தொகைக்கு தொழிலாளர்களின் பங்காக, அவர்களுடைய சம்பளத்தில் $1\frac{1}{6}$ சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகையும், தொழிலதிபர்களின் பங்குத் தொகையாக $1\frac{1}{6}$ சதவீதத்திற்குச் சமமான தொகையும் தனியே ஒதுக்கி வைக்கப்படுகிறது. மத்திய அரசும், தொழிலதிபர்கள் செலுத்தத்தக்க பங்குத் தொகைக்குச் சமமான ஒரு தொகையைத் தன் பங்காகக் குடும்ப ஓய்வூதியத் திட்டத்திற்கு அளிக்கிறது.

7.5 நிர்வாகச் செலவு:

இத்திட்டத்தை நிருவகிப்பதற்காகும் செலவு முழுவதையும் மத்திய அரசு ஏற்கிறது.

7.6. இத்திட்டத்தின் நோக்கத்திற்கு குடும்பம் என்பது:

(அ) நேர்விற்கேற்ப மனைவி அல்லது கணவர்.

(ஆ) உரிய வயதடையாத மகன்கள்.

(இ) மணமாகாத மகள்கள்.

7.7 இத்திட்டத்தின்கீழ் கிடைக்கும் பயன்கள்:

இத்திட்டத்தின் கீழ் நால்வகைப் பயன்களுக்கு வகை செய்யப்படுகிறது. அவையாவன:—

(அ) மாதாந்திரக் குடும்ப ஓய்வூதியம்.

(ஆ) ஆயுள் ஈட்டுறுதிப் பயன்கள்.

(இ) ஓய்வுக்கால தொகை திரும்பப் பெறும் பயன்.

(ஈ) செலுத்தப்பட்டத் தொகையில் உறுப்பினர்களின் பங்குத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல்.

1996 ஆகஸ்ட் 20]

7.8 மாதாந்திர குடும்ப ஓய்வூதியம்:

குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதி:

(அ) ஓய்வூதியத்திற்கு கணக்கில் கொள்ளத்தக்க பணிக்காலத்தில் இறப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) இறப்பு நேரும் நாளன்று உறுப்பினர் 60 வயதை அடைந்திருக்கக் கூடாது.

(இ) மூன்று தினங்களுக்கு குறைவாக கால அளவிற்கு உறுப்பினர், குடும்ப ஓய்வூதிய நிதிக்குப் பங்குத் தொகையைச் செலுத்தியிருக்க வேண்டும் மற்றும்

(ஈ) குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதியுடைய உறுப்பினர் எவராவது ஒருவர் உயிருடன் இருக்க வேண்டும்.

குடும்ப ஓய்வூதியத்தின் அளவு:

உறுப்பினர் இறந்து விடும் நேர்வில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கத்தக்கதாகும்.

சாதாரணமாக வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத் தொகை.

அட்டவணை.

குடும்ப ஓய்வூதியம் நிதிக்கு 1-4-92-ம் நாளிலிருந்து பங்குத் தொகை செலுத்தத்தக்க தொழிலாளரின் மாதச் சம்பளம்.	மாதாந்திர குடும்ப ஓய்வூதியம்.
ரூ. 300/– வரை இருந்தால்	ரூ. 250/– (வரையறுக்கப்பட்டது)
ரூ. 300/–க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 700/–க்கு மேற்படாமல் இருந்தால்	ரூ. 300/– (வரையறுக்கப் பட்டது)
ரூ. 700/–க்கு மேற்பட்டு ஆனால், ரூ. 1600/–க்கு மேற்படாமல் இருந்தால்	சம்பளத்தில் 42.5% தொகைத் திங்கள் ஒன்றுக்கு குறைந்தளவு ரூ. 300/– உயரளவு ரூ. 600/– என்பதற்குட்பட்டு.

[1996 ஆகஸ்ட் 20

ரூ. 1600/–க்கு மேற்பட்டு, ஆனால் ரூ. 2500/–க்கு மேற்படாமல் இருந்தால்	திங்கள் ஒன்றுக்கு குறைந்தளவு ரூ. 600/– உயரளவு ரூ. 850/– என்பதற்குட்பட்டு, சம்பளத்தில் 35 சதவீதத் தொகை
ரூ. 2500/–க்கு மேற்பட்டு இருந்தால்	திங்கள் ஒன்றுக்கு குறைந்தளவு ரூ.850/– உயரளவு ரூ. 1050/– என்பதற்குட்பட்டு சம்பளத்தில் 30 சதவீதத் தொகை

உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியத் தொகை

உறுப்பினர் ஒருவர் 7 ஆண்டுகளுக்குக் குறையாத கால அளவிற்கு, தான் இறப்பதற்கு முன்னர் குடும்ப ஓய்வூதிய நிதிக்கு தன்னுடைய பங்குத் தொகையைச் செலுத்தியிருந்தால்,

பயனீட்டாளர் உயர்த்தப்பட்ட வீதத்தில் குடும்ப ஓய்வூதியம் பெறுபவராவார்.

(அ) காலஞ்சென்ற நாளிலிருந்து 7 ஆண்டுகால அளவிற்கு அல்லது

(ஆ) உறுப்பினர் உயிரோடு இருந்திருந்தால், அவர் 60–வது வயதை அடையும் நாள் வரையில், இதில் எது முந்தியதோ, அதுவரையில் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியத் தொர்கை என்பது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குடும்ப ஓய்வூதியத் தொகையைப்போல், உயரளவு இருமடங்குத் தொகை என்பதற்குட்பட்டு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள வீதத்துடன், உறுப்பினரின் சம்பளத்தில 20 சதவீதம் என்ற அளவில் இருக்கும்.

7.9. ஆயுள் காப்பீட்டுப் பயன்கள்:

(அ) ஆயுள் காப்பீட்டுப் பயன்களைப் பெறுவதற்கான தகுதி:

(1) ஓய்வூதியத்திற்குக் கணக்கில் கொள்ளத்தக்க பணிக்காலத்தில் இறப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

1996 ஆகஸ்ட் 20]

(2) இறப்பு நேரும் நாளன்று 60-வது வயது அடைந்திருக்க கூடாது.

(3) உறுப்பினர், குடும்ப ஓய்வூதிய நிதிக்கு மூன்று திங்களுக்குக் குறையாத கால அளவிற்கு பங்குத் தொகையைச் செலுத்தியிருக்க வேண்டும்.

(ஆ) வழங்கத்தக்க தொகை:

ஒரே நேரத்தில் ஒட்டு மொத்தமாக ரூ. 5000 தொகை வழங்குதல்.

(இ) யாருக்குத் தொகை வழங்கத் தக்கது என்பது:

(1) மாத குடும்ப ஓய்வூதிய தொகையை வழங்குவதற்கென குறிப்பிடப்பட்டுள்ள வரிசையில் உள்ள குடும்ப உறுப்பினர்களுக்கு

(2) வருங்கால வைப்பு நிதிக்குப் பங்குத் தொகை செலுத்தும் உறுப்பினருக்கு, குடும்பம் ஏதுமில்லை என்றால் அந்த உறுப்பினர் இறந்தபின்னர், வருங்கால வைப்பு நிதியில் அவர் கணக்கில் சேர்ந்து வந்துள்ள தொகையைப் பெறுவதற்கு உரிமையுடைய நபருக்கு (நபர்களுக்கு)

.7.10 ஓய்வு பெறும் தொகையைத் திரும்பப் பெறும் பயன்கள்:

(அ) பயன்களைப் பெறுவதற்கான தகுதி:

(1) 60 வயதை அடைவதன் பேரில்

அல்லது

(2) இறப்பு அல்லாத ஏனைய காரணங்களுக்காக, 60 வயது அடைவதற்கு முன்னர், குடும்ப ஓய்வூதிய நிதிக்குத் தொகை செலுத்தும் உறுப்பினர் தகுதி அற்றுப் போயிருந்த ஓராண்டுக்கால அளவிற்குக் குறையாமல் குடும்ப ஓய்வூதிய நிதிக்குப் பங்குத் தொகை செலுத்தியிருப்பதன் பேரில்.

(ஆ) வழங்கத்தக்க தொகை:

ஓய்வு பெறும் தொகையை திரும்பப் பெறும் பயன்களைக் கணக்கிடுவதற்கென, புதிய விவர அட்டவணை ஒன்று 1-4-92-ம் நாளிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த விவர அட்டவணையில், இரு நெடும்பத்திகள் உள்ளன. முதல் நெடும்பத்தி,

எத்தனை ஆண்டுகளுக்குப் பங்குத் தொகை செலுத்தப்பட்டிருக்கிற என்பதையும், இரண்டாம் நெடும்பத்தி உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் நேரத்தில், அந்த உறுப்பினர் பெறும் சம்பளம் எந்த எண்ணால் பெருக்கப்பட வேண்டும் என்பது தொடர்பான விவரங்களையும் காட்டுகிறது. அவ்வாறு அந்த எண்ணால் பெருக்கி, வந்த சம்பளத் தொகை உறுப்பினருக்கு வழங்க வேண்டிய திரும்பப் பெறத்தக்க பயன் தொகையாகும்.

ஓராண்டு முடிவதற்கு முன்னர், குடும்ப ஓய்வூதிய நிதியிலிருந்து உறுப்பினராக இருப்பது அற்றுப் போகும் நேர்வில், குடும்ப ஓய்வூதிய நிதிக்கு உறுப்பினர் செலுத்திய பங்குத் தொகை, ஆண்டொன்றுக்கு 8½ சதவீதம் வட்டித் தொகையுடன் திருப்பி அளிக்கத்தக்கதாகும்.

7.11 உறுப்பினர் செலுத்திய பங்குத் தொகையைக் கொடுத்துத் தீர்த்தல்:

(அ) பங்குத் தொகையைப் பெறுவதற்கான தகுதி:

மூன்று மாதங்கள் என்ற குறைந்தளவு கால அளவிற்கு குடும்ப ஓய்வூதிய நிதிக்குப் பங்குத் தொகை செலுத்துவதற்கு முன்னர் உறுப்பினர் இறந்துவிட்டால், இவர் செலுத்திய பங்குத் தொகை திருப்பி வழங்கப்படத்தக்கதாகும்.

(ஆ) வழங்கத்தக்க தொகை:

குடும்ப ஓய்வூதிய நிதிக்கு உறுப்பினர் செலுத்திய பங்குத் தொகையுடன், ஓராண்டிற்கு 8½ சதவீதம் அளவு வட்டித் தொகையும் சேர்த்து வழங்கத்தக்கதாகும்.

7.12. முதலீடு:

குடும்ப நல ஓய்வூதிய நிதிக் கணக்குத் தொடர்பான தொகை அல்லது அத்தகைய கணக்கில் உள்ள தொகைகள் அனைத்தும், மத்திய அரசின் பொது வைப்பீட்டு நிதி கணக்கில் வைக்கப்பட வேண்டும். பொது வைப்பீட்டுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள குடும்ப நல ஓய்வூதிய நிதிக் கணக்கில் இருக்கும் அனைத்துத் தொகைகளுக்கும் ஆண்டொன்றுக்கு 8½ சதவீதத்திற்கு குறையாத வட்டி வீதத்தில் வட்டி தொகையை மத்திய அரசு அனுமதிக்கிறது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

[1996 ஆகஸ்ட் 20]

7.13. தீர்வு காணப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள்

(மாதாந்திரக் குடும்ப ஓய்வூதியம் தவிர மற்ற எல்லா வகையான பயன்கள்).

31-12-1995 அன்றுள்ளபடி, பெறப்பட்ட தீர்வு காணப்பட்ட திருத்தப்பட்ட நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

		இனங்கள்
1.	1-1-1995 அன்றுள்ளபடி, நிலுவையாயுள்ள உரிமைக்கோரிக்கைகளின் எண்ணிக்கை	21,577
2.	1-1-1995 முதல் 31-12-1995 முடிய பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	1,86,959
3.	தீர்வு காணப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	2,08,536
4.	இந்த வருடத்தில் தீர்வு காணப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின எண்ணிக்கை	1,60,217
5	குறைபாடுகளைச் சரி செய்வதற்காக மற்றும் நிராகரிக்கப்பட்ட வகையில் திருப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	42,259
6	31-12-1995 அன்றுள்ளபடி நிலுவையாய் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிகை	6,060

31-12-1995 அன்றுள்ளபடி நிலுவையாய் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு விவரம் வருமாறு:-

		இனங்கள்
1.	2 மாதங்களுக்குக் குறைவாக நிலுவையாக உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	5,952
2.	இரண்டு மாதங்களுக்கு மேற்பட்டு, ஆனால் 6 மாதங்களுக்கு குறைவாக நிலுவையாயுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	108
3.	ஆறு மாதங்களுக்கு மேற்பட்டு, ஆனால் ஒரு வருடத்திற்கு குறைவாக நிலுவையாய் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	-
	மொத்தம்	6,060

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

7.14 தீர்வு காணப்பட்ட மாதாந்திர குடும்பநல ஒய்வூதிய உரிமைக் கோரிக்கை:

1-1-1995 முதல் *31-12-1995* முடிய பெறப்பட்ட தீர்வு காணப்பட்ட நிலுவையிலுள்ள மாதாந்திர குடும்பநல ஒய்வூதிய கோரிக்கைகள் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:--

		இனங்கள்
1.	1-1-1995-ம் நாள் நிலவரப்படி, நிலுவையாயுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	831
2.	1-1-1995 முதல் 31-12-1995 முடிய பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	6032
3.	தீர்வு காணப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	6863
4	தீர்வு காணப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	3713
5.	குறைபாடுகளைச் சரி செய்வதற்காகவும் நிராகரிக்கப்பட்ட வகையிலும் திருப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	2787
6.	31-12-1995-ம் நாள் நிலவரப்படி, நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	363

31-12-1995-ம் நாள் நிலவரப்படி, நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் ஆய்வு விவரம் வருமாறு:--

		இனங்கள்
1.	2 மாதங்களுக்கு குறைவாக நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	352
2.	2 மாதங்களுக்கு மேற்பட்டு, ஆனால் 6 மாதங்களுக்குக் குறைவாக நிலுவையில் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	11
3.	6 மாதங்களுக்கு மேற்பட்டு, ஆனால் 1 வருடத்திற்கு குறைவாக நிலுவையாய் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை.	
	மொத்தம்	363

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

1995-ம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

வளர்ச்சி மற்றும் சாதனைகள்:

வயது முதிர்வு ஓய்வு, பணி ஓய்வு, நிரந்தரமான மற்றும் முற்றிலும் ஊனமுற்றோர், பணியிலிருந்து ஓய்வு பெறும் முன்னரே இறக்க நேரிடுதல் மற்றும் இதுபோன்ற பல நிலையில் உள்ளவர்களுக்கு அவர்கள் செலுத்தும் வருங்கால வைப்பு நிதியிலிருந்து மாதாந்திர ஓய்வு ஊதியம் வழங்கும் திட்டம் குறித்து ஒரு சட்டம் அமுல்படுத்துவதற்கு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை குடியரசுத் தலைவர் அவசரச்சட்டம் (Ordinance) மூலம் *16-11-1995* அன்று வெளியிட்டார். இதனைத் தொடர்ந்து *1971*-ம் ஆண்டு தொழிலாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் கைவிடப்பட்டது.

இப்புதிய திட்டத்தின்கீழ் ஓய்வூதியத் தொகை, பணி ஓய்வு பெற்ற தொழிலாளருக்கோ அல்லது பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னரே இறக்கும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி உறுப்பினரின் மனைவி மற்றும் குழந்தைகளுக்கும், பணியைத் துறந்து செல்லும் உறுப்பினர் மற்றும் ஓய்வூதியம் பெற்று வரும் உறுப்பினர் இறக்க நேரிடும்போது அவரது வாரிசுதாரர் ஆகியோருக்கு வழங்கப்படும் உறுப்பினருக்கு குடும்ப அங்கத்தினர் இல்லாதபட்சத்தில் அவர் நியமிக்கும் நபருக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் தொகுத்துப்பெறல் (Commitation) ஓய்வூதியம் பெறவும் அல்லது குறைந்த ஓய்வூதியத் தொகையைப் பெற்று சாதாரண ஓய்வூதியத்தினைப் போல் *100* பங்கு சரிசமமான முதலீட்டுத் தொகையைப் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. முற்றிலும் நிரந்தரமான ஊனமடைந்த நபர்கள் மற்றும் யாருமற்ற நபர்கள் ஓய்வூதியப் பயன்களைப் பெற இப்புதிய திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. *1971*-ம் ஆண்டு தொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட பயன்களைவிட ஒப்பு நோக்கும்போது புதியதாக அறிமுகப்படுத்தப்பட்ட இப்புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் விரிவான பயன்கள் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படுகிறது.

2-12-1995 அன்று தமிழ்நாட்டை பொறுத்தவரை முதல் தொகுதி ஓய்வூதியம் வழங்கும் ஆணை வெளியிடப்பட்டது. *29-2-1996* வரையில் *4,281* ஓய்வூதியம் பற்றிய கோப்புகள் முடிக்கப்பட்டுள்ளன. இது குறித்த விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

இப்புதிய ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள சிறப்பியல்புகள் குறித்த விளக்கங்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் துண்டறிக்கைகளாக வெளியிடப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டவுடனே நிர்வாகத்தினருக்கு தேவையான அறிவுரைகளும், பின்பற்றத்தக்க வழிமுறைகளும் வெளியிடப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் விளக்கங்கள் அடங்கிய கையேட்டுப் பிரதிகள் தொழிலாளர்களுக்கு தொழிலாளர்களின் சங்கங்கள் மூலமாகவும், தொழில் வாணிபக் கழகம் மூலமாகவும் விரிவாக சுற்றனுப்பப்பட்டு தெரிவிக்கப்பட்டது.

வட்டார அலுவலகம், மற்றும் துணை வட்டார அலுவலகங்களில் பணிபுரியும் எல்லா பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் இந்த ஓய்வூதியத் திட்டம் திறம்பட நடைமுறைப்படுத்தப்படுவதற்கு தேவையான அடிப்படை பயிற்சி முதற்படியாக அளிக்கப்பட்டுள்ளது.

இந்த தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த புதிய அலுவலர்களை நியமிப்பதற்கான ஆணை பிறப்பிக்கப்பட ஒப்பளிப்பு நிலுவையில் இருக்கும்போதே ஏற்கெனவே வட்டார அலுவலகத்தில் பணி புரியும் அலுவலர்களைக் கொண்டே மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட அதிக அக்கறை செலுத்தி அதிக எண்ணிக்கையில் ஓய்வூதியம் வயது முதிர்வை எட்டி ஓய்வுபெறும் தொழிலாளர்களுக்கும், இறந்துபோன தொழிலாளரின் மனைவி அதாவது விதவை/மனைவியை இழந்தவர்களுக்கும் மற்ற வட்டார அலுவலகங்களைக் காட்டிலும் நமது வட்டார அலுவலகம் வழங்கியுள்ளது.

9. 1976-ம் ஆண்டிற்கான தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இணைந்த காப்புறுதித் திட்டம்.

9.1 முன்னுரை:

பணியிலிருக்கும்போது இறக்கக்கூடிய வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் 1976-ம் ஆண்டு தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டம் 1952-ம் ஆண்டையத் தொழிலாளர் வருங்கால வைப்பீட்டு நிதிகள் மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டத்தின்கீழ் இயற்றப்பட்டது.

1996 ஆகஸ்ட் 20]

9.2 பொருத்தமுடைமை:

தொழிலாளர் நல வைப்பீட்டுத் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டம், 1976-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் நாள் முதற்கொண்டு செயலுக்கு வந்தது. 1952-ம் ஆண்டு தொழிலாளர் நல வருங்கால வைப்பு நிதிகள் மற்றும் பல்வகை விதித்துறைகள் சட்டம் பொருந்துகிற அனைத்து தொழிற்சாலைகள்/தொழில் நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கும் இது பொருந்தக் கூடியதாகும்.

9.3 வருங்கால வைப்புநிதித் திட்டத்தில் உறுப்பினராதல்:

வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் அனைத்து உறுப்பினர்களும் 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்புநிதிகள் பல்வகை விதித்துறைகள் சட்டத்தின்கீழ் 17-ம் பிரிவின்கீழ் விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி உறுப்பினர்களும் இத்திட்டத்தின்கீழ் வருவர்.

9.4. பங்குத் தொகை விகிதம்:

தொழிலாளர், பங்குத் தொகை எதனையும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் தொழிலதிபரும், மத்திய அரசும், உறுப்பினரின் சம்பளத்தில் முறையே 0.5 சதவீதம் மற்றும் 0.25 சதவீதம் என்ற வீதத்தில் காப்புறுதி நிதிக்குப் பங்குத் தொகை செலுத்த வேண்டும்.

9.5. திட்டத்தின் நன்மைகள்:

வருங்கால வைப்புநிதித் திட்டத்தில் உறுப்பினராக உள்ள ஒருவர் பணியில் இருக்கும்போது, இறக்கும் நேர்வில் அவரது வருங்கால வைப்பு நிதித் தொகையைப் பெறும் நபருக்கு அத்தொகையுடன் முந்தைய 12 மாதங்களில் அல்லது அவர் உறுப்பினராக இருந்த கால அளவில், இதில் எது குறைவான கால அளவோ அக்கால அளவில் இறந்துவிட்ட உறுப்பினரின் வருங்கால வைப்பு நிதி கணக்கிலுள்ள சராசரி இருப்புத் தொகைக்குச் சமமான உத்திரவாத தொகை ஒன்றும் வழங்கப்படுகிறது. ஆனால், கணக்கிலுள்ள சராசரி இருப்புத் தொகை ரூ. 25,000/-க்கு மேற்படுகிறபோது, ரூ. 25,000/-மும், ரூ. 25,000/-க்கு மேற்படுகிற தொகையில் 25 சதவீதத் தொகையும் அவருக்குக் கொடுக்கத்தக்க தொகையாகும். மொத்தத்தில், அவ்வாறு வழங்குகிற தொகை ரூ. 35,000/-க்கு மேற்படக்கூடாது.

[1996 ஆகஸ்ட் 20

9.6. வருங்கால வைப்புநிதித் திட்டத்தின் பயன்களைப் பெறுவதற்கான தகுதிக்குரிய நிபந்தனைகள்:

1. இத்திட்டத்தின் உறுப்பினரான பணியாளரது மரணம், 1-8-1976-ம் நாளன்று அல்லது அதற்குப் பின்வரும் நாளில் அதாவது இந்த ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்ட நாளன்று ஏற்பட்டிருக்க வேண்டும்.

2. தொழிற்சாலை/நிறுவனம் ஒன்றில் அவர் பணியில் இருக்கும் போது இறப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

9.7. இத்திட்டத்தின் கீழ் உத்திரவாதத் தொகையை எவருக்குக் கொடுக்க வேண்டுமென்பது:

(1) 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதி சட்டத்தின் கீழ் வரும் பணியாளர் ஒருவர் அல்லது வருங்கால வைப்பு நிதி சட்டத்தின் 17-ம் பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட வருங்கால வைப்புநிதி உறுப்பினர் ஒருவர் நேர்விற்கேற்ப செய்து கொண்ட நியமனம் இத்திட்டத்தின் கீழ் செய்து கொண்ட நியமனமாகக் கருதப்படும். அத்தகைய நியமனதாரர் அல்லது நியமனதாரர்களுக்கு உத்திரவுத் தொகை வழங்கத் தக்கதாகும்.

(2) நேமகதாரர் எவரும் இல்லாதபோது, தொழிலாளர் நல வருங்கால வைப்புநிதித் திட்டத்துடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளவாறு, உத்திரவாதத் தொகை வழங்கப்படும்.

9.8 முதலீடு:

ஈட்டுறுதி நிதியைச் சேர்ந்த அல்லது ஈட்டுறுதி நிதிக்கண்ணில் வரவு வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தொகைகளும் மத்திய அரசின் பொது வைப்பீட்டு நிதிக் கணக்கில் வைப்பீடு செய்யப்படும். இந்த வைப்பீட்டுத் தொகை, ஆண்டொன்றுக்கு 8½ சதவீத வட்டி பெறத்தக்கதாகும்.

9.9 ஈட்டுறுதி நிதிக்கான நிர்வாகச் செலவுகள்:

ஈட்டுறுதி நிதிக்குத் தொகை செலுத்தும் உறுப்பினர்களின் ஊதியத்தில் 0.01 மற்றும் 0.005 சதவீத அளவுக்குப் பங்குத் தொகையைச் செலுத்துவதன் மூலம், தொழிலாளர் நல வைப்பீட்டுத்

1996 ஆகஸ்ட் 20]

திட்டத்துடன் இணைந்த காப்புறுதி திட்டம் குறித்த நிர்வாகச் செலவை முறையே தொழிலதிபர்களும், மத்திய அரசும் ஏற்கும்.

***31-12-1995* அன்றுள்ளவாறு பெறப்பட்ட, தீர்வு காணப்பட்ட திருப்பப்பட்ட நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் விவரங்கள் கிழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.**

		இனங்கள்
1.	*1-1-1995* அன்றுள்ளவாறு, நிலுவையிலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	*605*
2.	*1-1-1995* முதல் *31-12-1995* முடிய பெறப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	*5,955*
3.	தீர்வு காணப்பட வேண்டிய உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	*6,560*
4.	தீர்வு காணப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	*3,029*
5.	குறைபாடுகளைச் சரிசெய்வதற்காக திருப்பிடப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	*3,199*
6.	*31-12-1995*-ம் நாள் நிலவரப்படி, நிலுவையில் இருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	*352*

***31-12-1995*-ல் உள்ளபடி நிலுவையிலுள்ள உரிமைக் கோரிக்கைகளின் பகுப்பாய்வு விவரம் வருமாறு:-**

		இனங்கள்
1.	*2* மாதங்களுக்குக் குறைவாக நிலுவையாக உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	*301*
2.	இரண்டு மாதங்களுக்கு மேற்பட்டு, ஆனால் ஆறு மாதங்களுக்குக் குறைவாக நிலுவையாயுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	*31*
3.	ஆறு மாதங்களுக்கு மேற்பட்டு, ஆனால் ஒரு வருடத்திற்கு குறைவாக நிலுவையாய் உள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை	--
	மொத்தம்	*332*

TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 20

வட்டார உறுப்பினர்கள் குழுவின் பட்டியல்.

தலைவர்:

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை.
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

உறுப்பினர்கள்:

1. அரசு இணைச் செயலாளர்,
நிதித் துறை,
சென்னை-9.

2. தொழிலாளர் ஆணையர்,
தேனாம்பேட்டை,
சென்னை-6.

3. செயலாளர்,
எம்ப்ளாயர்ஸ் பெடரேஷன் ஆப் சதர்ன் இந்தியா,
498, அண்ணாசாலை,
சென்னை.

4. சட்ட அலுவலர்,
சதர்ன் இந்தியா மில்ஸ் அசோசியேசன்,
த.பெ. எண். 3783,
ரேஸ் கோர்ஸ் ரோடு,
கோயம்புத்தூர்-641 018.

5. தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் சங்கம்,
த.பெ. எண். 35, 'கனோவி'
குன்னூர்-643 101.

6. நிறுவனச் செயலாளர்,
சவுத் இந்தியா சுகர் மில்ஸ் அசோஸியேசன்,
383, மவுண்ட் ரோடு,
ஜெம்ஸ் பவுண்டேஷன், 3வது மாடி,
சைதாப்பேட்டை, சென்னை-15.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

7. கௌரவ பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் அசோஸியேசன்,
நிவாஸ் இண்டஸ்ட்ரீஸ்,
4ஏ (என்.ப்பி) டெவலெப்மெண்ட் பிளாட்,
ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை-97.

8. பொதுச் செயலாளர்,
இண்டியன் நேஷனல் டிரேட் யூனியன் காங்கிரஸ் தமிழ்நாடு பிரிவு,
621, திருச்சி சாலை,
ராமநாதபுரம்,
கோயம்புத்தூர்-641 045.

9. இந்து மஸ்தூர் சபா,
145, திருச்சி சாலை,
சிங்காநல்லூர்,
கோயம்புத்தூர்-641 005.

10. உதவி பொதுச் செயலாளர்,
சென்டர் ஆப் இண்டியன் டிரேட் யூனியன்ஸ் தமிழ்நாடு ஸ்டேட் கமிட்டி,
எண். 13, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை-600 005.

11. துணைத் தலைவர்,
தமிழ்நாடு ஏ.ஐ.டி.யு.சி.,
49, குருவப்ப தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-600 002.

12. பொதுச் செயலாளர்,
லேபர் புரகிரெஸ்ஸிவ் பெடரேஷன்,
13, டேங்ஸ் கார்டன் ரோடு,
புதுப்பேட்டை, சென்னை-600 002.

[1996 ஆகஸ்ட் 20

இணைப்பு-28

1996-97 வரவு-செலவு திட்டம் (திருத்தியது)

திட்டம் செலவு (1)	வருவாய்ச் செலவு (2)	மூலதனச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (3)	மொத்தம் (4)
(அ) தொழிலாளர் நலத் துறை:			
1. திட்டம் சாராதவைகள்	1253.40	–	1253.40
2. மாநில திட்டங்கள்	62.64	–	62.64
3. மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்	–	–	–
மொத்தம்	**1316.04**	..	**1316.04**
(ஆ) தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை:			
1. திட்டம் சாராதவைகள்	588.43	–	588.43
2. மாநில திட்டங்கள்	7.75	–	7.75
3. மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்	19.76	–	19.76
மொத்தம்	**615.94**	–	**615.94**
(இ) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை:			
வேலைவாய்ப்பு பிரிவு:			
1. திட்டம் சாராதவைகள்	570.58	–	570.58
2. மாநில திட்டங்கள்	81.07	–	81.07
3. மைய அரசு பொறுப்பேற்ற திட்டங்கள்	13.23	–	13.23
மொத்தம்	**664.88**	–	**664.88**
பயிற்சிப் பிரிவு:			
1. திட்டம் சாராதவைகள்	2365.52	–	2365.52
2. மாநில திட்டங்கள்	196.37	7.44*	203.81
3. மைய அரசு பொறுப்பேற்ற திட்டங்கள்	–	–	–

4. மைய அரசும், மாநில அரசும் பொறுப்பேற்கும் உலக வங்கித் திட்டங்கள்	170.97	1068.74*	1239.71
5. சமூகநலப் பாதுகாப்புத் திட்டம்	5.29	–	5.29
மொத்தம்	**2738.15**	**1076.18***	**3814.33**
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை (மொத்தம்)	3403.03	1076.18*	4479.21
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை (மொத்தம்)	5335.01	1076.18*	6411.19

	(ரூபாய் இலட்சத்தில்)
	6411.19
கழிக்க:	
கோரிக்கை எண். 60-பல்வகை மூலதனச் செலவின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை.	1076.18
	5335.01
(ஈ) கோரிக்கை எண். 28–ல் நிதி ஒதுக்கீடு பெறும் பிற துறைகள்:	
1. சிறப்பு தொழிற்தகராறுகள் தீர்ப்பாயம்	4.95
2. பதிவாளர், உயர்நீதி மன்றம்	25.50
3. வருவாய் நிர்வாகம்	2100.00
4. பொதுப் பணித் துறை	0.50
5. கொதிகலன்கள் தலைமை ஆய்வாளர்	41.84
மொத்தம்	**2172.79**
மொத்தம் (5335.01 + 2172.79)	**7507.80**
(உ) கூட்டுக: கடனைத் திரும்பப் பெறும் தொகை	76.03
கோரிக்கை எண். 28–ல் மொத்தம்	**7583.83**

*குறிப்பு: கோரிக்கை எண். 60 – பல்வகை மூலதனச் செலவின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1996 ஆகஸ்ட் 20]

இணைப்பு-II

(43 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மீன்வளத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு

1996-97

முன்னுரை

தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் மீனவளம் ஒரு இன்றியமையாத பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் 1,000 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியில் 442 மீனவர் கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் உள்ள மொத்த மீனவர்களின் எண்ணிக்கை 5.3 இலட்சம் ஆகும். அதில் 2.52 இலட்சம் மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் 8230 மீன்பிடி விசைப்படகுகள், 6,800 இயந்திரமயமாக்கப்பட்ட கலன்கள், 13,724 வள்ளங்கள் மற்றும் 25000 கட்டுமரங்களைக் கொண்டு மீன்பிடித் தொழில் செய்கின்றனர். 1994-95-ல் கடல் மீன்பிடிப்பு 3.31 இலட்சம் டன்னாகும். பொதுமக்களுக்கான மீன் உணவின் உற்பத்தியை பெருக்குவதோடு, மீனளப் பொருட்கள் மூலமாக இந்த வருடத்தில் அந்நியச் செலாவணியாக ரூ. 675 கோடி ஈட்டப்பட்டுள்ளது.

மீனளத்தில் உள்நாட்டு மீனளம் இன்றியமையாத பங்கு வகிக்கிறது. 1994-95-ல் உள்நாட்டு மீன்பிடிப்பு 108 இலட்சம் டன்னாகும். உள்நாட்டு மீனளத்தில் 52 பெரும் நீர்த்தேக்கங்கள், பெரிய குளங்கள் மற்றும் குட்டைகளில் மீன்பிடிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 50,530 உள்நாட்டு மீனவர்கள் உள்ளனர். தமிழ்நாடு நீர்ப்பற்றாக்குறை மாநிலமாக இருப்பதால் நீர்த்தேக்கங்கள், குளங்கள் மற்றும் இதர நீர்நிலைகளில் பருவமழை காலங்களில் மட்டுமே நீர் உள்ளது.

உவர்நீர் மீன்வளர்ப்பு மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு கடந்த சில வருடங்களாக அபிவிருத்தி அடைந்து வருகிறது. தற்போது 860 ஹெக்டேர் நீர்ப்பரப்பில் உவர்நீர் மீன்வளர்ப்பும், கடலோர கடல் உயிரின வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1994-95ம் ஆண்டில் 270 டன்கள் இரால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றம் புதிய கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு

பண்ணைகளைத் தொடங்குவதற்கு தடை உத்தரவு அளித்ததாலும், வைரஸ் நோய் பரவிய காரணத்தாலும் இத்தொழிலில் கடந்த இரண்டு வருடங்களாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மீன்துறையின் கொள்கை:

அரசு மீன்துறை கொள்கையின் நோக்கங்கள் பின்வருமாறு:

(1) நிலை நிறுத்தக்கூடிய அதிகபட்ச கடல் மீன்பிடிப்பு, உள்நாட்டு நீர்நிலைகள், உவர் நீர் உயிரின வளர்ப்பு மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மூலம் மீன் உற்பத்தியைப் பெருக்குதல்.

(2) மீனவர் நலன் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

(3) தமிழ்நாட்டில் பிடிக்கப்படும்/உற்பத்தி செய்யப்படும் மீன்களுக்குக் கூடுதலான வருமானத்தை ஈட்டிட முனைதல்.

(4) செயல்முறை ஆராய்ச்சி, விரிவாக்கம் மற்றும் பயிற்சியில் கவனம் செலுத்தி நவீன முறையில் மீன்பிடித்தல், மீன்வளர்ப்பு, சேமிப்பு வசதி, பதனிடுதல் ஆகியவற்றினை மேம்படுத்துதல்.

(1) நிலை நிறுத்தக்கூடிய அதிகபட்ச மீன் உற்பத்தியை எய்துதல்

(அ) கடல் மீன்பிடிப்பு:

கடலில் உள்ள மீன்வளம் முழுவதையும் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளை உருவாக்குவதே கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக அரசின் 'கடல் மீன்வள' கொள்கையாக இருந்து வந்தது. இக்கொள்கையின் அடிப்படையில்தான், மானிய விலையில் விசைப்படகுகள் வழங்கப்பட்டன. இதன் விளைவாக *1951-52*-ல் *0.46* இலட்சம் டன்னாக இருந்த கடல்மீன் உற்பத்தி *1994-95*-ல் *3.31* இலட்சம் டன்னாக உயர்ந்தது. இருப்பினும், கடந்த சில வருடங்களாக ஒரு மீன்பிடி யூனிட்டின் சராசரி மீன்பிடிப்பு குறைந்து வருவது ஆராய்ச்சிகள் மூலம் தெரியவருகிறது. மீனவர்கள் போதுமான அள்வு கடலில் மீன்பிடிப்பு நடத்துவதற்கு அவர்கள் கடலில் வெகுதூரம் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதிலிருந்து தமிழக கடற்பகுதியில் அண்மைக்கடல் மீன்பிடிப்பு ஆதாரங்கள் மிகையாக பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது

1996 ஆகஸ்ட் 20]

தெளிவாகிறது. எனவே, கடலில் வளமான மீனபிடிப்பு உள்ள பகுதிகளைப் பாதுகாத்து கணிசமான கடல் மீன்பிடிப்பதே நமது கொள்கையின் நோக்கமாகும். இக்கொள்கையை நிறைவேற்றுவதற்கு கீழ்க்காணும் நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும்:

(அ) இரு படகுகளை பயன்படுத்தி இழுவலை கொண்டு மீன்பிடித்தலை தவிர்த்தல்.

(ஆ) கழிமுகப் பகுதிகள், மீன்குஞ்சு உற்பத்தி செய்யப்படும் இடங்களில் இழுவலை மீன்பிடித்தலை தவிர்த்தல்.

(இ) கட்டுமரங்கள் மற்றும் வள்ளங்களை கொண்டு செய்யப்படும் பாராம்பரிய மீன்பிடிப்பு முறைகளை ஊக்குவித்தல் மற்றும் நவீன முறைகளைக் கையாண்டும் மீன்பிடித்தளவாடங்களை மாறுபட்ட வகையில் பயன்படுத்தியும் மீன்பிடித்தல்.

(ஈ) விசைப்படகு மற்றும் பாரம்பரிய மீனவர்கள் இடையே ஏற்படும் சச்சரவுகளை அந்தந்தப் பகுதிகளில் சூழ்நிலைக்கேற்ப தீர்த்து வைத்தல்.

பாராம்பரிய மீன்பிடி கலங்களை இயந்திரமயமாக்குவதற்கு ஒரு பெரிய அளவில் திட்டம் வகுத்து கடல் மீன் உற்பத்தியில் பெருமளவு முன்னேற்றம் காண வேண்டுமென்பதே இந்த ஆண்டிற்கான அரசின் முக்கியமான கொள்கையாகும். கடந்த மூன்று ஆண்டுகளில் 3576 பாரம்பரிய மீன்பிடி கலங்கள் மட்டுமே இயந்திரமயமாக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 6100 பாரம்பரிய மீன்பிடி கலங்களுக்கு இயந்திரம் பொருத்திட அரசு ரூ. 11.00 கோடி நிதி ஒப்புதலளித்துள்ளது. கட்டுமரங்களுக்கு வெளிப் பொருத்தும் இயந்திரமும் வள்ளங்களுக்கு உட்பொருத்தும் இயந்திரமும் வாங்கிப் பொருத்தும் மீனவர்களுக்கு மானியம் வழங்கிட இத்தொகை பயன்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் பாரம்பரிய மீனவர்களும் மீன்பிடி வலைகள் வாங்குவதற்கும் மானியம் பெறுவர். இத்திட்டம் மீனவர்கள் அதிக மீன்பிடிப்பு செய்யவும், தூர கடலில் மீன்பிடிப்பு நடத்தப்படாத பகுதிகளுக்கு சென்று நீண்ட நேரம் கடலில் தங்கி மீன்பிடிப்பு மேற்கொள்ளவும், கரைக்கு விரைவாகத் திரும்பி வரவும் மீனவர்களுக்கு உதவிடும்.

பாரம்பரிய மீனவர்களுக்கு கண்ணாடி இழை கட்டுமரங்கள் வழங்கும் திட்டம் 1995-96 முதல் அமுல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பங்கேற்ற மீனவர்களுக்கு கண்ணாடி இழை

[1996 ஆகஸ்ட் 20

கட்டுமரத்தின் விலையில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. 1995-96ல் 100 கட்டுமரங்கள் வாங்க (ஒரு கட்டுமரத்திற்கு ரூ. 25,000 மானியமாக) ரூ. 25.00 இலட்சத்திற்கு ஒப்பளித்து. ஆனால், கண்ணாடி இழை கட்டுமரங்கள் தயாரிப்பதில் ஏற்பட்ட சிரமங்களின் காரணமாக 29 கட்டுமரங்கள் மட்டுமே விநியோகம் செய்யப்பட்டன. இத்திட்டத்தை நடப்பு ஆண்டிலும் தொடருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய கட்டுமர மீனவர்களுக்கு பயனளிக்ககூடிய மற்றொரு திட்டம் கட்டுமரங்களுக்கு ரசாயன சிகிச்சை அளிப்பதாகும். இந்த ரசாயன சிகிச்சையினால் கட்டுமரங்கள் பலப்படுத்தப்பட்டு பல ஆண்டுகளுக்கு உழைக்கக் கூடிய திறனைப் பெறுகின்றன. ரூ. 12 இலட்சம் செலவில் ஒரு நடமாடும் ரசாயன சிகிச்சை அளிக்கும் யூனிட்டை வாங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

மிகவும் கூடுதலான கடல் மீன்பிடிப்பை எய்திட கடலில் மீன்பிடி ஆதார நிலைகளை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், கடந்த சில வருடங்களாக விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்களுக்கு இடையே அதிகரித்து வரும் தகராறுகளைத் தீர்த்து வைப்பதும் ஒரு இன்றியமையாத பணியாகும். இவ்வகையான தகராறுகளைத் தீர்க்கும் முகத்தான், அரசு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச்சட்டத்தினை (1983) நடைமுறைப்படுத்தி மீன்பிடிப்பினை ஒழுங்குபடுத்தியுள்ளது. இச்சட்டத்தில் விசைப்படகுகள் மீன்பிடிப்பு செய்வதற்கு சில பொதுவான நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. ஆனால் பல நிகழ்வுகளில் அந்தந்த பகுதிகளில் நிலவும் சூழ்நிலைக்கேற்ப பல தகராறுகள் தீர்த்து வைக்கப்படுகின்றன என்று தெரியவருகிறது. எனவே, இச்சட்டத்தில் உள்ள சில நடைமுறைகளைத் திறம்பட அமுல்படுத்திட இயலவில்லை. எனவே அந்தந்த சூழ்நிலைகளுக்கேற்ப இச்சட்டத்தில் உள்ள சில நடைமுறைகளைத் திறம்பட அமுல்படுத்திட இயலவில்லை. எனவே அந்தந்த சூழ்நிலைகளுக்கேற்ப இச்சட்டத்தில் உள்ள சில நடைமுறைகளை திருத்தியமைக்க வேண்டியது அவசியமாகிறது.

தமிழ்நாட்டு மீனவர்களின் மத்தியில் உள்ள ஒரு முக்கியமான பிரச்சினை அவர்களுக்கும் ஆந்திர மாநிலம் மற்றும் கேரள மாநில மீனவர்களுக்கும் இடையே ஏற்படும் தகராறுகளாகும். சென்னையைச் சார்ந்த மீனவர்கள் ஆந்திர மற்றும் ஒரிசா மாநில கடற்பகுதிகளில்

1996 ஆகஸ்ட் 20]

மீன்பிடிக்கச் செல்கின்றனர். இதனால் சில சமயங்களில் அம்மாநில மீனவர்களுக்கும் நம்முடைய மீனவர்களுக்குமிடையே தகராறுகள் ஏற்படுகின்றன. இதேபோன்று கன்னியாகுமரி பகுதி மீனவர்கள் கேரளா மற்றும் கர்நாடக மாநில கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடி பருவகாலங்களில் மீன்பிடிக்கச் செல்லும்போது அம்மாநில மீனவர்களுடன் தகராறு ஏற்படுகிறது. நம் மீனவர்களுக்கு அதிகபட்ச நன்மை பயக்கும் வகையில் அந்தத் தகராறுகளைத் தீர்த்திட இந்த அரசு தகுந்த முயற்சிகளை மேற்கொள்ளும்.

1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தைத் திறம்பட நடைமுறைப்படுத்திட அரசு ஐந்து ரோந்துப் படகுகளை வாங்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இப்படகுகள் 1997-ஆம் ஆண்டு முடிவதற்குள் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்தப்படும். கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு மட்டுமல்லாமல் கடலில் காணாமல் போகும் மீனவர்களைத் தேடும் பணியிலும் இப்படகுகள் ஈடுபடுத்தப்படும்.

மீன்பிடி இறங்கு தளங்களில் மீன்பிடி துறைமுகங்கள், ஏலக்கூடங்கள், வலை பழுது பார்க்கும் கூடங்கள், குளிர்சாதனம் மற்றும் பதனிடும் நிலையங்கள் போன்ற போதுமான அளவு அடிப்படை வசதிகளை உருவாக்கிடுவதில் அரசு தீவிர கவனம் செலுத்துகின்றது. 20 மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்யக்கூடிய ஒரு திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தொடக்க நிலையில், மத்திய அரசைச் சார்ந்த பெங்களூரிலுள்ள மீனள மத்திய கடலோர பொறியியல் மையம், குளச்சல் மற்றும் ராமேஸ்வரம் ஆகிய இடங்களில் அளவைப் பணிகளை நிறைவேற்றியுள்ளது. இந்த நிலையத்தின் இறுதி அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் இவ்விரண்டு இடங்களிலும், மீன்பிடித் துறைமுகங்களை கட்டுவதற்கான நடவடிக்கை அரசு மேற்கொள்ளும். இதே போன்ற அளவைப் பணிகள் மற்ற இடங்களிலும் மேற்கொள்ளப்படும்.

(ஆ) உள்நாட்டு மீன் உற்பத்தி:

விஞ்ஞான ரீதியில் மீன்வளர்ப்பு மேற்கொள்ள ஏதுவாக பெரும் நீர்த்தேக்கங்கள், குளங்கள், ஏரிகள் ஆகியவற்றை துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து உள்நாட்டு மீன்உற்பத்தியைப் பெருக்குவதே உள்நாட்டு மீனளக் கொள்கையாக இருந்தது.

இதன்காரணமாக விஞ்ஞானரீதியில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்து மீன்வளர்ப்பு மேற்கொள்ள வேண்டுமென்ற விழிப்புணர்ச்சி பொதுமக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.மேலும் பல்வேறு நீர்நிலைகளில் மீன்பிடிப்பு உரிமையானது ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிடமே உள்ளது. எனவே, பெரும் நீர்த்தேக்கத்தில் மீன்வள நிர்வாகம், மீன்குஞ்சு உற்பத்தி, பயிற்சி மற்றும் விரிவாக்கப் பணிகளை விஞ்ஞான ரீதியிலான வழிமுறைகளை கடைப்பிடித்து உள்நாட்டு மீன்வளத்தை அதிகரித்தல் ஆகியவையே மீன்துறையின் முக்கியப் பணிகளாக அமையும். ஏரிகள் மற்றும் குளங்களின் மீன்பிடி உரிமங்கள் சம்பந்தப்பட்ட ஊராட்சி/ஊராட்சி ஒன்றியங்களிடம் இருக்க வேண்டும்.

உள்நாட்டு மீன் உற்பத்தியின் முக்கிய பிரச்சினை போதுமான மீன்குஞ்சு உற்பத்தி இல்லாமைதான். துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் இருப்பு செய்வதற்கு ஒரு ஆண்டுக்கு 170 மில்லியன் மீன்குஞ்சுகள் தேவைப்படுகின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் துறையில் மீன்குஞ்சு உற்பத்தி திறன் ஒரு ஆண்டுக்கு 100 மில்லியன் மீன் குஞ்சுகள் என்ற அளவில் உள்ளது. குறைந்த அளவு மீன் குஞ்சு உற்பத்தி திறன் மட்டுமல்லாமல் மீன் குஞ்சு உற்பத்திக்கான சூழ்நிலையிலும் சில வித்தியாசமான பிரச்சனைகளை தோற்றுவிக்கின்றன. கட்லா, ரோகு, மிர்கால் வகை மீன்களின் குஞ்சுகள் தென்மேற்கு பருவகாலங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் வடகிழக்கு பருவ மழைக்காலங்களில்தான் நீர்நிலைகளில் நீர் கிடைக்கின்றது. எனவே, மீன்குஞ்சு வளர்ப்பு கூடுதல் காலத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. கூடுகளில் நுண் மீன்குஞ்சுகளை வளர்ப்பதே இப்பிரச்சனைக்கு தீர்வு அளிக்கக்கூடிய ஒரு பிரபலமான முறையாகும். எனவே, நடப்பு ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் செலவில் கூடுகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர பல்வேறு தூண்டுதல் முறை மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இம்முறைகள் நீர்நிலைகளில் மிகவும் கூடுதலான அளவில் இருப்பு செய்யத் தேவையான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்ய உதவும்.

1996 ஆகஸ்ட் 20]

(இ) உவர்நீர் உயிரின வளர்ப்பு/நீர்வாழ் உயிரின வளர்ப்பு

நுண்ணுயிர் கிருமிகளால் ஏற்படும் வைரஸ் நோய்கள் பரவியதாலும், புதிய இரால்/நீர்வாழ் உயிரின மீன்வளர்ப்புப் பண்ணைகள் தொடங்குவதற்கு உச்சநீதிமன்றம் அளித்துள்ள தடை உத்தரவினாலும் இந்தியாவில் உவர்நீர் உயிரின வளர்ப்பு/நீர்வாழ் உயிரின வளர்ப்பு கடுமையான சூழ்நிலைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சியில் முன்னிலை வகிக்கும் மத்திய உவர்நீர் உயிரின வளர்ப்பு நிலைய உதவி கொண்டுதான் இரால் வளர்ப்பில் ஏற்படும் நோய்களைத் தவிர்த்திட இயலும். எனவே, துறையில் இரால் நோய் தடுப்பு/ கண்காணிப்புப்பிரிவு ஒன்றினை ரூ. 30 இலட்சம் செலவில் அமைத்திட மத்திய அரசுக்கு தமிழக அரசு கருத்துரு அனுப்பியுள்ளது. இப்பிரிவு, நோய்களை அதன் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து தடுத்திட வழிவகுக்கும். இத்திட்டம் ஏற்கப்பட்டால் இதற்கான 100 சதவிவிகிதம் நிதி ஒதுக்கீட்டினை மத்திய அரசு ஏற்கும். உவர்நீர் உயிரின வளர்ப்பு/நீர்வாழ் உயிரின வளர்ப்பு மேற்கொள்ளப்படும் நீர்நிலைகளில் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் நீரின் தன்மை ஆகியவற்றைப் பரிசோதிக்க தேவையான ஆய்வக வசதிகள் உவர்நீர் மேம்பாட்டு முகமைகளில் ஏற்படுத்திட அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும். அரசினால் நிறைவேற்றப்பட்டுள்ள 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு நீர்வாழ் உயிரின வளர்ப்பு (ஒழுங்குமுறை) சட்டம் உவர்நீர் மேம்பாட்டு முகமைகள் மூலம் நன்கு பலனளிக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும்.

தஞ்சை மற்றும் நாகை-காயிதே மில்லத் மாவட்டங்களில் கடல்வாழ் உயிரினங்கள் வளர்ச்சித் திட்டத்தை மேம்படுத்தவும், அதனால் அங்குள்ள விவசாய நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் செயற்பட ஒரு பெருந்திட்டம் தயாரிப்பதற்கான முறைபற்றி பயில மீன்வளத் துறையில் உள்ள பணி மூப்புடைய அதிகாரி ஒருவரை ஆறுவார கால பயிற்சிக்காக அரசு செலவில் பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்பப்படவுள்ளது.

நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் "ராஜீவ் காந்தி கடல்நீர் வாழ் உயிரினங்கள் வளர்ப்பு சிறப்பு மையம்" மைய அரசின் உதவியுடன் நிறுவ வழிவகை செய்யப்பட்டு அதற்கான தமிழக அரசின் உதவிகளும் ஒத்துழைப்பும் கொடுக்கப்பட்டு வருகிறது. இம்மையத்தினால் தமிழ்நாட்டிற்கு மிகுந்த பயன் கிடைக்கும்.

[*1996 ஆகஸ்ட் 20*

(2) மீனவர் நலன் பேணுதல் மற்றும் மீனவர் பாதுகாப்பை மேம்படுத்துதல்:

பெரும்பாலும் ஒவ்வொரு ஆண்டும் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் அவ்வப்போது ஏற்படும் புயல் அபாயத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இம்மாதிரியான நிகழ்வுகளைத் தடுக்க, மாநிலத்தில் கடலோரப் பகுதிகளில் உள்ள மையங்கள் மூலம், வானிலை எச்சரிக்கை செய்திகள் அளிக்கப்பட்டு, புயல்காற்று ஏற்படக்கூடிய நேரங்களில் கடலில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று மீனவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஆனால் ஆழ்கடலில் மீனவர்கள் திசைமாறி செல்லும்போதோ அல்லது காணாமல் போகும்போதோ அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க கடலோர பாதுகாப்பு படை மற்றும் கடற்படை மூலம் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அனைத்து வகைப் படகுகளில் கடலுக்குள் செல்லும் மீனவர் பாதுகாப்பு குறித்து ஒழுங்குமுறைச் சட்டங்கள், மத்திய அரசின் வணிகக் கப்பல் கடல் துறையினால் நடைமுறைப்படுத்தப்படும் வணிகக் கப்பல் சட்டத்தில் உள்ளது. ஆனால் மாநிலத்தில் உள்ள *8000* கடல் மீன்பிடி படகுகளுக்கு குறைந்த அளவு வசதிகளைக் கொண்ட வணிகக் கப்பல் கடல் துறையால் இச்சட்டத்தினை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்திட இயலாது. வணிகக் கப்பல் கடல்துறை, கடலோரப் பாதுகாப்பு படை மற்றும் கடற்படையுடன் கலந்தாலோசித்து, பணியாளர்களுக்கு உயிர்காக்கும் உபகரணங்கள், மிதவைகள், தகவல் தொடர்பு சாதனங்கள் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறைச் சட்டத்தில் தகுந்த திருத்தம் செய்திட துறை நடவடிக்கை மேற்கொள்ளும். மீனவர் மற்றும் மீன்பிடி கப்பல்களின் பாதுகாப்பிற்காக, இப்பாதுகாப்பு நடைமுறைகளை மீன்துறை அமுலாக்கம் செய்யும். கடலில் பாதுகாப்பு முறைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து மீனவர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படும்.

(3) பாக் ஜலசந்தியில் இலங்கை கடற்படையின் தாக்குதலால் மீனவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள்:

கடந்த சில வருடங்களாக, பாக் ஜலசந்தி மீனவர்கள் அடிக்கடி இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்குள்ளாகி வருகின்றனர். இந்த நிகழ்வுகளால் அரசுக்குச் சங்கடமான சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. இதுவரையில் *190* முறை இம்மாதிரியான

1996 ஆகஸ்ட் 20]

தாக்குதல்கள் ஏற்பட்டு, இலங்கை கடற்படையினால் 24 படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. 2 படகுகள் கைப்பற்றப்பட்டன. 151 மீனவர்கள் குண்டடிப்பட்டார்கள். 45 மீனவர்கள் உயிரிழந்தனர். இக்கடற்பகுதியில் இருநாடுகளுக்கிடையே உள்ள கடல் எல்லைப் பிரிவுக்கோடு கரைக்கு வெகு அருகாமையில் உள்ளதைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் தீர்வுகாணும் முகத்தான், அரசு இப்பிரச்சினையை இலங்கை அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்றுள்ளது. இலங்கை கடற்படையின் தாக்குதல்களால் பாதிப்புக்குள்ளான மீனவர்களின் குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்குவது குறித்தும் தமிழக அரசு இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு வருகின்றது. மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கி எல்லைப் பிரிவுக் கோட்டினை தாண்டி மீன்பிடிக்கச் செல்லக்கூடாதென்று மீனவர்களுக்கு அரசு அறிவுரை வழங்கியுள்ளது. இருப்பினும் கடலோரப் பாதுகாப்பில் சில பிரச்சினைகள் உள்ளன. இந்தப் பகுதியில் எவ்வித குறைபாடும் இல்லாத முழுமையான பாதுகாப்பு முறை ஒன்றினை ஏற்படுத்திட அரசு பரிசீலித்து வருகிறது. இராமேஸ்வரம் பகுதியில் அதிகப் படகுகள் இயங்குவதால் ஏற்படும் நெருக்கடியை தவிர்த்திடுவது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

(4) மீனவர் நல்வாழ்வு மேம்பாட்டு திட்டங்கள்:

மீனவர்களின் நலனுக்காக தமிழக அரசு பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. அவற்றில் சில முக்கிய திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

(1) மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம்

(2) மீனவர் குழுக் காப்புறுதி திட்டம்

(3) சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

(4) டீசல் எரியெண்ணய் மீதான மத்திய ஆயத்தீர்வையை மீன்பிடி விசைப்படகுதாரர்களுக்கு திருப்பி அளித்தல்.

1. மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டம்:

மீனவர்களுக்கு இலவச வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் வீடுகளை இலவசமாக மீனவர்கட்கு கட்டித்தர அரசு ஒப்புதல் அளித்து வருகிறது. 1995-96ல் 5.20 கோடி ரூபாய் செலவில் 2,000 வீடுகள் கட்ட அரசு ஒப்புதலளித்தது. தவிர,

[1996 ஆகஸ்ட் 20

ஏற்கெனவே கட்டித்தரப்பட்டுள்ள வீடுகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வீடு ஒன்றுக்கு ரூ. 5,000/- வீதம் 2,000 வீடுகளின் பழுதுகளை நிவர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர்த்து, மீனவக் கிராமங்களில் அடிப்படை வசதிகளான இணைப்புச் சாலைகள், பாலங்கள், குடிநீர் வசதி, வீட்டு விளக்கு மற்றும் தெரு விளக்கு வசதிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மீனவக் கிராமங்களில் இலவச வீட்டு வசதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில் அழைக்கப்படும். வரும் ஐந்து ஆண்டுகளில் ரூ.75 கோடி செலவில் இத்திட்டம் நிறைவேற்றிடப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள 442 மீன்பிடி கிராமங்களில் தற்போது கூரை வீடுகளில் வாழும் மீனவர்கள் குடும்பங்களுக்கு ஒரு மின்விளக்கு இணைப்பு வசதியுடன் 20,000 வீடுகள் வரும் ஐந்தாண்டுகளில் கட்டி கொடுக்கப்பட உள்ளது. இதன் அடிப்படையில் நடப்பாண்டில் 4,000 புதிய வீடுகள் கட்டித்தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக வரவு செலவு திட்டத்தில் ரூ. 6.73 கோடி நிது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. மீனவர் குழு காப்புறுதி திட்டம்:

மீனவர் குழு காப்புறுதி திட்டத்தினை அரசு தொடர்ந்து செயல்படுத்தும். இத்திட்டத்தின் கீழ், மீனவர் ஒருவருக்கு ஆண்டு சந்தாவாக ரூ. 9.75 வீதம் தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் புதுதில்லியிலுள்ள தேசிய மீனவர் கூட்டுறவு சம்மேளனத்தில் செலுத்தி வருகின்றது. இதன்கீழ் மீனவர்கள் விபத்தில் இறக்கும் தருணத்தில் அவர்களுடைய குடும்பத்தினருக்கு ரூ. 25,000/- காப்பீட்டுத் தொகையாக வழங்கப்படுகின்றது. பகுதி ஊனமுற்றவர்களுக்கு தலா ரூ. 12,500/- வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கு மீனவர் குழு காப்புறுதி திட்டத்தின் கீழ் ரூ. 28.32 இலட்சம் சந்தா தொகை செலுத்தப்படும் என்றும் இதனால் 3 இலட்சம் மீனவர்கள் பயனடைவார்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

3. சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்:

ஆண்டிற்கு நான்கு மாதங்கள் பருவமழை காரணமாக கடலில் மீன்பிடிக்க மீனவர்கள் செல்ல முடிவதில்லை. மீன்பிடிப்பு இல்லாத

1996 ஆகஸ்ட் 20]

காலங்களில் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கிடும் பொருட்டு சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் தொடங்கப்பட்டது. இதன் கீழ் ஒவ்வொரு மீனவரும் மாத சந்தாவாக தலா ரூ. 45/- வீதம் 8 மாதங்களுக்கு மொத்தம் ரூ. 360/- மீனவர் பங்காக செலுத்திட வேண்டும். இதற்குச் சமமாக மத்திய மற்றும் மாநில அரசின் பங்குத்தொகை ரூ. 720/-ஐ சேர்த்து மொத்தம் ரூ. 1,080/- மீன்பிடிப்பு இல்லாத நான்கு மாதங்களில் சமமான நான்கு தவணைகளில் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மத்திய அரசு இத்திட்டத்தில் நடப்பாண்டிலிருந்து பங்கேற்காது என்று தெரிவித்துள்ளது. இத்திட்டத்தில் மத்திய அரசு தொடர்ந்து பங்கேற்க வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தி வருகின்றது. மத்திய அரசு அவர்களுடைய முடிவை மறு பரிசீலனை செய்து திட்டத்தில் பங்கேற்க மறுத்தால் மாநில அரசின் பங்கினை மட்டும் வழங்கி இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தலாம் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. டீசல் எரியெண்ணெய் மீதான மத்திய ஆயத்தீர்வையை திருப்பி அளித்தல்:

இயந்திர மீன்பிடி விசைப்படகுகளுக்குத் தேவையான டீசல் எரியெண்ணெய் மீதான மத்திய ஆயத்தீர்வையை மீன்பிடி விசைப்படகுதாரர்களுக்குத் திருப்பி வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. இதற்கென கடந்த 1995-96-ஆம் ஆண்டில் ரூ. 52.50 இலட்சத்தினை அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டில் இத்திட்டத்திற்கென்று ரூ.75/- இலட்சம் தேவைப்படுமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

5. அறுவடைக்குப் பின் மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில் நுட்பத்தின் முக்கியத்துவம்:

மீன்பிடிப்பும்-மீன் உற்பத்தியும் மிகக் கூடுதலான நிலையை எய்திட்ட நிலையில் பிடிக்கப்பட்ட/அறுவடை செய்யப்பட்ட இறால்/மீன்களின் விலை நிர்ணயம் மற்றும் அதன் தரம், அறுவடைக்குப் பின் மேற்கொள்ளப்பட வேண்டிய தொழில் நுட்பத்தினைச் சார்ந்துள்ளது. இதற்காக குளிர்பதன சாதனங்கள், பதப்படுத்தும் வசதிகள் மற்றும் மீன் சந்தைகள் உருவாக்குவதற்கு முதலீடு தேவைப்படுகின்றது. கடந்த காலத்தில் குளிர்பதன வசதிகள், பனிக்கட்டி நிலையங்கள் ஒரு சில பெரிய மீன்பிடிப்பு இறக்கும் தளப் பகுதிகளில் துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ளன. விரைவில்

[*1996 ஆகஸ்ட் 20*

மீதமுள்ள பெரிய மீன் பிடிப்பு இறக்கும் தளப் பகுதிகளில் இத்திட்டத்தினை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மீன் விற்பனையைப் பொறுத்தமட்டிலும், நடப்பு ஆண்டில் மீன்பிடிப்பு இடத்திலிருந்து விற்பனை செய்யப்படும் இடத்திற்கு எடுத்துச் செல்ல ஐம்பது மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்களுக்கு இயந்திரம் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா அல்லது மாற்று போக்குவரத்து வசதியினை மேற்கொள்ள வேண்டி தலா ரூ.20,000/- வீதம் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(6) ஆராய்ச்சி பயிற்சி மற்றும் விரிவாக்கம்

மீன்துறையின் பல்வேறு திட்டங்களில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

(அ) ஆராய்ச்சி:

தற்போது 6 மீன்துறை ஆராய்ச்சி நிலையங்கள் ஒவ்வொரு மீன்துறை உதவி இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன.. பல்வேறு ஆராய்ச்சி திட்டங்களின் கீழ் துறையில் தற்போது 36 ஆராய்ச்சி உதவியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இத்துறையின் ஆராய்ச்சிப் பிரிவின் செயல்பாட்டினை குறிப்பாக செயல்முறை ஆராய்ச்சிப் பணிகளை மேம்பாடு அடையச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. பல்வேறு ஆராய்ச்சித் திட்டத்தின் செயல்பாடுகளைச் சிறந்த முறையில் ஒருங்கிணைத்து மத்திய நன்னீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய உவர்நீர் இறால் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி ஆகிய அமைப்புகளின் ஒத்துழைப்புடன் சிறந்த முறையில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) பயிற்சி மற்றும் விரிவாக்கம்:

1. மீனவர் பயிற்சி நிலையம்:

தமிழ்நாட்டில் கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கு கடல் மீன்பிடிப்பில் பயிற்சி அளிக்கும் பொருட்டு, இத்துறையில் 6 மீனவர்கள் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் ஆண்டிற்கு 50 முதல் 60 மாணவர்களுக்கு (10 மாதங்களுக்கு) பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு பயிற்சியின்போது கடல் பயணம், நவீன மீன்பிடி முறைகள், கடல் மீன்பிடிப்பு சம்பந்தப்பட்ட என்ஜின்களைப் பழுதுபார்த்தல் போன்ற

1996 ஆகஸ்ட் 20]

விஷயங்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நடப்பு ஆண்டில் 2 (இரண்டு) 43 அடி நீளமுள்ள படகுகளை வாங்கி பயிற்சி பெறும் மீனவ மாணவர்களை கடலுக்கு அழைத்துச் செல்லுதல் மூலம் மீனவர் பயிற்சி நிலையங்களைப் பலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2. மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்:

உள்நாட்டு மீன்வளர்ப்போர்களுக்கு பயிற்சி அளிக்கும் பணி மீன்வளர்ப்போர் முகமைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் 13 மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் 700 மீனவர்களுக்குப் பயிற்சி அளிப்பது இம்முகமைகளுக்கு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்முகமைகளின் வாயிலாக விஞ்ஞான ரீதியான உள்நாட்டு மீன்வளர்ப்பு பிரபலமாகியுள்ளது.

3. உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்:

சென்னையில் வாணியஞ்சாவடி, கடலூர், பட்டுக்கோட்டை, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் 5 உவர் நீர் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் பத்து கடலோர மாவட்ட பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு (ஒழுங்குமுறை) சட்டத்தினை அமுல்படுத்துதல், கடலோர உயிரின வளர்ப்பில் ஈடுபட விழைவோருக்கு பயிற்சி அளித்தல், இறால் வளர்ப்பு, உவர்நீர் மீன்வளர்ப்பிற்கான தகுந்த நிலங்களைத் தேர்வு செய்தல், பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல், திட்ட அறிக்கை தயாரித்தல், மானிய உதவி மற்றும் இறால் விற்பனை குறித்த விவரங்கள் அளித்தல் போன்ற பணிகளை இம்முகமைகள் மேற்கொண்டு வருகின்றன.

4. விவசாய மனிதவள மேம்பாட்டு திட்டம்:

உலக வங்கி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 1.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். நடப்பு ஆண்டில் ரூ.31.01 இலட்சம் இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது துறையினைச் சார்ந்த பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கும்

பணியினை சென்னை மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையம் நவீனமயமாக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

7. மீனவர் கூட்டுறவு சங்கங்கள்:

மீனவர் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தற்போது 664 பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு மற்றும் கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 2,67,882 மீனவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மேலும் 120 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் 36,000 மீனவ மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். அரசின் பல்வேறு மீனவர் நலத் திட்டங்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

8. தமிழ்நாடு மாநில முதன்மை மீனவர் கூட்டுறவு இணையம்:

தமிழ்நாடு மாநில மீனவ கூட்டுறவு இணையம் 19-10-1992 முதல் இயங்கி வருகிறது. ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டு திட்டத்தையும், மீன்வள மேம்பாட்டையும் அபிவிருத்தி செய்வது இந்த இணையத்தின் நோக்கமாகும். இதுவரையிலும் 408 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இணையத்தில் இணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் பங்கு மூலதனமாக ரூ.30.00 இலட்சத்தை இணையத்திற்கு செலுத்தியுள்ளன.

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம்:

இத்திட்டம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் தமிழ்நாடு மாநில முதன்மை கூட்டுறவு இணையத்தால் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் முதலீடு ரூ.15.88 கோடியாகும். 1993-94-ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டு காலத்தில் இத்திட்டம், செங்கை-எம்.ஜி.ஆர். நாகை-காயிதேமில்லத், இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய ஐந்து கடலோர மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு தமிழக அரசு இதுவரையிலும் ரூ.957.028 இலட்சத்தை விடுவித்துள்ளது. 1995-96-ஆம் ஆண்டில் 227 யூனிட் மீன்பிடி சாதனங்களை வாங்குவதற்கு 778 மீனவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டு வரையில் கட்டுமரங்கள், வள்ளங்கள், எஞ்சின்கள் மற்றும் மீன்படி தளவாடங்களை 691 யூனிட்டைச்

1996 ஆகஸ்ட் 20]

சார்ந்த மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் 2,065 மீனவர்கள் பயனடைந்துள்ளனர். 1996-97-ஆம் ஆண்டில் ரூ.3.12 கோடி செலவில் 1,300 மீனவர்களுக்கு மீன்பிடி கலன்கள், தளவாடங்கள் மற்றும் இதர சாதனங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் நவீன மீன்பிடி முறைகளில் 1,838 மீனவர்கள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். மீனவர் பயிற்சி நிலையங்களில் வெளிப் பொருத்தும் இயந்திரங்களின் பராமரிப்பில் 667 மீனவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அமுலாக்கப்படும் மீனவ கிராமங்களில் மீனவர்களின் நன்மைக்காக 164 மக்கள் தொடர்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகள் ரூ.48.23 கோடி நிதியுதவியுடன் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும். இதனால் 16,360 மீனவர்கள் வரும் ஐந்தாண்டு காலத்தில் பயன் பெறுவர்.

9. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்:

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974-ஆம் ஆண்டில் அரசுக்கு சொந்தமான நிறுவனமாக நிறுவப்பட்டது. இக்கழகத்தின மூலதனம் ரூ.5.00 கோடி மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.4.35 கோடி ஆகும்.

இக்கழகம் தற்பொழுது கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:--

1. கிழக்குக் கடற்கரையில் விசாகப்பட்டினத்தை மையமாகக் கொண்டு நான்கு ஆழ்கடல் மீன்பிடிப்பு நாவாய்கள் இயக்குதல்.

2. எட்டு நீர்த்தேக்கங்களில் தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து பராமரிப்பதுடன், அந்நீர்த்தேக்கங்களில் வணிக ரீதியில் மீன்பிடிப்பு நடத்துதல்.

3. மீன் பதப்படுத்துதல் மற்றும் மீன் விற்பனையை பராமரித்தல்.

4. மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதுறைகளில் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் மீனவர்களுக்கு சலுகை விலையில் டீசல் விற்பனை செய்தல்.

5. சென்னை இராயபுரத்தில் உள்ள மீன்வலை தயாரிப்பு நிலையத்தை நிர்வகித்தல்.

6. இறால் குஞ்சுகளை உற்பத்தி செய்து இறால் வளர்ப்போருக்கு விற்பனை செய்யும் பொருட்டு சென்னை நீலாங்கரை மீன்குஞ்சு வளர்ப்பு நிலையத்தை நிர்வகித்தல்.

7. காரங்காட்டில் உள்ள மாதிரி இறால் வளர்ப்பு பண்ணை மற்றும் செயல்முறை விளக்கப் பயிற்சி நிலையத்தினை பராமரித்தல்.

கடல்வளம்:

ஆழ்கடல் மீன்பிடிப்பு:

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் விசாகப்பட்டினத்தைத் தளமாகக் கொண்டு நான்கு ஆழ்கடல் மீன்பிடி நாவாய்களை இயக்கி வருகிறது. 1995-96-ம் ஆண்டு 82.56 டன் இறால் மற்றும் 265.17 டன் மீன் பிடிக்கப்பட்டு ரூபாய் 233.25 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீன்வளம்:

1. நீர்த்தேக்கங்கள்:

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பராமரிப்பில் எட்டு நீர்த்தேக்கங்கள் உள்ளன.

1995-96-ஆம் ஆண்டு 669.10 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு ரூபாய் 132.46 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

2. மீன் குஞ்சு உற்பத்தி:

சாத்தனூர் அணை மற்றும் ஆழியார் ஆகிய இடங்களில் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளையும் அமராவதி, ஆழியார், திருமூர்த்தி, மஞ்சளார், பாலார், பொறந்தலார் மற்றும் உப்பாறு ஆகிய இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகளையும் இக்கழகம் நிர்வகித்து வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகள் இக்கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதுடன், மீன்துறை மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் மற்றும் தனியார் மீன் வளர்ப்போருக்கும் வழங்கப்படுகிறது. 1995-96ஆம் ஆண்டு 461.15 இலட்சம் நுண் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

1996 ஆகஸ்ட் 20]

3. மீன் பதனிடுதல் மற்றும் விற்பனை:

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் இம்மாநிலத்தில் 6 பனிக்கட்டி நிலையங்களையும் 4 மீன் பதப்படுத்தும் நிலையங்களையும் நடத்தி வருகிறது. பவானிசாகர் பனிக்கட்டி நிலையம் நீங்கலாக கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து பனிக்கட்டி நிலையங்களையும் பதப்படுத்தும் நிலையங்களையும் தனியார் தொழில் முனைவோருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. 1995-96ஆம் ஆண்டு ரூ. 27.95 இலட்சம் குத்தகைத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. இக்கழகம் சென்னை நகரம், மதுரை, கோயம்புத்தூர், பெரியார் ஆகிய மாவட்டங்களில் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலமாக மீன் மற்றும் வறுத்த மீன் விற்பனை செய்து வருகிறது. 1995-96-ல் 801.64 டன் மீன்களை ரூ.241.71 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

4. டீசல் விற்பனை நிலையங்கள்:

இக்கழகம் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி, பழையார் உட்பட 16 இடங்களில் உள்ள மீன்பிடி துறைமுகங்களில் மீனவர்கள் மற்றும் மீன்படி விசைப்படகு இயக்குபவர்களின் நலன் கருதி டீசல் விற்பனை நிலையங்களை இயக்கி வருகிறது. 1995-96-ஆம் ஆண்டு 36356 கிலோ லிட்டர் டீசல் எண்ணெய் விற்பனை செய்யப்பட்டு ரூ.32.81 இலட்சம் தரகுத் தொகை ஈட்டப்பட்டுள்ளது.

5. மீன்வலை தயாரிக்கும் நிலையம்:

இராயபுரத்தில் ஆண்டு ஒன்றுக்கு 54 டன் மீன்வலை தயாரிக்கும் திறனுடன் மீன் வலை தயாரிப்பு நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. 1995-96-ஆம் ஆண்டு 36.75 டன் நைலான் வலையும், எச்.டி.பி.இ. வலையும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்பட்டு ரூ.64.51 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

6. நீலாங்கரை இறால் மீன்குஞ்சு பொரிப்பகம்:

இக்கழகம் சென்னைக்கு அருகில் உள்ள நீலாங்கரையில் இறால் மீன்குஞ்சு பொரிப்பகம் ஒன்றை இயக்கி வருகிறது. 1995-96-ஆம் ஆண்டில் 8.71 இலட்சம் இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ. 3.42 இலட்சம் வருவாய் ஈட்டுப்பட்டு உள்ளது.

O/ 118 D
N2 11, 31/1996
N97. B. 1

7. உவர்மீன் கிடங்கு தூத்துக்குடி

உவர்மீன் ஏற்றுமதியாளர்களின் நலனைக் கருதி கடல் பொ ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தால் தூத்துக்குடியில் கட்டப்பட உவர்மீன் கிடங்கை இக்கழகம் பொறுப்பேற்று நடத்தி வருகிறது *1995-96*ஆம் ஆண்டு ரூ.*1.08* இலட்சம் வாடகை வசூலிக்கப்பட்டுள்ளது

8. வளர்ப்பு முத்து மற்றும் முத்துச்சிப்பி தயாரித்தல்:

(அ) முத்து வளர்ப்புத் திட்டம்:

தமிழக அரசால் அமைக்கப்பட்ட மதிப்பீடுக் கமிட்டிய பரிந்துரைத்துள்ளபடி இக்கழகம் *1-8-1990* முதல் மண்டபத்தில் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க அடிப்படையில் வளர்ப்பு முத்துக்களை தயாரிக்கும் திட்டத்தினை துவக்கியது. மேற்படி முத்து தயாரிப்பு நிலையத்தினை வருடமொன்றுக்கு ரூ.*1.50* இலட்சம் குத்தகைத் தொகை செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் *31-1-1994*ல் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

(ஆ) முத்துச்சிப்பி பொரிப்பகம்:

புது தில்லியில் உள்ள உயிரியல் தொழில் நுட்ப இலாகா உதவியுடன் மண்டபத்தில் முத்து சிப்பி பொரிப்பகம் ஒன் நிறுவப்பட்டு *1995-96*-ஆம் நிதியாண்டிலிருந்து செயல்ப துவங்கியுள்ளது. *1995-96*-ஆம் ஆண்டில் *2.90* இலட்சம் சிப்பி தயாரிக்கப்பட்டுள்ளன.

9. இராமநாதபுரம் மாவட்டம் காரங்காட்டில் உள்ள மாதிரி இற வளர்ப்பு பண்ணை மற்றும் செயல்முறை விளக்க பயி நிலையம்:

காரங்காட்டில் மாதிரி இறால் வளர்ப்பு பண்ணை மற் செயல்முறை விளக்கப் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ள இப்பயிற்சி நிலையத்தில் இதுவரை *24* இறால் வளர்ப்போர்களு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. *1996-97*-ஆம் ஆண்டில் மேலும், நபர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான கருத்துரு உள்ளது.

10. கழகத்தின் நிதிநிலை:

1995-96-ல் இக்கழகத்தால் ஈட்டப்பட்ட வருவாய் ரூ.*35.98* கோ ஆகும். செலவினம் ரூ.*35.34* கோடி ஆகும். நிகர இலாபமாக ரூ. *63.55* இலட்சம் ஈட்டப்பட்டுள்ளது.

213170

(1)	(2)	(1)	(2)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

6B
18-42

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1B
18-42

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
810, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing Chennai-600 002.